# தொடுவானம் தொடும் தூரம்

ஷெண்பா



## நூற்குறிப்பு

நூல் தலைப்பு : தொடுவானம் தொடும் தூரம்
ஆசிரியர் : ஷெண்பா
உரிமை : ஆசிரியருக்கு
பக்கங்கள் : 304
முதற்பதிப்பு : மார்ச் 2015
வெளியிடுவோர் : சுபம் பப்ளிகேஷன்ஸ்
தாளின் தன்மை : 11.6 Kg வெள்ளைத்தாள்
கணினி அச்சு : சிருஷ்டி லேசர்
அச்சிடுவோர் : பாரதி அச்சகம்

Title : Thoduvanam Thodum Thooram
Author : Shenba
Language : Tamil
First Edition : March - 2015
Published & Distributed by : **Subam Publications,**
15, Manigandan 5th Street,
Old Washermenpet,
Chennai - 600 021.


© All Rights Reserved. This book or parts thereof, may not be reproduced in any means, electronic or mechanical, including photocopy, recording or any information storage and retrieval system now known or to be invented, without written permission from the author & publisher.

**விலை : ₹.150/-**

## ஆசிரியரின் இதர நூல்கள்

1. உயிராக வா நிலா
2. உயிரில் உன் பெயர் எழுதுகிறேன்
3. நேசக்கவிதை சொல்லடி
4. காதல் கொள்ள வாராயோ
5. உன்னைக் கண்டு உயிர்த்தேன்
6. இதயத்திற்கு இலக்கணமில்லை
7. நீயெனதின்னுயிர்



# தொடுவானம் தொடும் தூரம்

# தொடுவானம் தொடும் தூரம்

## 1

"கெட்டிமேளம்! கெட்டிமேளம்!" என யாரோ உரத்த குரலில் சொல்ல, அனைவரும் அட்சதை தூவி ஆசிர்வதிக்க, மணமகனின் கரங்கள் மணமகளின் கழுத்தில் மாங்கல்யத்தை அணிவித்தன.

மெட்டி அணிவித்து, அக்கினியை வலம் வந்து சிரிப்பும், சந்தோஷமுமாக நின்றவர்களைப் பார்த்த மயூரியின் முகம், பூவாக மலர்ந்தது.

கண்ணீருடன் தன்னைக் கையெடுத்துக் கும்பிட்ட செல்லம்மாவின் கரத்தைப் பிடித்தவள், "அக்கா! என்ன இது? என்னைப் போய் கும்பிட்டுகிட்டு... எல்லாம் கடவுள் அருளால நல்லபடியா முடிந்ததுன்னு சந்தோஷப்படுங்க'' என்றாள்.

"எனக்கு நீதாம்மா சாமி! உன்னைக் கும்பிட்டா தப்பில்லம்மா...! இந்தக் கல்யாணம் நல்லபடியா நடக்க...

நீதான் தாயி காரணம்!'' என்று நன்றிப் பெருக்கில் கலங்கிய செல்லம்மாவின் கண்களைத் துடைத்து விட்டாள்.

"நல்ல நேரத்துல இப்படி அழலாமா? உங்க பொண்ணு பார்த்தா சங்கடப்படுவா. கல்யாண வேலை இன்னும் பாக்கி இருக்கு. மாப்பிள்ளையோட அம்மா கூப்பிடுறாங்க பாருங்க. போங்க...'' என்று அவரை அனுப்பி வைத்தாள் மயூரி.

சற்றுத் தூரத்தில் நின்று, இதைச் சுவாரஸ்யத்துடன் பார்த்துக் கொண்டு இருந்தான் சைலேஷ்.

"என்னடி இது? யாரு அந்தப் பொண்ணு?'' நடந்ததையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஒரு பெண் மணி, மற்றொருவரிடம் விசாரித்துக் கொண்டிருந்தார்.

அதேநேரம், 'ஒரே பார்வையில் தன்னைக் கவர்ந்து விட்ட இவள் யார்?' என்ற யோசனையுடனும், அவளைப் பற்றி அறிந்து கொள்ள ஆர்வத்துடன் தனது காதைத் தீட்டிக்கொண்டு காத்திருந்தான்.

"அந்தப் பொண்ணோட வீட்டிலதான், நம்ம செல்லம்மா வேலை செய்தா. மாப்பிள்ளை வீட்டில் பத்து பவுன் நகையும், கல்யாணமும் செய்து வைக்கணும்னு சொன்னதை, கவலையோட இந்தப் பொண்ணுகிட்டச் சொன்னாளாம்.

இந்தப் பொண்ணு, பத்து பவுன் நகையோட, கல்யாணத்துக்குத் தேவையானதையும்... வாங்கிக் கொடுத்திருக்கா. அதான் இவ்வளவு சவரட்சணையும்...'' என்ற பெண்ணின் குரலில், லேசான பொறாமையும், எரிச்சலும் கலந்திருந்தது.



"நெசமாலுமா சொல்ற?" என்ற ஆச்சரியக் குரலும், "என்னதான் பெரிய இடமா இருந்தாலும், செய்ய மனசு வேணும்டி!'' என்றும் அவர்களுக்குள் மாற்றி மாற்றிப் பேசிக் கொண்டனர்.

அவளைப் பற்றி அறிந்து கொண்டவன் சற்றுத் தூரத்தில், கடவுள் சந்நிதியில் இரு கைகளையும் குவித்துக் கண்களை மூடி கடவுளை வணங்கிக் கொண்டிருந்தவளை இமைக்காமல் பார்த்தான்.

ஏனோ, அவனது மனம் பரபரத்தது. திடீரெனத் தன் தோள் மீது ஒரு கை விழ, சட்டெனத் திரும்பிப் பார்த்தான்.

"ஹேய் குணா! என்னடா நீ இந்தப் பக்கம்?'' ஆச்சரியத்துடன் நண்பனை விசாரித்தான் சைலேஷ்.

"பக்கத்துல ஒரு வேலையா வந்தேன். முடிச்சிட்டு வர்றப்போவெளியில உன் பைக்கைப் பார்த்தேன். என்னடா... நல்ல பிள்ளையா... வெள்ளிக்கிழமையும் அதுவுமா கோயிலுக்கு வந்திருக்கானேன்னு வந்தேன்; பார்த்திட்டு இருக்கேன்'' என்று குறும்பாகச் சிரித்தான் குணா.

"இப்போ எதுக்குடா இப்படிச் சிரிக்கிற?'' எரிச்சலுடன் கேட்டான் சைலேஷ்.

"இல்ல... அந்தப் பொண்ணையே ரொம்ப நேரமா வாட்ச்பண்ற போல இருக்கே.!"

நண்பனை முறைக்க முயன்று தோற்றவன், சட்டெனப் புன்னகைத்தான்.

"அடப்பாவி! சிரிக்கற...! நிஜமாவே தானா...?'' குணா நம்ப முடியாமல் கேட்டான்.

தலையைத் தடவிக்கொண்டு, "அந்தப் பொண்ணு, என்னை ரொம்ப இம்ப்ரெஸ் பண்ணிட்டாடா!" என்றபடி, சிரிப்புடன் மயூரியைப் பார்த்தான் சைலேஷ்.

"அடசாமி! கோவிலுக்கு வந்த இடத்தில, இப்படி வெறிச்சிப் பார்த்துட்டு நிக்கிற. உன்னோடு சேர்த்து எனக்கும் ஆப்பு வச்சிடாதேடா! நீ இம்ப்ரஸ் ஆனது போதும். வா!" என்ற குணா, அவனை வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்றான்.

அன்று மாலை தனது அலுவலகத்தின் அருகிலிருந்த பூங்காவிலிருந்து வெளியே வந்த மயூரியைக் கவனித்துவிட்டு, வண்டியைத் திருப்பிக் கொண்டு வந்தான். ஆனால், அவன் வருவதற்குள் அவள் அங்கிருந்து சென்றுவிட, ஏமாற்றத்துடன், "சே! மிஸ் பண்ணிட்டேனே..." என்று சலித்துக்கொண்டே கிளம்பினான் சைலேஷ்.

* * *

சோர்ந்து போய் தனது கேபினுக்கு வந்த குணாவை, ஆச்சரியத்துடன் பார்த்தான் சைலேஷ்.

"என்னடா! இப்படி அலுத்துக் களைச்சி வர்ற; என்ன விஷயம்?'' என்று கேட்டான்.

"உனக்கு வீட்ல பொண்ணு பார்க்கறாங்களா?'' என்று சம்மந்தமே இல்லாமல் எதிர்கேள்வி கேட்டான் குணா.

"நான் கேட்டதுக்கு இதுவா பதில்?'' என்றான் கிண்டலாக.

"இவ்வளவு நேரம் போன்ல, உன் அம்மாகிட்ட தான் பேசிட்டு இருந்தேன். தரகர் கொடுத்த போட்டோவைப்



பார்க்காமலேயே, வேணாம்னு சொல்லிட்டியாம். ஏன், எதுக்குன்னு என்கிட்ட இவ்வளவு நேரம் குறுக்கு விசாரணை செய்துட்டு இருந்தாங்க'' என்றான் எரிச்சலுடன்.

எதுவும் சொல்லாமல் சிரித்தான் சைலேஷ்.

"நீ கல்யாணம் வேணாம்னு சொன்னா, அதுக்கு நானா பொறுப்பு?'' என்று கடுகடுத்தான் குணா.

சாய்வு நாற்காலியில் சாய்ந்து அமர்ந்து, பேனாவை இரு விரல்களுக்கு இடையில் வைத்துச் சுழற்றியபடி, புன்சிரிப்புடன் நண்பனைப் பார்த்தான்.

"என் புலம்பல் உனக்குச் சந்தோஷமா இருக்கு...!'' என்று விட்டேற்றியாகச் சொன்னவன், சட்டென ஏதோ நினைவு வந்தவனாக சைலேஷின் முகத்தைப் பார்த்தான்.

"ஹேய்! நீ இன்னும் கோவில்ல பார்த்த அந்தப் பொண்ணைப் பத்தியே நினைச்சிட்டு இருக்கியா என்ன?'' என்று கேட்டான்.

அதற்கும் அவனிடமிருந்து சிரிப்பே பதிலாக வந்தது.

"அவளோட பேரும் தெரியாது; ஊரும் தெரியாது. ஒரு பத்து நிமிஷம் பார்த்தவளை, கிட்டதட்ட ஒருமாசமா நினைச்சிட்டு இருக்க? இதென்ன சொல்லாமலே காதல், பார்க்காமலே காதல் மாதிரி, நினைப்பிலேயே காதலிக்கிற தெய்வீகக் காதலா? உன் காதலே அவளை உன்கிட்டக் கொண்டு வந்து சேர்த்திடும்னு, நினைச்சிட்டு இருக்க போல!'' என்று கிண்டலாகச் சொன்னான்.

நிதானமாக எழுந்தவன், "காதல்னு எப்போடா சொன்னேன்? என்னவோ அந்தப் பொண்ணோட முகம்

என் நினைப்புல இருந்து மறையவே இல்ல. அம்மா கல்யாணப் பேச்சை எடுத்ததும், அவளோட முகம் தான்டா நினைவுக்கு வந்துச்சு. அவளைத் திரும்பப் பார்ப் பேனான்னு தெரியாது.

ஆனா, கட்டாயம் பார்ப்பேன்னு என் உள்மனசு சொல்லுது. அப்படித் திரும்ப அவளைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைச்சா, நிச்சயமா அதை மிஸ் பண்ண மாட்டேன்'' என்று அழுத்தமாக தனது எண்ணத்தை வெளியிட்டான் சைலேஷ்.

அவனுடைய நினைப்பும், பேச்சும் குணாவிற்குப் பைத்தியக்காரத்தனமாகத் தெரிந்த போதும், அவனது நம்பிக்கையைக் குலைக்க அவனுக்கு மனமில்லை.

"இதை எந்த வகையில சேர்த்துக்கறதுன்னு எனக்குத் தெரியலை. ஆனா, உன் நம்பிக்கை நிஜமாச்சுன்னா, சந்தோஷப்படும் முதல் ஆள் நான்தான்!'' என்றவன், நண்பனைத் தட்டிக்கொடுத்தான்.

## 2

"டேய் குணா! இதெல்லாம் டூமச்-டா. உனக்குப் பார்த்த பொண்ணை,நீ போய்மீட் பண்றது சரி. என்னை எதுக்குடா கூட்டிட்டு வந்த? நீ விஷயத்தை முதல்லயே சொல்லியிருந்தா, நான் வந்திருக்கவே மாட்டேன்!" என்றான் எரிச்சலுடன்.

"கொஞ்ச நேரம் பொறுமையா இருந்தா, உன்னை



எதுக்குக் கூட்டிட்டுவந்தேன்னு புரியும்" என்று புன்னகைத்தான் குணா.

"என்ன புரியுமோ போ!'' என்று சிடுசிடுத்துக் கொண்டே திரும்பியவன், காஃபிஷாப்பின்உள்ளே நுழைந்தவளைக் கண்டதும், திகைத்துப்போனான்.

அடுத்த நொடியே,அந்தத்திகைப்பு மாறி ஆனந்தப் பரவசத்துடன் எழ முயன்றவனை, இழுத்துப்பிடித்து அமர வைத்தான் குணா.

"என்..னடா...?'' வார்த்தைகள் வெப்பத்துடன் உதிர்ந்தன.

"ரம்யாவந்தாச்சுடா... அந்த பிங்க்கலர் சுடிதார். கூட வர்றது அவளோட ஃப்ரெண்ட் மயூரி!" என்று அவனிடம் மென்குரலில் சொன்னான்.

அந்த நொடி வேறு எதுவும் அவனது மனத்தில் பதியாவண்ணம், மயூரிமட்டுமே முழுதாக அவனை ஆக்கிரமித்திருந்தாள். அப்போதுதான், குணா எதற்காகத் தன்னை வற்புறுத்தி அழைத்து வந்தான் என்று புரிந்து கொண்ட சைலேஷிற்கு, உள்ளம் குளிர்ந்து போனது.

"தேங்க்ஸ்டா குணா!'' என்றபடி, மலர்ந்த முகத்துடன் அவனது கரத்தைப் பற்றிக் கொண்டான்.

"உன் தேங்க்ஸைத் தூக்கி உடைப்புல போடு. சீக்கிரமா கல்யாணச் சாப்பாடு போடும் வழியைப் பாருடா...'' என்று சிரித்தான் அவன்.

அதற்குள் அவர்களைப் பார்த்துவிட்ட ரம்யா, புன்னகையும், தயக்கமுமாக தோழியுடன் அவர்களை நோக்கி வந்தாள்.

"ஹாய்! என்றபடி குணா எழ, மயூரியைப் பார்த்தபடி சைலேஷும் எழுந்தான்.

வெட்கச் சிரிப்புடன், "ஹலோ!'' என்றவள், "ரொம்ப நேரம் காக்க வச்சிட்டோமா?'' என்று சம்பிரதாயக் கேள்வியைக் கேட்டாள்.

"அதுல சந்தேகம் வேறயா?'' என்று பட்டென குணா சொல்லிவிட, ரம்யாவும், மயூரியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"டேய்!'' என்று அவனது கையை இடித்த சைலேஷ், "அவன் கொஞ்சம் உரிமையோட பழகிடுவான். தப்பா நினைக்காதீங்க'' என்று ரம்யாவிடம் சமாதானமாகச் சொன்னான்.

"ஓஹ்! பயமுறுத்திட்டேனா? விளையாட்டுக்குச் சொன்னேன்'' என்றான் குணா.

பெண்கள் இருவரும் மெல்லப் புன்னகைத்த போதும், ரம்யாவிற்கு அவனிடம் பேசுவதற்குச் சற்றுத் தயக்கமாகவே இருந்தது.

'ரொம்ப கலாய்ச்சிட்டோமோ' என்று மனத்திற்குள் வருத்தப்பட்டுக் கொண்டவன், "ரம்யா! இவன் என் க்ளோஸ் ஃப்ரெண்ட் சைலேஷ். சைலேஷ்! இவங்க ரம்யா..." என்று அறிமுகப்படுத்தினான்.

வரவேற்பாகத் தலையசைத்துப் புன்னகைத்தாள் ரம்யா.

பதிலுக்குப் புன்னகைத்துத் தலையசைத்தவன், "நின்னுட்டே இருக்கீங்களே... உட்காருங்க'' என்று இருக்கையைக் காட்டினான்.



"தன்னை மயூரிக்கு அறிமுகப்படுத்துவான்' என சைலேஷ் நினைத்திருந்தான். ஆனால், அவனோ மெனு கார்டைக் கையில் வைத்துக் கொண்டு, ரம்யாவிடம் ஏதோ பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்ததும், மனத்திற்குள் பொறுமினான்.

மயூரியும் அங்கே அவஸ்தையுடன் தான் அமர்ந்திருந்தாள்.

'வரமாட்டேன் என்று சொல்லியும் வற்புறுத்தி அழைத்து வந்து, இப்படித் தனியாக புலம்ப வைத்து விட்டாளே!' என்று எரிச்சலாக இருந்தது. அவர்கள் இருவருக்கும் இடையில், விவஸ்தை இல்லாமல் தான் அங்கே அமர்ந்திருப்பது கூச்சமாகக் கூட இருந்தது.

ஸ்ட்ராவால் காஃபியைக் கலக்கியபடி மெல்ல நிமிர்ந்தவள், தன்னைப் போலவே தவிப்போடு அமர்ந்திருந்த சைலேஷைப் பார்த்தாள். அந்நேரம், தன் பக்கமாகத் திரும்பிப் பார்த்தவனைக் கண்டு மெல்லப் புன்னகைத்தாள்.

"இதற்கு மேலும் அமைதியாக இருப்பது முட்டாள்தனம் என்று எண்ணியவன், "ஹாய்! ஐயம் சைலேஷ்'' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

"ஹலோ! நான் மயூரி" என்றாள் அவள்.

தங்களது பேச்சிற்குப் பிள்ளையார் சுழி போட்டு விட்ட திருப்தியில், சற்றே சகஜமானான். இருவரும் ஒருசேர வருங்காலத் தம்பதிகளைப் திரும்பிப் பார்த்துவிட்டு, சிரித்துக் கொண்டனர்.

"அவங்க... தனி உலகத்தில் இருப்பாங்க.

கண்டுக்காதீங்க'' என்றான்.

அதற்கும், அவளிடமிருந்து சிரிப்பு மட்டுமே பதிலாக வந்தது.

"நீங்க தப்பாக நினைக்கலைனா, நாம அந்த டேபிளுக்கு மாறிக்கலாமா? எனக்கு அவங்களோட பிரைவசியில் தலையை நுழைக்கிறது போல இருக்கு'' என்றான்.

அதையே தானே அவளும் நினைத்துக் கொண்டிருக்கிறாள்! அவன் கேட்டதுமே சம்மதமாக, "ம்'' என்றாள்.

இடம் மாறி அமர்ந்தவர்கள், மீண்டும் சகஜமாகப் பேசிக்கொள்ள சில நொடிகள் தேவைப்பட்டன.

"ம், நீங்க ரம்யா மேடத்தோட சிஸ்டரா...? இல்ல...''

"ஃப்ரெண்ட்!'' - சொல்லிவிட்டுப் புன்னகைத்தாள்.

அவள் சிரித்த போது, அவளது கண்களும் மலர்ந்து சிரித்தன.

அதன்பிறகு, 'தாங்கள் சிறுவயது முதலே நண்பர்கள்' என்று குணாவுடனான நட்பைப் பற்றிச் சொன்னான் சைலேஷ்.

மயூரி புன்னகையுடன் கேட்டுக் கொண்டாளே தவிர, அவர்களைப் பற்றி மூச்சு விடவில்லை.

அவளது ஒவ்வொரு அசைவும், அவனது இதயத்தை அசைத்தது. அவளைப் பற்றி எதுவுமே தெரியாத போதும், 'இவள் தான் என்னவள்' என்ற உறுதியான எண்ணம் உதயமானது.

கண்களைப் பார்த்தே பேசும் அவனது



கண்ணியமும், இயல்பான பேச்சும் அவன் மீது ஒரு மரியாதையை ஏற்படுத்தியது அவளுக்கு. "இவன் புதியவன்' என்ற எண்ணம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து போக, இயல்பாகவே இருந்தாள் அவள்.

அந்த உரிமை தந்த தைரியத்தில், "உங்களுக்கு மயூரின்னு பேர் வச்சதுக்குப் பதிலா, புன்னகை அரசின்னு பேர் வச்சிருக்கலாம்!'' என்றான்.

"ம்...'' என்றபடி நிமிர்ந்தவள், உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது என்று சொல்லாமல் சொன்ன அவனது பார்வையைக் கண்டதும், மேற்கொண்டு பேசமுடியாமல் தடுமாறினாள்.

"தனக்கு அவனைப் பிடித்திருப்பதால், அவனுடைய பார்வைக்கு இப்படி ஒர் அர்த்தத்தை, உள்ளமே கற்பித்துக் கொள்கிறதா?' என்று தெரியாமல் குழம்பினாள்.

சைலேஷுமே, அதற்கு மேல் அவளிடம் பேசவில்லை.

அவள் சங்கடத்துடனும், அவன் சந்தோஷத்துடனும் அந்த நிமிடங்களை நகர்த்திக் கொண்டிருந்தனர்.

* * *

அந்தச் சந்திப்பிற்குப் பிறகு ரம்யா மீண்டும் தன்னை உடன்வரச் சொல்லி அழைத்த போது, போகக் கூடாது என்று தான் நினைத்தாள்.

ஆனால், "நீ வந்தா தான், எனக்குக் கொஞ்சம் தைரியமா இருக்கும்பா'' என்று தன்னிடம் கெஞ்சும் தோழியின் பேச்சைத் தட்ட முடியாமல் உடன்பட்டாள்.

வழக்கம் போல இவர்கள் இருவரும் தனி டேபிளில்

அமர்ந்திருந்தாலும், அன்றைய தினத்தைப் போல இருவருக்கும் இடையில் பெரிதாக எந்தப் பேச்சும் இல்லை.

அவளது மனத்தைத் தெளிவாக படித்து விட்டவனுக்கு, இதெல்லாம் பெரிதாகத் தெரியவில்லை. ஆனால், சில நேரங்களில் அவளது மௌனம் சலிப்பையும், எரிச்சலையும் உண்டாக்கியது.

அதனால் சில சமயங்களில் குணா அழைத்தாலும், வேண்டுமென்றே வேலையிருக்கிறது என்று தட்டிக் கழித்து விடுவான். அவன் இருந்தால் பேசாதவள், அவன் இல்லாத நாட்களில் கையிலிருக்கும் புத்தகத்தில் மூழ்கி விடுவது போன்ற பாவனையுடன் அமர்ந்திருப்பாள்.

சொல்லப் போனால் இருவருமே அடுத்தவரது மனத்தைச் சொல்லாமலேயே உணர்ந்திருந்தனர்.

சைலேஷ் தன் மனத்தைத் திறக்க, தகுந்த நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தான். மயூரியோ, அவனைத் தவிர்க்க காரணத்தைத் தேடிக் கொண்டிருந்தாள்.

* * *

குணாவின் வீட்டில், "முகூர்த்தப் புடவையை உங்கள் இருவரது விருப்பப்படியே எடுத்துக் கொள்ளுங் கள்' என்று சொல்லி, பொறுப்பை இளையவர்களிடமே விட்டுவிட்டனர்.

காஞ்சிபுரம் செல்வதற்கு, வழக்கம் போல சைலேஷைத் துணைக்கு அழைத்தான் குணா.

"எனக்கு வேலை இருக்குடா. ப்ளீஸ்!'' என்றவனை குணா விடவில்லை.

"மயூரியும் கூட வராங்கடா. அப்பாகிட்டச் சொல்லி



கார் எடுத்துக்கலாம். எனக்கும் லாங்ல டிரைவ் பண்ணிப் பழக்கமில்ல. டிரைவர் இருந்தா எதையும் ஃப்ரீயா பேசமுடியாது. அதனால தானே உன்னைக் கூப்பிடுறேன். எனக்காக வரமாட்டியா?'' என்று கேட்டான்.

"மயூரி' என்ற பெயரே அவனை அசைக்கப் போதுமானதாக இருக்க, ஒருவழியாக சரியென்று சம்மதித்துவிட்டான். ஆனாலும், அவனது மனம் நிலைகொள்ளாமல் தவித்தது.

"நான் வரமாட்டேன் என்பதற்கும் அவள் தானே காரணம்? வேண்டுமென்றே என்னைத் தவிர்க்கிறாளே... அது ஏன்?' என்று மனதிற்குள் குழம்பினான்.

ஆண்கள் இருவரும் முன்னால் அமர்ந்துகொள்ள, பெண்கள் இருவரும் பின்பக்க இருக்கையில் அமர்ந்து கொண்டனர். காலை உணவை வழியிலேயே முடித்துக் கொண்டு காருக்குத் திரும்பி வந்த போது, ரம்யாவின் அருகில் குணா அமர்ந்துவிட, வேறு வழியில்லாமல் முன்பக்க இருக்கையில் அமர்ந்தாள் மயூரி.

காலையில் அவர்களை அழைக்க வந்தபோது தன்னைப் பார்த்தும், வரவேற்பாக ஒரு புன்னகையைக் கூட சிந்தவில்லை. அவ்வளவு ஏன்? என் பக்கமாகத் திரும்பிக்கூட பார்க்கவில்லையே. ஆனால், இப்போது என்னருகில் அமர வேண்டி வந்துவிட்டதே! இதற்கு என்ன செய்வாய்?' என்று நினைத்துக் கொண்டவனுக்கு, சிரிப்பு வந்தது.

உற்சாகத்தில், அவனது விரல்கள் ஸ்டியரிங் வீலின் மீது தாளமிட்டன. மென்நகையுடன் காரைக் கிளப்பியவன், ரேடியோவில் பாடலைக் கசியவிட்டான்.

*தலையைக் குனியும் தாமரையே!*

*என்னை எதிர்பார்த்து, வந்த பின்பு வேர்த்து,*

*தலையைக் குனியும் தாமரையே!*

அதுவரை கவனமாக அவன் பக்கமாகத் திரும்பாத மயூரி, திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். சடன் பிரேக் போட்டு காரை நிறுத்தியவன், அதே முகபாவனையுடன் அவளைப் பார்த்தான். சிலநொடிகள் இருவரது பார்வையும் உரசிக் கொள்ள, பின்னாலிருந்து எழுந்த ஹாரன் ஓசையில் நினைவுலகுக்கு வந்தான் சைலேஷ்.

"டேய்! பார்த்துடா... கவனமா போ!'' என்று குணா குரல் கொடுக்க, "நான் பார்த்துத் தான் போறேன். நீ சந்தோஷமா உன் வேலையைக் கண்டினியூ பண்ணு!'' என்றான் எரிச்சலுடன்.

புன்னகைத்த குணா, "ரமி! ஏதோ கருகுற வாடை வருதில்ல?'' என்றான்.

"டேய்! காரை இங்கேயே நிறுத்திட்டு, போயிட்டே இருப்பேன். சொல்லிட்டேன்!'' என்று கடுகடுத்துவிட்டு மயூரியைப் பார்த்தான்.

*காத்திருந்தேன் அன்பே!*

*இனிகாமனின் வீதியில் தேர் வருமோ?*

*பூமகள் கன்னங்கள்!*

*இனிமாதுளை போல் நிறம் மாறிடுமோ?*

*ஆயிரம் நாணங்கள்!*

*இந்த ஊமையின் வீணையில் இசை வருமா?*

*நீயொரு பொன்வீணை!*

*அதில் நுனிவிரல் தொடுகையில் பலசுரமா...?*



பாடலின் ஒவ்வொரு வரிக்கும், தனது அகத்தில் தோன்றும் மாற்றங்களை முகத்தில் காட்டாமலிருக்க, மிகுந்த பிரயத்தனப்பட்டுக் கொண்டு அமர்ந்திருந்தாள் மயூரி.தன் உள்ளத் தவிப்பை,இரு கைகளையும் இறுக மூடி அடக்கினாள்.

அவளைப் பார்த்தவனது கண்களில் மென்மை பரவியது.

*உத்தரவு தேவி! தத்தளிக்கும் ஆவி!*

*இரண்டு நதிகள் இணைந்து நடக்கும்!*

*புதிய அலைகள் கரையை உடைக்கும்!*

"ம்... ம்...'' என்ற குணா, கடைசி இரணடு வரிகளைச் சப்தமாகப் பாட, எதிரிலிருந்த டிஷ்யூ பேப்பரைச் சுருட்டி அவன் மீது எறிந்தான் சைலேஷ்.

"உன் கோபத்தோட அளவு இந்த டிஷ்யூ பேப்பர் தானா...?'' என்று சிரித்த குணாவை முறைக்க முயன்ற சைலேஷ், தன்னையும் மீறிச் சிரித்தான்.

# 3

**அ**துவரை எதுவுமே புரியாதிருந்த ரம்யாவிற்கு, எல்லாமே மெல்லப் புரிபட ஆரம்பித்தது. சற்று முன்னால் வந்து மயூரியைப் பார்த்தாள். அவளோ, இங்கு நடப்பதற்கும், தனக்கும் எந்தச் சம்மந்தமும் இல்லை என்பதைப் போல வெளியே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ரம்யா திரும்பி குணாவைப் பார்க்க, அவன் 'ஆம்!' என்பது போல் கண்களைச் சிமிட்டிப் புன்னகைத்தான்.

இத்தனை நாட்களாக, "என்னை மீட் பண்ண, நீ தனியாக வரவேண்டாம். உன் ஃப்ரெண்ட் மயூரியைத் துணைக்குக் கூட்டிட்டு வா...'' என்று அத்தனை அக்கறையாகச் சொன்னதெல்லாம் எதற்காக என்று, இப்போதல்லவா அவளுக்குப் புரிகிறது!

ஆனாலும், அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல், மயூரிக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைய விருப்பதை எண்ணி சந்தோஷமாக இருந்தாலும், ஒரு பக்கம் அதை அவள் ஏற்றுக்கொள்ள வேண்டுமே என்ற எதிர்பார்ப்பும் இருந்தது.

ஆனாலும், தனது உணர்வுகளை வெளிக்காட்டிக் கொள்ளாமல், எல்லாம் நல்லபடியாக முடியவேண்டும் என்ற வேண்டுதலுடன், குணாவின் கரத்தை இறுகப் பற்றிக்கொண்டாள்.

* * *

காமாட்சி அம்மனை கண்களும் மனமும் குளிர தரிசித்துவிட்டு, கடைக்கு வந்து சேர்ந்தனர். மணமக்கள் இருவரும் புடவைத் தேர்வில் மும்முரமாகிவிட, மற்றொரு பக்கத்தில் டேபிள் மீது குவிந்திருந்த புடவைகளைப் பார்த்துக் கொண்டிருந்த மயூரி, தன்னருகில் வந்து நின்ற சைலேஷைக் கவனிக்கவில்லை.

"மேடம்! இது புது டிசைன். உங்க நிறத்துக்கு ரொம்ப எடுப்பாக இருக்கும்'' என்று உடல் முழுதும் ஜரிகையில் இழைக்கப்பட்டிருந்த குங்கும நிறச் சேலையை விரித்துப் போட்டார் கடைச் சிப்பந்தி.



விலையைப் பார்த்ததும் புருவத்தை உயர்த்தியவள், "இல்ல... இருக்கட்டுங்க... இவ்வளவு காஸ்ட்லியா வேணாம்...'' என்று தயக்கத்துடன் மறுத்துரைத்தாள்.

"நீங்க பிரியப்பட்டுக் கேட்டா, சார் வேணாம்னா சொல்லப் போறார்?'' என்ற விற்பனையாளர், "சார்! நீங்களே மேடமுக்குச் சொல்லுங்க...'' என்று சைலேஷிடம் சொன்னார்.

அப்போது தான், அவன் தன்னருகில் நின்றிருப்பதைக் கவனித்தவள், சட்டென விலகி நின்றாள்.

"நேரம் வரட்டும் சார்! இதைவிட காஸ்ட்லியாவே எடுத்துக்கலாம்'' என்று அவளைப் பார்த்தபடியே அவன் சொல்ல, மயூரி படபடத்துப் போனாள்.

விறுவிறுவென அவள் நடக்க, பெருமூச்சுடன் திரும்பியவன், அந்தப் புடவையை எடுத்துப் பார்த்தான்.

"அங்கே எடுத்து வச்சிருக்கும் துணிகளோட, இதையும் சேர்த்து பில்லுக்கு அனுப்பிடுங்க!'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தான்.

* * *

குணா, ரம்யா திருமணம் இனிதே முடிந்தபின்னர், சத்திரத்தைக் காலி செய்து கொண்டிருந்தனர்.

ஏற்கெனவேகையில் இரண்டு பெரிய பெட்டிகளுடன் சென்று கொண்டிருந்தவளை அழைத்தார் குணாவின் அன்னை.

"மயூரி! பார்க்கிங்ல நம்ம கார் நிக்கும். இந்தப் பார்சலை அதில் வச்சிடேன்'' என்றவர் சாவியை கொடுத்துவிட்டு, "கார் நம்பர் கீசெயின்லயே இருக்கு.''

"சரிம்மா!'' என்றவள், அதையும் வாங்கிக் கொண்டு லிஃப்டில் இறங்கினாள். மூன்று பார்சலையும் ஒன்றாக தூக்கிக் கொண்டு, நடக்க முடியாமல் காரை நோக்கி நடந்தாள்.

எங்கோ வெளியில் சென்றுவிட்டு சத்திரத்திற்குத் திரும்பி வந்து காரைப் பூட்டிக்கொண்டிருந்த சைலேஷ், வேகமாக வந்து அவளிடமிருந்த சுமைகளில் இரண்டை வாங்கிக் கொண்டான்.

''எதுக்கு இப்படித் தூக்க முடியாமல் தூக்கிட்டு வரீங்க? வேற யாரையாவது கொண்டு வரச் சொல்லி யிருக்கலாம். இல்லைனா... இன்னொரு ரௌண்ட் போய்க் கொண்டு வந்திருக்கலாமே!'' என்றான்.

பதிலுக்குப் புன்னகைத்தவள், ''தேங்க்ஸ்!'' என்ற ஒற்றை வார்த்தையுடன் நிறுத்திக் கொண்டாள்.

காரின் டிக்கியைப் பூட்டியவள், அருகில் நின்றிருந்தவனை நிமிர்ந்தும் பார்க்காமல், விறுவிறுவென நடந்தாள்.

"ஒரு நிமிஷம் மயூரி...!'' என்றான் சைலேஷ்.

சட்டென நின்ற மயூரிக்கு, மனம் பரபரத்தது. இந்த மூன்று மாதப் பழக்கத்தில் கிட்டத்தட்ட பதினைந்து முறை சந்தித்திருக்கின்றனர். ஒருநாள் கூட, அவளை மேடம் என்ற அடைமொழியில்லாமல் அழைத்ததேயில்லை.

இன்று உரிமையுடன் தன்னைப்பெயரைச் சொல்லி அழைத்ததுமே, மனத்தில் இன்ப உணர்வு பரவியது. அதேநேரம் அந்தச் சந்தோஷத்தை அனுபவிக்கவும் முடியாமல் தவித்தாள்.



அழுத்தமான காலடியுடன் அவன் தன்னை நெருங்கி வரவர, அவளுக்கு மேல்மூச்சு வாங்கியது. எதுவும் பேசாமல் அருகில் நின்றவனை, மெல்ல விழிகளை உயர்த்திப் பார்த்தாள்.

ஆனால், அவனது கண்களை நேருக்கு நேராகச் சந்திக்க முடியாமல், இமைகள் நிலம் தாழ்ந்தன. ஏதாவது பேசுவான் என்று அவள் எதிர்பார்த்திருக்க; அவனோ, நொடிக்கு நொடி அவளது முகத்தில் தோன்றும் மாற்றத்தைப் பார்த்தபடி, அமைதியாக நின்றான்.

அவனது அருகாமை அவஸ்தையாக இருந்தது.

"நா...ன் கிளம்பறேன்'' என்று நகர்ந்தவளை, "என் மேல உங்களுக்கு என்ன கோபம்?'' என்று வேகமாகக் கேட்டான்.

இருந்த குழப்பத்தில் அவன் கேட்டதை உள்வாங்கிக் கொள்ள முடியாமல் திணறியவள், "என்ன கேட்டீங்க?'' என்று திருப்பிக் கேட்டாள்.

நீண்ட மூச்சை வெளியேற்றியவன் நிதானமாக, "இல்ல, ஏற்கெனவே நீங்க என்னிடம் டிஸ்டன்ஸ் மெயின்டெயின் பண்ணுவீங்க. ஆனா, நேத்துல இருந்து என்னை அடியோடு அவாய்ட் பண்றதுமாதிரி தெரியுதே... அதான் என் மேல என்ன கோபம்னு கேட்டேன்?'' என்றான்.

தனது தவிப்பை வெளிக்காட்டாமலிருக்க, அருகிலிருந்த தூணைப் பற்று கோலாக நினைத்துப் பிடித்துக் கொண்டாள். "இங்கிருந்து ஓடிவிடலாமா?' என்றுகூட நினைத்தாள். ஆனால், அதற்கும் கால்கள் ஒத்துழைக்க மறுத்தன.

'ஆமாம். எந்த உணர்வுகளுக்கும் இடம் கொடாமல் இருந்த என்னை, நீ சலனப்படுத்துகிறாய்!'' என்று சொல்லத் துடித்த உதடுகளை, இறுக மூடினாள்.

அவளுக்குள் எழுந்த அழுத்தத்தைத் தாங்க முடியாமல் கண்கள் அணையுடைக்க, புடவை தலைப்பால் வாயைப் பொத்திக் கொண்டாள்.

இதைச் சற்றும் எதிர்பார்க்காத சைலேஷ், பதறிப் போனான். "மயூரி!'' என்றபடியே, வேகமாக அவளது கரத்தைப் பற்றினான்.

"ப்ளீஸ் சைலேஷ்! என்னை எதுவும் கேட்காதீங்க'' என்று அழுதவளை, தவிப்புடன் பார்த்தான்.

"மயூரி! நான்...'' என்று அவன் பேச ஆரம்பித்த நேரத்தில்,அங்கிருந்த லிஃப்ட்டின் கதவு திறக்கும் ஓசை கேட்டது.

வேகமாக அவனிடமிருந்து கரத்தை இழுத்துக் கொண்டவள், கண்களைத் துடைத்தபடி மறுபக்கமாக சத்திரத்தை நோக்கி நடந்தாள்.

* * *

இரண்டு நாட்களாக தனது மண்டையைக் குழப்பிக் கொண்டிருக்கும் கேள்விக்கு விளக்கம் கிடைக்காமல், மனத்துக்குள் தவித்துக் கொண்டிருந்தான் சைலேஷ்.

என்னைப் பிடித்திருக்கிறது என்று புரிந்த போதும், அதை ஏன் வெளிப்படுத்தத் தயங்குகிறாள்? மனத்தில் இருப்பதைச் சொன்னால் தானே புரியும்; ஏதேனும் பிரச்சனை இருந்தாலும், அதற்கான தீர்வைக் கண்டறிய முடியும்?



எதையுமே சொல்லாமல், மனத்திற்குள்ளேயே காதலை ஒளித்து வைப்பதில் யாருக்கு லாபம்? இல்லை... அதைச் சொல்வதால் அவளுக்கென்ன நஷ்டம்? என்னை எதுவுமே கேட்காதே என்றால், என்னதான் செய்வது?

சிறு குழந்தையா என்ன? பிடித்து வைத்து, சொன்னால் தான் ஆயிற்று என்று கட்டாயப் படுத்துவதற்கு? ஒருவேளை, அப்படிக் கேட்டால் தான் சொல்வாளோ!' என்று தன்னையே கேட்டுக் கொண்டான்.

ஆனால், நினைக்க நினைக்க கேள்விகள் தான் புதிதாக உருவானதே தவிர,எதற்குமே பதில் கிடைக்காமல் அப்படியேதான் இருந்தது.எரிச்சலுடன் எழுந்து அறைக்குள்ளேயே நடந்தான்.

அவனது கவனத்தைக் கலைத்தது அலைபேசியின் ஓசை. குணா தான் அழைத்திருந்தான். யாருடனும் பேசும் மனநிலையில் இல்லாவிட்டாலும், நண்பனது அழைப்பை மறுக்க முடியவில்லை.

"சொல்லுடா!'' என்றான்.

"என்னடா...? குரல் ஒரு மாதிரி இருக்கு...?'' - அக்கறையுடன் கேட்டான் குணா.

"ம்ப்ச்! அதைவிடு. என்ன விஷயம்? புது மாப்பிள்ளைக்கு என்னோட நினைப்பு வந்திருக்கு!'' என்று தனது வருத்தத்தை மறைத்துக் கொண்டு, கேலியில் இறங்கினான் சைலேஷ்.

"இதை நோட் பண்ணிக்கிறேன்டா. நாளைக்கு உன்னைக் கேலி செய்யணுமே!'' என்றான் சிரிப்புடன்.

சைலேஷ் மௌனமாக இருக்க, "சைலேஷ்!'' என்று அழைத்தான்.

"இருக்கேன். சொல்லு!'' என்றான் ஆர்வமில்லாமல்.

"ஆஃபீஸ்ல தானே இருக்கே?''

"ம். ஆமாம். ஏன்?'' என்று கேட்டான்.

"ஓகே. நீ கிளம்பி, இப்போ ரம்யா வீட்டுக்கு வா. உன்கிட்ட முக்கியமான விஷயம் பேசணும்.''

"நான் எதுக்குடா அவங்க வீட்டுக்கு வரணும்?''

"இங்கே வந்ததும் தெரியப் போகுது. உனக்காக வெயிட் பண்ணிட்டு இருப்பேன். பை!'' என்று போனை வைத்தான்.

சைலேஷுக்குக் கடுகடுவென வந்தது. இருந்தும், நண்பனைச் சந்திக்க உடனே கிளம்பினான்.

# 4

"என்னடா எதுவோ முக்கியமான விஷயம் பேசணும்னு வரச் சொல்லிட்டு இப்படித் தோட்டத்தை வெறிச்சிகிட்டு உட்கார்ந்திருக்க?''

"உன்னை வரச் சொல்லிட்டேனே தவிர, பேச்சை எப்படி ஆரம்பிக்கறதுன்னு தெரியலை!'' என்றான் குழப்பத்துடன்.

அவனைக் கூர்ந்து பார்த்த சைலேஷ், "மயூரி பத்தியா?'' என்று கேட்டான்.

"ம்'' என்று தலையசைத்தவன், இருக்கையிலிருந்து எழுந்து, "மயூரி உனக்கு வேணாம்டா!'' என்றான்.

எதுவும் சொல்லாமல் இறுகிய முகத்துடன்



நண்பனையே பார்த்துக் கொண்டிருந்தான் சைலேஷ்.

திரும்பி அவனைப் பார்த்த குணா, "என்னடா? எதுவும் சொல்ல மாட்டேன்ற?'' என்று கேட்டான்.

"நீ சொல்ல வந்தது இதானே. சரி நான் கிளம்பறேன்'' என்று வேகமாக எழுந்தான்.

"டேய்! எனக்கு நீயும் முக்கியம்; மயூரியும் முக்கியம்!'' என்றான் பரிதாபமாக.

கடுமையாக அவனைப் பார்த்த சைலேஷ், "உனக்கே மயூரி முக்கியம்னா... அப்போ... எனக்கு அவள் எவ்வளவு முக்கியம்னு..நீ ஏன்டா நினைக்கல?'' என்று உரக்கக் கேட்டான்.

"புரிஞ்சிக்காம பேசாதேடா. நீ அவளை எந்த அளவுக்கு விரும்பறேன்னு எனக்குத் தெரியும். அதையும் மீறி நான் சொல்றேன்னா, அதில் விஷயம் இருக்கு. நீ எனக்கு ப்ரெண்டுன்னா... மயூரி எனக்குத் தங்கை மாதிரி.

நீங்க ரெண்டு பேருமே சந்தோஷமா இருக்கணும். ஆனா, உன்னைக் கல்யாணம் செய்துகிட்டா... அவள் நிச்சயம் சந்தோஷமா இருக்க மாட்டா!'' என்று அழுத்தமாகச் சொன்னான்.

"ஏன்...? ஏன் என்னைக் கல்யாணம் செய்துகிட்டா, சந்தோஷமா இருக்கமாட்டா? என்கிட்ட வசதி இல்லையா? இல்ல...' என்றவனை இடைமறித்தான்.

"பணமும், வசதியும் இங்கே பேச்சில்ல. நீ சம்மதிச்சாலும், அம்மா நிச்சயம் சம்மதிக்கமாட்டாங்க. ஏன்னா...'' என்றவன் மயூரியைப் பற்றிய உண்மைகளைச் சொன்னான்.

அவன் பேசி முடிக்கும் வரை அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தான் சைலேஷ்.

"இப்போ சொல்லு... மயூரியை உன் குடும்பம் ஏத்துக்குமா?'' என்று கேட்டான்.

"இவ்வளவு தானே விஷயம்?இது எதுக்குமே, அவ பொறுப்பாக முடியாதுடா. ஆயிரம் பிரச்சனைகள் வந்தாலும் சரி, மயூரி தான் என் மனைவிங்கறதுல நான் முடிவா இருக்கேன்!''

"இதுக்கு உன் வீட்ல சம்மதிக்கணுமே?''

"அது என் பொறுப்பு. நீ கவலைப்படாதே.''

''நான் கவலைப்படாமல் இருக்க முடியாதுடா. இதில் சம்மந்தப்பட்டிருக்கும் உங்க ரெண்டு பேரோட சந்தோஷமும் எனக்கு முக்கியம்'' என்றான் குணா.

சைலேஷ் நண்பனைப் பெருமையுடன் பார்த்தான்.

"நீ நினைக்கும் அளவுக்கு, விஷயம் பெரிசு இல்ல. உன் கல்யாணத்துக்கு அப்பா வந்திருந்த போதே, மயூரியைப் பத்திச் சொல்லிட்டேன். இந்நேரத்துக்கு அம்மாவுக்கும் விஷயம் தெரிஞ்சிருக்கும்.''

"நீ அப்பாகிட்ட பேசினப்போ, மயூரியைப் பத்தி உனக்கு முழுசா எதுவுமே தெரியாதுடா...'' என்றவனது கரத்தைப் பற்றி நிறுத்தினான் சைலேஷ்.

"குணா! எங்க வாழ்க்கைல... எனக்கும் அக்கறை இருக்கு'' என்றதும், அதற்கு மேல் குணாவும் எதுவும் பேசவில்லை.

சைலேஷின் பதில் என்னவாக இருக்கும் என்று அறிந்து கொள்ளும் ஆவலில் வாசலிலேயே



நின்றிருந்தாள் ரம்யா.

"நான் கிளம்பறேம்மா'' என்றவனது முகத்திலிருந்து, அவளுக்கு எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

கேள்வியுடன் கணவனது முகத்தைப் பார்த்தாள். அவனோ, விளக்கெண்ணெய் குடித்தவனைப் போல முகத்தை வைத்துக் கொண்டு நின்றிருந்தான்.

அதிருப்தியுடன், "சரிண்ணா!'' என்றாள்.

அவளது முகத்தைப் பார்த்தவனுக்குச் சிரிப்பாக வந்தது.

"எனக்கு மயூரியோட மொபைல் நம்பர் வேணும். கிடைக்குமா? என்று கேட்க, அவநம்பிக்கையில் தளர்ந்திருந்த அவளது முகம் மகிழ்ச்சியில் மலர்ந்தது.

அவள் சொல்லச் சொல்ல அதைத் தனது மொபைலில் பதிந்து கொண்டு, "தேங்க்யூ!'' என்றான் புன்னகையுடன்.

உர்ரென்ற முகத்துடன் நின்றிருந்த குணாவின் வயிற்றில் தட்டியவன், "கல்யாணச் சாப்பாடு கேட்டயில்ல... சீக்கிரமே போடுறேன். தயாராகிக்க!'' என்று சிரிப்புடன் விடைபெற்றான்.

* * *

**மொட்டை** மாடியில் அமர்ந்திருந்த தந்தையின் அருகில் வந்து அமர்ந்தான் சைலேஷ்.

"மணி பதினொன்னு ஆகுதே; தூங்கலையா நீ?'' என்று கேட்டார் கேசவன்.

"ம். நான் நல்லா தூங்கி, ரெண்டு நாள் ஆகுதுப்பா...'' என்றான் பரிதாபமாக.

கண்ணாடியைக் கழற்றித் துடைத்தபடி சிரித்தார் கேசவன்.

"என்னப்பா சிரிக்கிறீங்க? இத்தனை வருஷத்துல, நான் எதுக்குமே இப்படித் தவிச்சது இல்லப்பா. ரெண்டு நாளா எதிலயுமே கான்சன்ட்ரேட் பண்ண முடியல. என்னமோ... எக்ஸாம் எழுதிட்டு, ரிசல்டுக்காகக் காத்திருக்கறது போல ஒரு ஃபீலிங்...'' என்றான்.

கண்ணாடியை அணிந்தபடி, "வாழ்க்கைல... ஒவ்வொரு கட்டமும் பரிட்சை எழுதறது போலதான் சைலேஷ்! ஆனா, எக்ஸாம்ல பெயிலானா இன்னொரு அட்டெம்ட் எழுதி... பாஸாகிடலாம். ஆனா... வாழ்க்கைல அது முடியாதுப்பா...'' என்றார்.

"அப்பா ப்ளீஸ்! இதுக்கு மேலேயும் என்னால பொறுமையா இருக்க முடியும்னு தோணலை. நீங்க சொன்னது போல, ரெண்டுநாள் வெயிட் பண்ணிட்டேன்'' என்ற மகனை அமைதியாகப் பார்த்தார் அவர்.

"ஒருவேளை, என்னோட முடிவு உனக்குச் சாதகமா இல்லைனா...?'' என்று கேட்டார்.

அவரது கரத்தைப் பற்றிக்கொண்டவன், "உங்க பையனை நீங்க ஏமாத்தமாட்டீங்கன்ற நம்பிக்கை... எனக்கு ரொம்ப இருக்குப்பா'' என்றான்.

"அப்போ,அந்தப் பொண்ணைக் கல்யாணம் செய்துக்கணுங்கற உன்னோட முடிவுல... எந்த மாற்றமும் இல்ல... இல்லயா...?''

"இந்த ரெண்டு நாள்ள மட்டும் இல்லப்பா... இன்னும் இருபது வருஷமானாலும் மாறாது'' என்றான்.



"யோசிக்க ரெண்டு நாள் அவகாசம் கேட்டது, நான் யோசிக்க மட்டும் இல்ல; உன் மனசும் மாறாம இருக்கான்னு தெரிஞ்சிக்கத்தான்!'' என்ற தந்தையை அசுவாரஸ்யத்துடன் பார்த்தான்.

"இப்போ நீ சொன்னதெல்லாம் உண்மைனா, எனக்குச் சந்தோஷம்தாம்ப்பா. இந்த வார்த்தைகளை என்னைக்கும் மறந்திடமாட்டியே...?'' என்றார் கேள்வியாக.

"அப்பா! இன்னும் என் மேல் உங்களுக்கு நம்பிக்கை வரலையா?'' என்றவனின் முகத்தில் வருத்தம் இழையோடியது.

"நம்பிக்கையில்லாமலா...? இன்னைக்கு இருக்கும் இதே மனசு...உனக்குக்கடைசி வரைக்கும் இருக்கணும். என் பிள்ளையோட வாழ்க்கைல, எனக்கும் அக்கறை இருக்குப்பா!'' என்றவர், மகனைத் தட்டிக் கொடுத்தார்.

''தேங்க்ஸ்ப்பா!'' என்றவனுக்குமுகத்தில் புன்னகை தளிர் விட்டிருந்தது.

"மயூரி... உன்னை நம்பி வரப்போற பொண்ணு. எந்த நேரத்துலயும்...அவளுக்கு நீ வாழ்க்கையைக் கொடுத்திருக்கங்கற மாதிரியான நினைப்போ, பேச்சோ வரக்கூடாது. அப்படி ஏதாவது ஆச்சுன்னா... அந்த உறவுல எந்தப் பிரயோஜனமும் இல்ல. அதேநேரம், அப்படியொரு நிலையை என்னைக்கும் உருவாக்க மாட்டங்கற நம்பிக்கைல தான்... நான் உன் கல்யாணத்துக்கு மனப்பூர்வமா சம்மதிக்கிறேன்.''

"ரொம்ப ரொம்ப தேங்க்ஸ்பா...'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தவன், "அம்மாகிட்ட நீங்கதான்

விஷயத்தை ஆரம்பிக்கணும். நான் அப்படியே பின்னால் வந்து ஜாயின் பண்ணிக்கிறேன்'' என்றான்.

"இல்ல சைலேஷ்! இப்போதைக்கு உங்கம்மாகிட்ட எதையும் சொல்ல வேணாம். அவள் முதல்ல மயூரியைப் பார்க்கட்டும். மற்றதை, அப்புறம் சொல்லிக்கலாம்'' என்று தயக்கத்தோடு சொன்னார்.

ஆனால், தனக்கிருந்த சந்தோஷத்தில் அதைச் சரியாக கவனிக்காத சைலேஷ், 'அன்னையை எப்படியும் சம்மதிக்க வைத்து விடலாம்' என்ற அதீத நம்பிக்கையுடன், வானில் தெரிந்த நிலவை இரசிக்க ஆரம்பித்தான்.

## 5

கம்ப்யூட்டரில் வேலை செய்து கொண்டிருந்த மயூரி, "ஹலோ!'' என்ற குரலைக் கேட்டு திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

எதிரில், தனது வழக்கமான புன்னகையுடன், அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான் சைலேஷ்.

"ஹலோ சார்! உங்களுக்கு ஏதாவது உதவி வேணுமா?'' என்று அழகான ஆங்கிலத்தில் கேட்டாள்.

"கண்டிப்பா... நீங்க மட்டும் தான் இதுக்கு உதவி பண்ண முடியும்!'' என்று தீவிரமான முகபாவத்துடன் சொன்னான்.

அவனது பதிலைக் கேட்டவளுக்குச் சலிப்பாக இருந்தது.



அருகிலிருந்தவர்களது கவனத்தை ஈர்க்காத வண்ணம் மென்குரலில், "இது நான் வேலை செய்யும் இடம். உங்க வம்பை இதோட நிறுத்திக்கோங்க ப்ளீஸ்!'' என்றாள்.

"ம்.ஜஸ்ட் ரெண்டே நிமிஷம் அப்படி வந்தால்... நான் சொல்ல வந்ததைச் சொல்லிட்டு... கிளம்பிப் போயிட்டே இருப்பேன்... ப்ராமிஸ்!'' என்று தலைசாய்த்து அவளைப் பார்த்தான்.

என்ன சொல்வதென்று தெரியாமல், அவனை வெறித்துப் பார்த்தாள்.

"லாபியில் வெயிட் பண்றேன்...'' என்று கூறிவிட்டு, அங்கிருந்து நகர்ந்தான் அவன்.

அதுவரை சிரமத்துடன் மூச்சுவிட்டவள், சற்றே தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

முன்தினம், எப்போதும் போலத் தன்னிடம் போனில் பேசிக்கொண்டிருந்த ரம்யா மெல்ல, "சைலேஷ் போன் செய்தாரா?' என்று கேட்டாள்.

"அவன் நிச்சயம் தன்னைத் தொடர்பு கொள்வான்' என்று அப்போது நினைத்தாளே தவிர, இப்படித் திடுதிப்பென்று வந்து நிற்பானென்று அவள் யோசிக்கக்கூட இல்லை.

அருகிலிருந்தவரிடம் ஏதோ சொல்லிவிட்டு, லாபியில் அவனுக்குப் பக்கத்திலிருந்த சோஃபாவில் அமர்ந்தாள்.

"சொல்ல வேண்டியதைச் சொல்லிட்டுக் கிளம்பினா நல்லாயிருக்கும்! எனக்கு நிறைய வேலையிருக்கு.''

"ஓகே... நீ ஏன் டென்ஷன் ஆகற? ஈவ்னிங் ஆறு மணிக்கு அறுபடை வீடு முருகன் கோயிலுக்கு வந்திடு. உனக்காக வெயிட் பண்ணிட்டு இருப்பேன்'' என்றான்.

"நிச்சயமா வரமாட்டேன்!'' என்றாள் பற்களைக் கடித்தபடி.

"நீ வர்ற! வரணும்!'' என்று அழுத்திச் சொன்னான் அவன்.

"இங்கே பாருங்க, உங்க விருப்பத்துக்கு என்னால் ஆடமுடியாது...!'' என்று கோபமாக ஆரம்பித்தவள், அவனுடைய முகத்தைப் பார்த்ததும், "நிறைய வேலை இருக்கு...'' என்று இறங்கிய குரலில் முடித்தாள்.

"அப்போ... நாளைக்குக் காலைல வா...!'' என்றான் விடாமல்.

"இல்ல...'' என்றாள்.

"அப்போ, மதியம் லஞ்ச் சாப்பிட்டுகிட்டே பேசலாம். அது ஓகே தா்னே?'' என்றபடி புருவத்தை உயர்த்தினான்.

மயூரிக்குத் தலையை வலிப்பது போலிருந்தது.

"இங்கே பாருங்க... நாளைக்கு மட்டுமில்ல... எப்பவுமே நாம சந்திக்க வேணாம்!''

அவளை ஊன்றிப் பார்த்தவன், "நாளைக்கு மத்தியானம் நீ வரணும்... வரவைப்பேன்!'' என்று அழுத்தமாகச் சொன்னான்.

மயூரிக்கு கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது.

"நாளைக்கு மதியம் பன்னிரெண்டு மணிக்கு, உனக்குப் போன் பண்ணுவேன். நீ அட்டெண்ட் பண்ணணும். அப்படிப் போனை எடுக்காமல், எனக்கு விளையாட்டு காட்டணும்னு நினைக்காதே! உன்னோட ஹாஸ்டல் எனக்குத் தெரியும். அவ்வளவு தூரத்துக்குப் போகமாட்டேன்னு நினைக்கிறேன். நாளைக்கு... மறந்திடாதே. பை!'' என்று விடைபெற்றுச் சென்றவனை கலவரத்துடன் பார்த்தாள்.



✶ ✶ ✶

இரவில் உறக்கம் வராமல் அறைக்குள்ளேயே நடையாக நடந்தாள்.

"மயூரி! லைட்டை ஆஃப் பண்ணுப்பா. காலைல எனக்கு ஆறு மணிக்கெல்லாம் வேலைக்குப் போகணும்'' - அரைத் தூக்கத்திலிருந்த, அறைத் தோழி குரல் கொடுத்தாள்.

விளக்கை அணைத்துவிட்டு இருளில் நடக்க ஆரம்பித்தாள். யோசனையில் கவனமில்லாமல் நடக்க, கட்டிலின் விளிம்பில் இடித்துக் கொண்டவள், "கடவுளே!'' என்று அரற்றியபடி கட்டிலில் அமர்ந்தாள்.

சுய பச்சாதாபத்தில் கண்ணீர் பெருகியது.

"இவ்வளவு தூரம் வந்த பிறகு, இன்னும் எதற்குத் தயங்க வேண்டும்? சைலேஷிடம், நான் உன் குடும்பத்திற்கு ஒத்துவரமாட்டேன்... வீணான பிரச்சனைகள் வரும். அதனால் தன்னைத் தொல்லை செய்ய வேண்டாம் என்று சொல்லிவிடலாமா?' என்று நினைத்தாள்.

'தன்னைப் பற்றிய உண்மைகள் தெரிந்து, அவன் விலகிவிட்டால் நல்லது தானே' என்ற எண்ணம் தோன்றியது. அப்போதே, 'அப்படி அவன்

உன்னிடமிருந்து விலகி விட்டால், உனக்குச் சந்தோஷமா?' என்று எதிர்கேள்வி கேட்ட மனத்திற்குப் பதில் சொல்ல முடியாமல் திணறினாள்.

தன்னைப் பற்றிச் சொல்லவும் முடியாமல், மறைக்கவும் வழி தெரியாமல் தவித்தவள், கவிழ்ந்து படுத்து சப்தமில்லாமல் அழுதாள்.

உறக்கத்தில் கடந்த கால நினைவுகளெல்லாம், கனவுகளாக வந்து மருட்டின.

* * *

**வி**டிந்தும் விடியாத காலை நேரம், வீங்கிய முகமும், சிவந்த கண்களுமாக ஆட்டோவில் வந்து இறங்கியவளைப் பார்த்த ரம்யாவின் அன்னை, மீண்டும் ஏதேனும் பிரச்சனையோ என்று பயந்தேவிட்டார்.

'அப்படி இருக்கவும் வாய்ப்பில்லையே!' என்று நினைத்தவருக்கு, சைலேஷின் நினைவு வந்தது. சைலேஷைப் பற்றி அனைத்தையும் தனது பெற்றோரிடம் சொல்லியிருந்தாள் ரம்யா. குறை என்று அவனைத் தட்டிக் கழிக்க எந்த விஷயமும் இல்லாததால், ரம்யாவின் குடும்பத்தினருக்கும் இதில் சம்மதமே.

ஆனால், சம்மந்தப்பட்டவள் இதை ஏற்க மறுக்கிறாளே. ஆனாலும், அவளது கண்ணீரே, சைலேஷை அவளுக்குப் பிடித்திருக்கிறது என்ற உண்மையை அவர்கள் உணர்ந்து கொள்ள போதுமானதாக இருந்தது.

என்ன நடந்ததென்று தன்மையாகக் கேட்டும், அவளிடமிருந்து எந்தப் பதிலையும் அவரால் பெற முடியவில்லை. கலங்கிய விழிகளுடன் தன் மடியைக் கட்டிக்கொண்டவளிடம், அவரால் கடுமையைக்



காட்டவும் முடியவில்லை. முன்பகலில் போன் செய்த ரம்யாவிடம், மெல்ல விஷயத்தைச் சொன்னார்.

ரம்யா உடனே அதை குணாவிற்குத் தெரிவிக்க, அவன் சைலேஷைப் பிடித்துக் கொண்டான்.

"என்னன்னுடா அவளை மிரட்டிட்டு வந்த? ரம்யா வீட்ல போய் அழுதுட்டு உட்கார்ந்திருக்கா...'' என்று கத்தினான்.

சற்றும் அசராமல் நண்பனைப் பார்த்த சைலேஷின் உதட்டில், குறுஞ்சிரிப்பு மலர்ந்தது.

"நீங்க வாங்கியிருக்கும் ஃப்ளாட்டைப் பார்க்கப் போகலாம்னு சொன்ன இல்ல... இந்த சண்டே எல்லோரும் போகலாம்'' என்று சொல்லிவிட்டு, அறையிலிருந்து வெளியேறினான் சைலேஷ்.

குணாவிற்கு மண்டையைப் பிய்த்துக் கொள்ளலாம் போலிருந்தது.

# 6

**லி**ஃப்ட்டில் ஏறி மூன்று என்ற எண்ணை அழுத்திய ரம்யா, "எப்படி இருக்கு மயூ?'' என்று கேட்டாள்.

"ம், ஏரியாவும் நல்லாயிருக்கு, அப்பார்ட்மென்ட்டோட ஃப்ரண்ட் எலிவேஷனும் அருமையா இருக்கு'' என்றாள்.

"சும்மாவா... முக்கால் கோடி!'' என்று ரம்யா

சொல்லிக்கொண்டிருக்கும்போதே, அவர்கள் இறங்க வேண்டிய தளத்திற்குச் சென்றடைந்த லிஃப்ட் நின்றது.

"இதுதான் நம்ம ஃப்ளாட்'' என்ற ரம்யா, கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள்.

"வாவ்! ரொம்ப அழகா இருக்குப்பா...'' என்று சிலாகித்துக் கொண்டே கிச்சனிலிருந்து மயூரி வெளியே வரவும், ஒரு அறையிலிருந்து சைலேஷ் அங்கு வரவும் சரியாக இருந்தது.

அங்கே அவனைச் சற்றும் எதிர்பாராத மயூரி, திகைத்துப் போனாள்.

அவனும் அவளையே பார்த்துக் கொண்டிருக்க, உள்ளுக்குள் வெலவெலத்துப் போனாள்.

"வாங்கண்ணா! நீங்க ரெண்டு பேரும் எப்போ வந்தீங்க?'' என்று விசாரித்தாள் ரம்யா.

"ஒரு பத்து நிமிஷம் இருக்கும்மா.''

"ஓ! உங்க பைக்கை நான் கவனிக்கவேயில்லை. ஆமா, உங்களைத் தனியா விட்டுட்டு, இவர் எங்கே போயிட்டார்?''

"பிளம்பர் வந்தார். அவரைக் கூட்டிட்டு மொட்டை மாடிக்குப் போயிருக்கான்'' என்று பதிலளித்தான் சைலேஷ்.

அவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருக்க, மயூரி படபடத்த இதயத்துடன் ஒரு பக்கமாக நின்றிருந்தாள்.

"அப்படியா! நீங்க இருங்க. நானும் போய்ப் பேசிட்டு வந்திடுறேன்'' என்று சொல்லிக்கொண்டே, வேகமாக கதவை இழுத்து மூடிவிட்டுச் சென்றாள் அவள்.



இவர்களது பேச்சில் கலந்து கொள்ளாமல் ஒருபக்கமாக நின்றிருந்த மயூரி, தோழியின் பேச்சை உணர்ந்து, "ரம்யா! நானும் உன்னோடு வரேன்...'' என்றபடி அவள் பின்னாலேயே நழுவ முயன்றாள்.

ஆனால், அதற்குள் ரம்யா அங்கிருந்து சென்றிருந்தாள். கதவைத் திறக்க முயன்றவள், அது பூட்டியிருப்பதை உணர்ந்து கலவரமானாள்.

"ரம்..யா...!'' என்று அழைத்தபடி கைப்பிடியைத் திருகியும், கதவைத் தட்டியும் வெளியேற முயற்சித்தாள்.

ஆனால், அவளது அழைப்பிற்கு எந்தப் பதிலும் இல்லாமல் போக, படபடத்த இதயத்துடன் திரும்பிப் பார்த்தாள்.

நெஞ்சுக்குக் குறுக்காகக் கைகளைக் கட்டிக் கொண்டு, ஒரு பக்கமாக சுவற்றில் சாய்ந்து நின்றபடி, அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் சைலேஷ்.

அவளுக்கு ஆயாசமாக இருந்தது.

'அத்தனையும் முன்கூட்டியே திட்டமிடப்பட்ட ஒன்று' என்று அவளுக்கு மெதுவாகத் தான் புரிந்தது. கால்கள் நிற்க வலுவில்லாமல் தொய்ய, அங்கிருந்த சோஃபாவில் அமர்ந்து, கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

அவனுக்குமே, அவளை அந்த நிலையில் பார்ப்பதற்கே பாவமாக இருந்தது.

'சாரி மயூரி! எனக்கு வேற வழிதெரியவில்லை' என்று மானசீகமாக அவளிடம் மன்னிப்பைக் கோரினான்.

அவளுக்கெதிரில் இருந்த சோஃபாவில்

அமர்ந்தவன், "மயூரி!'' என்று மென்மையாக அழைத்தான்.

முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டு ஆழமூச்செடுத்தவள், அவனை நேருக்கு நேராகப் பார்த்தாள். இப்போது அதில் தயக்கமோ, கலக்கமோ துளியும் இல்லை.

அவன் பேச ஆரம்பிக்கும் முன்பாக, அவள் முந்திக் கொண்டாள்.

"சொன்னது போல என்னை வரவச்சி... நீங்க ஜெயிச்சிட்டீங்க!'' என்று நிறுத்தியதுடன் நில்லாமல், மீண்டும் ஒரு ஆழமூச்செடுத்தாள்.

"நான் ஆரம்பத்திலேயே உங்ககிட்ட பேசியிருக் கணும். பிரச்சனைக்குப் பயந்து ஓடினது தான் நான் செய்த தப்பு. ஆனா, நான் என்னைக்குமே உங்களை அவாய்ட் பண்ணணும்னு நினைக்கல'' என்று நிறுத்தியவள், "எனக்கு உங்களை ரொம்பப் பிடிக்கும்'' என்றபடி கண்களில் வழிந்த கண்ணீரைப் புறங்கையால் துடைத்தாள்.

அவளுக்கும் தன்னைப் பிடித்திருக்கிறது என்று ஏற்கெனவே அவன் அறிந்திருந்த போதும், அவளது வாய்மொழியாகவே அதைக் கேட்டவனுக்கு உள்ளம் குளிர்ந்து போனது.

"அதனாலதான், என்னைப் பத்திய விவரங்கள் தெரிஞ்சா... உங்களை இழந்திடுவேனோங்கற பயத்துல...விலகி விலகிப் போனேன். உங்களை நான் வெறுக்கவும் இல்ல... வெறுக்கவும் முடியாது!'' என்ற போது அவளது குரல் தழுதழுத்தது.



ஆனால், இந்நிலையில் அவளை விட, அவன்தான் உருகிப் போயிருந்தான். எந்த நிலையிலும் யாருக்காகவும் அவளை விட்டுக் கொடுக்கக்கூடாது என்று உறுதியே எடுத்துக் கொண்டான்.

"நீங்க என்னைப் பத்தித் தெரிஞ்சிக்காமலேயே விலகிப் போனாலாவது ஓரளவு தாங்கிக்குவேன். ஆனா, என்னை வேண்டாம்னு நீங்க ஒதுக்கிட்டுப் போனா..., அதைத் தாங்கிக்கும் சக்தி எனக்கு இல்ல!'' என்றவள் அழ ஆரம்பித்தாள்.

'இந்த அளவுக்கு என்னை நேசிக்கிறாயா மயூ!' என்று மனத்திற்குள் கேட்டுக்கொண்டவன்,அவளது அன்பில் முழுதாகக் கரைந்து போனான்.

ஆறுதலாக அவளை அணைக்கத் துடித்த கரங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு, "நான் உன்னைவிட்டு விலகிடுவேன்னு... நீயா எப்படி நினைக்கலாம்?'' என்று கேட்டான்.

"என்னோட ரிஷிமூலத்தைத் தெரிஞ்சிகிட்டா,நீங்க இப்படிக் கேட்கமாட்டீங்க... நான்... என் அம்...மா...'' என்றவள் சொல்ல வந்ததைச் சொல்ல முடியாமல், தவிப்புடன் பாதியிலேயே நிறுத்தினாள்.

"எனக்கு அப்பா யாருன்னே தெரியாது... எனக்கு மட்டுமில்ல...'' என்றவள், அதற்கு மேல் எப்படிச் சொல்வதெனத் தெரியாமல், தலையைக் கைகளில் தாங்கியபடி கண்களை மூடி அமர்ந்து கொண்டாள்.

எழுந்து அவளருகில் சென்று அமர்ந்தவன், "மயூ!'' என்றபடி அவளது தோளைத் தொட்டான். "எனக்கு எல்லா விஷயமும் தெரியும். உன்னைப் பத்தி முழுசா

தெரிஞ்சதுக்குப் பிறகுதான், உன்னைப் பார்த்துப் பேசவே வந்தேன்.''

அதைக் கேட்டதும் வெடுக்கென நிமிர்ந்தவள், இமைகள் விரிய அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தாள்.

அடுத்த நொடி, அவனது தோள் அவளுடைய பாரத்தைத் தாங்கும் சுமைதாங்கியாகி, அவளது கண்ணீரால் நனைந்தது.

# 7

"நான் சொல்றதெல்லாம் உங்களுக்குச் சின்னப் பிள்ளைத்தனமா தெரியலாம். ஆனா நாம எல்லாருமே... இல்லாத ஒரு பொருளுக்காகத் தானே என்னைக்குமே ஏங்கறோம்? அப்படித் தான் நானும். என் புகுந்த வீடு, என் மாமனார் - மாமியார், என் கணவன், என் குழந்தைன்னு எல்லாமே எனக்குன்னு இருக்கணும்னு ஆசைப்பட்டேன்.

இந்தக் குடும்ப வாழ்க்கைக்காக நான் எத்தனை நாள் ஏங்கியிருக்கேன் தெரியுமா? "இப்படியொரு குடும்பத்தில் பிறந்துட்டு, உனக்கு இத்தனைப் பெரிய பேராசையான்னு?' என்னையே பலமுறை கேட்டுட்டு இருக்கேன்'' என்றவள், கண்களில் கரையொதுங்கிய கண்ணீரை நாசூக்காகச் சுண்டிவிட்டாள்.

"குடும்பம்னா என்ன? அப்பா, அம்மாவோட பாசம்னா என்னன்னு எனக்குப் புரிய வச்சதே, ரம்யாவோட குடும்பம் தான். சொல்லப் போனா... தாய்ப் பாசம்னா



என்னன்னு தெரியாமலேயே தான் வளர்ந்தேன்.

எங்கம்மா வாயாலயே, "நீ மட்டும் பொம்பளப் பிள்ளையா இல்லாம இருந்திருந்தா... எப்பவோ கொன்னு போட்டிருப்பேன்னு' எத்தனையோ முறை சொல்லக் கேட்டிருக்கேன்.

அந்த வயசுல அதுக்கானமுழு அர்த்தமும் எனக்குத் தெரியலைன்னாலும், அழுகை தான் வரும்.அது தெரிய வந்தப்போ... நான் ஏன் இன்னும் உயிரோட இருக்கேன்னு துடிச்சிருக்கேன்.

எனக்கு நினைவு தெரிஞ்ச நாள்ல இருந்தே... ஹாஸ்டல் வாழ்க்கை தான். ஒவ்வொரு வருஷமும், லீவுக்கு மட்டும் தான் வீட்டுக்கு வருவேன்.

ஹாஸ்டலுக்கு என் ஃப்ரெண்ட்ஸைப் பார்க்க அவங்க அப்பா, அம்மா வரும்போது, நமக்கு மட்டும், ஏன் அப்படி வர்றதில்லைன்னு ஏக்கமா இருக்கும்.எப்போதாவது வேண்டா வெறுப்பா வந்து பார்த்துட்டுப் போகும் அம்மாகிட்ட... இதைக் கேட்கவும் பயமா இருக்கும்.

செல்லம்மா அக்காவோட குடும்பமே, பரம்பரை பரம்பரையாஎங்க வீட்லதான் வேலை செய்திட்டு இருந்தாங்க. அவங்களுக்குக் கல்யாணமாகி ரொம்ப நாள் குழந்தை இல்லை. அதனால,என் மேல ரொம்பப் பாசமா இருப்பாங்க.

அவங்க எங்க வீட்டுப் பக்கத்திலேயே இருந்ததால, லீவுக்குப் போகும் போதெல்லாம், அவங்க வீட்டில் தான் இருப்பேன். செல்லம்மா அக்கா என்னை எங்க வீட்டுக்குப் போகவே விடமாட்டாங்க. எனக்குத் தேவையான பாசம் அவங்ககிட்டயே கிடைக்கும் போது,அதுக்கான

அவசியமும் எனக்கு இல்லாமப் போச்சு.

"சொல்லவே கூசுது. நா... ன் பெரியவளானதே எங்க அம்மாவுக்கு ரெண்டு வருஷத்துக்குத் தெரியாது. செல்லம்மா அக்கா இதையெல்லாம் அம்மாகிட்ட சொல்லக்கூடாதுன்னு சொல்லி, என்னைப் பயமுறுத்தி வச்சிருந்தாங்க.

அந்த நேரத்தில் தான், ட்ரான்ஸ்ஃபர்ல, ரம்யாவோட அப்பா கமிஷனரா எங்க ஊருக்கு வந்தார். அதுக்குப் பிறகு எனக்குக் கவலையே இல்லாமல் போச்சு. லீவில் ஊருக்கு வந்தா... பகலெல்லாம் ரம்யா வீடு, நைட்ல செல்லம்மா அக்கா வீடுன்னே என்னோட நேரம் போச்சு.

ரம்யாவோட அப்பா, அம்மா ரெண்டு பேருமே என் மேல ரொம்பப் பாசமா இருப்பாங்க. நானும் ஏதோ ஒரு வகையில் புண்ணியம் பண்ணி இருந்ததால் தான், இப்படிப்பட்ட நல்லவங்க என் கூடவே இருந்திருக்காங்க.

எங்க அம்மாவுக்கு தெரிஞ்சது எல்லாமே பணம், பணம்... பணம்தான். அதுக்காக அவங்க என்ன வேணாலும் செய்யத் தயாரா இருந்தாங்க. பணத்துக்கு முன்னால... பெத்த பொண்ணுகூட, அவங்களுக்கு ஒரு பொருளாதான் தெரிஞ்சிருக்கு'' என்றவள் சற்று நேரம் எதுவுமே பேசாமல் கைகளில் முகத்தைப் புதைத்தபடி அமர்ந்துகொண்டாள்.

அந்த நேரத்திலும் அவளது உடல் நடுங்கியது. சைலேஷோ, அவளது நிலையை ஜீரணிக்கமுடியாமல் தடுமாறினான்.

ஒருவழியாக, தன்னைச் சமாளித்துக் கொண்டு நிமிர்ந்தவள், "எப்படியோ விஷயத்தைத் தெரிஞ்சிகிட்ட



செல்லம்மா அக்கா, என்னை ரம்யாவோட அப்பாகிட்ட கூட்டிட்டுப் போய் விட்டுட்டாங்க. பெத்த அம்மாவுக்கு இல்லாத பாசமும், அக்கறையும்... என்னை வளர்த்த செல்லம்மா அக்காவுக்கு நிறையவே இருந்தது.

அன்னைக்கு நான் அங்கிருந்து தப்பி வந்ததை நினைச்சா... இன்னைக்கும்...'' என்றவளுக்குத் தொண்டையை அடைத்தது. உடல் நடுங்கவும், கால்களை இறுகக் கட்டிக் கொண்டாள்.

இதயம் கனக்க, அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்தவன், அவளது நிலையைக் கண்டு தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான். அந்த உடலின் அதிர்விலிருந்தே, அவளது மனத்திலிருக்கும் பயத்தின் அளவை அறிய முடிந்தது.

"அதுக்கு அப்புறம்...'' என்று மீண்டும் ஆரம்பித்தவளை, "போதும் மயூ! மறந்திருக்கற விஷயத்தை திரும்ப நினைவு படுத்திக்காதே'' என்றான்.

விரக்தியாகப் புன்னகைத்தவள், "இதெல்லாம் மறக்கக்கூடியதா...?'' என்றாள் கேள்வியாக.

சைலேஷ் பதில் சொல்ல முடியாமல் அமைதியாக இருந்தான்.

"அதுக்கு அப்புறம், எவ்வளவோ பிரச்சனைகள்... ரம்யாவோட அப்பா எனக்காக ரொம்பவே மெனக்கெட்டார். எந்த ஒரு நிலையிலும் என் மேல உரிமைக் கொண்டாடக் கூடாதுன்னு, எங்க அம்மாகிட்ட எழுதி வாங்கிக்கிட்டாங்க. நான் மேற்கொண்டு படிக்க ஏற்பாடு செய்தாங்க.

இன்னைக்கு... இந்த அளவுக்கு என்னால

சுயமாவாழமுடியுதுன்னா, அதுக்கு ரம்யாவோட நட்பும், அவளோட அப்பா, அம்மாவோட அன்பும் மட்டும்தான் காரணம். என்னைக் கூட... அவங்களோட இன்னொரு மகளா ஏத்துகிட்ட அவங்களோட பெருந்தன்மைக்கு,நான் என்ன கைமாறு செய்ய முடியும்?'' என்றாள்.

சற்று நேரத்திற்கு முன்பாக அத்தனை வேதனையையும் உள்ளடக்கியிருந்த அவளது முகம், அன்பையும், கண்களில் பரிவையும் குழைத்திருந்தது.

"எனக்கும் ஒரு குடும்பத்திற்குள் வாழ... சந்தர்ப்பம் கிடைக்கும்னு நினைக்கவே இல்லை!" என்றவளது குரல் நெகிழ்ந்திருந்தது.

அவளது முகத்தையே இமைக்காமல் பார்த்தான்.

"நான் உங்களைக் காதலிக்கிறேன். உங்க காதலையும் ஏத்துக்கிட்டேன். ஆனா, இப்போதைக்கு அதை உங்ககிட்ட முழுமையா வெளிப்படுத்த முடியாத நிலையில இருக்கேன்'' என்றாள்.

சைலேஷ் கேள்வியுடன் அவளைப் பார்த்தான்.

"எனக்கு... உங்க அப்பா-அம்மாவோட மனப் பூர்வமான சம்மதம் வேணும். அவங்க சம்மதம் இல்லாம... நம்ம கல்யாணம் நடக்காது!'' என்று தீர்மானமாகச் சொன்னாள்.

அவளைக் கூர்ந்து பார்த்தவன், திடீரென வாய் விட்டு நகைத்தான். அவனது சிரிப்பிற்கான காரணம் புரியாமல், தவிப்புடன் அவனைப் பார்த்தாள்.

"நான் உன்னை லவ் பண்றேன்னு தான் சொன்னேன். கல்யாணம் செய்துக்கறேன்னு எப்பச் சொன்னேன்?''



என்று சொல்லிவிட்டு மீண்டும் சிரித்தவனை, அமைதியாகப் பார்த்தாள்.

"என் சைலேஷைப் பத்தி எனக்குத் தெரியும். அவரோட காதல் பொய்யாக இருக்கவே முடியாது... அப்படி அது பொய்யாக இருந்தா, என்னுடைய காதலும் பொய்யாகிடும்!'' என்றாள்.

அந்த நொடியில், அவள் மீதான காதல்... பன்மடங்காகப் பெருகிப் பொங்கியது அவனுக்கு.

"என் மேல அவ்வளவு நம்பிக்கையா மயூ?'' என்றான் காதலுடன்.

"உங்க மேல இருந்த நம்பிக்கையால் தான், எனக்குக் காதலே வந்தது!'' என்றாள்அவள் கூச்சத்துடன்.

"உன் நம்பிக்கையை, என்னைக்குமே பொய்க்க விடமாட்டேன் கண்ணம்மா!'' என்றான் உறுதியுடன்.

# 8

முழுதாக பதினைந்து நாட்கள் ஓடிவிட்டது. அன்று சந்தித்துப் பேசியதோடு சரி. அதன்பிறகு சைலேஷ் அவளைத் தொடர்பு கொள்ளவேயில்லை. தனது வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து அவன் பேசாமலிருப்பது, அவளுக்குச் சந்தோஷமாகவே இருந்தது.

ஆனாலும், ஒரு சராசரிப் பெண்ணான அவளது மனமும், அவனை எதிர்பார்க்கவும் செய்தது. முதல் இரண்டு நாட்கள் பெரிதாக எந்த மாற்றமும் இல்லாமல் தான் கழிந்தது.

ஆனால், அவளது ஆழ்மனம் அவனைத் தேட ஆரம்பித்தது. அவனது பேச்சைக் கேட்கத் துடித்தது. குறும்பு மின்னும் அவனது பார்வைக்காக ஏங்க ஆரம்பித்தது.

'நேரில் தான் வரவில்லை... அதற்காக... போனிலும் பேசக்கூடாதா?' என்று செல்லமாகக் கோபம் எழுந்தது. இரண்டு வாரங்களை நெட்டித் தள்ளியவளால், அதற்கு மேல் அவனைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

'இந்த ரம்யாவும் தினமும் இரண்டு முறை பேசுகிறாள். ஆனால், மறந்தும் அவனைப் பற்றிப் பேசுவதே இல்லை. இப்படித் தன்னைப் பழிவாங்குகிறாளே!' என்ற எரிச்சல் மேலோங்கியது.

மெல்ல அவளே அவனைப் பற்றிய பேச்சை ஆரம்பித்த போது, சற்று நேரம் ரம்யாவிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை. மௌனமாகச் சிரிக்கிறாள் என்று புரிந்து கொண்ட மயூரிக்கு ஒருமாதிரி இருக்க, சட்டென்று போனை வைத்துவிட்டாள்.

சிறிதுநேரத்தில் ரம்யாவே அவளை அழைத்த போது, இவள் போனை எடுக்காததால், அவளிடமிருந்து குறுஞ்செய்தி வந்தது.

'வேலை விஷயமாக சைலேஷ் வெளியூர் சென்றிருப்பதாகவும், நாளைக் காலையில் வந்து விடுவான்' என்ற செய்தியைப் படித்துவிட்டு, 'தேங்க்ஸ்' என்ற பதிலை அனுப்பினாள்.

அன்றைய நாளே சற்று உற்சாகமாகச் செல்வது போல இருந்தது மயூரிக்கு.



மறுநாள், மதிய உணவை முடித்துக் கொண்டு,தனது பணியிடத்துக்கு வந்து கொண்டிருந்தவள், புத்தகத்தைப் புரட்டியபடி லாபியில் அமர்ந்திருந்தவனைப் பார்த்தாள்.

மனத்திற்குள் மெல்ல சாமரம் வீசிய சந்தோஷத்தை அனுபவித்தபடி அவனருகில் சென்றாள்.

எதேச்சையாக நிமிர்ந்ததில் அவளைக் கண்டவன், "ஹாய்!'' என்றபடி எழுந்தான்.

"வாங்க!'' என்றாள்முறுவலித்தபடி.

"சாரி! இன்ஃபார்ம் பண்ணிட்டு வந்திருக்கணும். காலைல தான் வெளியூர் ட்ரிப் முடிச்சிட்டு வந்தேன். ரிப்போர்ட் சப்மிட் பண்ணிட்டு, அரைநாள் லீவ் போட்டுட்டு வந்துட்டேன்'' என்றான்.

சிரித்தபடி தன்னைக் கடந்து சென்ற அலுவலகத் தோழியைப் பார்த்தபடி, "ஓ!'' என்றாள்.

"டிஸ்டர்ப் பண்றேனா மயூ!'' என்றான்.

"ஆ... அதெல்லாம் இல்ல... இப்போ லஞ்ச் டைம் தான்'' என்றாள்.

"ம், எனக்காக ஹாஃப் எ டே லீவ் போட்டுட்டு வரமுடியுமா?'' எனக் கேட்டான்.

"லீவா...?'' என்று இழுத்தாள்.

"ஆம்' என்பது போல தலையசைத்தான்.

"கொஞ்சம் வேலை இருக்கே...'' என்றாள்.

"பரவாயில்ல.... முடிச்சிட்டு வா. வெயிட் பண்றேன்.''

"இல்ல... மூணு மணியாவது ஆகிடும்.''

"நோ பிராப்ளம்!'' என்றவன், அவள் சொன்னது போலவே பொறுமையாகக் காத்திருந்து, அவளை அழைத்துச் சென்றான்.

* * *

"இப்போ நாம எங்கே போறோம்?" - மென்குரலில் கேட்டாள்.

"சஸ்பென்ஸ்" என்று புன்னகைத்தவன் திரும்பிச் சாலையைப் பார்க்க, மயூரி சலிப்புடன் ஆட்டோவில் சாய்ந்து அமர்ந்தாள்.

"நாம இங்கே தான் இறங்கணும்.''

"தேங்க்ஸ்!" என்றபடியே ஆட்டோவிற்கான பணத்தைக் கொடுத்தவன், "வா மயூ!" என்று அவளை அழைத்துக்கொண்டு நுழைந்த இடம், ஒரு கார் ஷோரூம்.

"கல்யாணத்துக்கு முன்னாலயே கார் வாங்கணும்னு நினைச்சிட்டு இருந்தேன்..." என்றவன் சுட்டிக்காட்டிய காரைக் கண்டதும்,மயூரியின் இமைகள் அழகாக விரிந்தன.

அவளுக்குப் பிடித்தமான ஆழ்ந்த நீல நிற டாடா இண்டிகோ. சந்தோஷத்தில் அவளுக்குப் பேச்சே வரவில்லை.

"உனக்கு ப்ளூ கலர்னா ரொம்பப் பிடிக்கும்னு ரம்யாசொன்னாங்க. பிடிச்சிருக்கா?'' என்று கேட்டான்.

நெக்குருகி நின்றவளது கரத்துடன் தனது கரத்தைப் பிணைத்துக் கொண்டு, "ரிலாக்ஸ்!" என்றான்.

அப்போதே காரை டெலிவரி எடுத்தவன், முன்பக்கக் கதவைத் திறந்துவிட்டு அவளை அமரச் செய்தான்.



எதுவும் பேசாமல் அவனைத் திரும்பித் திரும்பிப் பார்த்தவளை, நிதானமாகப் பார்த்தான்.

"என்ன மயூ? எதுவோ சொல்லணும்னு நினைக்கிற? என்னன்னு சொல்லு'' என்றான்.

"நீங்க உங்க அப்பா, அம்மாவை அழைச்சிட்டு வந்து கார் வாங்கியிருந்தா, ரொம்பச் சந்தோஷப்பட்டிருப்பாங்க."

"ஆமாம். ஆனா, கொஞ்ச நேரத்திற்கு முன்னால... உன் முகத்தில தெரிஞ்ச சந்தோஷத்தைத் தவற விட்டிருப்பேனே?"

"இருந்தாலும்... பெரியவங்க இருக்கும் போது... நான்...?" என்று தயங்கினாள்.

"மயூ! இதெல்லாம் ஒரு விஷயமே இல்லை. நிறைன்னு நினைச்சா நிறை... குறைன்னு நினைச்சா குறை... எல்லாத்துக்குமே... நம்ம மனசு தான் காரணம்!'' என்று சொல்லி, அவளது கேள்விக்கு முற்றுப்புள்ளி வைத்தான்.

கோவில் வாசலில் அவளை இறக்கிவிட்டவன், "நீ போயிட்டே இரு. நான்காரைப் பார்க் பண்ணிட்டு வரேன்" என்று சொல்லிவிட்டுக் காரை ரிவர்ஸ் எடுக்க,மயூரி கோபுரத்தைப் பார்த்துக் கன்னத்தில் போட்டபடி கோவிலுக்குள் நுழைந்தாள்.

அர்ச்சனைத் தட்டை வாங்கிக் கொண்டு திரும்பியவளை, "என்னம்மா மயூரி! சௌக்கியமா இருக்கியா?" என்றவரது குரலில் நின்றாள்.

'யார் இவர்?' என்று யோசனையுடன் அந்தப் பெரியவரைப் பார்த்தாள்.

"என்னம்மா...? என்னை நினைவில்லையா?" என்று மீண்டும் கேட்டவரை, புரியாமல் பார்த்தாள்.

"இல்ல... நீங்க யார்ன்னு தெரியலை...சாரி!" என்று நிறுத்திவிட்டு, சைலேஷ் வருகிறானா என்று திரும்பிப் பார்த்தாள்.

"ஆரம்பிச்சிட்டீங்களா உங்க வேலையை?" என்றபடி வந்த பெண்மணியைப் பார்த்ததும், மயூரியின் முகம் மேலும் குழப்பத்தை வெளிப்படுத்தியது.

"பயப்படாதேம்மா. நாங்க உனக்கு ரொம்ப நெருங்கின சொந்தம். இவங்க என் மனைவி வடிவாம்பாள்; எனக்கு வடிவு. நான் மிஸ்டர்.வடிவாம்பாள்!'' என்று அவர் சொல்ல, கண்களை அகலவிரித்து பேச்சு வராமல் திகைத்து நின்றாள்.

"என்னம்மா நீ கொடுக்கும் ரியாக்ஷனைப் பார்த்தா, நான் முதல்லயிருந்து வரணும் போலிருக்கே!" என்று கேலியாகச் சொன்னார் கேசவன்.

"அது... மா...மா...!'' என்றவள், சந்தோஷத்தில் திக்குமுக்காடினாள்.

"பரவாயில்ல வடிவு! உன் பிள்ளை... மருமககிட்ட நம்மளைப் பத்திச் சொல்லியிருக்கான். உன் பேரைச் சொன்னதும் கற்பூரம் மாதிரி பட்டுன்னு புடிச்சிகிட்டா பாரு...'' என்று சிரித்தார் கேசவன்.

"அவன் என் பிள்ளையாச்சே!'' என்ற வடிவு, முகம் நிறையத் திருப்தியும் சந்தோஷமும் தெரிய, புன்னகைத்தார்.

பெற்றோரின் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியைக் கவனித்துக் கொண்டே, அவர்களை நோக்கி வந்தான்



சைலேஷ். மயூரியின் அருகில் வந்து நின்றவனைக் கண்ட வடிவுவாம்பாள், இருவரது ஜோடிப் பொருத்தத்தையும் பார்த்துப் பெருமிதம் கொண்டார்.

"எப்படிம்மா உங்க மகனோட செலக்ஷன்?" என்று புருவத்தை உயர்த்திச் சிரித்த மகனைப் பார்த்து, தனக்குப் பூரணத் திருப்தி என்பது போல தலையைசைத்தார் வடிவு.

மனம் நிறைய சந்தோஷத்துடன், கண்களில் நன்றியுடன் சைலேஷைப் பார்த்தாள் மயூரி.

கடவுளைத் தரிசித்து, காருக்குப் பூஜையும் போட்டுவிட்டு, நால்வரும் இரவு உணவை ஹோட்டலிலேயே முடித்துக் கொண்டனர்.

"சைலேஷ்! நீ மயூரியைக் கூட்டிட்டுக் கிளம்பு. நாங்க ஆட்டோல வீட்டுக்குக் கிளம்பறோம்'' என்ற வடிவு, "பத்திரமா போய் வாம்மா'' என்றார்.

சரி என்பது போலத் தலையசைத்தவள், "வரேன் அத்தை! வரேன் மாமா!'' என்று இருவரிடமும் விடைபெற்றுக் கிளம்பினாள்.

மாலையிலிருந்தே நடந்த விஷயங்களால் உணர்வுகளின் ஆதிக்கத்தில் கட்டுண்டிருந்தவள், எதுவுமே பேசவில்லை. அதைப் புரிந்தவனாக, அவனுமே மௌனமாக காரைச் செலுத்திக் கொண்டிருந்தான்.

# 9

**ஹா**ஸ்டலின் அருகே காரை நிறுத்திவிட்டு, மயூரியின் அருகில் வந்து நின்றான்.

மெல்ல அவனை ஏறிட்டு நோக்கியவள், "தேங்க்ஸ்!'' என்றாள்.

தெரு விளக்குகள் கூட இல்லாத அவ்விடத்தில் வெண்ணிலவின் ஒளியில், நெகிழ்ந்திருந்த அவளது முகம், மேலும் வசீகரமாகத் தோன்றியது.

கண்களிலிருந்து வழிந்த ஈரத்தால் கன்னங்கள் பளபளத்தன. ஒருவிரலால் அவளது கண்ணீரை மெல்லத் துடைத்து விட்டான்.

சட்டென அவனிடமிருந்து வேகமாக விலகி நடந்தவள், அதே வேகத்தில் நின்று அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

அவனும் மௌனமாக அவளையே பார்த்திருந்தான்.

அவளது இதயம் வேகமாகத் துடித்தது. மெல்ல அவனை நெருங்கியவள், கூச்சத்தில் சற்றுத் திணறினாள்.

"மயூ!'' என்ற அவனது குரல்,மயிலிறகாய் அவள் இதயத்தை வருடியது.

தன் கனவை நினைவாக்க வந்த தன் உள்ளம் கவர்ந்தவன் மேல், ஆசை பீறிட்டுக் கொண்டு வந்தது.

தவியாய் தவித்த மனத்தை அடக்க முடியாமல் அவள் போராடுவதை, அவன் புன்னகையுடன் பார்த்தான்.

புடவையின் முனையை கைவிரலில் சுற்றியபடி இருந்தவள், அதை நிறுத்திவிட்டு நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

அவளது வாய்மொழிக்காக அவனும் ஆர்வமாக காத்திருக்க, "ஐ லவ் யூ சைலேஷ்!'' என்றவள், அவன் சற்றும் எதிர்பாராத நேரத்தில் தன் இதழ்களை அவனது



கன்னத்தில் பதித்துவிட்டு, ஒரே ஓட்டமாக ஹாஸ்டலை நோக்கி ஓடினாள்.

வெறும் வார்த்தைகளை எதிர்பார்த்துக் காத்திருந்தவனுக்கு, கன்னத்தின் ஈரம் நடந்ததெல்லாம் உண்மை தான் என்று உணர்த்தவும், சந்தோஷத்தில் துள்ளிக் குதிக்க வேண்டும் போலிருந்தது.

கன்னத்தைச் சற்றே தடவி சிரித்துக் கொண்ட போது, மொபைல் ஒலிக்கவும் புன்னகை மாறாமல் போனை எடுத்தான்.

"சைலேஷ்! எங்கேடா இருக்க?'' என்ற குணாவிற்கு, "சொர்க்கத்தில்...!'' என்று ரசனையுடன் பதிலளித்தான்.

* * *

வீடு வந்து சேரும் வரை அடக்கி வைத்திருந்த பேச்சையெல்லாம், வடிவாம்பாள் திருவாய் மலர ஆரம்பித்தார்.

"சீக்கிரமே நல்ல நாள் பார்க்கணும். என் மருமக என்னைக்கு வீட்டுக்கு வருவான்னு இருக்கு. சைலேஷ் சொன்னப்பகூட... பொண்ணு எப்படி இருப்பாளோன்னு கொஞ்சம் கவலையா இருந்தது. ஆனால் இவ... அடக்கமா, அமைதியா, பக்தியானவளா தான் இருக்கா!

நாளைக்கு நல்ல நாள். இனியா வீட்டில விஷயத்தைச் சொல்லி, புதன்கிழமை மயூரி வீட்டில போய்ப் பேசி முடிச்சிடலாம்" என்ற மனைவியை மௌனமாகப் பார்த்தார் கேசவன்.

"நான் பேசிட்டே இருக்கேன்... நீங்க ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கறீங்களே?"

"நாளைக்குப் பொறுமையா பேசிக்கலாம்.

சைலேஷும்... என்னவோ முக்கியமாக பேசணும்னு சொன்னான்" என்றவர் படுக்கச் சென்றுவிட, வடிவுக்கு ஏதோவொன்று நெருடியது.

'ஒருவேளை, நாம எதிர்பார்க்கும் அளவுக்குச் செய்ய மாட்டாங்களா? இருந்தால் என்ன? சைலேஷுக்குப் பிடிச்சிருக்கு; அவனோட சந்தோஷத்தை விடவா இதெல்லாம் பெரிசு? கொஞ்சம் கூடக் குறைய ஆனாதான் என்ன? நான் செய்துட்டுப் போறேன்! கல்யாணத்துக்குப் பின்னால, அவளும் இந்த வீட்டுப் பொண்ணு தானே!' என்ற நினைத்துக் கொண்டார்.

ஆனால், தான் சற்றும் எதிர்பார்க்காத ஒரு விஷயத்தைத் தன் மகன் சொல்லப் போகிறான். இந்தக் கல்யாணத்தை, தானே மறுக்கப் போகிறோம் என்று தெரியாமல், திருமணத்திற்கு யாரையெல்லாம் அழைக்கவேண்டும்..., என்னவெல்லாம் செய்ய வேண்டும் என மனத்திற்குள் பட்டியலிட்டுக் கொண்டிருந்தார் வடிவு.

* * *

காலை டிஃபனை முடித்துக் கொண்டு அன்னையிடம் பேசவேண்டும் என்ற முடிவுடன் ஹாலில் வந்து அமர்ந்த சைலேஷ், மனத்திற்குள் "எப்படி விஷயத்தை ஆரம்பிப்பது?' என்று முன்னோட்டம் பார்த்துக் கொண்டிருந்தான்.

வேலைகளை முடித்துவிட்டு வந்த வடிவு, "கண்ணா! இன்னைக்கு... நாள் ரொம்ப நல்லாயிருக்கு. இனியா வீட்ல விஷயத்தைச் சொல்லி, நல்ல நாள் பார்த்து... மயூரி வீட்டுக்குப் போய்ப் பேசலாம்!'' என்றார்.



தந்தையைத் திரும்பிப் பார்த்தான். அவரும் "சொல்லிவிடு' என்பது போல செய்கை செய்ய, எப்படியோ ஒரு வழியாக அன்னையிடன் அனைத்தையும் சொல்லி முடித்தான்.

மகன் சொன்னவற்றைக் கேட்டு அதிர்ந்து போய் அமர்ந்திருந்த வடிவின் முகம், மெல்லக் கோபத்திற்கு மாறியது.

"இதுக்கு, நான் ஒரு நாளும் சம்மதிக்க மாட்டேன் சைலேஷ்! அவளை இந்த நிமிஷத்தோடு நீ மறந்திடு!" என்று காட்டுக் கத்தலாகக் கத்தினார்.

"அம்மா! எதையுமே மயூரியா உருவாக்கிக்கல. அவளோட நிலைமையைக் கொஞ்சம் யோசிச்சிப் பாருங்க. நானாகத்தான் என்னோட காதலை அவகிட்டச் சொன்னேன்..." என்றான்.

"போதும்பா போதும்! காதலாம் காதல்! அவளுக்கு உன் மேல இருக்கறது காதலாமா...? இனி... அவளோட பேச்சையே இந்த வீட்டில் எடுக்காத! எப்பேர்பட்ட குடும்பம் நம்மளது. இப்படி ஒரு சாக்கடைல பொண்ணு கட்டினா..., யார் நம்மை மதிப்பா? இந்த ஊர் உலகம் என்ன பேசும்? நாமெல்லாம்... மானம், மரியாதைக்கு பயந்து வாழறவங்க. இவளுங்க மாதிரி வேளைக்கு ஒருத்த..."

அவர் மேற்கொண்டு பேசுவதற்குள், "அம்மா...!'' என்று உரக்கக் கத்தினான்.

மகனது ஆக்ரோஷமானக் குரலைக் கேட்ட வடிவாம்பாள் திகைத்துப் போனார். 'தன் மகனா இப்படிப் பேசுவது?' என்று இமைக்காமல் பார்த்தார்.

"எப்படிம்மா...? மயூரியைப் பத்தி இப்படிக் கீழ்த்தரமாக பேச... உங்களுக்கு எப்படி மனசு வருது? உங்களுக்கும் ஒரு பொண்ணு இருக்கா...!"

"ஏம்பா...! எம் பொண்ணுக்கு என்ன குறை? ராஜாத்தி மாதிரி பெத்து, வளர்த்து... நல்ல இடத்துல கல்யாணம் பண்ணி வச்சி, இன்னைக்கு ஓஹோன்னு வாழ்ந்துட்டு இருக்கா. அவளோட.... கண்ட கழிசடையை ஒப்பிட்டுப் பேசாதே...!"

"அம்மா ப்ளீஸ்! திரும்பத் திரும்ப, நீங்க மயூரியை அவமானப்படுத்துவது போலப் பேசி, என்னைக் கோபப்படுத்தாதீங்க. அப்படிப்பட்ட குடும்பத்தில் பிறந்தது அவளோட தப்பா? அவளுக்கு ரொம்ப மென்மையான மனசும்மா. அதில... பெயருக்குக் கூடக் களங்கம் கிடையாது!'' என்று ஆதங்கத்தில் கத்தியவன், தன்னைச் சற்றுக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

"அம்மா! அவளோட பிறப்பு எப்படியிருந்தால் என்ன? நம்ம வீட்டுக்கு வந்ததும் அவள் இந்த வீட்டுப் பொண்ணு. உங்க மருமக..." என்றவனை, "சைலேஷ்...!'' என்று கத்திய வடிவாம்பாளின் குரல் தடுத்து நிறுத்தியது.

"வேண்டாம்...! போதும். கண்டவளைப் பத்திப் பேசி, உன்னோட நேரத்தையும், எங்களோட பொழுதையும் வீணாக்காதே! என்னோட முடிவு இதான். உனக்கு இவள் வேணாம்!'' என்று மூச்சை அடக்கிக் கொண்டு பேசினார்.

சிறிதுநேரம் அங்கே யாருமே பேசவில்லை. சைலேஷ் தனது முடிவில் நிலையாய் இருக்க, வடிவாம்பாள் அதைவிட உறுதியாக நின்றார். ஆனாலும், மகனின் முகவாட்டம் அவருக்கு வேதனையாக இருந்தது.



அம்மா, அம்மா என்று எதற்கெடுத்தாலும் தன்னைச் சுற்றி வரும் மகனுக்காக, எதையும் செய்ய அவரும் தயார் தான். அதற்காக... முற்போக்குச் சிந்தனையுடன் நடந்துகொள்ளும் அளவிற்கு, அவருக்குப் பெருந்தன்மை வளர்ந்திருக்கவில்லை.

ஆனால், இப்போது பேச்சின் மூலம் எதையும் சாதிக்க முடியாது. அவனை உணர்வுப்பூர்வமாகத் தான் அணுக வேண்டும்' என்று முடிவெடுத்தார்.

மெல்ல மகனின் தலையைக் கோதிவிட்டவர், "கண்ணா! நான் சொல்றதைக் கொஞ்சம் யோசிச்சிப் பாரு. இவளை விட நல்ல... அழகான, அறிவான பொண்ணா... நானே உனக்குப் பார்த்து வைக்கிறேன்!" என்றதும், அமர்ந்திருந்த சைலேஷ் எழுந்து நின்றான்.

"உங்க முடிவில் நீங்க இவ்வளவு திடமா இருக்கீங்க இல்லையா...? என் முடிவையும் கேட்டுக்கோங்க. எனக்கு உலக அழகியோ, பிரபஞ்ச அழகியோ தேவையில்லை. என் மயூரி மட்டும் தான் வேண்டும். இஷ்டமிருந்தா... எங்க கல்யாணத்துக்குச் சம்மதம் சொல்லுங்க. இல்லன்னா..." என்றவன், எதுவும் பேசாமல் நிறுத்தினான்.

இத்தனைத் தூரம் பேசியும், சற்றும் தளராமல் இருப்பவனை ஆத்திரத்துடன் பார்த்தார் வடிவு.

"இல்லனா என்னடா செய்வ? கல்யாணமே செய்துக்காம.... காலமெல்லாம் அவளையே நினைச்சிகிட்டு... தேவதாஸா திரியப் போறியா?" என்று ஆத்திரத்துடன் கேட்டார்.

"எதுக்கு? நான் எதுக்குத் தேவதாஸா திரியணும்? நான் படிச்சிருக்கேன்... கைநிறையச் சம்பாதிக்கிறேன். நாளைக்கே மயூரியை ஒரு கோவிலுக்குக் கூட்டிட்டுப் போய் தாலியைக் கட்டி, என் மனைவியா ஆக்கிக்க முடியும். பெத்தவங்க இருக்கும் போதே இப்படிச் செய்தால், உங்களுக்கு மரியாதையா இருக்காதேன்னு யோசிக்க வேண்டியிருக்கு!

இனியும் மயூரியைப் பற்றி நீங்க ஏதாவது தவறா பேசினாலோ, கல்யாணத்துக்குச் சம்மதிக்காவிட்டாலோ... நான் இப்போ சொன்னதை நடத்திக் காட்டுவேன்!" என்றவன், செருப்பை அணிந்து கொண்டு வெளியேறினான்.

"போடா போ...! நான் சொல்றதெல்லாம் இப்போ உனக்குப் புரியாது!" என்று புலம்பியவர், நடந்ததையெல்லாம் அமைதியாக வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த கணவரை எரிச்சலுடன் பார்த்து, "ஏங்க...! உங்களுக்குக் கொஞ்சமாவது ஏதாவது இருக்கா?'' என்றார்.

"மூளை இருக்கான்னு நேராவே கேளேன்!" என்றார் அவர் பதிலுக்கு.

வடிவாம்பாளிற்கு தனது நிலையை நினைத்து அழுகையே வந்துவிடும் போலிருந்தது.

"பார்த்தீங்களா... அவன் என்ன பேசிட்டுப் போறான்னு! வாயை மூடிகிட்டு எல்லாத்தையும் வேடிக்கைப் பார்க்கறீங்களே! அவனுக்குப் புரிவது போல கொஞ்சம் எடுத்துச் சொல்லக் கூடாதா? அவன் என்ன சொன்னான்னு கேட்டீங்க இல்ல?"



"எனக்கென்ன காதா கேட்கல... சொல்லிட்டுப் போவது புரியாமல் போக? அவன் மனசுக்குப் பிடிச்சப் பொண்ணை, அவனுக்குக் கல்யாணம் செய்து வைக்கறது நம்ம கடமை. யாரோ ஒருத்தி மருமகளாக வர்றதுக்கு... மயூரியே வரட்டுமே!"

"ஹய்யோ! நீங்க புரிஞ்சிதான் பேசறீங்களா? இல்ல வேணும்னே பேசறீங்களா? நமக்கு இவன் மட்டும் தான் பிள்ளையா? நம்ம பொண்ணு இருக்கா. அவளுக்குப் புகுந்த வீடுன்னு ஒண்ணு இருக்கு.... மறந்து போச்சா?'' என்றார் வேதனையுடன்.

"அடடா! பரவாயில்லையே! பொண்ணுக்குப் புகுந்த வீடுன்னு ஒண்ணு இருப்பதெல்லாம் கூட... உனக்கு நினைவிருக்கா? பேஷ்! பேஷ்!" என்று கேலியாகச் சொன்ன கணவரை, முறைத்துப் பார்த்தார்.

"வடிவு! நீயும் ஒரு பொண்ணைப் பெத்தவ தானே? நம்ம இனியாவை... ஒரு நிமிஷம் மயூரியோட இடத்தில வச்சிப்பாரு...!" என்ற சொல்லைக் கேட்டதும், காதுகளை இறுக மூடிக்கொண்டார் வடிவாம்பாள்.

அவரது வார்த்தைகளைச் சகித்துக் கொள்ள முடியாமல், "இல்லை' என்பது போல, தலையை இடமும் வலமுமாக ஆட்டினார்.

"அவன்தான் அப்படி பேசிட்டுப் போறான்னா... நீங்களுமா...?''

"இங்கே பார்; நெருப்புன்னு சொன்னா... வாய் வெந்துடாது. மயூரியையும் உன் மகளையும் இணைச்சிப் பேசறதால... இனியாவுக்கு எந்தப் பாதகமும் வந்துடாது. சேத்துல வளர்ற செந்தாமரையை, மகாலட்சுமிக்கு

மாலையா கட்டிப் போடுறதில்லயா?" என்று நிதானமாகப் புரிய வைக்க முயன்றார்.

"ஆயிரம் சொல்லலாம். ஆனா, என் பிள்ளயே... எனக்கு நீ முக்கியமில்லன்னு சொல்லிட்டானே! நேத்து வந்த அந்த மேனாமினுக்கிதான் இத்தனைக்கும் காரணம். இன்னும் கல்யாணம் முடிஞ்சா..., என் பிள்ளை எனக்கு இல்லன்னு ஆகிடுவான்!" என்றவர், முந்தானையால் கண்ணைத் துடைத்துக் கொண்டார்.

"முட்டாள்தனமா, நீயே ஏதாவது கற்பனை பண்ணிக்காதே. வீட்டுக்கு வரும்வரை உன் கண்ணுக்கு நல்லவளா, அடக்கமானவளாக தெரிந்த பொண்ணு... இப்போ மேனாமினுக்கியா தெரியறா! இதுக்கெல்லாம் என்ன காரணம்? உன் மனசுல தூசு படிஞ்சி போச்சு.

அது உன் பார்வையில் வித்தியாசத்தைக் கொண்டு வந்துடுச்சி. சைலேஷ்கூட..., நீ கல்யாணத்துக்குச் சம்மதிக்கவில்லைனா தான், அப்படின்னு சொன்னான். நாளைக்கே அவன் அப்படி நடந்துகிட்டா, நீ சொல்லும் இதே ஊர்... உன்னைப் பாராட்டுமா? அப்போதும் உன்னைத் தான் கரிச்சிக் கொட்டும்.

அதனால இந்த வில்லி வேஷத்தை கைவிட்டுட்டு குணச்சித்திர நடிகையா மாறி எல்லோரிடமும் கைதட்டல் வாங்கலைன்னாலும், ஒரு ஆதரவைத் தேடிக்கோ. நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிட்டேன். இனி உன் இஷ்டம்!" என்றவர் பக்கத்தில் இருந்த தினசரியை எடுத்துப் படிக்க ஆரம்பித்தார்.

சுவற்றிலிருந்த மகனது போட்டோவையே பார்த்துக் கொண்டிருந்த வடிவிற்கு, சற்றுமுன் கண்ட அவனது முகவாட்டமும், உயிரோட்டமில்லாத சிரிப்பும் நினைவிற்கு வந்து, அவரது நெஞ்சை பாரமாகக் கனக்கச் செய்தது.



# 10

"வாடா மாப்பிள்ளை! கல்யாண வேலைகள் எல்லாம் ஆரம்பிச்சாச்சு போல?" என்று வாசலுக்கே வந்து வரவேற்ற குணா, சைலேஷின் முகத்தைப் பார்த்துக் குழம்பினான்.

"என்னடா! கேள்விப்பட்டதுக்கும், உன் முகமிருக்கும் லட்சணத்துக்கும்... கொஞ்சம் கூடச் சம்மந்தமே இல்லாமயிருக்கு?"

"மச்சு...'' என்றவன், கண்களை மூடி வலது கையால் நெற்றியைப் பிடித்துக் கொண்டான்.

"என்னடா...! வீட்டில ஏதாவது பிரச்சனையா...?"

"ம்ம். அம்மா முடியாதுன்னு... ரொம்பப் பிடிவாதமா இருக்காங்கடா!" என்று வருத்தத்துடன் சொன்னான்.

குணாவின் முகம் கடுமையைப் பூசிக் கொண்டது.

"இதுக்குத் தான் ஆரம்பத்திலேயே சொன்னேன்... முதல்ல உன் அம்மாகிட்ட பேசுன்னு. ஆனா, நீதான் பிடிவாதமா... நான் கன்வின்ஸ் பண்ணிடுவேன்னு சொல்லி வாயை அடைச்ச. இப்போ என்ன செய்யப் போற? மயூரியை வேணாம்னு விட்டுடப் போறியா?" என்று அவன் முடிக்கும் முன்பே, "குணா...!" என்று அதட்டலுடன் குரல் கொடுத்தான் சைலேஷ்.

நெற்றியைப் பிடித்து விட்டுக் கொண்டு, "சாரி குணா! யாருக்காகவும்... மயூரியை நான் கைவிட்டுட மாட்டேன்'' என்றான்.

நம்பமுடியாதது போல தன்னைப் பார்த்த குணாவை, வருத்தத்துடன் பார்த்தவன், "என்னை நம்பலையா நீ...?'' என்றான்.

"மயூரி உன்னை ரொம்பவே நம்பறா!'' என்று அழுத்தமாகச் சொன்னான் அவன்.

"அவளோட நம்பிக்கையை நிச்சயம் பொய்க்க விட்ற மாட்டேன்...!'' என்றான் சைலேஷ்.

"அப்படியிருந்தா சந்தோஷம் தான். ஆனா, தெரிஞ்சே ஒரு பொண்ணோட வாழ்க்கையை பணயம் வைக்கறோமேன்னு சங்கடமாயிருக்கு.''

சைலேஷ் பதில் சொல்லாமல் அவனைப் பார்த்தான்.

காஃபியுடன் ஆங்கே வந்த ரம்யா, மூலைக்கு ஒருவராக முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு நிற்பதைப் பார்த்தாள். அதிலும் கடைசியாக குணா சொன்னதைக் கேட்டவள், கவலையுடன் சைலேஷைப் பார்த்தாள்.

"அண்ணா! காஃபி எடுத்துக்கோங்க...'' என்றாள்.

"இல்லமா. இருக்கட்டும்...'' என்றான் சைலேஷ்.

"அவர் சொல்றாரேன்னு வருத்தப்படாதீங்கண்ணா. உங்க ரெண்டு பேர் மேலேயும் இருக்கற அக்கறையில் தான் அவர் பேசறார். நிச்சயமா நீங்க, மயூரியை சந்தோஷமா பார்த்துப்பீங்க. எனக்கு அந்த நம்பிக்கை



இருக்கு...'' என்றாள்.

"நேத்து வந்த உனக்கு என் மேல இருக்கற நம்பிக்கைகூட... இவனுக்கு என் மேல இல்லையேம்மா!'' என்றான் வருத்தத்துடன்.

"சைலேஷ்! நான் பேசினது ஆதங்கம் தானே தவிர, உன் மேல நம்பிக்கை இல்லாம இல்ல!'' என்ற குணா, நண்பனின் தோளில் கைபோட்டு அணைத்துக் கொண்டான்.

"உன் மனசுல எந்தக் குழப்பமும் இல்லன்னு தெளிவா தெரிஞ்சிக்கத் தான் அப்படிக் கேட்டேன். சியர் அப் மேன்! வேணும்னா மயூரிகிட்ட பேசு. மனசுக்குக் கொஞ்சம் ஆறுதலா இருக்கும்'' என்றான்.

"இல்லடா... இப்ப இருக்கும் மூட்ல, அவகிட்ட பேசக் கூட முடியாது...'' என்றான் பதிலுக்கு.

"இப்போதான் நீ பேசணும்'' என்றவன், சைலேஷின் மொபைலை எடுத்து மயூரியின் எண்ணை அழுத்திய பின்னர், "ரிங் போகுது... பேசு!'' என்று சொல்லி மொபைலைக் கொடுத்துவிட்டு, அறையிலிருந்து வெளியேறினான்.

மறுமுனையில் கேட்ட மயூரியின் குரலில், தனது கவலைகளை மறக்க ஆரம்பித்தான் சைலேஷ்.

✶ ✶ ✶

"அத்தை! இதெல்லாம் ஒரு விஷயமே இல்ல. இந்த அளவுக்கு யோசிக்க, பரந்த மனசு வேணும். நியாயமா... அவரை நினைச்சி நீங்க பெருமைப்படணும்!'' என்ற மாப்பிள்ளையை, உள்ளுக்குள் மண்டிய எரிச்சலை அடக்கிக் கொண்டு பார்த்தார் வடிவு.

"ஆஹாஹா...! மச்சானுக்கு சப்போர்ட்டாக்கும்! உங்களுக்கென்ன? நாளைக்கு யாராவது ஏதாவது சொன்னா, எங்க அம்மா, அப்பா தானே தலை குனிஞ்சி நிக்கணும்? நீங்களா கேக்கறவங்களுக்குப் பதில் சொல்லப் போறீங்க?'' என்று ஆத்திரத்துடன் சொன்னாள் இனியா.

"நீ முதல்ல சும்மா இருக்கியா. அவங்கதான் வயசானவங்க... ஏதோ தெரியாம பேசறாங்கன்னா... நீயும் கூடச் சேர்ந்து ஏத்தி விடுற!'' என்று அதட்டிய சரவணன், "அத்தை! நமக்குப் பொண்ணு தான் முக்கியம். அவங்க பரம்பரைக் கதையெல்லாம் நமக்கு எதுக்கு? என்றான்.

சைலேஷ் வேலை விஷயமா ஊருக்குப் போகறதுக்கு முன்னாலேயே, நம்ம வீட்டுக்கு வந்து, எங்ககிட்ட எல்லா விஷயத்தையும் சொல்லிட்டாரு'' என்றான் சரவணன்.

"அது எப்போ...! எனக்குத் தெரியாம எப்படிப் பேசினீங்க?'' என்று நடுவில் புகுந்தாள் இனியா.

"ம். உங்க அண்ணன் வந்த அன்னைக்கு, ஒரே தலைவலின்னு இழுத்துப் போர்த்திகிட்டு, தூங்கறேன் பேர்வழின்னு போன்ல உன் ப்ரெண்டு கூட அரட்டை அடிச்சிட்டு இருந்தியே... அப்போ!'' என்றான் காட்டமாக.

"மாமா! பிரச்சனைன்னு நம்ம வீட்டுப் பக்கத்திலிருந்து எதுவும் வராது. அம்மாவுக்கும் இதில் எந்த ஆட்சேபணையும் இல்ல. நம்ம வீட்டுக்கு வரப் போற பொண்ணைப் பத்தி, நாம எதுக்கு வெளியே இருக்கவங்களுக்குச் சொல்லணும்?

நாம சொல்லாம, யாருக்கு என்னன்னு தெரியப் போகுது? அதோட, ஊர்ல இருக்கவங்களுக்கு ஆயிரம் வேலை இருக்கு. நம்மளைப் பத்திப் பேசவும், யோசிக்கவும் நேரம் கிடையாது.''



"நல்லா சொல்லுங்க. நீங்க சொன்னாலாவது புரியுதான்னு பார்க்கலாம். நான் பார்த்த வரைக்கும், மயூரி தங்கமான பொண்ணு!'' என்றார் கேசவன்.

வடிவு அமைதியாக இருக்க, "பேரைப் பாரு மயூரியாம்... மயூரி. விளக்குமாத்துக்குப் பட்டுக் குஞ்சம்...!'' என்று முணுமுணுத்தாள்.

"ஏன்? உனக்குக் கூடத் தான் இனியான்னு பேர் வச்சிருக்காங்க. ரெண்டுத்துக்கும் கொஞ்சமாவது சம்மந்தம் இருக்கா?'' பட்டெனத் திருப்பிக் கொடுத்தான் சரவணன்.

"நானும், அவளும் ஒண்ணா....?'' என்று ஆரம்பித்தவள், வீட்டிற்குள் நுழைந்த சைலேஷைக் கண்டதும் அப்படியே அடங்கினாள்.

"மாமா! என்று காலைக் கட்டிக் கொண்ட தங்கை மகளைத் தூக்கி முத்தமிட்டவன், "வாங்க சரவணன். எப்போ வந்தீங்க?'' என்று நலம் விசாரித்தான்.

"ரித்து குட்டிக்கு அத்தை வேணுமாம். அதுக்கு ஏற்பாடு பண்ணிடலாம்னு வந்தோம்'' என்று சரவணன் சொல்ல, சைலேஷ் மெலிதாகப் புன்னகைத்தான்.

# 11

திருமண வரவேற்பில், அவளுக்காகக் காஞ்சிபுரம் சென்றிருந்த போது, அவன் எடுத்து வைத்திருந்த எடுத்த குங்கும நிறப் பட்டுப் புடவையில் தன்னருகில்

நின்றிருந்தவளைத் திரும்பிப் பார்த்தான் சைலேஷ்.

அப்புடவையை நிச்சயப் புடவையாகப் பெற்றுக் கொண்டபோது, அவளது கண்களில் தோன்றிய ஒளியை, அவன் கவனிக்கத் தவறவில்லை.

"இந்த நொடிக்காக எத்தனைப் போராட்டம்!' என்று நினைத்துப் பெருமூச்சு விட்டான்.

இரவு உணவிற்குப் பிறகு டைனிங் ஹாலை ஒட்டியிருந்த பால்கனியில் இருவரும் அமர்ந்திருக்க, மயூரி ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தாள்.

கண்களை விரித்து, வளையல்கள் குலுங்க, ஒவ்வொரு தலை அசைவிற்கும் காதில் தொங்கிய ஜிமிக்கியும் அதற்கு இணையாக காதோரம் சுருண்ட முடியும் அசைந்தாட, அவள் பேசியதை, புன்னகை மாறாமல் கேட்டுக் கொண்டிருந்தான் சைலேஷ்.

சிரிக்கும் போது அவளது ஒற்றை வைரக்கல் மூக்குத்தியும் சேர்ந்து சிரித்தது. கல்யாணப் புடவையையும் மற்றும் தேவையான நகைகளையும் வாங்கிக்கொள்வதற்காகவும், சைலேஷிடம் பணத்தைக் கொடுத்தார் கேசவன்.

தன்னிடம் தேவையான அளவிற்குப் பணம் இருக்கிறது என்றும், மயூரிக்குத் தேவையானதை நானே வாங்குகிறேன் என்றவன், அவளை அழைத்துக்கொண்டு கல்யாணப் புடவையை எடுத்தபின்னர், பிரபலமான அந்த நகைக்கடைக்குள் நுழைந்தான்.

"மயூ! உனக்கு என்ன பிடிச்சிருக்கோ வாங்கிக்க" என்றான்.

ஒரே ஒரு மோதிரம் மட்டும் வாங்கிக் கொண்டு,



"போதும்!'' என்றதும், "ஊஹூம்...நீ இந்தப் பக்கம் வந்து உட்கார்!" என்றவன், அவளுக்குத் தேவையான நகைகளை வாங்கினான். அவனது பார்வை அங்கே இருந்த மூக்குத்தியில் பதிந்தது.

"என்ன அந்த மூக்குத்தியை இப்படிப் பார்த்துட்டு இருக்கீங்க?" என்றாள் கேள்வியாக.

"உன்னோட இந்த எள்ளுப்பூ மூக்குக்கு, ஒரு மூக்குத்தியையும் போட்டிருந்தா... இன்னும் அழகாக இருக்கும்."

சொன்னதோடு அவன் அதை மறந்தும் விட்டான். இரண்டு நாட்கள் கழித்து அவளைப் பார்க்கச் சென்றவன், ஸ்தம்பித்து நின்றான்.

"எப்படியிருக்கு சைலேஷ்?'' என்று வெள்ளைக்கல் மூக்குத்தி ஒளிர அவன் முன்னால் வந்து நின்றாள் மயூரி.

அவளை அணைத்துக் கொள்ளத் துடித்த கைகளை அடக்கிக்கொண்டு, அவளது கை விரல்களை இறுகப் பற்றிக் கொண்டான்.

"இந்த வலிக்குப் பயந்தே, இவ்வளவு நாள் விட்டிருந்தேன்'' என்று நடுங்குவது போன்று தோள்களைக் குலுக்கி, தலையை மெல்ல அசைத்தாள்.

"அப்புறம் ஏன்...?" என்று கேட்டான்.

"உங்களுக்குப் பிடிக்குமே!" என்று கண்சிமிட்டிச் சிரித்தாள்.

"தேங்க்ஸ் மயூ!" என்றவன், அவளது கன்னத்தில் முத்தமிட, அதைச் சற்றும் எதிர்பார்க்காதவள், பொய் கோபத்துடன் அவனிடம் சண்டையிட்டாள்.

"ஹேய்! அன்னைக்கு நீ எனக்குக் கொடுத்த! நான் ஏதாவது சண்டை போட்டேனா?'' என்று வம்படிக்க, அவள் வெட்கத்துடன் விலகி ஓடியதையும் இன்று நினைத்துச் சிரித்துக் கொண்டான்.

"என்ன சைலேஷ்? நான் சொல்றேன்... நீங்க என்னமோ சிரிச்சிகிட்டே உட்கார்ந்திருக்கீங்க?" என்று கேட்டாள்.

நிகழ்வுக்கு வந்தவன் தலையைக் கோதிக் கொண்டே, "அன்னைக்கு நீ முத்தம் கொடுத்தியே... அது இந்தப் பக்கமா... இல்ல இந்தப் பக்கமா?" என்று இரண்டு கன்னங்களையும் காட்டினான்.

"ஹய்யோ! இப்போ அது ரொம்ப முக்கியமா?'' என்று வெட்கத்துடன் சிணுங்கினாள்.

"முக்கியமாவா...? இல்லையா பின்னே...?'' என்றவன், அவளது மூக்கைப் பிடித்து ஆட்டினான்.

"ஆஹ்!'' என்று அவள் வலியில் மூக்கைப் பிடித்துக் கொள்ள, "சாரிடா சாரி!" என்றவன், அவளது கண்ணோரம் கசிந்த கண்ணீரைக் கண்டதும், "மயூ! சாரி... உண்மையாவே தெரியாமல்..." என்று தடுமாறினான்.

"இட்ஸ் ஓகேப்பா. தெரியாமல் தானே பிடிச்சீங்க?" என்றவள், வலித்த மூக்கை லேசாக அழுத்திப் பிடித்துக் கொண்டே அவனது முகத்தைப் பார்த்தவள், அவனது முகம் வெளிப்படுத்திய பரிதவிப்பில் நெகிழ்ந்து போனாள்.

தன் வலியை முற்றிலுமாக விடுத்து, "ஐ லவ் யூ!" என்று அவன் கன்னத்தில் தன் இதழ்களை ஒற்றிவிட்டு, அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.



"ஐ லவ் யூ டூ மயூ!" என்றபடி அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

தங்களது சுற்றுப்புறத்தை மறந்து நின்றிருந்த இருவரும், சமையலறையில் கேட்ட சத்தத்தில் சட்டென்று விலகினர்.

வெட்கத்தில் மயூரியின் கன்னத்தில் செம்மை படர, விலகியவளது கரம் பற்றி அருகில் இழுத்தவன், அவள் முகம் நோக்கிக் குனிந்தான். அவளது இமைகள் தானாக மூடிக்கொள்ள, உடலில் சிறு நடுக்கம் ஓடியது.

புன்னகையுடன், "குட் நைட்!" என்று அவளது காதருகில் கிசுகிசுத்துவிட்டு அவளை விடுவிக்க, ஓட்டமும் நடையுமாக்க் கீழே இறங்கி ஓடினாள் அவள்.

* * *

அதிகாலை முகூர்த்தம் என்பதால், முக்கிய உறவினர்களும் நெருங்கிய நண்பர்களும் மட்டுமே மண்டபத்தில் குழுமி இருந்தனர்.

வந்ததிலிருந்தே மாப்பிள்ளையின் அன்னையும், தங்கையும் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு, எதிலும் பெரிதாக ஒட்டாமல் நடந்து கொண்டிருப்பதைப் பார்த்தார்.

ரம்யாவிடம் மெல்ல விசாரித்து, தெரிந்து கொண்டவருக்குக் கவலையாக இருந்தது. ஆனாலும், "சைலேஷ் எல்லாவற்றையும் சமாளித்துக் கொள்வான். மயூரிக்குச் சந்தேகம் வராமல் பார்த்துக்கங்க!'' என்று சொல்லிவிட்டாள் ரம்யா.

தூக்கி வளர்த்த அவருக்கோ, சங்கடமாக இருந்தது. ஏற்கெனவே கைக்கெட்டும் தொலைவில் எல்லாம் இருந்தும், எதற்குமே உரிமை கொண்டாட முடியாமல்

இருப்பவளுக்கு, இந்தத் திருமணம் வரமா இல்லை சாபமா என்று புரியவில்லை.

"கடவுளே! நீதான் துணையிருக்கணும்' என்று அவரால் வேண்டிக் கொள்ள மட்டுமே முடிந்தது.

ஒட்டியாணத்தைக் கட்டிவிட்டபடி, "மயூரிம்மா! உன் நல்ல மனசுக்கு ஏத்தமாதிரி மாப்பிள்ளை அமைஞ்சிருக்கு. போற இடத்துல பக்குவமா நடந்துக்கம்மா. உன் குணமே அதான்... இருந்தாலும் மனுஷனுக்கு மனசும், குணமும் ஒரு நேரம் போல இருக்காதே" என்றார் செல்லம்மா.

"கவலைப்படாதீங்க அக்கா. நீங்கள்லாம் பார்த்துச் சந்தோஷப்படும் அளவுக்கு நடந்துக்குவேன்" என்றவளது இமைகள் ஈரமானது.

"எங்க அம்மா இருந்து, இப்படியெல்லாம் எனக்குப் புத்திமதி சொல்லி அனுப்பி வச்சிருக்கணும். ஆனால்..'' என்றவளுக்குச் சட்டெனக் கண்ணீர் வழிந்தது.

மயூரியின் கழுத்தில் நகையைப் பூட்டிக் கொண்டிருந்த ரம்யா, "மயூரி! என்ன இது? நல்ல நேரத்தில் போய்க் கண்கலங்கிட்டு! எல்லாம் நல்லதே நடக்கும்னு பாஸிட்டிவா யோசி!" என்று சொல்லியபடியே, தோழியின் கண்களைத் துடைத்து விட்டாள்.

அவளுக்குமே உள்ளூர பயம் தான். ஆனால், சைலேஷ் பார்த்துக் கொள்வான் என்று நம்பினாள். அதிருப்தியுடன் இருந்த கணவனையே சமாதானப் படுத்தியவளுக்கு, நேற்றிலிருந்து நடப்பதைப் பார்க்கும் போது சற்றுப் பயமாகவே இருந்தது.

ஆனால், அவளது பெற்றோரோ, "போகப் போக எல்லாம் சரியாகிவிடும். எல்லாக் குடும்பத்திலேயும்



பிரச்சனை இல்லாமல் இருக்காது. அவளுக்கும் ஒரு துணை வேண்டும்!'' என்று ரம்யாவிற்குத் தைரியம் கூறினர்.

அனைத்தையும் கதவருகில் நின்று பார்த்துக் கொண்டிருந்த இனியாவிற்கு காந்தியது. தன் அண்ணன் எப்பேர்ப்பட்டவன்... அவனுக்குப் போயும் போயும் புத்தி இப்படியா போகணும்? வீட்டுக்கு ஒரே பொண்ணா இருக்கறவளைத் தான் என் பிள்ளைக்குக் கட்டுவேன். மாமியார் வீட்ல அவனைத் தாங்கணும்!' என்று பிள்ளையைப் பற்றி ஏகத்துக்குக் கனவு கண்டு கொண்டிருந்த அம்மாவை, இப்படி மூக்குடைத்து விட்டானே! அப்படி என்னத்தப் பேரழகின்னு இவளைப் பிடிச்சானோ?' என்று எண்ணியபடியே மயூரியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கண்ணீரைச் சமாளித்தபடி திரும்பிய மயூரி, அறையின் வாசலில் இனியாவைக் கண்டதும் சிநேக பாவத்துடன் புன்னகைத்தாள்.

அவளோ முகத்தைத் திருப்பிக் கொண்டு, "எல்லா அலங்காரமும் முடிஞ்சிட்டா... பந்தலுக்கு வந்து சேருங்க. அய்யர் கூப்பிடுறார்!" என்று சுவற்றைப் பார்த்துச் சொல்லிவிட்டு, வெடுக்கெனத் திரும்பி நடந்தாள்.

திகைப்புடன் திரும்பி ரம்யாவைப் பார்த்தாள் மயூரி.

"கிளம்பலாமாப்பா...'' என்று கேட்டபடி தனது முகத்தைப் பார்க்காத தோழியைக் கண்டதும், "ஏதோ சரியில்லை' என்று தோன்றியது அவளுக்கு.

மணப்பந்தல் வரும் வரை இருந்த அவளது தயக்கம், தன்னை எதிர்பார்த்துக் காத்திருந்த சைலேஷைக்

கண்டதும், இருந்த இடம் தெரியாமல் மறைந்து போனது.

பெரியோர்களின் ஆசிர்வாதத்துடன் அவன் கட்டிய மாங்கல்யத்தைத் தன் கழுத்தில் வாங்கும் போது, ஆனந்தத்தில் மூச்சடைப்பது போல இருந்தது.

கழுத்தில் அணிவிக்கப்பட்ட மாங்கல்யத்தை கண்ணீர் மல்கப் பார்த்தாள். ஒரு சமூக அங்கீகாரத்திற்கு அடையாளமாக, தனக்குக் கிடைத்த மஞ்சள் கயிற்றை, ஆசையுடன் தொட்டுப் பார்த்துக் கொண்டாள்.

**'எட்டாத உயரத்தில் இருக்கும் அந்தத் தொடுவானம்... தொடும் தூரம் தான்!'** என்று மனம் சந்தோஷக் கூச்சலிட்டது.

கிடைக்காது என்று நினைத்திருந்த வாழ்க்கையை, இன்று கைக்கூட வைத்தவன் மீதிருந்த காதல், பன்மடங்காகப் பெருகியது. உணர்ச்சிப் பெருக்கில் ஆனந்தக் கண்ணீருடன், அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

# 12

ரம்யாவின் பெற்றோர்களே முன்நின்று கன்யாதானம் செய்து வைத்ததால், முதலில் மருவீடாக அவர்கள் வீட்டிற்குச் சென்றுவிட்டு, சைலேஷின் வீட்டிற்கு வந்து சேர்ந்தனர்.

இனியாவின் மாமியார் ஆரத்தி சுற்றி அவர்களை வீட்டிற்குள் அழைத்துவர, சைலேஷின் முகம் இறுகியிருந்தது. வடிவாம்பாளும், இனியாவும் வீட்டில் இருப்பதற்கான அறிகுறியே இல்லை.



மயூரி பூஜையறையில் விளக்கேற்றி விட்டு வெளிவர, சைலேஷ் கோபத்துடன் பெற்றோரின் அறைக்குச் சென்றான். அவன் பின்னாலேயே சென்ற கேசவன், மெல்லிய குரலில் சைலேஷிடம் பேசிக் கொண்டிருந்தார்.

ஹாலில் நின்றிருந்த மயூரிக்கு எல்லாமே அன்னியமாகத் தெரிய, அருகிலிருந்த ரம்யாவிடம், "அத்தையும், இனியாவும் எங்கே?" என்றாள்.

"ம். கோவிலுக்குப் போயிருக்காங்களாம்!" என்றாள். அத்தனை எரிச்சலும் அவளது குரலில் உள்ளடங்கி இருந்தது.

"ஓஹ்!" என்ற மயூரிக்கு, அது ஒப்புக்குச் சொன்ன வார்த்தையாகவே பட்டது.

"காலையில் மாமியாரின் பார்வை என்ன சொன்னது?' என்று அவளுக்கு சற்று விளங்க, அழுகை முட்டிக் கொண்டு வந்தது. நடுங்கிய உதடுகளை அழுந்த மூடிக் கொண்டாள்.

"சைலேஷ்! நீ கோபப்படுறது நியாயம் தான். அதேபோல உங்க அம்மா மனசு தாங்காமல் கோவிலுக்குப் போயிருக்கா. உனக்காக, உன் சந்தோஷத்துக்காக மட்டும்தான், அவ இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிச்சா. அவளுக்கும் சிலது பிடிக்காம நடந்திருக்கு. அவள் மனசும் மாறும். கூடிய சீக்கிரமே மாறுவா. அது வரைக்கும் கொஞ்சம் பொறுமையா இருந்துதான் ஆகணும்'' என்றார் கேசவன்.

"அப்போ... தப்பெல்லாம் என்மேல தான்னு சொல்றீங்களா? நான்தான் வேண்டானா விட்டுடுங்க...

என் வழியை நான் பார்த்துக்கறேன்னு சொன்னேனே! எல்லாத்துக்கும் சம்மதிச்சிட்டு... இப்போ இப்படி எதிலயுமே கலந்துக்காம இருந்தா என்ன அர்த்தம்?'' என்று கோபத்துடன் கேட்டான்.

"சைலேஷ்! எடுத்தேன் கவிழ்த்தேன்னு பேசாதே. கோபம் வந்தா என்ன பேசறோம்... என்ன செய்யறோம்னு உனக்குத் தெரியறதே இல்ல. கொஞ்சம் நிதானிச்சிக்க. உனக்கும் கல்யாணம் ஆகிடுச்சி... பொறுப்புகள் கூடிப் போச்சு.

குடும்பம்னு இருந்தா, எல்லோரையும் அனுசரிச்சித் தான் போகணும். பேசுற வார்த்தைங்க ஒவ்வொண்ணும் விலைமதிப்பில்லாதது. அதனால் யோசிச்சிப் பேசணும். நீ எந்த நிலையையும் சமாளிப்பேன்னு தான், உன் கல்யாணத்துக்கே நான் சம்மதிச்சேன்.

ஒண்ணுமில்லாத இதுக்கே எதுக்கு இத்தனை ஆர்ப்பாட்டம்? உன் அம்மாவை கல்யாணத்துக்குச் சம்மதிக்க வைப்பேன்னு நம்பிக்கையா சொன்ன இல்ல? எப்படியோ அதை நடத்திக்கவும் செய்த... ஆனா, அதுல உன் அம்மாவோட பங்கும் இருக்கு.

அவ ஆரம்பத்தில் மறுத்தாலும், உனக்காக விட்டுக் கொடுத்தா. நீயும் சிலதை விட்டுக் கொடு. தப்பில்ல! ஆனா, எந்தக் காலகட்டத்திலேயும், யாருக்காகவும் உன் மனைவியை மட்டும் விட்டுக் கொடுத்திடாதே!

போ! நாம இங்கே வந்து ரொம்ப நேரம் ஆகிடுச்சி. ஏற்கெனவே மயூரியோட முகமே சரியில்ல. முகத்தைக் கழுவிகிட்டு, போய் அவளோட இரு. சாதாரணமாப் பேசு!'' என்றார் கேசவன்.



"ம். அப்புறம்... இதைப் பிடி!" என்றவர், பீரோவிலிருந்து ஒரு கவரை எடுத்து அவனிடம் கொடுத்தார்.

"என்னதுப்பா...?'' என்றான் ஆச்சரியமாக.

"நீ புக் பண்ணச் சொன்ன இல்ல... குல்லுவுக்கு பிளைட் டிக்கட். இது நீங்க தங்கறதுக்கு ஏற்பாடு செய்திருக்கும் ரிசார்ட்டோட அட்ரஸ். நான் எல்லா ஏற்பாடும் செய்துட்டேன். ஒன்பது மணிக்கு ப்ளைட்" என்றார்.

சைலேஷ் திகைத்துப் போனான்.

"எதுக்காக இப்படி அவசரம் அவசரமாக எங்களைத் துரத்தி விடுறீங்க? எனக்கு கல்யாண வேலை நிறைய இருக்குன்னு தானே, உங்ககிட்ட நான் ரெண்டு நாள் கழிச்சி டிக்கெட் போடச் சொன்னேன். இப்படிச் செய்திருக்கீங்களே...! இது அம்மாவுக்குத் தெரியுமா?" என்று எரிச்சலுடன் கேட்டான்.

"சில தர்மசங்கடமான நேரங்களைத் தவிர்க்கவே நான் இப்படிப் பண்ணேன். உன் அம்மாவுக்கு கோபம் அதிகமா தான் ஆகும். ஆனா, மயூரியை நினைச்சிப் பாரு. எப்படியும் இதையெல்லாம் ஃபேஸ் பண்ணித் தான் ஆகணும். அது உடனே நடக்கணுமா...? இதே சந்தோஷமான மூடில் ஒரு வாரம் இருந்துட்டு வாங்களேன். அதுக்குள்ள இதையெல்லாம் சமாளிக்க மயூரியையும் தயார் பண்ணு!'' என்ற தந்தையை வேதனையுடன் பார்த்தான்.

"வருத்தப்படாத...! ஒரு வாரத்தில் இனியாவும் கிளம்பிடுவா. உன் அம்மாவும், கூடச் சேர்ந்து ஆலாபனை

பண்ண ஆளில்லாமல், தனி ஆவர்த்தனம் செய்யணும். குணா கூட, ஏன் இவ்வளவு அவசரம்னு கேட்டான்... நான் தான் செய்யச் சொன்னேன். ஏற்பாடெல்லாம் அவன் தான் செய்தான்.''

தந்தையை நேராகப் பார்த்தவன், "ஒண்ணு மட்டும் புரிஞ்சிடுச்சிப்பா. நான் மயூரியை எந்த அளவுக்குப் பார்த்துக்கணும்னு நினைச்சேனோ, அந்த அளவுக்கு அவளோட மனசைக் காயப்படுத்தப் போறேன்!" என்று கம்மிய குரலில் சொல்லிவிட்டுச் செல்லும் மகனை, கவலையுடன் பார்த்தார் கேசவன்.

மயூரியிடம் தாங்கள் கிளம்ப வேண்டியதை மட்டும் சொல்லிவிட்டு அவன் சோஃபாவில் அமர, அவளுக்கு உதவ அவர்களது அறைக்குச் சென்றாள் ரம்யா.

தோழியின் முகவாட்டம் கவலை தர, "ஒரு வாரம் உனக்கு என்ஜாய்மென்ட் தான். ஹும்! எங்க வீட்ல எனக்கு இப்படி ஒரு ஆப்பர்சூனிட்டி கொடுக்கலையே" என்று பெருமூச்சு விட்டாள் ரம்யா.

சிரிப்பது போல உதடுகளை மட்டும் இருபக்கமும் அகலமாக்கினாள் மயூரி.

தேவையான உடைகளைப் பெட்டியில் அடுக்கிவிட்டு மூடியபோது, இனியாவின் மூன்று வயதுப் பெண் குழந்தை வலது கையை வாயிலும், இடது கையால் தன் பட்டுப்பாவாடையை பக்கவாட்டிலிருந்து தூக்கிப் பிடித்தபடி அறைவாசலில் நின்றிருந்தது.

புன்னகைத்த மயூரி, "வா' என்பது போல கையசைத்து அழைக்க, தன் மென்பாதங்களால் அடிமீது அடிவைத்து நடந்து அவளருகில் வந்தது.



குழந்தையின் அருகில் முழங்காலிட்டு அமர்ந்தவள், "உங்க பேர் என்ன?" என்றாள் அன்புடன்.

"ரித்திகா" என்ற குழந்தையின் குண்டு கன்னத்தைப் பிடித்து ஆட்டவேண்டும் போல் தோன்றியது.

"நீங்க எனக்கு அத்தையா?" என்று ஒவ்வொரு வார்த்தையையும் ராகத்துடன் கேட்க "ஆமாம்" என்றாள்.

"எனக்கு சாக்லேட் குடுப்பீங்களா?'' என்று கேட்டதும், "ஓ! உனக்கு எத்தனை வேணும்...'' என்றாள்.

"ஒன்.. டூ.. த்ரீ...'' என்று ஒவ்வொரு விரலாக நீட்டியும் மடக்கியும், "டென் வேணும்'' என்றது.

"டென்னா...? அத்தனையும் ஒண்ணா சாப்பிடக் கூடாதே... என்ன பண்ணலாம்?'' என்று யோசிப்பதைப் போல பாவனை செய்தவள், "ஐடியா...! சாக்லேட் சாப்டதும், நீங்க நல்லா பிரெஷ் பண்ணி க்ளீன் பண்ணிடணும்! ஓகேவா...?'' என்றாள்.

"ம்!' என்று தாடையில் கைவைத்து யோசித்த ரித்து, "ஓகே!'' என்று அவளைக் கட்டிக் கொள்ள, ரம்யாவிடம் சொல்லி குழந்தைக்கு சாக்லேட் எடுத்து வரச் சொன்னாள்.

அந்த நேரத்தில், "ரித்து...!" என்றபடியே குழந்தையைத் தேடி வந்த இனியாவின் மாமியாரைப் பார்த்ததும், சட்டென்று எழுந்து நின்றாள்.

"வாயாடி! எல்லோரிடமும் சட்டுன்னு ஒட்டிக்குவா!'' என்றவர், தன்னை எப்படி அழைப்பது எனப் புரியாமல் நின்றவளிடம், "என்னை அம்மான்னே கூப்பிடும்மா" என்றவர், அவளிடம் இரண்டொரு வார்த்தைகள் பேசிவிட்டு , குழந்தையுடன் வெளியேறினார்.

வீட்டிற்கு வந்த வடிவும், இனியாவும் ஹாலில் பெட்டியுடன் நின்ற இருவரையும் விழித்துப் பார்த்தனர்.

"அம்மா! வந்த அன்னைக்கே அண்ணனைத் தனியா பிரிச்சிக் கூட்டிட்டுப் போறாளா உன் மருமக...?" என்று அன்னையின் காதைக் கடித்தாள் இனியா.

அவளது முகத்தைப் பார்த்தே, "என்ன சொல்லி இருப்பாள்' என்று புரிந்து கொண்டவன், "அம்மா! நாங்க குல்லு கிளம்புகிறோம். வர ஒரு வாரம் ஆகும். வரேன்...!" என்று சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

"வரேன் அத்தை. வரேன் இனியா!" என்று விடைபெற்ற மயூரியும் கணவனைப் பின்தொடர்ந்தாள்.

# 13

விமான நிலையம் வரை வந்த குணா, ரம்யா இருவரும் தங்களிடம் பேசிக் கொண்டிருந்ததால், இருவரும் சற்றுச் சகஜ பாவனையில் இருந்தனர். விமானத்தில் ஏறிய பின்னரும், சற்று நேரம் ஒன்றுமே பேசிக் கொள்ளவில்லை.

"அம்மாவிற்கு எப்படிப் புரியவைப்பது?' என சைலேஷும், "ஒருவேளை... இந்தக் கல்யாணத்தில் அத்தைக்குச் சம்மதம் இல்லையோ?' என மயூரியும், தங்களுக்குள் விடை தெரியாமல் குழம்பிக் கொண்டிருந்தனர்.

மனைவியின் பக்கம் எதேச்சையாகத் திரும்பியவன், அவள் கலக்கமான முகத்துடன் அமர்ந்திருப்பதைக் கண்டான். 'மற்றவர் அவளை ஏதும் சொல்லாமல் பாதுகாப்பதை விட, எந்த நிலையிலும் நான் உன்னுடன் தான் இருக்கிறேன்' என்ற நம்பிக்கையை... அவளுக்குக் கொடுக்க வேண்டும்!' என்ற எண்ணம் தோன்றியது.



அவளது கரத்தை மிருதுவாகப் பற்றினான். அந்த ஸ்பரிசத்தில் திரும்பி அவனைப் பார்த்தாள். தற்காலிகமாக அவனது குழப்பங்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட, முகத்தில் மென்மையான புன்னகை உதித்தது. அவனது முகத்தில் கண்ட தெளிவும், புன்னகையும்... அவளது முகத்திலும் எதிரொலித்தது.

நிர்மலமான அவளது முகத்தில் உதித்த புன்னகையைப் பார்த்தவன், 'அவளது சந்தோஷத்துக்காக எந்தச் சூழ்நிலையையும் சமாளிக்க வேண்டும்' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

இருவரும் டெல்லி விமானநிலையத்தில் இறங்கி வெளியே வரும் போதே அவனது பெயர் எழுதிய அட்டையைத் தாங்கியபடி ஒருவர் நின்றிருக்க, அவரிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

அவருடன் ஹிந்தியில் உரையாடிய கணவனை, விழியகலாமல் பார்த்தாள்.

"மயூ! நாம இப்போ இங்கே தங்கிட்டு, காலைல சீக்கிரமே கிளம்பணும். போகும் வழியிலேயே டின்னரை முடிச்சிட்டுப் போயிடலாம்" என்று அவளிடம் சொல்லிக் கொண்டே, நல்ல ஹோட்டலாகப் பார்த்து காரை நிறுத்தும்படிச் சொன்னான்.

அறைக்கு வந்து சேரும் போதே இரவு மணி பன்னிரெண்டாகி விட்டது இருவருமே பயணக்

களைப்பில் களைத்துவிட, முகம் கழுவி உடைமாற்றிக் கொண்டு வந்தவள், அவன் வருவதற்குள் ஆழ்ந்த உறக்கத்திற்குச் சென்றிருந்தாள்.

அவளருகில் வந்து படுத்தவன், நிர்மலமான முகத்துடன் உறங்குபவளைப் பார்த்தான்.

'ஏம்மா உங்களுக்கு என் மயூரியைப் பிடிக்காமல் போச்சு?' என்று மனத்திற்குள் கேட்டுக் கொண்டவனுக்கு, தன்னைச் சமாதானப்படுத்திக் கொள்ளக் கூட முடியாமல், தூக்கம் கண்களைச் சுழற்றியது.

குளிருக்கு இதமாக ரஜாயை இழுத்து மூடிக் கொண்டு உறங்கிக் கொண்டிருந்தவள், விடாமல் ஒலித்த அழைப்பு மணியின் சப்தத்தில் உறக்கம் கலைந்தாள்.

"ஏக் மினிட்!" என்ற கணவனது குரலில், படக்கென எழுந்து அமர்ந்தவள், அவன் குளித்து முடித்து, ஸ்வெட்டர் அணிந்து தயாராகிக் கொண்டிருப்பதை பார்த்துவிட்டு, சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தாள். மணி சரியாக ஆறு.

"ஹாய் டியர்! குட்மார்னிங்...!" என்றபடியே கதவை நோக்கிச் சென்றவன், வரும் போது டீ கெட்டில் அடங்கிய ட்ரேயுடன் வந்தான்.

கட்டிலிலிருந்து இறங்கியவள், "சாரி! ரொம்ப டயர்டா இருந்தது...அதான்..." என்று தயக்கத்துடன் சொன்னாள்.

"அதனால் என்ன? ப்ரெஷ் பண்ணிட்டு வா; சூடா டீ சாப்பிடலாம்!" என்றான்.

"இதோ..." என்றவள் தயாராகி வரும் போது, சைலேஷும் வெளியிலிருந்து உள்ளே வந்தான்.



"தயாராகியாச்சா?" என்று புன்னகையுடன் கேட்டான்.

"ம்ம்...! சூடா டீ சாப்பிடலாம்னு சொல்லிட்டு, நீங்க எங்கே போனீங்க?" என்று கேட்டுக் கொண்டே மாயிஸ்ட்ரைசரைத் தடவிக் கொண்டு நெற்றியில் உள்ள குங்குமத்தைச் சரி செய்தாள்.

"இன்னும் கொஞ்சம் நேரத்தில் கிளம்பிடலாம்னு டிரைவருக்குச் சொல்லிட்டு, அவர் டீ சாப்பிட்டாரான்னும் கேட்டுட்டு வந்தேன்" என்று சொல்லிக் கொண்டே, டிக்காஷனில் பாலை விட்டுக் கலந்தான்.

"நான் செய்திருப்பேனே... நீங்க எதுக்கு...?" என்றவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

"இதெல்லாம் எப்போதும் கிடைக்காது. அதுவும், நம்ம வீட்டில்.... நடக்கவே நடக்காது!" என்றபடி கப்பை அவளிடம் நீட்டினான்.

புன்னகையுடன், "தேங்க்ஸ்!" என்று வாங்கிக் கொண்டவளையே, வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனது பார்வையைத் தாங்க முடியாமல், எழுந்து சென்று வேடிக்கை பார்ப்பது போல் பால்கனியில் நின்றாள். சுடச்சுட இருந்த தேநீர் மெல்லக் குளிர ஆரம்பித்தது.

அருகில் வந்து நின்றவன், அவளது தோள்களைப் பற்றினான். குளிரில் ஏற்பட்டிருந்த லேசான நடுக்கம், அவனது தொடுகையில் மறைந்து உடலில் உஷ்ணம் பரவியது. அவன் கைகள் மெல்ல அவளது இடையைச் சுற்றி வளைத்தன.

வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவில் அவளுக்குள் ஏதோ மாற்றம் நிகழ்ந்தது. இதயத்துடிப்பு எகிற, கண்கள் புரியாமல் படபடத்தன. அவனது பிடியிலிருந்து வேகமாக விலகியவள், கண்கள் கலங்க அறைக்குள் சென்று அமர்ந்தாள். அப்போதும் அவளது நடுக்கம் சற்றும் குறையவில்லை. காரணமின்றி அழவேண்டும் போல் தோன்றியதும், கண்கள் கண்ணீரைப் பொலபொலவெனக் கொட்டின.

சில நிமிடங்கள் இப்படியே கரைய, தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு அவள் நிமிர்ந்த போது, சைலேஷ் அவர்களது உடைமைகளைத் தயார் செய்து வைத்திருந்தான். அவனது முகத்தைப் பார்க்கும் துணிவில்லாமல், எழுந்து சென்று முகத்தைக் கழுவிக்கொண்டு வந்தாள்.

அவளது தோளைத் தொட்டுத் தனது பக்கமாகத் திருப்ப நினைத்தவன், அந்த முடிவை மாற்றிக்கொண்டு, "கிளம்பலாமா?''என்றான்.

"ம்...'' என்றவள், அவனை நிமிர்ந்தும் பார்க்கவில்லை. "ஆர் யூ ஆல்ரைட் மயூ?'' என்ற அவனது குரல், தவிப்புடன் வெளிவந்தது.

"ம்...'' என்றவள் நிமிர்ந்து, "சா...ரி சைலேஷ்... எனக்கு... சாரி...'' என்று தயங்கி நிற்க, அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

"புரியுதுடா...!'' என்று கைகளை அவளது தோள்மீது வைக்கப் போனவன், வைக்காமல் பாதியில் நிறுத்தி, "ம்...!' என்பது போல் புருவத்தை உயர்த்தி, குறும்பாகச் சிரித்தான்.



"சை...லேஷ்...!'' என்று சிணுங்கியவள், அவனது கரத்தைப் பற்றித் தன் தோளைச் சுற்றிப் போட்டுக் கொண்டு, பதிலுக்கு "ம்...!' என்று புருவம் உயர்த்த, இருவரும் வாய்விட்டு நகைத்தனர்.

# 14

வழியெல்லாம் பொங்கிப் பெருகி ஓடும் நதிகளும், இரு மருங்கிலும் உயர்ந்து வளர்ந்திருந்த மரங்களும், மலைத்தொடர்களும் கண்ணுக்குக் குளிர்ச்சியையும், மனத்திற்கு மகிழ்ச்சியையும் கொடுத்தன.

முன்மாலைப் பொழுதில் சிம்லாவில் சற்று இளைப்பாறியவர்கள், அங்கிருந்து மூன்று மணிநேரப் பயணம் செய்த பின்னர், குல்லுவை வந்தடைந்திருந்தனர்.

மாலை ஆறு மணி. அதுவரை மிதமாக உடலைத் தழுவிய குளிர்க்காற்று, உடலை ஊடுருவ ஆரம்பித்தது.

கார் ஒரு ஹோட்டலின் முன்னே நிற்க, "மயூ! நீ கார்லயே இரு! வந்திடுறேன்'' என்று ஓட்டுனருடன் பேசிக் கொண்டே இறங்கிச் சென்றவன், சிறிது நேரத்தில் திரும்பி வந்து வேறெங்கோ போகச் சொன்னான்.

"ரூம் தான் கிடைச்சிடுச்சே! இப்போ எங்கே போறோம்?'' என்று கேட்டாள்.

"ரெண்டு நிமிஷம் காத்திருந்தா, எங்கேன்னு தெரியப் போகுது'' எனும்போதே, கார் ஒரு மேடான பகுதியில் நின்றது. "இறங்கலாம் மேடம்...'' என்று

சொன்னதும் தன் கைப்பையுடன் இறங்கியவளின் விழிகள், ஆச்சரியத்தில் விரிந்தன. "வாவ்...! எத்தனை அழகான இடம்...!'' என விழிகள் மின்ன ஆர்ப்பரித்தவளை, தன் பார்வையால் படம்பிடித்துக் கொண்டான்.

அழகிய நதிக்கரை ஓரத்திலே இயற்கைச் சூழலுடன் அமைந்திருந்த குடில்களை நோக்கி ஓடினாள். அந்திமாலைச் சூரியனின் ஆரஞ்சு வண்ணத்தைப் பிரதிபலித்த நதிமகள், நாணத்துடன், நில்லாமல் ஓடிக் கொண்டிருந்தாள்.

கரையில் வந்து நின்றவள் அந்த இயற்கை அழகில் மெய்மறந்து லயித்திருக்க, "பிடித்திருக்கா மயூ...?'' என்ற கணவனின் குரல் காதருகில் கேட்டதும் திரும்பினாள்.

அவனது கண்களில் தெரிந்த காதல் பார்வையில், அவளது முகம் அந்தி நேரக் கீழ்வானத்திற்கு ஈடாகச் சிவக்க, "ரொம்பப் பிடிச்சிருக்கு..!''என்றாள்.

"இப்படியெல்லாம் பார்க்காதே...! அப்புறம் என்னைக் குற்றம் சொல்லி ஒரு பிரயோஜனமும் இல்லை...!'' என்றவன், அவளை நெருங்கினான்.

சட்டென்று அவனிடமிருந்து விலகியவள், அவனது நெஞ்சில் கை வைத்துத் தள்ளிவிட, அதில் தடுமாறித் தண்ணீரில் விழும் முன்னர், அவளையும் சேர்த்து இழுத்துக் கொண்டே விழுந்தான்.

"ஹய்யோ! என் துணியெல்லாம் ஈரமாகிடுச்சி. போங்க சைலேஷ்... ஏற்கெனவே குளிர் நடுங்குது'' என்று சொல்லிக் கொண்டேஎழுந்தவளை, இழுத்துத் தன் மீது சாய்த்துக் கொண்டு, "யாமிருக்க கவலை ஏன்?'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தான்.



"ச்சீ...'' - தண்ணீரை அள்ளி அவன் மீது வீசினாள். "ஏ...! ரூம்ல ஹீட்டர் இருக்கே. அதை நான் போட்டு விடுறேன்னு சொன்னா... ஓஹ்! சரி சரி... அதானா விஷயம்?'' என்றவனது விரல்கள் அவளது உடலில் அத்துமீறும் முன், "போதுமே...! இப்படி வெட்ட வெளியில... ரொம்ப நல்லாயிருக்கு!'' என்று அவனை விலக்கிவிட்டு எழுந்தாள்.

"ரொம்ப நல்லாயிருக்குன்னு சொல்லிட்டு, எங்கே ஓடுற?'' என்று அவன் எட்டி அவளைப் பிடிக்கும் முன், அவனது கைகளில் அகப்படாமல், சிரித்துக் கொண்டே தங்கள் காட்டேஜை நோக்கி ஓடினாள்.

இருவரும் குளித்து உடை மாற்றிக் கொண்டு வரும்போது, நல்ல பசியெடுக்க ஆரம்பித்திருந்தது. சிரிப்பும், பேச்சுமாக உணவருந்தி விட்டு, தங்கள் அறைக்கு வந்து சேர்ந்தனர்.

"நாம வந்து சேர்ந்ததை வீட்டுக்குச் சொல்லவே இல்லயே... முதல்ல சொல்லுங்க... கவலைப்படப் போறாங்க! நீங்க பேசி முடிக்கறதுக்குள்ள, நான் ட்ரெஸ் மாத்திட்டு வரேன்'' என்றபடி எழுந்து சென்றாள்.

போன் செய்து தந்தையிடம் பேசியவன், அம்மாவிடம் பேசவேண்டும் என்றான்.

"தலைவலின்னு படுத்திருக்காப்பா... கூப்பிடவா?'' என்று தந்தை பதில் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, பின்னால் ஒலித்த அன்னையின் குரலைக் கேட்டவன், எதுவும் சொல்லாமல் கைப்பேசியை அணைத்தான். அத்தனை நேரம் இருந்த உற்சாகம் மொத்தமும், இருந்த இடம் தெரியாமல் சென்றது.

உடை மாற்றிக் கொண்டு வந்தவள், "என்னங்க... அதுக்குள்ள போனை வச்சிட்டீங்க? நான் அத்தை, மாமாகிட்ட ரெண்டு வார்த்தை பேசலாம்னு நினைச்சேன்'' என்றாள்.

"நாளைக்குப் பேசலாம். அம்மா அசதியா படுத்துட்டாங்களாம்'' என்றவனது குரலும், முகமும்...அது உண்மையில்லை என அவளுக்குச் சொல்லியது.

மயூரிக்கு நெஞ்சுக்குள் கலக்கம் உண்டானது. "வேறேதும் சொல்வானோ?' என்று அவனைப் பார்த்தாள். அவனோ, ரிமோட்டால் டிவியில் ஒவ்வொரு சேனலாக மாற்றிக் கொண்டிருந்தான்.

"தூங்கலையா நீங்க...?'' என்றாள்.

"இல்ல. நீ போய்த் தூங்கு!'' என்றவன் மேற்கொண்டு பேசாமல் அமைதியாக இருக்க, சற்று நேரம் நின்று பார்த்தவள், என்ன பேசுவதென்று புரியாமல் அறைக்குள் சென்று படுத்தாள். அவளது அனுமதி இல்லாமலேயே கண்கள் கண்ணீரைப் பொழிந்தன.

காலையில் எழுந்தவள், பக்கத்தில் படுக்கை காலியாக இருப்பதைக் கண்டதும், "நேற்றை தினத்தைப் போலவே தயாராகி விட்டானோ!' என்று எண்ணி, வேகமாக எழுந்து ஹாலுக்கு வந்தாள். சோஃபாவில் தன் உயரத்தைக் குறுக்கிக் கொண்டு உறங்கிக் கொண்டிருந்த வனைக் கண்டதும், அவளது மனத்தில் சொல்லமுடியாத வேதனை எழுந்தது.

"கல்யாண விஷயத்தில் தான் அவசரப்பட்டு விட்டோமோ!' என நினைத்தவளுக்கு, முதன்முறையாக மனத்தில் பயம் எழுந்தது.



# 15

மெல்லக் கண் விழித்தவன், சோஃபாவிலேயே உறங்கி விட்டதை உணர்ந்து, "மை காட்!'' என்று பதறி எழுந்தான்.

"கடவுளே...! மயூரி விழிக்காமல் இருக்கணுமே' என்ற வேண்டுதலுடன் அறைக்குள் நுழைந்தவன், அங்கே கண்ணாடி முன் நின்று, தன் ஈரக்கூந்தலை உலர்த்திக் கொண்டிருந்தவளைப் பார்த்தான். அறைவாசலில் வந்து நின்ற கணவனைக் கண்டதும், கூந்தலை அளைந்து கொண்டிருந்த கரங்கள் சிலநொடிகள் அசையாமல் நின்றன.

"கு..ட் மார்..னிங் மயூ!'' என்றவனது குரல் தடுமாற்றத்துடனேயே வந்தது.

"குட்மார்னிங்...!''

"மயூ! நேத்து...''

"ஹீட்டர் போட்டிருக்கேன். குளிச்சிட்டு வந்திடுங்க'' என்றவள் தன் வேலையில் கவனத்தைத் திருப்ப, சைலேஷ் குளியலறைக்குள் நுழைந்தான்.

குளித்துவிட்டு வந்தவன், "மயூ! கிளம்பலாமா? முதலில் போய் ப்ரேக்பாஸ்ட் முடிச்சிகிட்டு, பிறகு எங்கே போகலாம் என்று முடிவு பண்ணிக்கலாம்'' என்றான்.

"இப்போ... சாப்பிடப் போவதை விட, முக்கியமான ஒரு விஷயத்தைப் பத்திப் பேசணும்!''

"எ... என்ன மயூ...? இப்போ என்ன?'' என்றபடியே அவளது தோள்களைப் பற்ற முயன்றவனது கைகளுக்கு

அகப்படாமல் பின்னால் நகர்ந்தாள் அவள்.

"சைலேஷ்! உண்மையைச் சொல்லுங்க. என்னைப் பிடிச்சித் தானே... கல்யாணம் பண்ணிகிட்டீங்க? இல்ல... அவசரத்தில் கல்யாணம் செய்துகிட்டு... இப்போ உள்ளுக்குள்ள தவிக்கிறீங்களா?'' என்றவளது குரல் அவளது பரிதவிப்பைக் காட்டியது.

"இந்தக் கேள்வி உனக்கே பைத்தியக்காரத்தனமா படலையா மயூரி?'' - சற்று எரிச்சலுடன் கேட்டான்.

"ப்ளீஸ்... சைலேஷ்! சொல்லுங்க. எனக்கு நம்ம எதிர்காலத்தை நினைச்சா பயமா இருக்கு. ரெண்டு பேரும் அவசரப்பட்டு முடிவு எடுத்துட்டோமோன்னு தோணுது.''

மயூரியின் கரகரத்த குரல் அவனது மனத்தை அறுத்தது. 'இத்தனைக்கும் தான் தான் காரணம்' என்று நினைத்தவனது முகம், அடிபட்ட பாவனையை வெளிப்படுத்தியது.

அவனது அமைதியைத் தாங்க முடியாமல் துடித்துப் போனாள்.

"சொல்லுங்க சைலேஷ்! உங்க வாழ்க்கையில் என்னோட பங்கு என்ன?''என்றாள் கேள்வியாக.

"இதென்ன கேள்வி மயூரி? நீ என் மனைவி. என் சுக துக்கத்தில், உனக்கும் சமபங்கு இருக்கு. என் வாழ்க்கையில் எல்லாமே நீ தான். காலம் பூராவும் என்னோடு இருக்கப் போறவ நீ!''

"இது வெறும் வாய் வார்த்தைகளா? இல்ல, உங்க மனசுல இருந்து வருதா?''

"இதுக்கு மேலே, உனக்கு என்னன்னு சொல்லிப் புரியவைப்பேன் மயூ?''



"புரிய வச்சித்தான் ஆகணும். நான் உங்களை நம்பி வந்தவ. நம்ம வீட்டில் என்ன நடக்குது? எல்லாமே மர்மமா இருக்கு. இந்த ரெண்டு நாளா நீங்க என்னிடம் எதையோ மறைக்கறீங்க. சொல்லுங்க, என்கிட்டக் கூட சொல்ல முடியாமல், அப்படி என்ன ரகசியம்?''

"உன்னிடம் சொல்லக் கூடாதுன்னு எந்த ரகசியமும் இல்லை. அடுத்தவங்க என்ன சொல்லுவாங்களோ? அது உன்னைப் பாதிக்குமோன்னு தான் யோசிச்சேனே தவிர, என்னுடைய செய்கைகள் உன்னைப் பாதிக்கும்னு நினைக்கவேயில்லை மயூ! ஆனால், அதை உன்கிட்ட எப்படிச் சொல்வேன்...?'' என்றவன், வேதனையுடன் நிறுத்தினான்.

விஷயத்தைப் புரிந்து கொண்டவளாக, "அப்போ, நம்ம கல்யாணம் யாருக்கும் விருப்பம் இல்லாமல் தான் நடந்துதா? ஒரு நேரத்தில் இதையெல்லாம் எதிர் பார்த்திருந்தேன். ஆனால், இன்னைக்கு என் கண் முன்னே நடக்கும் போது என்னால....'' சொல்லும்போதே அவளது கண்களில் தோன்றிய வலி, அவனது மனத்தைப் பிசைந்தது.

"மயூ...!'' என்றபடி அவள் முகத்தைத் தன் கைகளில் ஏந்தியவன், "அம்மா உன்னைச் சீக்கிரமே புரிஞ்சிப்பாங்க!'' என்றான்.

"நீங்க ஏன் இதை என்னிடம் இருந்து மறைச்சீங்க? ஏன் என்னிடம் சொல்லலை?''

"சொல்லியிருந்தா... நீ இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிச்சிருக்க மாட்ட. நான் உன்னை ரொம்பவே நேசிக்கிறேன். நீ எனக்கு வேணும். என்னால் மட்டும் தான்

உன்னைச் சந்தோஷமா பார்த்துக்க முடியும்'' என்றவன் இதற்கு மேலும் எதையும் மறைத்து உபயோகம் இல்லை என்று, நடந்த அனைத்தையும் ஒன்று விடாமல் சொன்னான்.

"தப்பு பண்ணிட்டீங்க சைலேஷ். என்னைச் சந்தோஷப்படுத்தறதா நினைச்சி... உங்க அம்மாவைக் கஷ்டப்படுத்திட்டீங்க. இது ஒரே நாளில் முடியும் விஷயமா என்ன? காலமெல்லாம்... நானும், அத்தையும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்க வேண்டாமா? இனி, அவங்க என்னை விரோதியா தானே பார்ப்பாங்க? என் வீட்டிலேயே ஒரு சுதந்திரம் இல்லாமல், இது சொன்னால் தப்பாகிடுமா? அது சொன்னால் தப்பாகிடுமான்னு... நான் ஒவ்வொரு வார்த்தையைப் பேசறதுக்கு முன்னாடியும், பல முறை யோசிச்சிட்டுப் பேசணும். எதிலேயோ அடைபட்ட உணர்வோடு தானே, நான் இருக்கணும்...?''

"அம்மா கெட்டவங்க இல்லைமா... உன்னைச் சரியா இன்னும் புரிஞ்சிக்கல. நேத்து நைட் பேசும் போது, அம்மா கொஞ்சம் சமாதானமாகி இருப்பாங்கன்னு நினைச்சேன். ஆனா, சாரிடா...'' என்றான்.

அவளது கண்களில் திரண்ட நீர் முத்துக்கள், அவனது கரத்தில் பட்டுத் தெறித்தன.

"மயூ! நீ என்னைக்கும் கலங்கக் கூடாதுன்னு தான்... இவ்வளவு எதிர்ப்பையும் சமாளிச்சிட்டு இருக்கேன். என்னைக்கும், உனக்குத் துணையா நானிருப்பேன். என் மனக்குழப்பத்தால் தான் அப்படி நடந்துகிட்டேனே தவிர, நிச்சயமாக உன்னைத் தவிர்க்கறதுக்கு இல்ல. என்னைப் புரிஞ்சிக்கோ...'' என்றான்.



"நான் உங்களைப் புரிந்து கொண்டு தான் இருக்கேன். நீங்கதான் இன்னும் நிதர்சனத்தைப் புரிந்து கொள்ள வில்லை. ஒவ்வொரு அம்மாவும் தன் பிள்ளைகளுக்கு நல்லவர்கள் தான். ஆனால், அந்தப் பிள்ளைக்கு வரப்போகும் மனைவி, எந்த மாமியாருக்கும் அத்தனைச் சீக்கிரம் பிரியமானவளாக ஆகமுடியாது. ஒரு சாதாரண மருமகளுக்கே இத்தனைப் பிரச்சனை இருக்கும் போது.... எனக்கு?' என மனதிற்குள் நினைத்தாள்.

வாழ்க்கையின் கரடுமுரடான பாதை கண் முன்னே தெரிந்தது. "இதனைக் கடக்க, தான் என்னென்ன துன்பங்களை அனுபவிக்க வேண்டுமோ' என உள்ளூரப் பயமாக இருந்தது அவளுக்கு.

அதேநேரம் கணவனின் பேச்சு, அவளது மென்மையான மனத்தை மேலும் உருக வைத்தது.

"தனக்காக அத்தனைப் பேரையும் எதிர்த்து, ஏற்றுக் கொண்டவன் சைலேஷ். அவனுடைய மனத்தை... தான் எந்த நிலையிலும், சங்கடத்தில் ஆழ்த்தக் கூடாது' என உறுதி கொண்டாள். 'அவனது துணையும், அரவணைப்பும் இருக்கையில், எந்தச் சூழ்நிலையையும் சமாளிக்கலாம்!' என்ற திடம் உருவானது.

"மயூரி!'' - பரிதாபத்துடன் அழைத்தான்.

கண்களை அழுந்தத் துடைத்துக் கொண்டு அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"நானும் வெளிப்படையா பேசியிருக்கணும்...''

"ம்ம்...'' என்று தலையை ஆட்டியவள், "கூடிய மட்டும், என்னால் நம்ம வீட்டில் எந்தப் பிரச்சனையும் வராமல் பார்த்துக்கறேன்!'' என்று உறுதி அளித்தாள்.

"தேங்க்யூடா!'' அவளை இறுக அணைத்தான்.

"என்னங்க...''

"ம்ம்...''

"என்னங்க...''

"சொல்லுடா...''

"எத்தனை நேரம் இப்படியே இருக்கறது?''

"எத்தனை நேரம் முடியுதோ... அத்தனை நேரம்.''

"அப்போ... நான் நிமிரட்டுமா? கழுத்து வலிக்குது...''

"நல்லவேளை... உனக்குக் கழுத்துவலி வந்தது. எனக்கு ரொம்பப் பசி. நாமளா முதலில் விலகினா, எங்கே அதுக்கும் எதாவது சண்டை பிடிப்பியோன்னுதான், பேசாமல் இருந்தேன்.''

சட்டென அவனிடமிருந்து விலகியவள், "அப்போ... நான் சண்டைக்காரி! நீங்க ரொம்ப நல்லவர் இல்ல?'' என்று முறைத்தாள்.

புன்னகையுடன் பார்த்தவன், "நம்ம வாழ்க்கை ரொம்பச் சுவாரஸ்யமாகவே போகும்!'' என்றான்.

"அப்படி என்ன சுவாரஸ்யத்தைக் கண்டீங்க?'' என்றாள்.

"நீ ரொம்ப அளந்து அளந்து பேசும் ஆள்... அப்படின்னு நினைத்தேன்.''

"எப்படி...? கிலோ கணக்கிலா? இல்ல... கிராம் கணக்கிலா? இல்ல... பழைய காலம் மாதிரி வீசை, காப்படி, முக்காப்படின்னு அளந்தா? எப்படி அளந்து பேசறேன்?'' என்று அவன் முன்பு குனிந்து கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டு, தலையை அசைத்து அசைத்துப் பேசுபவளை, மௌனச் சிரிப்புடன் பார்த்தான்.



'சற்று நேரத்திற்கு முன் அத்தனைக் கவலையுடன் பேசியவள், நிமிடத்தில் தன் மனநிலையை மாற்றிக் கொண்டு இப்படி வம்பளக்கிறாளே...!' என்பதை நினைத்ததும் புன்னகை வந்தது.

'இவள் மென்மையானவள்...சிறு வயதிலிருந்து அவள் பெற்றிருக்கும் அனுபவம், அவளை நன்கு பக்குவப்படுத்தி இருக்கிறது. என்னை நம்பி வந்தவளை, கடைசி வரைக்கும் காப்பாற்றுவேன்' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

"என்ன அப்படியே சிலையாகிட்டீங்களா?'' என்று கேட்டபடி முகத்துக்கு நேரே கையை ஆட்டினாள்.

இயல்புக்குத் திரும்பியவன், "இத்தனை நாள் தப்புக் கணக்குப் போட்டிருந்தேன். ஆனா... இப்போ இல்ல தெரியுது! எல்லா ஆம்பளைங்க நிலை தான் எனக்கும்...!''என்று சிரித்தவளை இழுத்துத் தன் கைச்சிறையில் வைத்தான்.

"ஆனா, நான் கொஞ்சம் வித்தியாசமானவன்!'' என்றபடி அவளது முகத்தை நெருங்கினான்.

தன்னிடம் இயல்பாகப் பேசிக் கொண்டிருந்தவன் சட்டென இழுத்து அணைத்ததும், அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

திருமணத்திற்கு முன் இருவரும் யதார்த்தமாக தொட்டுப் பேசியிருந்த போதும், இன்று அவனது தொடுகையிலிருந்த வேகமும், அணைத்ததில் தெரிந்த உரிமையும் அவளுக்குப் பயத்தைக் கொடுத்தன.

இதயம் வேகமாக துடிக்க, மூடிய இமைகளின் உள்ளே கருவிழிகள் அலைபாய்ந்தன. அவள் காதருகில் அவனின் மூச்சுக்காற்று உரச, காதோரமிருந்த ரோமங்கள் கூச்சத்தில் சிலிர்த்தன.

*"த ஹாப்பினெஸ் யூ கிவ் மீ இஸ் சம்திங்..*

*ஐ'வில் நெவர் ஏபிள் டு கெட் எனஃப்,*

*ஐ லவ் ஹாவிங் யூ இன் மை வேர்ல்ட்,*

*ஐ ஹாவிங் யூ டு லவ்,*

யு கேன் பி அட் மை சைய்ட். பட் வென் அண்ட் வேர்...?'' என்றவன் தன் அணைப்பிலிருந்து அவளை விலக்கித் தோளைப் பற்றி, மயூ...! கண்ணைத் திறந்து பார்!'' என்று கிறங்கிய குரலில் சொல்ல, அவன் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு, கண்களைத் திறந்து பார்த்தாள்.

"பிகாஸ் திஸ் இஸ் நாட் எ ரைட் டைம் ஃபார் ரொமான்ஸ்!'' என்று வாய்விட்டுச் சிரித்தான்.

அவனது கிண்டலைப் புரிந்து விலக முயன்றவளை விடாமல் நிறுத்தி, "பட் ஐ லவ் திஸ் சிச்சுவேஷன். ஏன்னா... இதெல்லாம் கோல்டன் டைம்ஸ். கோல்டன் மெமரீஸ்!'' என்று சொல்லி அவளை விடுவிக்க,

"மனசுல பெரிய ஷேக்ஸ்பியர், மில்டன்னு நினைப்பு!'' என்று முணுமுணுத்த போதும், உள்ளூக்குள் பொங்கிய காதலை, அவளின் கள்ளச் சிரிப்பே அவனுக்குக் காட்டிக்கொடுத்தது.

"ஒரே நேரத்தில் டபுள்ரோலா...? கொண்டாட்டம் தான் போ.''

"என்ன கொண்டாட்டம்?''



"ஆமாம் டபுள்ரோல்னா வீட்டிலும் இருக்கலாம், ஆஃபிஸிலும் இருக்கலாம். வேலையையும் பார்க்கலாம், பொண்டா....ட்டியையும் கவனிச்சிக்கலாம்.''

"ச்ச்ச்சு....! எவ்வளவு பெரிய ஐடியாலாம் வருது உங்களுக்கு! வீட்டுல நாம மட்டும் இல்லை. பெரியவங்களும் இருக்காங்க. இந்த ஒட்டுறது, உரசுறது, எல்லாம் குல்லுமணாலியோட சரி'' என்றாள் கறாராக.

"ஓஹ...! இது எனக்கு மட்டுமா? இல்லை... உனக்குமா?''

"ரெண்டு பேருக்கும் தான்!'' என்று தலையை ஆட்டிக் கொண்டே சொன்னாள் மயூரி.

''பார்ப்போம்! பார்ப்போம்!'' என்றான் அவன் சளைக்காமல்.

அவளும் சளைக்காமல், "பார்க்கலாம்! பார்க்கலாம்!'' என்று சொல்லிவிட்டுச் செல்ல,

"ஹே... மயூ..!. கரப்பான் பூச்சி...''

"எங்கே... எங்கே?'' என்று சுற்றும் முற்றும் பார்த்தவளுக்கு, அவனது கள்ளச்சிரிப்பைக் கண்டதும் விஷயம் விளங்கியது.

"ஓஹோ...! ரொமான்ஸ் சீனுக்கு, சிட்சுவேஷன் க்ரியேட் பண்றீங்களா?'' என்று பொய்யாய் முறைத்தாள்.

"எல்லாம் வேஸ்ட். உனக்கு இந்த மாதிரி கரப்பு, பல்லிக்கெல்லாம் பயமில்லையா? கொஞ்சம் பயம் இருந்திருக்கலாம்!'' என்றான் ஏமாற்றமான குரலில்.

"ஒரு காலத்துல... ரெண்டு கால் மிருகங்களுக்குத் தான் பயந்தேன். தன் உயிரைக் காப்பாத்திக்க மட்டுமே

நம்மை அச்சுறுத்தும் இந்த ஜீவன்களுக்கு.... நான் என்னைக்குமே பயந்ததில்லை'' என்றவள், ஒரு நெடிய பெருமூச்சை விட்டாள்.

அத்தனை நேரம் அவளுடன் வார்த்தையாடிக் கொண்டிருந்தவன், அவளது பதிலில் வாயடைத்துப் போனான்.

அவனது மௌனத்தால் தனது பேச்சின் பொருளுணர்ந்தவள், "ஸ்ஸ்.. ச்சே...!''என்றபடியே, தலை குனிந்தாள்.

"இட்ஸ் ஒக்கேடா! லீவ் இட். எல்லாத்துக்குமே ஆரம்பம் என்பது இருப்பது போல... முடிவும் இருக்கும். உன்னுடைய கசப்பான நினைவுகளை இங்கேயே, இந்த நிமிஷமே விட்டுட்டு, நம்முடைய வாழ்க்கையைச் சந்தோஷமாக ஆரம்பிக்கலாம்!'' என்று அவளைத் தேற்றினான்.

# 16

தங்களது இல்லறத்தை ஆரம்பிக்கும் முன், அவளது இஷ்ட தெய்வமான ஹனுமன் கோவிலுக்கு அழைத்துச் சென்றான்.

'கடவுளே...! நான் நினைத்தே பார்த்திராத அளவுக்கு, ஒரு அன்பான கணவனைக் கொடுத்திருக்க. இன்னைக்கு இருக்கும் அதே சந்தோஷத்தோடு, நான் என்னைன்னைக்கும் இருக்கணும். சீக்கிரமே அத்தையோட மனசிலும் இடம் பிடிக்கணும். நாங்களெல்லாம், ஒரே



குடும்பமா.... ஒற்றுமையா இருக்கணும். எனக்குப் பொறுமையையும், தைரியத்தையும் கொடு!' என்று கண்களை மூடி வேண்டினாள்.

பிரசாதத்துடன் வெளியில் வந்து அமர்ந்ததும், "என்ன? உன்னைச் சுற்றித் தேவதைகள் கூடி நின்னு... 'ததாஸ்த்து'ன்னு சொன்னாங்க. என்ன விஷயம்?'' என்றான்.

"அப்படியா!'' போலியாக ஆச்சரியம் காட்டினாள்.

"அது மட்டுமா? நீ என்ன வேண்டினேன்னும் தெரியும். உன் கடவுள், ஸ்ரீராம பக்த ஹனுமான்... என்னிடம் தானே பதிலைச் சொன்னார்.''

கணவன் தன்னைக் கேலி செய்கிறான் என்று புரிந்தாலும், "ஒஹோ...! அப்போ, அவர் சொன்ன பதிலை என்னிடம் சொல்லுங்க பார்ப்போம்'' என்றாள்.

"அப்போ, நீ என்னை நம்பல. சரி. நான் சொல்றேன்... கேட்டுக்க. டேய் சைலேஷ்! ஒரு அழகான, அறிவான, குணவதியை உனக்குக் கொடுத்திருக்கேன். காலம் பூரா அவளைப் பத்திரமா பார்த்துக்க வேண்டியது உன்னோட பொறுப்பு. அவள் கேட்டது போலவே, கூடிய சீக்கிரமே அத்தையோட அன்பு அவளுக்குக் கிடைக்கும், அதைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கச் சொல்லு... அப்படின்னு சொன்னார்.''

அவன் பதிலில் மனம் நெகிழ்ந்து போனது. விழிகள் கலங்கிய போதும், கட்டுப்படுத்திக் கொண்டு புன்னகைத்தாள். "இவ்வளவு தான் சொன்னாரா? வேற எதுவும் சொல்லலையா?''

"இன்னொன்னும் சொன்னார்; நான் தான் சொல்ல மறந்துட்டேன். நீ அவளை எந்த அளவுக்குப் பத்திரமா பார்த்துக்குறியோ... அதைப் போல ரெண்டு மடங்கு உன்னைப் பார்த்துக்கச் சொல்லி, நான் அவகிட்டச் சொல்றேன்னு சொன்னார்.''

"அதானே பார்த்தேன்! இதைச் சொல்லியிருக்கணுமே. சொல்லாமல் விட்டுட்டாரென்னு நினைச்சேன்'' என்று கிண்டலாகச் சிரிக்க, அவனும் அதில் கலந்து கொண்டான்.

"மயூ! இப்போ, நாம லைட்டா எதாவது சாப்பிடலாம். அப்புறம் பிஜிலி மஹாதேவ் மந்திர் போய்ட்டு வரலாம்'' என்று ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றான்.

சன்சாரி கிராமம் வரை காரில் சென்று இறங்கினர்.

காரோட்டி சைலேஷிடம், "சாஹ்ப்...! இதர்சே தீன் சார் கிலோமீட்டர் பேதல் ஜானா ஹோகா...!'' என்றார்.

"மயூ இங்கே இருந்து...'' என்று அவன் சொல்ல ஆரம்பிக்கும்போதே இடைமறித்தவள், "மூணு நாலு கிலோமீட்டர் நடந்து போகணும்னு சொல்றார் சரியா?'' என்றாள்.

"ரொம்பவே சரி...'' என்று சிரித்தவன், காரோட்டியிடம், தங்களுடன் வரும்படி அழைக்க, சற்று யோசித்தவன் சரி என ஒப்புக்கொண்டு அவர்களுக்கு முன்னால் நடந்தான்.

இயற்கையானது, வாரிக் கொடுத்த வள்ளலாக அத்தனை அழகையும் அவர்களின் கண்களுக்கு விருந்தாக்கிக் கொண்டிருந்தது. சில இடங்களில் பாதை சற்றுக் கரடுமுரடாகவும், சரிவாகவும் இருந்தது.



சுமார் இரண்டு கிலோமீட்டர் தூரம் பைன் மரக்காடுகளுக்கு இடையே நடந்தனர். வழியில் சிறுசிறு வீடுகளில் கிராமத்தினர் வசித்து வந்தனர். பல இடங்களில் அடிப்படை வசதி கூட இல்லாமல் இருந்தது. தங்களை போன்று வரும் சுற்றுலாப் பயணிகள் மூலமாக வரும் வருமானம் மட்டும் தான் இவர்களின் செலவுக்கு என்று காரொட்டி சொன்னதைக் கேட்டுக் கொண்டனர்.

ஒரு பக்கம் உயர்ந்த மலைத்தொடர்களும், மற்றொரு புறம் கிடுகிடு பள்ளத்தாக்கும், அதில் பொங்கிப் பிரவாகமாக ஓடும் பியாஸ் நதியும், காணத் தெவிட்டாத ரம்யமான இயற்கை அழகானதால், அதை ரசித்தபடி நிதானமாக நடந்து சென்று கொண்டிருந்தனர்.

பழக்கமில்லாத மலைப்பாதை நீண்டு கொண்டே போக, மயூரி சற்று நேரத்தில் சோர்ந்து போனாள். மூவரும் அங்கிருந்த கல்லின் மீது அமர்ந்து இளைப்பாறினர்.

அப்போது வயதான மூதாட்டியொருவர், காய்ந்த விறகுகளையும், சுள்ளிகளையும் ஒரு பெரிய கட்டாகக் கட்டி, அந்தக் கயிற்றைத் தனது இரு தோள்களிலும் மாட்டிக்கொண்டு, மெல்ல ஆடி அசைந்து சென்று கொண்டிருந்தார். அதைக் கண்ட மயூரிக்கு, மனத்தை ஏதோ வருத்தியது.

"இந்தப் பெரியம்மா... இந்த வயதில் ஒரு பெரிய சுமையைச் சுமந்துட்டு, இன்னும் எத்தனைத் தூரம் போகணுமோ? ஒரு சின்னப் பையை மட்டும் கொண்டு வரவே, நமக்கு இத்தனை ஆயாசமா இருக்கு. இவங்கல்லாம் ரொம்பப் பாவம்'' - கவலையுடன் சொன்னாள்.

"இதெல்லாம் அவங்களுக்குப் பழகிப் போயிடும் கண்ணம்மா. இவங்களுடைய நிதானமான வாழ்க்கை முறை நமக்குச் சரிவராது. அதே போல, அவங்களுக்கும் நம்மோட பரபரப்பான நகர வாழ்க்கை... நரக வாழ்க்கையாகத் தெரியும்!'' என்று சொன்னான்.

மயூரியும் எழுந்து நடந்தாள். அந்த மலைக் கிராமத்தினரின் எளிமையான வாழ்க்கை முறை அவளைப் பெரிதும் கவர்ந்தது.

"பிஜிலி மஹாதேவ்னு பெயர் வர, காரணம் என்னன்னு தெரியுமா?'' என்று அவளிடம் கேட்டான்.

"எனக்குத் தெரியாது. இங்கே வந்த பிறகு தான், இந்தப் பெயரையே நான் கேள்விப்பட்டேன்'' என்றாள் அவள்.

"பிஜிலின்னா மின்னல்னு அர்த்தம். ஒவ்வொரு வருஷமும் இங்கேயிருக்கும் சிவலிங்கத்தை மின்னல் தாக்கும் போது, ஆவுடையார் துண்டு துண்டா வெடித்துச் சிதறிடுமாம். பிறகு உடைந்த எல்லாத் துண்டுகளையும் வெண்ணை கொண்டு சேர்த்து, திரும்ப சிவலிங்க வடிவமாக கொண்டு வருவாராம் பூசாரி. அந்த நாளை, இங்கே ரொம்பப் புனிதமான விசேஷ நாளாகக் கொண்டாடுவாங்க. அதோ பார்! அது தான் கோவில்!'' என்று தூரத்தில் தெரிந்த கோயிலைச் சுட்டிக் காட்டினான்.

மயூரியின் மனத்தில் உற்சாகம் தொற்றிக் கொள்ள, கால்களில் வேகமும் கூடியது. கோயிலை நோக்கி விரைந்தாள். கோவிலின் வாசலை மிதிக்கும் போதே அவளது உடல் சிலிர்த்தது.

இத்தனை மகத்துவம் வாய்ந்த சிவபெருமான்,



மரங்களாலேயே கட்டப்பட்டிருந்த ஒரு சிறிய கோவிலின் உள்ளே, லிங்க வடிவில் தம் பக்தர்களுக்குக் காட்சியளித்துக் கொண்டிருந்தார்.

"நான் எளியவர்களின் அடியவன்' எனச் சொல்வது போல ஏகாந்தமாகக் கம்பீரத்துடன் இருந்த சிவனை, மனம் குளிர வணங்கினார்கள். கோவிலை ஒரு சுற்று சுற்றிவந்து வணங்கி வெளியே வந்தவள், எதிரில் கண்ட காட்சியில் ஸ்தம்பித்து நின்றாள்.

# 17

"கடவுளே...!'' என்று அவள் உதடுகள் முணுமுணுக்க, விழிகள் ஆச்சரியத்தில் அழகாக விரிந்தன.

அங்கே கண்ட காட்சியில், அத்தனைக் களைப்பும் காணாமல் போனது.

அடர்ந்த பனிமலைத் தொடரின் மேல் தவழ்ந்து செல்லும் மேகக் கூட்டங்கள் ஒரு புறமும், பார்வதிப் பள்ளத்தாக்கில் ஓங்கி வளர்ந்து வானைத் தொடத் துடிக்கும் பைன் மரக்காடுகள் மறு புறமும், இடையில் பியாஸ் நதியின் வழித்தடமும் என, காண்பவரின் மனத்தைக் கொள்ளை கொள்ளும் அழகை, பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை அவர்களுக்கு.

நிறைவுடன் அங்கிருந்து கிளம்பியவர்கள், அருகிலிருந்த நாகர்களின் கோட்டைக்குச் சென்றனர். முழுவதும் மரத்தாலான அந்த அழகான கோட்டை, அதிக ஆடம்பரமில்லாமல், அமைதியாக இருந்தது.

மதிய உணவிற்குப் பிறகு, குல்லு மார்கெட்டில் வலம் வந்தனர்.

"ஈவ்னிங் வந்திருக்கலாம்'' என்றவளைப் பார்த்துக் குறும்பாகப் புன்னகைத்தான்.

"என்ன... இப்படி ஒரு மாதிரி சிரிக்கிறீங்க?'' என்றாள்.

"ஈவ்னிங்... வேற ப்ளான் வச்சிருக்கேன்!'' என்று அவளது வலது காது மடலில் கிசுகிசுத்தான்.

"என்ன அது?'' என்று ஆர்வமாகக் கண்கள் மின்னக் கேட்டாள் மயூரி.

"சஸ்பென்ஸ்...!'' என்று கண்சிமிட்டிச் சிரித்துவிட்டு, அவள் தோள் மீது கையைப் போட்டு தன்னருகில் இழுத்துக் கொண்டான்.

கூச்சத்தில் நெளிந்தவள், "இத்தனைப் பேருக்கு நடுவில், என்னதிது...?'' என்று அதட்ட முயன்ற குரல், தேய்ந்து காணாமல் போனது.

"இதெல்லாம் இங்கே சாதாரணம். இவ்வளவு பெரிய கண்ணிருந்து, என்ன பிரயோஜனம்? சுத்தி என்ன நடக்குதுன்னு பார்க்கறதேயில்ல!'' என்றவன், அவளுடன் மேலும் இழைந்தான்.

சிறு முறுவலுடன் தனது வேலையில் கவனமானாள் மயூரி.

"அத்தைக்குக் இந்தக் கம்பளிச் சால்வை. இப்போல்லாம் மார்கழி மாசக் குளிர் ரொம்ப வாட்டுது இல்ல? இந்த சைஸ் ஸ்வெட்டர் மாமாவுக்கு சரியாயிருக்குமில்ல? வாக்கிங் போகும் போது போட்டுக்க மாமாவுக்கு நல்லாயிருக்கும். இந்தக் காஷ்மீர் சில்க் இனியாவுக்கு. அப்புறம்... நம்ம ரித்து குட்டிக்கு இந்த



ட்ரெஸ்...!'' என்று அவள் வாங்கிக் குவித்ததை, ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

"உனக்கு எதுவும் வாங்கிக்கலையா?''

"இப்போ தானே கல்யாணத்துக்கு நிறைய வாங்கினோம்?'' என்று பில்லைச் சரி பார்த்துக் கொண்டே சொன்னாள்.

"அப்போ... நம்ம ஹனிமூன் நினைவா, உனக்கு நான் வாங்கித் தரேன்'' என்றவன், அதுவரை மறைத்து வைத்திருந்த ஒரு கவரை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

கடல் நீலத்தில் ஒன்றும், இலைப் பச்சை வண்ணத்தில் சிகப்பு வண்ணத் தலைப்புடன் கூடிய காஷ்மீர் சில்க் ஒன்றுமாக அழகு கொஞ்சின.

விழிகளில் நிறைந்த காதலுடன், "தேங்க்ஸ்!'' என்றாள்.

பட்டென அவள் நெற்றியில் தன் உதடுகளை ஒற்ற, அவள் சட்டென்று நிமிர்ந்து பார்வையால் கடையைத் துழாவினாள்.

"யாரும் இந்தப் பக்கம் பார்க்கல; டோண்ட் வொர்ரி!'' என்று சிரித்தவனை, நாணத்துடன் பார்த்து விட்டு நகர்ந்தாள்.

அறைக்கு வந்ததும், "மயூ! நைட் டின்னருக்கு, இந்தப் பச்சை நிறப் புடவையைக் கட்டிட்டு வாயேன்'' என்றான்.

"கட்டிக்கிறேன். ஆனா, இப்போ இல்ல... ஊருக்குப் போய்.''

"ம்ம்... அதுவும் சரி. இந்தக் குளிருக்கு... சல்வார்

தான் சரி!'' என்றபடி தோள்களைக் குலுக்கினான்.

"என்ன பெரிய குளிர்? இது மழைக் காலமும் இல்லை, குளிர் காலமும் இல்லை. ஒரு இருபத்திரெண்டு, இருபத்திமூணு டிகிரி குளிர் இருக்குமா? நல்லா...ப்ளெசண்டா இருக்கு!''

"உனக்கு ஒகேன்னா, எனக்கும் ஒகே...!'' என்றவனைப் புரியாமல் பார்த்துவிட்டு, டீவியை ஆன் செய்தாள் மயூரி.

* * *

ஆற்றின் குறுக்கேயிருந்த மரப்பாலத்தைத் தாண்டி அவளை அழைத்துச் சென்றவன், சற்றுத் தொலைவு சென்றதும் ஓரிடத்தில் நின்றான். அந்த இடத்தைச் சுற்றிப் பார்த்து ஸ்லாகித்துக் கொண்டிருந்தாள் மயூரி.

தனது பேண்ட்டை மடித்து விட்டபடி, "மயூ! சல்வார் நனையப் போகுது... மடிச்சி விடு!'' என்றான்.

"என்ன? தண்ணியில நிக்கப் போறீங்களா?'' -சிரித்தாள்.

"நிக்கப் போறதில்ல; நடக்கப் போறோம்!''

"நடக்கப் போறீங்களா...? இன்னும் கொஞ்ச நேரத்தில் இருட்டிடும். இப்பவே, ஜிலுஜிலுன்னு காத்தடிக்க ஆரம்பிக்குது.''

"காத்தடிச்சா என்ன? நீ தான் பக்கத்தில் இருக்கியே...!''என்று இரகசியக் குரலில் உரைத்தவன், அவள் எதிர்பாராத நேரத்தில் சட்டெனத் தன் இரு கைகளிலும் அவளை ஏந்திக் கொண்டான்.

"ப்ளீஸ் சைலேஷ்! கீழே விடுங்க... நான் நடந்தே



வரேன்...'' என்றாள் கூச்சத்துடன்.

"நோ வே மேடம்! நான் சொன்னப்பவே, நீ செய்திருக்கணும்!'' என்றான் கறாராக.

"ஹய்யோ ப்ளீஸ்...!'' என்றபடி கால்களை உதறினாள் மயூரி.

"பேசாமல் இருக்கப் போறீயா... இல்லயா? இப்படிக் காலை ஆட்டினா, பாலன்ஸ் தவறி... ரெண்டு பேரும் சேர்ந்து தண்ணியில விழவேண்டியது தான். அப்புறம்... ஜலக்கிரீடை தான். பரவாயில்லயா?'' என்றவன், அவளது நெற்றியில் முட்ட, வெட்கத்துடன் அவனது நெஞ்சில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள் மயூரி.

"தட்ஸ் குட்! இந்தப் பொஸிஷன் ரொம்பவே பிரமாதம்!'' என்றவன், முழங்கால் அளவிற்கு ஓடிய நீரின் மீது தெரிந்த பாறைகளைக் கடந்து, ஆற்றின் நடுவிலிருந்த சிறு திட்டின் மீது அவளை இறக்கி விட்டான்.

திட்டைச் சுற்றி, சலசலத்தபடி ஓடிக் கொண்டிருந்தது அந்த ஓடை. சிலுசிலுவென வீசிய காற்று, கம்பளி ஆடையையும் மீறி, அவர்களது உடலைத் தீண்டியது.

சூடுபறக்கத் தன் கைகளைத் தேய்த்துக் கொண்டே இயற்கை அழகை இரசித்துக் கொண்டிருந்தவளை, பின்னாலிருந்து சேர்த்து அணைத்தான்.

"எவ்வளவு அழகான இடம்! இப்படி ஒரு இடத்துக்கு நம்மள அனுப்பிவச்ச மாமாவுக்குத் தான் தேங்க்ஸ் சொல்லணும்'' என்றாள் மயூரி.

அவளது கன்னத்தோடு கன்னம் வைத்தவன், "சொல்லு...'' என்றான்.

"ராத்திரி பேசும் போது, போனில் சொல்றேன்.''

"போன்ல எதுக்கு? நேரிலேயே சொல்லு...!'' என்றான் விடாமல்.

"அதுக்கு... இன்னும் ஒரு வாரம் ஆகுமே? என்றாள் யோசனையுடன்.

"ஏன்? இப்பவே சொல்லலாமே...!'' என்றபடி அவளைத் தன் பக்கமாகத் திருப்பினான்.

நெற்றியைச் சுருக்கிப் பார்த்தவள், "அப்போ...!'' என்று இழுத்தாள்.

"அதே தான்! எல்லாம் ஐயாவோட ஏற்பாடு தான்!'' என்று புன்னகைத்தான்.

அவளது அத்தனை நேரச் சந்தோஷமும், இருந்த இடம் தெரியாமல் விலகியோட, துக்கம் தொண்டையை அடைத்தது.

அவளுக்காக என்று அவன் செய்யும் ஒவ்வொரு செயலும், அவளை வெகுவாகப் பாதிப்பதை அவன் சற்றும் உணரவில்லை.

விழிகளை நிறைத்த கண்ணீரை மறைக்க, அவனது நெஞ்சில் இறுக முகம் புதைத்துக் கொண்டாள் மயூரி.

# 18

"**ஹா**ய்! என்னடா நீ வந்திருக்க...?'' என்று தங்களை வரவேற்க இரயில் நிலையத்தில் காத்திருந்த குணாவை, ஆச்சரியத்துடன் விசாரித்தான் சைலேஷ்.



"வாடா மாப்பிள்ளை! வாம்மா...! நல்லயிருக்கியா?'' என்று பதிலுக்கு விசாரித்தான் குணா.

"நல்லாயிருக்கோம்ண்ணா! ரம்யா எப்படியிருக்கா?''

"நல்லாயிருக்கா...'' என்றவன், லேசான வெட்கப் புன்னகையுடன் இருவரையும் பார்த்தான்.

"என்னடா?'' என்ற சைலேஷ் விஷயத்தை யூகித்துவிட, "ஹேய்! கங்கிராட்ஸ்!'' என்றபடி நண்பனை அணைத்துக் கொண்டான்.

இருவரது உற்சாகத்திலேயே விஷயத்தைப் புரிந்து கொண்ட மயூரி, தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தாள்.

காரிலிருந்து இறங்கிய சைலேஷ், "உள்ளே வந்துட்டுப் போடா...!''என்று அழைத்தான்.

"போய், ஆஃபிஸ் கிளம்பணும். உள்ளே வந்தா, லேட்டாகிடும். நீ இன்னைக்குத் தானே ஜாயின் பண்ற?'' என்று கேட்டான் பதிலுக்கு.

"ஆமாம். ஒன் ஹவர் பர்மிஷன் போட்டிருக்கேன். சரி ஆஃபீஸில் பார்க்கலாம்'' என்று அவனுக்கு விடைகொடுத்தான் சைலேஷ்.

இருவரும் வீட்டினுள் நுழையும் போது, யாரோ சமையலறையில் பாத்திரங்களை உருட்டும் சப்தம் கேட்டது. கதவைத் திறக்கும் சப்தம் கேட்டு எட்டிப் பார்த்தார் வடிவு.

தயக்கமும், பதட்டமுமாக, "எப்படியிருக்கீங்க அத்தை?'' என்று நலம் விசாரித்தாள் மயூரி.

மகனை ஒரு பார்வை பார்த்தவர், "ம்! இருக்கோம்!'' என்றபடி சமையலறைக்குள் சென்றார்.

விழிகளை உயர்த்தி கணவனைப் பார்த்தாள். அதிருப்தியான பார்வையைச் சட்டென மறைத்தவனாக, "வா' என்ற சைகையுடன் தங்களது அறையை நோக்கி நடந்தான். அங்கே கட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த தங்கையைக் கண்டதும், முகம் இறுக அப்படியே நின்றான்.

அவனது முகமாறுதலைக் கண்டவள், "நீங்க காஃபி கேட்டீங்க இல்ல...? உட்காருங்க. நான் கொண்டு வரேன்'' என்றபடியே, அவன் கையிலிருந்த ட்ராவல் பேகை வாங்கி அறைக்குள் வைத்த பின்பே சமையலறைக்குச் சென்றாள்.

காஃபிக் கோப்பையுடன் திரும்பிய வடிவு, மயூரியைக் கண்டதும் அதை அவளிடம் கொடுத்தார்.

"தேங்க்ஸ் அத்தை! நானே போட்டிருப்பேனே. நீங்க ஏன் சிரமப்படறீங்க?' இயல்பாகக் கேட்க முயன்றாள்.

அவளது கேள்விக்குப் பதில் சொல்லாமல், தன்னையே பார்த்த மாமியாரின் பார்வையில், சற்றே நடுங்கிப் போனாள் மயூரி.

தனது படபடப்பை மறைத்தபடி காஃபியைச் சைலேஷிடம் கொடுத்தாள்.

"தேங்க்ஸ்! நீ சாப்பிடலையா?'' என்று கேட்டான்.

'உங்களுக்கு மட்டும் தான் காஃபி தயாரித்தார்கள்' என்று சொல்ல மனமில்லாமல், "நான் குளிச்சிட்டு வந்திடுறேன்'' என்றவள், மாற்று உடையுடன் குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.

தொடர்ந்து தண்ணீர் கொட்டும் சப்தம் கேட்டு எரிச்சலுடன் கண்விழித்த இனியா, அறைக்குள்ளிருந்த பெட்டிகளைப் பார்த்ததும் விசுக்கென எழுந்தாள்.



முகத்தைக் கழுவித் துடைத்தபடி ஹாலுக்கு வந்தவள், "வாங்க புதுமாப்பிள்ளை! ஹனிமூனெல்லாம் முடிஞ்சிதா?'' என்ற கேலியுடன் அவனெதிரில் அமர்ந்தாள்.

பேப்பரிலிருந்து கண்களை அகற்றியவன், எரிச்சலுடன் தங்கையைப் பார்த்தான்.

"சரவணனும், ரித்துவும் எங்கே?'' என்று கேட்டான்.

"ம். அவர் ஆஃபிஸுக்கு லீவ் போட முடியாதுன்னு கிளம்பிட்டார். அந்தச் சின்னதும்... பாட்டி தான் வேணும்னு, கிளம்பிப் போயிடுச்சி!'' என்றாள்.

அதே நேரம், கேட்காமலேயே தன் மகளுக்குக் காஃபியைக் கொண்டு வந்து கொடுத்து விட்டுச் சென்ற அன்னையை, கையாலாகாத்தனத்துடன் பார்த்தான்.

"நீ எப்போ கிளம்பப் போற?'' என்ற அடுத்த கேள்வி?யை அவன் கேட்டதும், இனியாவின் முகம் கோபத்தில் சிவந்தது.

"எங்க அம்மா வீட்டுக்கு... நான் வந்திருக்கேன். உனக்கு ஏன்... கண்ணை உறுத்துது?'' என்று கோபத்துடன் கேட்டாள்.

முகம் இறுக தங்கையை முறைத்தான் சைலேஷ்.

"இனியா...!'' என்று அதட்டலாக ஒலித்த தந்தையின் குரலில், சட்டென எழுந்து நின்றாள் அவள்.

"வளர்ந்திருக்கியே தவிர, என்ன பேசணும்னு கொஞ்சமாவது தெரியுதா? அண்ணன்கிட்ட எப்படிப் பேசணும்னு தெரியாது உனக்கு? நியாயமா... இந்தக் கேள்வியை... நாங்க கேட்டிருக்கணும்!'' என்ற தந்தைக்குப்

பதில் சொல்ல முடியாமல் திணறி நின்றாள்.

"போ! போய் வேலையைப் பாரு!'' என்றதும், சமையலறை வாசலில் நின்றிருந்த அன்னையை நோக்கிச் சென்றாள்.

"எப்போப்பா வந்த...?'' என்றபடி, மகனிடம் பேச ஆரம்பித்தார் கேசவன்.

அறையிலிருந்து வந்த மயூரி மாமனாரிடம் பேசிவிட்டுத் திரும்ப, எதிரில் வந்த இனியாவைப் பார்த்து முறுவலித்தாள்.

"வந்த ஒரே வாரத்தில... எங்க அண்ணனை மாத்திட்ட இல்ல?'' தனது கோபத்தையெல்லாம் வார்த்தைகளால் கொட்டிவிட்டுச் சென்றாள் அவள்.

மாமியார், நாத்தனாரின் போக்கு அவளுக்குக் கவலையைக் கொடுத்தாலும், அவற்றைச் சமாளித்து விடலாமென்ற நம்பிக்கையுடன் புன்னகைத்துக் கொண்டாள்.

காலை உணவை டேபிளில் அடுக்கிய மயூரி, அனைவரையும் அழைத்துப் பரிமாற ஆரம்பித்தாள்.

"பரவாயில்லையே வடிவு. வந்ததும், மருமக கையில சமையல் டிபார்ட்மென்ட்டை ஒப்படைச்சிட்டியே!'' என்று சிரித்தார் கேசவன்.

வடிவு வாயைத் திறக்காமல் அமர்ந்திருந்தார்.

"நீயும் உட்காரும்மா...!'' என்றார்.

"இருக்கட்டும் மாமா. நான் அப்புறம் சாப்பிட்டுக்கறேன்.''

"நாமதானே இருக்கோம்? எடுத்துப் போட்டுக்கலாம்.



உட்காரு!'' என்ற சைலேஷ், ஒரு தட்டில் அவளுக்காகப் பரிமாறியபடி, "அப்பா! மயூரி உங்ககிட்ட என்னவோ கேட்கணுமாம்...'' என்றான்.

மகளும், அம்மாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"என்னம்மா விஷயம்? சொல்லும்மா!'' என்றார் கேசவன்.

இருக்கையை அமர்ந்தவள், "நா...ன் தொடர்ந்து வேலைக்குப் போகலாமான்னு...'' என்று இழுத்தாள்.

அவளை இடைமறித்த கேசவன், "உன் வீட்டுக்காரன் என்ன சொல்றான்?'' என்று கேட்டார்.

"அவர், அது என் விருப்பம்னு சொல்லிட்டார்...''

அடுத்ததாக, "நீ என்ன முடிவு செய்திருக்க...?'' என்றார் அவர்.

ஓரப்பார்வையில் தன்னை பார்த்துக் கொண்டிருந்த மாமியாரையும், நாத்தனாரையும் பார்த்தவள், சைலேஷை நிமிர்ந்து பார்த்தாள். அவன் ஆதரவாக அவளது கரத்தைத் தட்டிக் கொடுத்துப் புன்னகைத்தான்.

"நான் தொடர்ந்து வேலைக்குப் போகணும்னு தான் நினைக்கிறேன் மாமா. எனக்குத் தன்னம்பிக்கையையும், வாழ்க்கையில் ஒரு பிடிப்பையும் கொடுத்தது... இந்த வேலைதான்...''என்றாள் மயூரி.

"அப்புறம் ஏம்மா.. **உன்னோட தன்னம்பிக்கையையும், வாழ்க்கையையும், அடுத்தவங்களோட முடிவுக்கு விடற? அதோட, சில விஷயங்களில் நீ தான் முடிவெடுக்கணும்... ஏன்... நீ மட்டும் தான்**

முடிவெடுக்கணும்! மத்தவங்களோட கருத்துக்களைக் கேட்டுக்கலாமே தவிர, அதையே முடிவாக எடுத்துக்கக் கூடாது. உன் வாழ்க்கையை, உன்னைவிட யாராலயும் மேம்படுத்திட முடியாது. எந்தக் காரணத்தைக் கொண்டும், வேலையை மட்டும் விட்டுடாதே!'' என்றார் சிரித்தபடி.

மலர்ந்த முகத்துடன், "ம், சரிங்க மாமா'' என்றாள்.

# 19

சமையலறையில் நின்றிருந்த மனைவியை, "மயூ! இன்னும் இங்கே என்ன வேலை..?. வா வா! உனக்காகத்தான் வெயிட்டிங்'' என்ற சைலேஷ், அவளது கரத்தைப் பற்றி ஹாலுக்கு அழைத்து வந்தான்.

தாங்கள் ஊரிலிருந்து அனைவருக்கும் வாங்கி வந்திருந்த பொருட்கள் அடங்கிய ஏர்பேக், டீபாய் மீது வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்தாள்.

"நான் இங்கேயே இருக்கேன். நீங்க முதல்ல அத்தையையும், மாமாவையும் கூப்பிடுங்க...'' என்றுசிரித்த முகமாகவே சொன்னபடி, தனது கரத்தை அவனிடமிருந்து விடுவித்துக் கொண்டாள்.

"ஓகே மேடம்!'' என்று புன்னகைத்தவன், "அப்பா! கொஞ்சம் இங்கே வாங்களேன்!'' என்றதும், வராண்டா அருகில் அமர்ந்து தினசரியில் ஆழ்ந்திருந்த கேசவன் எழுந்து வந்தார்.

அதுவரை முகத்தைத் தூக்கி வைத்தபடி



அமர்ந்திருந்த இனியா, மெல்ல எழுந்து வந்து அண்ணனின் அருகில் அமர்ந்தாள்.

"அப்பா! இது உங்களுக்கு'' என்று ஒரு ஸ்வெட்டரைக் கொடுத்தவன், "அம்மா...!'' என்றபடி அன்னை அமர்ந்திருந்த பக்கமாகத் திரும்பி, "அம்மா! இது உங்களுக்கு'' என்று ஒரு சால்வையைப் பிரித்து அவருக்குப் போர்த்தி விட்டான்.

"அடேங்கப்பா! பரவாயில்ல மருமகளே... மாமியாருக்குப் பிடிச்ச நிறத்துலயே வாங்கிட்டு வந்துட்டியே!'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தார் கேசவன்.

சால்வையைத் தன் மீதிருந்து எடுத்துப் பார்த்த வடிவு, அதைச் சோஃபாவின் மீதே போட்டுவிட்டு தனது அறைக்குச் செல்ல, என்ன செய்வதென்று தெரியாமல் மனைவியைப் பார்த்தான் சைலேஷ்.

அவளோ, இரு கைகளையும் கோர்த்துக் கொண்டு சுவற்றில் சாய்ந்து நின்றபடி, சலனமேயில்லாமல் அவனைப் பார்த்தாள்.

மயூரி தனது உணர்வுகளைத் தனக்குள் மறைத்துக் கொண்ட போதும், ஆண்கள் இருவரும் தங்களது உணர்வுகளை வெளிக்காட்டாமலிருக்க, பிரம்மப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தனர்.

"மறந்தே போயிட்டேன். நான் இந்தத் துணிகளை மொட்டை மாடியில் போட்டுட்டு வந்திடுறேன்'' என்று துவைத்த துணிகளை எடுத்துக் கொண்டு அங்கிருந்து வெளியேறினாள் மயூரி.

அங்கே நடந்ததைப் பற்றிச் சற்றும் அலட்டிக் கொள்ளாத இனியா, "இது எனக்குத் தானே!'' என்றபடி,

அங்கிருந்த புடவையை எடுத்துப் பிரித்துப் பார்க்க ஆரம்பித்தாள்.

தனது பரிதாபப் பார்வையைத் தவிர்க்கவே அங்கிருந்து விலகிச் செல்கிறாள் என்பதைப் புரிந்து கொண்ட கேசவன், ஒரு பெருமூச்சுடன் வராண்டாவில் சென்று அமர்ந்தார்.

தங்கையின் குடும்பத்திற்காக என்று வாங்கிய வற்றை அவளிடம் கொடுத்துவிட்டு, பெற்றோரின் அறைக்கதவைத் தட்டி, "அம்மா!'' என்றழைத்தான்.

மகனது அழைப்பைக் கேட்டதும், பீரோவில் எதையோ தேடிக்கொண்டிருந்த வடிவு திரும்பிப் பார்த்து, "உள்ளே வாப்பா!'' என்றார்.

தலையைக் கோதிக் கொண்டே அங்கிருந்த சோஃபாவில் அமர்ந்தான் அவன்.

அவனெதிரில் வந்து நின்றவர், "என்னப்பா! நாங்க என்னைக்குத் தனிக்குடித்தனம் போகணும்?'' என்று இறுகிய முகத்துடன் கேட்க, அதிர்ந்து போனான் சைலேஷ்.

"அம்மா! என்னை இவ்வளவு கேவலமா நினைச்சிட்டீங்களா?'' என்றான் ஆதங்கத்துடன்.

"ஓ! அப்போ... நீ அதைப் பத்திப் பேச வரலையா? இது... நீ வாங்கின வீடாச்சே; அதனால, நாங்க தானே வெளியே போயாகணும்?''

"ஏம்மா இப்படியெல்லாம் பேசறீங்க? இன்னுமா உங்க கோபம் குறையல?'' என்று பரிதாபமாகக் கேட்டான்.

மகனது வேதனை நிறைந்த குரல் வடிவாம்பாளை



உலுக்கியது. தனது பதிலை எதிர்பார்த்தபடி அமர்ந்திருந்தவனது முகத்தைப் பார்த்தார். எங்கே தனது வைராக்கியமெல்லாம் தளர்ந்து விடுமோ என்ற பயத்துடன், வலுக்கட்டாயமாக மீண்டும் அதை இழுத்துப் பிடித்துக் கொண்டு கட்டிலில் அமர்ந்தார்.

அன்னையின் பிடிவாத குணம் தெரிந்த போதும், சைலேஷ் பொறுமையுடன் அமர்ந்திருந்தான். அவனுக்கும் கோபம், எரிச்சல், வருத்தம் என்று எல்லாம் இருந்த போதும், ஏட்டிக்குப் போட்டியாகச் செய்வதால் எதுவும் ஆகப் போவதில்லை என்பதையும் அறிந்திருந்தான்.

தனது பாராமுகம் கூட, மயூரியின் மீதான அன்னையின் கோபத்திற்குத் தூபம் போட்டது போலாகிவிடும் என்று அவனுக்குமே புரிந்துதான் இருந்தது. அதோடு, காலையிலிருந்து வீட்டில் நடந்து கொண்டிருக்கும் விஷயங்களைப் பார்த்துக் கொண்டும் இருந்தானே.

இதை இப்படியே நீட்டிக்க விடக்கூடாது. மயூரியைப் பற்றிப் அன்னை புரிந்து கொண்டால், இந்தக் கோபமெல்லாம் அர்த்தமற்றதாகிவிடும். அதற்கான முதல் முயற்சியாக, தான் சற்று இறங்கிச் சென்றால் தவறில்லை!' என்ற முடிவுடன் தான், அன்னையிடம் பேச வந்திருந்தான்.

வடிவாம்பாளைப் பொறுத்தவரை, தனது மகனைப் போன்று சிறந்தவன் யாருமில்லை என்ற எண்ணம், அளவிற்கு அதிகமாகவே உண்டு. அதற்கேற்றாற் போல, அவனுமே சிறுவயது முதலே எல்லாவற்றிலும் தனித்தன்மையோடே விளங்கினான்.

ஆனால், அது அவனது திருமண வாழ்விலும் தொடரும் என்று அவர் நினைக்கவேயில்லை. மயூரியை முதன்முதலில் பார்த்தபோது, அவள் தனது மகனுக்கு ஏற்றவள் என்ற மகிழ்ச்சியுடன் தான் இருந்தார். ஆயினும், அவளது ரிஷிமூலத்தைத் தெரிந்து கொண்டதும், அதை ஜீரணிக்க முடியாமல் தடுமாறிப் போனார்.

தனது பேச்சுக்கு மறுபேச்சு எதையும் பேசாத தனது அன்பு மகன், இந்தத் திருமண விஷயத்தில் உறுதியாக இருந்ததையும், தன்னை எதிர்த்து நின்றதையும், அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவனைத் தட்டிக் கேட்கவும் முடியாமல், சம்மதம் சொல்லவும் முடியாமல் உள்ளுக்குள் தவித்துப் போனார்.

மகளின் புகுந்த வீட்டைப் பற்றிச் சொல்லி மறுத்துப் பார்த்தார். ஆனால், மாப்பிள்ளை முதல் அவரது குடும்பத்திலுள்ள அனைவரும், "நமக்குப் பெண் தானே முக்கியம்? மற்றவற்றைப் பற்றி என்ன கவலை?' என்று தங்களது சம்மதத்தைச் சொல்லிவிட, அவரால் மேற்கொண்டு எதுவும் சொல்ல முடியவில்லை.

சரி. மகனது சந்தோஷத்திற்காக என்று மனத்தைத் தேற்றிக் கொண்டு திருமணத்திற்கு நாள் குறித்தனர். உறவுகளுக்கெல்லாம் காதல் திருமணம் என்று சொல்லிவிட்டார்.

"தங்களுக்கு விதித்தது அவ்வளவு தான்' என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்ட போதும், அவரால் எதிலும் முழுமனத்துடன் ஈடுபட முடியவில்லை. அனைத்து வேலைகளிலும் சம்மந்தியம்மாவையே முன்னிலையில் வைத்துச் செய்து விட்டார்.



திருமணத்திற்கு ஒரு வாரம் இருந்த நிலையில், எதிர்வீட்டு வைதேகியின் மாமியார் சுந்தரி மாமி ஒரு பகல் பொழுதில் வந்தார்.

வடிவும் யதார்த்தமாகப் பேசிக்கொண்டிருக்க, "ஏம்மா வடிவு!'' என்று இரகசியக் குரலில் அழைத்தவர், "உன் மருமகளைப் பத்திக் கேள்விப்பட்டதெல்லாம் உண்மையா...?'' என்று கேட்டதும், வடிவாம்பாளின் இதயம் தாறுமாறாகத் துடிக்கத் துவங்கியது.

"ஐயோ! இந்தம்மாவுக்குத் தெரிந்தது போல, இன்னும் எத்தனைப் பேருக்குத் தெரியுமோன்னு... தெரியலையே! தெரியாதவங்களுக்குக் கூட, இந்தம்மாவே பரப்பிவிடுமே...!'என்று தவிப்புடன் பார்த்தார்.

"அ...தெல்லாம் ஒண்ணுமில்லையே... யாருமா இப்படியெல்லாம் சொல்றது...?''என்று தட்டுத் தடுமாறினார்.

"எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்று சொல்வது போல அவரது பார்வையும், பேச்சின் தடுமாற்றமுமே... அது உண்மைதான் என்று சுந்தரி மாமிக்கு உணர்த்திவிட, "அதவிடு கண்ணு. புரணி பேசறதுக்கா ஆளில்ல? நீ கல்யாண வீட்டுக்காரி. இதையெல்லாம் கண்டுக்காம, வேலையைப் பாரு'' என்று சொல்லிவிட்டு எழுந்து சென்றார்.

அவ்வளவு தான்! அன்றிலிருந்து முழுதாக வீட்டிற்குள் முடங்கிப் போனார்.

அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது போல, யாராவது தன்னைப் பார்த்தோ, தங்களது

வீட்டைப் பார்த்தோ பேசிக் கொண்டே சென்றால், இந்த விஷயத்தைப் பற்றித் தான் பேசுகிறார்கள் என்றெண்ணி, தனக்குள் குன்றிப் போனார்.

திருமணத்திற்கு வந்திருந்தவர்களை வரவேற்கக் கூட அவருக்கு அவமானமாக இருந்தது. தன்னிடம் யாரும் எதுவும் கேட்டுவிடுவார்களோ என்ற பயத்துடனேயே, இந்தத் திருமணம் எப்போது முடியுமென்று காத்திருந்தார்.

"மகனது திருமணத்தை ஊரே மெச்சும்படி நடத்த வேண்டும்' என்று தான் கண்ட கனவெல்லாம் காற்றில் கரைந்த கற்பூரமாகப் போய்விட, அழக் கூடத் தைரியமில்லாமல் நடமாடிக் கொண்டிருந்தார்.

மணவறையில், மகனருகில் வந்தமர்ந்த மயூரியைக் கண்டதும், தங்களது குடும்ப மானம் ஊரார் வாய்க்கு அவலாகப் போனதற்கு இவள் தானே காரணம் என்ற கோபம் மொத்தமும், அவள் மீது தாவியது.

ஆயினும், மகன் மீதிருந்த பாசத்தால் தனது கோபத்தை அடக்கிக் கொண்டார். தன்னுடைய கோபம் மகனது வாழ்வைச் சிதைத்து விடுமோ என்று அஞ்சியே, அவர்கள் வீட்டிற்கு வரும் நேரத்தில் மகளை அழைத்துக் கொண்டு கோயிலுக்குச் சென்றுவிட்டார்.

மனைவியை அழைத்துக் கொண்டு மகன் தேன்நிலவுக்குச் சென்றுவிட, மயூரியின் மீது இருந்த கோபம், விருட்டென்று வெறுப்பாக மாறியது.

ஒரு வாரத்திற்குப் பிறகு வீட்டிற்கு வந்தவர்களிடம், அவர் ஒரு வார்த்தைகூட பேசவில்லை. மயூரி குளித்துவிட்டுச் சமையலறைக்கு வந்ததுமே, தான் செய்து கொண்டிருந்த வேலையை அப்படியே விட்டுவிட்டு



வெளியே வந்து விட்டார். வந்த முதல்நாளே... எது, எங்கே, எப்படி? என்று தெரியாமல், தட்டுத் தடுமாறித் தேடி எடுத்து சமையலை முடித்தவளை, கண்டும் காணாமல் அழுத்தமாக அமர்ந்திருந்தார்.

இப்போதும் மகன் தன்னைச் சமாதானம் செய்ய வந்திருப்பது தெரிந்த போதும், அவனிடம் முகம் கொடுத்துப் பேசாமல் அமர்ந்திருந்தார். உள்ளுக்குள் அவனுக்காகத் துடித்த பாசத்தை முகத்தில் பிரதிபலித்து விடாமல் அமர்ந்திருந்தார்.

அன்னையின் பதிலுக்காகக் காத்திருந்தவன் ஏதோ சொல்ல முயல, அவனைக் கை நீட்டித் தடுத்தார்.

"இங்கே பாரு சைலேஷ்! பிடிக்காத சில விஷயங்கள் நடக்கும் போது அதை மனசு ஒத்துக்கறதில்ல. சிலதைக் கட்டாயத்துக்காக ஏத்துக்கலாம். சிலதைப் போகப் போக... பழகிக்குவோம். அதேநேரம், சிலதை... எந்தக் காலகட்டத்திலும் ஏத்துக்கவே மாட்டோம். இதுவும் அப்படித் தான்! என்னைச் சமாதானம் பண்ணிடலாம்னு நினைக்காதே. சமாதானமாகணும்னு... நானா நினைச்சா தான் முடியும்!

என் மகனோட மனைவிங்கறதால, அவள் இந்த வீட்டில் இருப்பதைச் சகிச்சிக்கிறேன். மத்தபடி, என்னைச் சமாதானம் பண்றதாலயோ, தாஜா பண்றதாலயோ... என்னை மாத்திடலாம்னு நினைக்காதே! அப்படி உனக்குப் பிடிக்கலைனா சொல்லிடு; நாங்க தனியா போயிடுறோம்!'' என்று பிடிவாதமாகச் சொல்லி முடித்தார்.

தலையைக் கோதிக் கொண்ட சைலேஷ், "வாழ்க்கைல முதல்முறையா... ரொம்பப் பெரிய தப்பு

பண்ணிட்டேம்மா! மயூரிக்கு நல்லது செய்யறதா நினைச்சி... அவளோட வாழ்க்கையையே நரகமாக்கிட்டேன்!'' என்றவன், முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டு எழுந்தான்.

"புரிஞ்சிக்குவீங்கம்மா! சீக்கிரமே அவளைப் புரிஞ்சிக்குவீங்க...'' என்றவன் விறுவிறுவென அந்த அறையிலிருந்து வெளியேறினான்.

# 20

மொட்டை மாடியில் துணிகளை உலர்த்திக் கொண்டிருந்த மயூரி, காலடி ஓசை கேட்டுத் திரும்பினாள். ஒரு பெரிய வாளி நிறைய, துவைத்த துணிகளைக் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வந்து, மூச்சிரைக்க நின்றாள் அந்தப் பெண்.

சாதாரண கைத்தறிப் புடவையில், வெட வெடவென ஒடிந்து விடுவதைப் போன்ற தேகம், ரத்தச் சோகையால் வெளுத்திருந்த நிறம் என்று, பார்க்கவே சற்றுப் பரிதாபமாக இருந்தாள் அவள். கருமமே கண்ணாகத் துணிகளை உலர்த்திக் கொண்டிருந்தவள், மெட்டியின் ஓசையில் திரும்பிப் பார்த்தாள்.

ஸ்நேக பாவத்துடன் தன்னைப் பார்த்துச் சிரித்தவளைக் கண்டதும், தயக்கத்துடன் முறுவலித்தாள் அந்தப் பெண்.

"ஹலோ! நான் மயூரி...'' என்று அவளருகில் சென்று நின்றாள்.



"ம், தெரியும். வடிவு மாமியோட மருமக...!'' என்று, சற்றுத் தயக்கத்துடனேயே பேசினாள் அவள்.

அந்த இனிமையான குரலில் கவரப்பட்டவளாக, "ஓ! நீங்க...?''என்றாள்.

"உங்களுக்கு எதிர் ப்ளாட்ல தான் இருக்கோம். என் பேர் வைதேகி!'' என்று சற்றுச் சரளமாகப் பேச ஆரம்பித்தாள்.

பாராட்டுதலாக, "அழகான பெயர்...!'' என்றாள் மயூரி.

"உங்க பேரும் தான்! உங்களை மாதிரியே அழகா இருக்கு...'' என்றாள் வைதேகி.

"ம், நீங்க நல்லா பாடுவீங்க தானே...?'' என்று மயூரி திடீரென்று கேட்க, கசப்புடன் புன்னகைத்தாள் வைதேகி.

அதன்பிறகு வைதேகி எதுவுமே பேசாமல் தனது வேலையில் ஈடுபட, மயூரிக்குச் சங்கடமாகிப் போனது. தான் ஏதோ கேட்கக் கூடாததைக் கேட்டு, அவளைப் புண்படுத்திவிட்டோம் என்பது மட்டும் புரிந்தது.

"அ...க்கா! சாரி''என்றாள்மெதுவாக.

சட்டெனத் திரும்பிப் பார்த்த வைதேகியின் கண்களில் ஒரு ஒளி தோன்றி, அதே வேகத்தில் மறைந்தும் போனது. அதற்குமேல் ஒரு வார்த்தை கூடப் பேசாமல், கையிலிருந்த துணியைக் கொடியில் போட்டுவிட்டு, விடுவிடுவென அங்கிருந்து அகன்றாள் அவள்.

அவளது கரைகட்டிய கண்களைக் கண்டுவிட்ட மயூரிக்கு, என்னவோ போல் ஆகிவிட்டது.

"ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் ஏதாவது ஒரு சுமையை வைத்துவிடுவானோ இந்தக் கடவுள்!' என்று நினைத்தபடி ஒரு நீண்ட பெருமூச்சை வெளியிட்டவள், கனத்த இதயத்துடன் வீட்டை நோக்கிநடந்தாள்.

தங்களது அறைக்குள் நுழைந்தவள், தாடையைத் தடவியபடி யோசனையுடன் அமர்ந்திருந்த கணவனைப் பார்த்தாள்.

"என்னங்க! மணி பத்தரை ஆகுதே... ஆஃபீஸ் கிளம்பலையா?''

"ம், கிளம்பணும்'' என்றவன், முகத்தைக் கழுவி, உடைமாற்றிக் கொண்டு தயாரானான்.

அவனது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த மயூரி, குறுக்காக ஷோல்டர் பேகை மாட்டிக்கொண்டு கிளம்பியவனது கரத்தைப் பற்றி நிறுத்தினாள்.

"சைலேஷ்! எதையும் நினைச்சி மனசைக் குழப்பிக்காதீங்க. சீக்கிரமே எல்லாம் சரியாகிடும்.''

திகைப்புடன் பார்த்தவன், "மயூ...!'' என்று தவிப்புடன் அழைத்தான்.

"நீங்க என் பக்கத்திலேயே இருக்கும் போது... எனக்கு என்ன கவலை? எல்லாத்தையும் சமாளிச்சிடுவேன்!'' என்றவள், அவனது தோளில் சாய்ந்து கொண்டாள்.

ஒரு கையால் அவளை அணைத்து, "தேங்க்யூடா'' என்றவன், சிறுமுறுவலுடன் குனிந்து அவளது நெற்றியில் அழுந்த முத்தமிட்டான்.

இமைகளை மூடி, புன்னகையுடன் அவனது காதலை ஏற்றுக் கொண்டவள், "டைம் ஆச்சு...''என்றாள்.



இளநகையுடன் அவளிடமிருந்து விலகியவன், "ஈவ்னிங் ரெடியா இரு... குணா வீட்டுக்குப் போய்ட்டு வந்திடலாம்'' என்றான்.

''ம்.'' என்று அழகாகத் தலையசைத்து அவனுக்கு விடை கொடுத்தாள்.

* * *

''ஹேய் ரம்யா! வாழ்த்துக்கள்'' என்ற சந்தோஷ அழைப்புடன், தோழியை அணைத்துக் கொண்டாள் மயூரி.

''தேங்க்யூ மயூ!'' என்று கூச்சத்துடன் புன்னகைத்தவளை, அன்புடன் பார்த்தாள்.

''தேங்க்ஸோட விட்டுடலாம்னு நினைப்பா? கட்டாயம் ட்ரீட் வேணும்.''

"அவ்வளவு தானே? கொடுத்துட்டாப் போச்சு'' என்று பெண்கள் இருவரும் வளவளத்துக் கொண்டிருக்க, ஆண்கள் இருவரும் அவர்களைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தனர்.

''அண்ணா! நாங்க சண்டே ஃப்ரீதான்... வசதி எப்படி?''

"அதுக்கென்ன? கொடுத்துட்டாப் போச்சு. ஷெரட்டானா, ரெயின் ட்ரீயா... எங்கே வேணும்?'' என்று சிரிப்புடன் கேட்டான் அவன்.

''ஹய்யய்யோ! ஆசைப்படலாம்; ஆனால், பேராசைப் படக்கூடாது'' என்றாள்.

"ஹலோ! நாம என்ன... தினமுமா அங்கே போய்ச் சாப்பிடப் போறோம்? தங்கச்சி ஆசைப்பட்டுக் கேட்டா, செய்ய செய்யமாட்டோமா... என்ன?'' என்றான் குணா.

''உங்க வார்த்தையே போதும்... இதுக்கு மேல என்ன வேணும்?'' - உள்ளுக்குள் சற்று நெகிழ்ந்து போனாள்.

அவளது முகபாவத்தை வைத்தே அதைப் புரிந்து கொண்ட சைலேஷ், "போதும்டா! உங்க பாசமழையில் நனைந்து... எங்க ரெண்டு பேருக்கும் ஜலதோஷமே பிடிச்சிடும் போல'' என்று இருவரது பேச்சிற்கும் இடையில் புகுந்தான்.

''பொறாமை...?'' என்று இழுத்தான் குணா.

"லைட்டா...!'' என்று சைலேஷ் தலையசைக்க, அங்கே சிரிப்பும், கலகலப்புமாக நேரம் சென்றது.

மாடியில் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தவர்களது சப்தம், கீழே இருந்த குணாவின் பெற்றோரின் காதுகளுக்கும் எட்டியது.

"எந்தக் கஷ்டத்துக்கு ஆரம்பமா, இவ்வளவு சத்தமா சிரிக்குதுங்களோன்னு தெரியல? இந்தச் சைலேஷுக்கு, இப்படி ஒரு வாழ்க்கையா அமையணும்? இவ்வளவு நாளா... இந்தக் குணாவும், ரம்யாவும்... இந்தப் பொண்ணைப் பத்தி ஒரு வார்த்தை சொல்லுச்சீங்களா?

இவளைப் பத்தி முதல்லயே தெரிஞ்சிருந்தா, இந்த வீட்டு வாசப்படியே ஏற விட்டிருக்க மாட்டேன். எல்லாம் தலைவிதி! நம்ம வீட்ல இருக்கறதுங்க சரியா இருந்தா... எல்லாம் சரியா தான் இருக்கும். என்னத்தச் சொல்ல?'' என்று நீட்டி முழக்கினார் குணாவின் பாட்டி.

"ஐயோ அத்தை! எதுக்கு நீங்க இப்படிப் புலம்பிட்டு இருக்கீங்க? அவங்க காதுல விழப் போகுது...'' - அவரைச் சமாதானப்படுத்தும் நோக்குடன் பேசினார் குணாவின் அன்னை.



அதேநேரம் வெளியிலிருந்து வீட்டிற்குள் வந்த குணாவின் தந்தை, "என்னம்மா இங்கே நின்னுட்டிருக்க?'' என்று மாடிப்படியருகில் நின்றிருந்த மயூரியிடம் கேட்டார்.

"ஆஹ்... அது... தண்ணி... ரம்யாவுக்கு...'' என்று தடுமாறினாள் அவள்.

வார்த்தைகள் கூட கோர்வையாக வராமல், தொண்டையில் சிக்கித் தவித்தது.

"அதுக்கு இங்கேயே நிக்கணுமா...?'' என்று சிரித்தபடியே சொன்னவர், வராண்டாவில் அமர்ந்திருந்த மனைவியை அழைத்து தண்ணீர் கொடுக்கச் சொல்லிவிட்டு, உள்ளே சென்று விட்டார்.

வராண்டாவிலேயே இருந்த தண்ணீர் பாட்டிலைத் தயக்கத்துடன் எடுத்துக் கொடுத்த குணாவின் அன்னையை, நிமிர்ந்து பார்க்காமலேயே வாங்கிக் கொண்டு சென்றாள்.

அடுத்த சில நிமிடங்களிலேயே அனைவரிடமும் சொல்லிக் கொண்டு அங்கிருந்து கிளம்பினாள்.

வீட்டிற்கு வந்து இரவு உணவுக்குப் பிறகு வேலைகளை முடித்து விட்டுப் படுக்கையில் விழுந்தவளுக்கு, துக்கம் தொண்டையை அடைத்தது. அதிலும் கிளம்பும் நேரத்தில், "உறைச்சா சரி...!'' என்று குத்தலாக அந்தப் பாட்டி சொன்ன வார்த்தைகள், அவளது காதிலேயே ரீங்காரமிட்டன.

இனி ரம்யாவின் வீட்டிற்கும் இயல்பாகச் சென்று வருவது இயலாத காரியம் என்பது புரிய, நெஞ்சு கனத்தது. உடன்பிறந்தவளைப் போன்று தன்னிடம் அன்பைப் பொழிபவளை, இனி பார்ப்பது கூடச் சந்தேகம் என்ற

நிலை வந்ததில், மனம் வெகுவாகச் சோர்ந்து போனது. கணவனின் அருகாமையையும், ஆறுதலாக சாய்ந்து கொள்ள அவனது தோள்களையும் எதிர்பார்த்து மனம் ஏங்கியது.

விளக்கை அணைத்துவிட்டுக் கட்டிலில் அமர்ந்து, "மயூ!'' என்று அவளது முகத்தைத் தன் பக்கமாகத் திருப்பிய சைலேஷின் நெஞ்சில் சாய்ந்து அழுது தீர்த்தாள்.

தண்ணீருடன் மேலே வந்த போதே இறுகியிருந்த அவளது முகத்தைப் பார்த்தவன், அங்கே ஏதோ நடந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டான். அதற்கு ஏற்றாற் போல சரவணனிடமிருந்து போனும் வர, இருவரும் கிளம்பி வீட்டிற்கு வந்து விட்டனர்.

ஆறுதலுடன் அவளை அணைத்துக் கொண்டவனுக்கு, அவளைத் தேற்ற வார்த்தைகள் கிடைக்கவில்லை.

# 21

"ஹலோ! சாருக்கு இன்னும் தூக்கம் கலையலையா?'' என்றபடியே கணவனை உலுக்கினாள் மயூரி.

"ம்...'' என்றபடி சோம்பல் முறித்தவன், நின்றிருந்தவளை இழுத்துத் தன்னருகில் அமரவைத்தான்.

அலை அலையாகப் புரண்ட கூந்தலை, ஒருபக்கத் தோள் வழியாக முன்னால் படர விட்டிருந்தாள். மஞ்சள் பூசிய முகமும், ஈரக்கூந்தல் பரவவிட்ட சீயக்காய் வாசமும் அவனுக்கு சுகந்தமான மணத்தைக் கொடுக்க, அவளது மடியில் தலை வைத்துப் படுத்தான்.



"ஐயாவுக்கு, ஆஃபீஸ் போகும் ஐடியாவே இல்ல போலிருக்கே!'' என்றாள் குறும்பாக.

"இப்படி அப்சரஸ் மாதிரி முன்னால வந்து நின்னுட்டு, கேள்வியா கேட்கற?'' என்றவன், அவளது வெற்றிடையில் தனது முத்திரையைப் பதித்தான்.

அவனைச் சட்டெனத் தன்னிடமிருந்து விலக்கியவள், "இதெல்லாம் ஆகறதில்ல. எழுந்து போய் பிரெஷ் பண்ணிட்டு வாங்க! அதுக்குள்ள, உங்களுக்குக் காஃபி கொண்டு வரேன். கொஞ்சம் பேசணும்'' என்று அவனை எழுப்பி அமர வைத்துவிட்டு, அறையிலிருந்து வெளியேறினாள்.

புன்னகையுடன் அவளைப் பார்த்தவன், குளியலறைக்குச் சென்றான். முகத்தைத் துடைத்தபடி வெளியே வந்த போது, சுடச்சுட காஃபியும், தினசரியும், அவனுக்காகத் தயாராக டீபாயின் மீது காத்திருந்தது.

"சொல்லுப்பா...'' என்றபடி இருக்கையில் அமர்ந்தான் சைலேஷ்.

"நான் நாளையிலிருந்து வேலைக்குப் போகலாம்னு இருக்கேன்'' என்றாள்.

"நல்ல விஷயம் தான். செய்!''

"மாமாகிட்டக் கேட்டேன்; சரின்னு சொல்லிட்டாங்க. அத்தைகிட்ட...'' என்று பாதியில் நிறுத்தினாள் மயூரி.

காஃபியை உறிஞ்சியவன், "அம்மாவும் அங்கே தானே இருந்தாங்க? எல்லாம்... அவங்களுக்கும் கேட்டிருக்கும்!'' என்றான்.

"அப்புறம்... செல்லம்மா அக்காவோட பொண்ணு கல்யாணத்துக்காக, ஆஃபிஸ்ல ஒரு இலட்சம் லோன் வாங்கியிருந்தேன். அதுக்கு மாசம் சுமாரா ஐந்தாயிரம் கிட்ட, சம்பளத்துல பிடிச்சிக்குவாங்க. அந்த டியூ முடியற வரைக்கும், சம்பளம் குறைவாதான் வரும். என்னோட கைச்செலவுக்குன்னு ஒரு ஐந்தாயிரம் எடுத்துக்குவேன். பேங்க்ல ரெண்டாயிரம் போட்டுடுவேன்.''

"சரி, அதுக்கென்ன?'' என்றான் குறுஞ்சிரிப்புடன்.

"உங்ககிட்ட விஷயத்தைச் சொல்லணுமில்ல. அதோட, வீட்டுச் செலவுக்கு இப்போதைக்கு என்னால முழு சம்பளத்தையும் கொடுக்க முடியாது.''

டம்ளரைக் கீழே வைத்தவன், "இப்போ எதுக்கு இந்தப் பேச்சு? ஓ! நேத்து இனியா என்னவோ கேட்டதுக்கு, இனி வீட்ல செலவு கூடும். நினைச்ச மாதிரி செலவு பண்ண முடியாதுன்னு அம்மா சொன்னாங்களே! அதுக்காகவா...?'' என்று கேட்டான்.

"ம்...''என்றாள் மயூரி.

"அது எப்பவும் நடக்கறது தான். அவள் ஏதாவது, அதுவேணும்... இது வேணும்னு கேட்பா. அம்மாவும், சமாளிக்க ஏதாவது சொல்வாங்க. முன்னெல்லாம் அவளுக்கு வேணும்னு கேட்பா... ரித்து பிறந்ததுக்குப் பின்னால, குழந்தைக்குன்னு சொல்லி வாங்கிக்கறா. உன் சம்பளத்தை முழுசா என் கையில் கொடுக்கணும்னு, நான் எப்போ சொன்னேன்?''



"இருந்தாலும்...''

"இருந்தாலும் சரி... இல்லைனாலும் சரி! நீ என் மனைவி. உனக்குச் செய்ய வேண்டியது என் கடமை. அதனால, இதைப் பத்தியெல்லாம் நீ கவலைப்படவே தேவையில்லை. உன் சம்பளம் உன்னிடமே இருக்கட்டும். எனக்குத் தேவைனா... நானே கேட்டு வாங்கிக்குவேன். சரியா?''

"ம்...'' என்று சிறுமுறுவலுடன் தலையாட்டினாள்.

பற்றியிருந்த அவளது கரத்தை வருடியபடி, "அப்புறம்...'' என்று குறும்பாக ஆரம்பித்தான்.

"அப்புறமென்ன? அதான்... பேசி முடிச்சாச்சே! இனி எழுந்து போய், ஆஃபீஸுக்குக் கிளம்பற வேலையை நீங்க பாருங்க. மதியச் சமையல் வேலை எனக்குப் பாக்கி இருக்கு. அதை நான் முடிக்கிறேன்!''

"மதியானச் சமையலுக்கு, இன்னும் நேரமிருக்கே...!''

"இருக்கு தான். ஆனா, உங்களுக்கு லஞ்ச் கட்டிக் கொடுக்கணுமே!''

"லஞ்ச்சா? நான் கேண்டீன்ல சாப்பிட்டுக்குவேன்.''

"அதெல்லாம் அப்போ. இனி நான் இருக்கும் வரைக்கும், தினம் வீட்டுச் சாப்பாடுதான். கிளம்புங்க... கிளம்புங்க! உங்களுக்குப் பிடிச்ச நெய்ப் பொங்கலும், கத்தரிக்காய் கொத்சும் தயாரா இருக்கு!'' என்றவள், வேகமாக எழுந்து சமையலறைக்குச் சென்றாள்.

* * *

மறுநாள் முதல் வேலைக்குச் செல்ல இருந்ததால், தனது சீருடையை இஸ்திரி செய்து கொண்டிருந்தாள்.

அழைப்பு மணி ஒசை கேட்டதும், இழுத்துச் செருகியிருந்த புடவைக் கொசுவத்தை இறக்கி நீவிவிட்டபடியே சென்று, கதவைத் திறந்தாள்.

வாசலில் நின்றிருந்த ரம்யாவைக் கண்டதும், ஆனந்த அதிர்ச்சியடைந்தாள்.

"ஹாய் மயூ! உள்ள வரலாமில்ல...?'' - ரம்யா.

"ஹே! வாப்பா... உன்னைக் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவேயில்ல. அதான் ஸ்டன்னாகிட்டேன்'' என்றாள் மயூரி.

உள்ளே வந்தவள், "என்னடி! வீட்ல யாரையுமே காணோம்...'' என்று கேட்டாள்.

"அவர் ஆஃபீஸுக்குப் போயிருக்கார். மாமாவோட நண்பர் வீட்ல ஏதோ விசேஷம்னு, பெரியவங்க ரெண்டு பேரும் போயிருக்காங்க'' என்றாள்.

"ஏன்... உன்னைக் கூப்பிடலையா?'' - ரம்யா.

"ம். மாமா கூப்பிட்டாங்க. நான்தான், நாளைக்கு வேலைல ஜாயின் பண்றதால... கொஞ்சம் வேலையிருக்குன்னு சொல்லிட்டேன். அதோட, சைலேஷ் இருந்தாத் தானே நல்லாயிருக்கும்?'' என்றாள் மயூரி.

"ம்ம்! கரெக்ட் தான். ஆனா, உன் மாமியார் தான் இருக்காங்களே... அப்புறம் என்ன?'' என்று கேட்ட தோழியை, நிதானமான பார்வை ஒன்று பார்த்தாள்.

"அதை விடு ரம்யா'' என்றபடி எழுந்தவள், "என்ன சாப்பிடுற சொல்லு? காஃபியா..., டீயா...?'' என்று பேச்சை மாற்றினாள்.



மயூரியின் கரத்தைப் பற்றிய ரம்யா, "மயூ! என்கிட்ட எதையோ மறைக்கற. என்ன விஷயம்? உன் மாமியார் உன்னிடம் சாதாரணமாத் தானே நடந்துக்கறாங்க? எதுவும் பிரச்சனை இல்லையே...!'' என்று கேட்கும்போதே, அவளுக்கு உள்ளுக்குள் ஒரு பயம் ஊற்றெடுத்தது.

விரக்தியாகப் புன்னகைத்து விட்டு, "பேசினால் தானே பிரச்சனை வரும்...?'' என்றவள், தழுதழுத்த தனது குரலைக் கட்டுப்படுத்திக் கொண்டு, தங்களது அறைக்குச் சென்றாள்.

தோழியின் பதிலால் அதிர்ந்து போனாள் ரம்யா. சைலேஷின் அம்மாவிற்கு மயூரியின் மீதிருக்கும் கோபத்தைப் பற்றி, அவளுக்கும் நன்றாகவே தெரியும். இருந்தாலும், அதற்காக, அவளிடம் பேசாமலேயே இருப்பார்களா என்ன? அது எப்படி முடியும்?

மயூரியைப் பற்றி நன்கு அறிந்த ரம்யாவிற்கு, அவளது நிலை குறித்து வேதனையாக இருந்தது. சிறுவயது முதலே தனிமைச் சூழலில் வளர்ந்தவள் அவள். பாசத்திற்காக ஏங்கித் தவித்தவள். எத்தனையோ இக்கட்டான சோதனைகளையும் போராடிக் கடந்து வந்திருக்கிறாள்.

அவளது நிலையில் யாராக இருந்தாலும், ஒன்று, தன்னை மாற்றிக் கொண்டிருப்பார்கள் இல்லையெனில், தன்னைத் தானே அழித்துக் கொண்டிருப்பார்கள். இன்னமும் அவளது வாழ்வில் நிம்மதி என்ற சொல்லுக்கு, அர்த்தமே தெரியாமல் தானே இருக்கிறாள்?' என்ற ஆதங்கத்துடன் மயூரியைப் பார்த்தாள்.

அவளோ, எதுவுமே பேசாமல் விட்ட வேலையைத்

தொடர்ந்து செய்து கொண்டிருந்தாள்.

"சே! ஒரே வீட்டிலிருந்து கொண்டு, ஒருவருடன் ஒருவர் பேசாமலிருப்பது... எத்தனைப் பெரிய வலி?' -ரம்யாவிற்கு மனமே ஆறவில்லை.

"அவங்க பேசலனா என்ன? நீ அவங்ககிட்ட கேட்கறது தானேடீ?'' என்றாள் கோபத்துடன்.

நிமிர்ந்து அவளைப் பார்த்த மயூரி, "என்னன்னு கேட்கறது? அவங்களோட கோபமும் நியாயமானது தானே!'' என்றாள்.

பதில் சொன்ன தோழியைப் கோபமும், பரிதாபமுமாகப் பார்த்தாள் ரம்யா.

"பெரிய நியாயவாதியா நீ? உனக்கென்னடி குறைச்சல்? உன்னை மாதிரி ஒரு மருமக கிடைக்க, அவளுக்குக் கொடுத்து வச்சிருக்கணும். இங்கே பார்! இப்படியே வாயை மூடிட்டு இருந்தா, வேலைக்காகாது. பேச வேண்டிய நேரத்துல் பேசு! ஏற்கெனவே, உன்னை ஆகாதவளா தானே பார்க்கறாங்க? பேசாமலேயே கெட்ட பேர் வாங்கிக்கறதுக்கு, பேசிட்டு வாங்கிக்கலாம்!'' என்று கடுகடுத்தாள் ரம்யா.

தனக்காக ஆதங்கப்படும் தோழியைப் பார்த்து, குறுநகை புரிந்தாள் மயூரி.

"பொறுமைக்கான பலன்... ரொம்பப் பெரிசு ரம்யா. நிச்சயமா, அதுக்கான பலன் எனக்குக் கிடைக்கும். ஒருத்தர் நம்ம காலை மிதிச்சிட்டு சாரி சொன்னா... அவங்ககிட்ட நாம சண்டையா போடுறோம்? இட்ஸ் ஓகேன்னு, சின்னதா ஒரு சிரிப்பு சிரிப்போம். முன்னபின்ன தெரியாத யாரோ



ஒருத்தரைப் பொறுத்துப் போற நாம, நம்மளோட நெருங்கிய சொந்தங்களுக்காக... பொறுமையாக இருக்கக்கூடாதா?'' என்றாள்.

அதிருப்தியான ஒரு பார்வையை தோழியின் மீது செலுத்திய ரம்யா, "இங்கே ஒரு போதி மரம் மட்டும் தான் இல்ல...!'' என்று எரிச்சலுடன் சொல்ல, பதிலுக்குப் புன்னகையொன்றை உதிர்த்தாள் மயூரி.

அவளது முகத்தைப் பற்றித் தன் பக்கமாகத் திருப்பியவள், ''மயூ! நான் வேணா அவர் கிட்டச் சொல்லி, அண்ணாகிட்ட பேசச் சொல்லவா?'' என்று கேட்டாள்.

அதுவரை மயூரியின் உதட்டில் உறைந்திருந்த புன்னகை மறைய, "அவர் எந்த முயற்சியும் எடுக்கலைனா நினைக்கற?'' என்றவள், கண்களை அழுந்த மூடித் திறந்தாள்.

"ஆனா, நீ இப்பச் சொன்னா மாதிரி, அந்தத் தப்பை மட்டும் செஞ்சிடாதே ரம்யா. நம்ம ப்ரெண்ட்ஷிப்... என்னைக்கும் இப்படியே இருக்கணும்னு விரும்பறேன்!'' என்று அழுத்தமாகச் சொன்னவளை, திகைப்புடன் பார்த்தாள் ரம்யா.

அடுத்த நொடியே அப்போது தான் நினைவு வந்தவளாக, "பாரு, வந்த உனக்குக் காஃபி கூட கொடுக்காம...'' என்று தலையில் தட்டிக் கொண்டு சென்ற மயூரியை, இமைக்காமல் பார்த்தாள்.

முன்தினம் தங்கள் வீட்டில் நடந்ததற்கு மன்னிப்பு கேட்க வந்த ரம்யா, அதைப் பற்றிப் பேசாமலேயே, கனத்த மனத்துடன் அங்கிருந்து கிளம்பினாள்.

# 22

"மயூரி மேடம்! உங்களுக்குப் போன்...'' என்ற ரிசப்ஷனிஸ்ட் அவளை அழைத்து, போனைக் கொடுத்தாள்.

"ஹலோ!'' என்றதும், "மயூ! நான் தான் பேசறேன்'' என்றாள் ரம்யா.

"சொல்லுப்பா. மொபைல்ல வராம, ஆஃபீஸ் நம்பருக்கு கூப்பிட்டிருக்க?''

"மூணு தடவை ட்ரை பண்ணேன். நீ போனை எடுக்கவேயில்ல...!'' என்றாள்.

அப்போது தான் நினைவு வந்தவளாக, "அட ஆமாம்! காலைல ஒரு மீட்டிங்னு மொபைலை சைலண்ட்ல போட்டேன். அப்புறம் அதை மாத்தவேயில்ல!'' என்றபடி மொபைலில் மோடை மாற்றி வைத்தாள் மயூரி.

"மயூ! நைட் டின்னருக்கு டேபிள் புக் பண்ணியிருக்கு'' என்றவள், ஹோட்டலின் பெயரையும் சொன்னாள்.

"திடீர்னு சொல்றியேப்பா. முதல்லயே தெரிஞ்சிருந்தா, நான் வீட்ல சொல்லிட்டு வந்திருப்பேன்!''

"சாரிடீ! இவர் திடீர்னு தான் விஷயத்தைச் சொன்னார்'' என்றாள் ரம்யா.

"ஏதாவது ஸ்பெஷலா...?''

"ஆமாம். ஆனா, என்னன்னு இப்போ சொல்லமாட்டேன். ஈவ்னிங் சொல்றேன்'' என்றாள்.



"நீ சொல்லலைனா என்ன? குணா அண்ணா இவர்கிட்ட கட்டாயம் சொல்லியிருப்பாங்க. நான் கேட்டுக்கறேன்'' என்றாள் மயூரி.

"சாமர்த்தியம் இருந்தா கேட்டுத் தெரிஞ்சிக்க...!'' என்று சிரித்தவள், "மறந்துடாதே! ஈவ்னிங் வந்திடு'' என்று சொல்லிவிட்டு, போனை வைத்தாள்.

உடனே சைலேஷிற்குப் போன் செய்தாள் மயூரி. அவன் எடுக்காமல் போகவே, வீட்டிற்குப் போன் செய்து விஷயத்தைச் சொல்லி விடலாமென வீட்டிற்கு அழைத்தாள்.

"ஹலோ!'' என்ற வடிவின் குரல் கேட்டதும், சட்டென்று பேச்சு வரவில்லை அவளுக்கு.

"ஹலோ...! யாருங்க...?'' என்று மீண்டும் வடிவு கேட்க, "அ..த்தை! நான் மயூரி'' என்றாள்.

மறுபக்கம் எந்தச் சப்தமும் இல்லாமல் போக, "அத்தை!'' என்று அவள் மீண்டும் அழைக்கும் போதே, பட்டென ரிசீவரை வைக்கும் சப்தம் கேட்டது.

போனையே சற்று நேரம் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவள், சோர்வுடன் அப்படியே அமர்ந்து விட்டாள்.

திடீரென தன்னை யாரோ உலுக்குவது போல தோன்ற, சுதாரித்துப் பார்த்தாள்.

"மேடம்! உங்க மொபைல் அடிச்சிட்டு இருக்கு...'' என்று சொன்னாள் அந்தப் பெண்.

"ஹாங்...! தேங்க்யூ'' என்றவள், "சொல்லுங்க...'' என்றாள்.

"என்ன மயூ! வேலை நேரத்தில் டிஸ்டர்ப் பண்ணிட்டேனா? கால் அலர்ட் வந்திருந்தது'' என்றான் சைலேஷ்.

"இ.. ஆ... மாம்... கொஞ்சம் வேலையா இருந்தேன்... ரம்யா போன் செய்திருந்தா. அதைப் பத்திச் சொல்லத்தான் கூப்பிட்டேன்?'' என்றாள்.

"எனக்கும் குணா சொன்னான். நீ டியூட்டி முடிஞ்சதும் வெயிட் பண்ணு. நான் வந்து பிக்-அப் பண்ணிக்கிறேன்'' என்றான்.

"சரி'' என்றவள், "என்னங்க... நீங்க வீட்டுக்குப் போன் செய்து, நாம வெளியே போறதைச் சொல்லிட்றீங்களா?'' என்று கேட்டாள்.

"அவ்வளவு தானே? சொல்லிடுறேன். பை!'' -போனை வைத்தான்.

மாலையில் வேலை முடித்துவிட்டு வரும் போது, என்னவோ உடல் மிகவும் சோர்ந்திருப்பது போல இருந்தது மயூரிக்கு. அலுப்புடன் கையை முட்டுக் கொடுத்து டேபிள் மீதே சாய்ந்து படுத்துக் கொண்டவள், திடீரென ஏதோ சப்தம் கேட்டு விழித்தெழுந்தாள். மணி ஏழே கால் ஆகியிருந்தது.

"சைலேஷ் இன்னும் வரவில்லையே!' என்ற நினைப்புடனேயே, முகத்தைக் கழுவிக்கொண்டு தயாரானாள். மேலும் பத்து நிமிடங்கள் கடந்த பின்னும், அவன் வரவில்லை. யோசனையுடன் அவனது மொபைலுக்கு முயன்றாள்.

ம்ஹூம். "தொடர்பு எல்லைக்கு அப்பால் உள்ளார்' என்றே மீண்டும் மீண்டும் தகவல் வர, சலிப்புடன் போனை அணைத்தாள். அவனை நேராக ஹோட்டலுக்கு வரச் சொல்லிக் குறுஞ்செய்தி அனுப்பிவிட்டுக் கிளம்பினாள். ஆனால், அங்கே சென்ற பிறகும் சைலேஷ் வரவேயில்லை.



குணாவும், அவனது மொபைலுக்கு முயன்று பார்த்தான். அவனுக்கும் அதே தகவல் சொல்லப்பட, தொடர்பைத் துண்டித்தான்.

"சரி! நாம ஆர்டர் பண்ணுவோம், அவன் வந்து ஜாயின் பண்ணிக்கட்டும்'' என்றான் குணா.

சாதாரணமாக பேசிக் கொண்டிருப்பது போல இருந்தாலும், அவ்வப்போது வாயிலையே பார்த்துக் கொண்டிருந்தாள் மயூரி.

"ஏதாவது வேலையா இருக்கும் மயூ! அண்ணா வந்திடுவாங்க...'' என்று சமாதானம் சொன்னாள் ரம்யாவைப் பார்த்து, மெலிதாகப் புன்னகைத்தாள்.

தோழியின் மனநிலையைப் புரிந்து கொண்ட ரம்யா, "எதுக்கு இந்தப் பார்ட்டின்னு கேட்டியே, கெஸ் பண்ணியா?'' என்று அவளை சகஜமாக்கும் நோக்கத்துடன் கேட்டாள்.

சற்று யோசித்தவள், "அன்னைக்கு நான் கேட்டதுக்காகத் தானே?'' என்றாள்.

"ம்... அதுக்காகவும்...'' என்று சிரித்தாள் ரம்யா.

"அப்படி என்ன எனக்குத் தெரியாமல் புது சர்ப்ரைஸ்...?'' -இமைகள் விரியக் கேட்டாள்.

குணாவைப் பார்த்துச் சிரித்த ரம்யா, "உன் அண்ணனுக்கு ஹைதராபாத்தில் வேலை கிடைச்சிருக்கு.

இங்க இருக்கறதை விட நல்ல சம்பளம். ஃபுல் பர்னிஷ்ட் வீடு, கார்ன்னு எல்லாம் கொடுத்திருக்காங்க!'' என்று மகிழ்ச்சியுடன் சொன்னாள்.

"ஓஹ்! அண்ணா வாழ்த்துகள்!'' என்றவள், "என்கிட்ட நீ சொல்லவே இல்லையே'' என்று தோழியைச் செல்லமாகக் கோபித்துக் கொண்டாள்.

"தம்பட்டம் அடிச்சிட்டு கிடைக்காமல் இருக்கறதைவிட, கிடைச்சதும் சொல்லலாம்னு இருந்தோம் மயூ!'' என்றாள் ரம்யா.

"அதுசரி. அப்புறம் எப்போ ஜாயின் பண்ணணும்?''

"அடுத்த மாசம்தான்மா. அதுவரைக்கும்... எப்பவும் போல, இந்த ஆஃபிஸுக்குப் போகணும்'' என்றான் குணா.

"இப்போதைக்கு சார் மட்டும் தான் போறார். டெலிவரி முடிஞ்சி ஐந்து மாசம் கழிச்சித் தான் என்னைக் கூட்டிட்டுப் போக முடியும்னு, இவரோட பாட்டி திட்டவட்டமா சொல்லிட்டாங்க!''

அப்படியா என்பது போல தலையை ஆட்டிக்கொண்ட மயூரிக்கு, "தனக்கென்று இருக்கும் ஒரே தோழி... எந்த விஷயமாக இருந்தாலும் சொல்லாமலேயே தன்னைப் புரிந்து கொள்ளும் ஒருத்தி... இவளும் தன்னைவிட்டுத் தள்ளிச் செல்லப் போகிறாளா?' என்ற வருத்தம், மனத்தில் பரவத்தான் செய்தது.

இருந்தும் அதை வெளிப்படுத்தாமல், "அன்னைக்கு என்னைச் சொன்ன இல்ல, இப்படி ஒரு ஆப்பர்சூனிட்டி எனக்குக் கிடைக்கலையேன்னு. ஆனா, இப்போ நீ தான் என்ஜாய் பண்ணப் போற!'' என்று விளையாட்டாகத் தோழியைச் சீண்டினாள்.



"அப்படி என்ன என்ஜாய்மெண்ட்? சொன்னா நானும் தெரிஞ்சிக்குவேன்!'' என்றபடி வந்தமர்ந்தான் சைலேஷ்.

அவனது குரல் கேட்டதும் மலர்ந்த முகத்துடன் அவனைப் பார்த்தாள் மயூரி.

"வாடா!'' என்று குணா அழைக்க, "வாங்கண்ணா! என்றாள் ரம்யா.

"வாழ்த்துகள்டா!'' என்று புன்னகையுடன் நண்பனிடம் கைகுலுக்கிய போதும், அவனது முகத்தில் தெரிந்த களைப்பைக் கண்டு கொண்டாள் மயூரி.

"ஏய்! பப்ளிக் பப்ளிக்...! நாங்கள்லாம் இங்கே தான் இருக்கோம்!'' என்று ரம்யா அவளைக் கிண்டல் செய்ய, செல்லமாகத் தோழியின் கைகளில் தட்டினாள் மயூரி.

பேச்சும் சிரிப்புமாக நேரம் கழிந்தாலும், சைலேஷ் ஏதோ ஒரு குழப்பத்தோடே அமர்ந்திருப்பதாகப் பட்டது அவளுக்கு.

நேராக வீட்டிற்குச் செல்லாமல், கடற்கரையில் பைக்கை நிறுத்தினான்.

"மயூ! கொஞ்ச நேரம் இங்கே உட்கார்ந்துட்டுப் போகலாம்'' என்று, யாரும் இல்லாத இடமாகப் பார்த்து அமர்ந்தான்.

இருகரங்களையும் பின்னால் ஊன்றியபடி அவன் அமைதியாக அமர்ந்திருக்க, "என்னாச்சுங்க? வந்ததி லிருந்து ஏதையோ யோசிச்சிகிட்டே இருக்கீங்க... ஆஃபிஸ்ல ஏதாவது பிராப்ளமா?'' என்று கேட்டாள்.

நீண்ட மூச்செடுத்து விட்டவன், நிமிர்ந்து அமர்ந்தான். "என்னை உண்மையாகவே லவ் பண்ற

இல்ல மயூ...?'' என்று கேட்டான்.

மயூரி திடுக்கிடலுடன் அவனைப் பார்த்தாள்.

"என்னாச்சு உங்களுக்கு? ஏன் இப்படியெல்லாம் பேசறீங்க?'' என்று கேட்டவளுக்கு, "இந்த நான்கு மாதத்தில், தன்னைப் புரிந்துகொண்ட இலட்சணம் இதுதானா?' என்று எரிச்சல் தான் வந்தது.

"ப்ளீஸ் மயூ! நீ என்னைக் காதலிக்கிறது உண்மை தானே?'' என்றான்.

"இந்தப் பைத்தியக்காரனை என்ன செய்தால் தகும்?' என்ற ஆத்திரத்துடன், "இந்தக் கடல்ல விழுந்து உயிரை விட்டா, என் காதலை நம்புவீங்களா?'' என்று கோபத்துடன் கேட்டாள்.

"மயூரி என்னைப் புரிஞ்சிக்க. நீ எப்பவும் என் கூடவே இருப்ப இல்ல... என்னை விட்டுப் போகமாட்ட இல்ல...?'' என்று கேட்டவனைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

"சைலேஷ்! என்னாச்சு உங்களுக்கு? இப்படி ஒரு சந்தேகம் வருமளவுக்கு... நான் நடந்துகிட்டேனா? எனக்குப் புரியல. தயவு செய்து மனசுல எதையும் வச்சிப் புழுங்காம, என்னிடம் நேரடியா பேசுங்க. உங்க நடவடிக்கையைப் பார்க்கும் போது எனக்குப் பயமா இருக்கு. அன்னைக்கு என்னை அத்தனைத் தூரம் சமாதானப்படுத்தின நீங்களே... இன்னைக்கு இப்படிச் சம்மந்தமே இல்லாமல் பேச என்ன காரணம்?'' என்று தவிப்புடன் கேட்டாள்.

"ஒரு காரணமும் இல்லை. கேட்கணும்னு தோணுச்சி... கேட்டேன்!'' என்றவன் தன் மீது ஒட்டியிருந்த மணலைத் தட்டிவிட்டபடி எழுந்து நின்றான்.



அவன் தட்டிவிட்ட மணலெல்லாம், அசையாமல் அமர்ந்திருந்த மயூரியின் மீது விழுந்தது.

"கிளம்பலாம்டா... நேரமாகுது'' என்று அவள் எழ உதவியாக, தனது கையை நீட்டினான்.

மெல்ல நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். அத்தனை நேரம் அவனது முகத்திலிருந்த குழப்பமும், யோசனையும் இப்போது அவளது முகத்திற்குக் குடிபெயர்ந்திருந்தது.

# 23

இருவரும் வீட்டிற்குள் நுழைந்த போது, சோஃபாவில் படுத்திருந்த வடிவு சப்தம் கேட்டு எழுந்தார்.

"என்னம்மா இன்னும் தூங்காமல் இருக்கீங்க?'' என்று கேட்டான் சைலேஷ்.

"உனக்காகத் தான் காத்திட்டு இருந்தேன். வா சாப்பிடலாம்'' என்று அழைத்தார்.

"இன்னைக்கு குணாவோட ட்ரீட். நாங்க சாப்டாச்சு. நீங்க சாப்பிட்டீங்களா?'' என்றான்.

"அப்படியானால், தான் போன் செய்து சொல்லச் சொன்ன விஷயத்தை... சொல்லாமலேயே விட்டு விட்டானா?' என்ற திகைப்புடன் அவனைப் பார்த்தாள்.

"ம், ஆச்சுப்பா!'' மாமியாரை, தவிப்புடன் பார்த்தாள்.

அறைக்கு வந்தவன், உர்ரென்ற முகத்துடன் பீரோவைக் குடைந்து கொண்டிருந்தவளைப் பின்னாலிருந்து அணைத்தான்.

"என்னப்பா! இன்னும் என் மேல கோபமா?'' என்றான்.

அவனது கைகளை விலக்கிவிட்டு, "சேச்சே! நீங்க என்ன தப்பா கேட்டுட்டீங்க... நான் கோச்சிக்க. உங்களுக்கு இருந்த சந்தேகத்தைக் கேட்டுத் தீர்த்துகிட்டீங்க. அவ்வளவு தானே?'' என்றாள் கடுப்புடன்.

அவன் பதிலேதும் சொல்லாமல் அவளிடமிருந்து விலகினான்.

அவனையே இமைக்காமல் பார்த்தவள், "அத்தைக்குப் போன் செய்து சொல்லச் சொன்னேனே... ஏன் சொல்லலை?'' என்று கேட்டாள்.

"ஓ!'' என்றபடி நெற்றியைத் தடவிக் கொண்டவன், "வேலைல மறந்துட்டேன்...'' என்றான்.

"உங்க வார்த்தைல கொஞ்சம் கூட உண்மை இல்லை. என்னைப் பத்தி யாரோ என்னவோ சொல்லியிருக்காங்க... அதனால தான் இன்னைக்கு என்னைப் பார்த்து இப்படி ஒரு கேள்வி கேட்டிருக்கீங்க...!'' என்றவளுக்கு கண்கள் தளும்பின.

"சீ! லூசு மாதிரிப் பேசாதே... அப்படி எவனாவது எதாவது சொன்னா... நம்பிடுவேனா?'' என்று கடுகடுத்தான்.

'நம்பிடுவீங்களோன்னு... இன்னைக்கு நான் பயப்படுறேன்...' என்று நினைத்துக் கொண்டவள், அதைச் சொல்லாமல், அழுகையைக் கட்டுப்படுத்தியபடி சமையலறையை நோக்கி நடந்தாள்.

அழுத்தமான பார்வையுடன், அவள் சென்ற திசையையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தான்.



வடித்து வைத்திருந்த சாதத்தில் தண்ணீரை ஊற்றிவிட்டுத் திரும்பிய வடிவு, திகைப்புடன் நின்றிருந்த மயூரியைப் பார்த்தார்.

"அத்தை! நீங்க இன்னும்...'' என்று அவள் ஆரம்பிக்கும் போதே, "என் பிள்ளைய எவ்வளவு மாத்திட்ட...!'' என்று பற்களைக் கடித்துக் கொண்டு சொல்லி விட்டுச் செல்ல, மயூரி உடைந்து போனாள்.

விளக்கை அணைத்து விட்டுப் படுக்கையில் சாய்ந்தாள்.

அடுக்கடுக்காக மனத்தைப் பாதிக்கும் ஒவ்வொரு விஷயமும் அவளது மனத்தைச் சிதைக்க ஆரம்பித்தது. வாழ்க்கையின் மீதிருந்த பயம் பன்மடங்காக பல்கிப் பெருக ஆரம்பித்தது.

மெல்ல அவனது கரம் அவளது தோள் மீது படிய, கண்களில் வழியவிருந்த கண்ணீரை அவசரமாகத் துடைத்துக் கொண்டாள்.

"என் கூடப் படிச்சவன் மகேஷ். நாலு வருஷம் காதலிச்சி ஒரு பொண்ணைக் கல்யாணம் செய்துகிட்டான். கல்யாணம் ஆகி ரெண்டு வருஷம் தான் ஆகுது. வேலையை விட்டுட்டு, அவளுக்காக பிஸினஸ் ஆரம்பிச்சான். ஆரம்பத்திலிருந்தே இவனால சமாளிக்க முடியல.

ஏகப்பட்ட நஷ்டம். கடன் கொடுத்தவங்க, திருப்பிக் கேட்க ஆரம்பிச்சிட்டாங்க. அதுவரைக்கும் சந்தோஷமா போயிட்டிருந்த அவனோட வாழ்க்கைல, எல்லாத்தையும் இழக்க ஆரம்பிச்சிட்டான்... அவனோட வாழ்க்கைன்னு நினைச்சிட்டிருந்த அவனோட மனைவி உட்பட.

நாலு வருஷம் காதலிச்சிக் கல்யாணம் செய்துகிட்டவன், உலகமே அவதான்னு வாழ்ந்தவன்... இன்னைக்கு அவளாலேயே உயிரையும் விட இருந்தான். நல்லவேளை அவனைக் காப்பாத்திட்டாங்க...!'' என்று விடாமல் சொல்லி முடித்தான்.அவன் சொன்ன கதையை இமைக்காமல் கேட்டுக் கொண்டு அமர்ந்திருந்தாள் மயூரி.

"இதற்கும், இவன் தன்னைக் கேட்ட கேள்விக்கும் என்ன சம்மந்தம்? எந்தக் கஷ்டநஷ்டத்திலும், துணையாக உடனிருப்பது தானே உண்மையான காதல். இப்படியொரு கேவலமான காரணத்தை வைத்து, என்னுடைய காதலை எப்படிச் சந்தேகிக்கலாம்?' என்று ஆத்திரம் வந்த போதும், அதைக் கேட்க வாய் வரவில்லை.

"அவன் ரொம்பப் பாவம் மயூ! ஆளே ரொம்ப நொந்து போயிருந்தான். கூட இருந்து அவனுக்குத் தைரியம் சொல்லிட்டு வந்தேன்...'' என்றவனை எதுவும் சொல்லாமல் பார்த்தாள்.

யாரிடம் நம்பிக்கை இருக்க வேண்டுமோ, அவளை நம்பவில்லை. ஆனால், விட்டு விட்டுப் போனவளுக்கு முன்னால, தலைநிமிர்ந்து வாழ்ந்து காட்ட வேண்டுமென்ற உத்வேகம் இல்லாதவனுக்கு ஆதரவாக... உடன் சேர்ந்து ஒப்பாரி வைத்து விட்டு, இங்கே தன்னிடம் கதாகாலாட்சேபம் செய்து கொண்டிருக்கிறான்' என்று சைலேஷ் மீது எரிச்சலாக வந்தது.

"என்னுடைய ஃபீலிங்ஸ் உனக்குப் புரியுதில்ல மயூ! நான் உன்னை ரொம்பவே லவ் பண்றேன்...'' என்றவன், அவளை அணைத்துக் கொண்டான்.

அவனது காதல் புரிந்த போதும், "அதில் ஸ்திரத்தன்மை இருக்கிறதா?' என்கின்ற கேள்விதான் அவளது மனத்தில் எழுந்தது.



எந்தச் சலனமும் இல்லாமல் உறங்கிக் கொண்டிருக்கும் கணவனைப் பார்த்த மயூரிக்கு, விழிகளில் நீர் துளிர்த்தது. இத்தனை நாட்களாக அவனது காதலில் கட்டுண்டு இருந்தவளுக்கு, தன்னை அணைத்தபடி இருந்த அவனது கரம் கூட இப்போது பெரும் சுமையாகத் தோன்றியது.

மெல்ல அவனது கரத்தை விலக்கியவள், எழுந்து சென்று சுவற்றில் சாய்ந்தபடி தரையில் அமர்ந்தாள். ஏசியின் குளுமையாலோ... இல்லை மனத்தின் வெறுமையாலோ... தன் கால்களைக் கட்டிக்கொண்டு, முகத்தைக் கால்களில் தாங்கியபடி அமர்ந்தாள்.

கடந்த நான்கு மாத குடும்ப வாழ்க்கை, அவளுக்குள் ஒரு திரைப்படத்தைப் போல ஓடி முடிந்தது. ஆரம்பத்தில் மகனிடம் பட்டும் படாமலும் பேசிக் கொண்டிருந்த வடிவு, ஒரே மாதத்தில் அவனது தேவைகளை என்னவென்று கேட்டுச் செய்யும் அளவிற்கு மாறி விட்டார். ஆனால், மருமகள் மட்டும் இன்னும் எட்டிக்காயாகத் தானே கசக்கிறாள்.

சைலேஷிற்குப் பிறகு அவளிடம் பரிவுடன் பேசுபவர் கேசவன் மட்டுமே. ஆனாலும், மாமனாரிடம் அவளால் பெரிதாக எந்த விஷயத்தையும் பேசக் கூடுமா? ஆனால், கேசவன் அவளையும் தனது மகளைப் போன்றே எண்ணினார்.

நேரம் கிடைக்கும் போதெல்லாம், தங்களது வாழ்க்கையில் நடந்த சுவாரசியமான சம்பவங்களைச்

சொல்வார். பெரும்பாலும் அவரது பேச்சு மகனைப் பற்றியதாகவே இருக்கும். பலமுறை அவனைப் பற்றிப் பெருமையாகப் பேசினாலும், சிற்சில முறை சற்றுத் தாங்கலாகவே பேசுவார்.

அதிலும் அவனது முன்கோபமும், பல விஷயங்களில் சிந்தித்துச் செயல்படுபவன், ஒன்றுமே யில்லாத சிறு விஷயங்களுக்கெல்லாம் பிடிவாதத்துடன் தன் நிலையிலேயே நிற்பான். அதேபோல சில சமயங்களில் எதிலும் நிலையான முடிவெடுக்க முடியாமல் தடுமாறுவான் என்றும் தன் மகனைப் பற்றி, மருமகளிடம் மேலோட்டமாகச் சொல்லி வைத்திருந்தார்.

"ஒருவேளை இது போன்ற சமயங்களில் தான் தடுமாறக்கூடாது என்று நினைத்துத் தான் மாமா அப்படிச் சொன்னாரோ?' என்று நினைத்துக் கொண்டாள்.

நிமிர்ந்து, உறங்கிக் கொண்டிருந்த கணவனைப் பார்த்தாள். "இந்த விஷயம் இத்துடன் முடியப் போவதில்லை. இது வெறும் ஆரம்பம் மட்டுமே!' என்ற எண்ணம், அவளையும் அறியாமல் உள்ளுக்குள் உருவானது.

# 24

அடுத்து வந்த நாட்களில் பெரிதாக எந்த மாற்றமும் இல்லாதது போலத் தெரிந்தாலும், தங்களது குடும்ப வாழ்வில் மெல்லிய விரிசல் விழுந்து விட்டதாகவே தோன்றியது மயூரிக்கு.



காலையில் எழுந்ததும் பரபரவெனக் குளித்து முடித்து சமையலறைக்குள் நுழைந்தால், ஒவ்வொருவரும் எழுந்து வரும் போதும் காஃபி கலந்து கொடுக்க வேண்டும். காலை டிஃபனை ஏழு மணிக்கெல்லாம் தயாரித்து டைனிங் டேபிளில் அடுக்கினால் தான், எட்டு மணிக்கெல்லாம் மதிய உணவை முடித்து, எட்டே காலுக்குள் டப்பாவில் அடைத்து கணவனுக்குக் கொடுக்க முடியும்.

அதுதான் சமைக்க ஆரம்பித்த அன்றே ஜோராகச் சொல்லிவிட்டாளே... "நான் இருக்கும் வரைக்கும், மதிய சாப்பாடு வீட்டிலிருந்து தான்' என்று. அப்போது தானே காலை உணவை முடித்துக் கொண்டு, எட்டரை மணிக்கெல்லாம் அவன் அலுவலகத்திற்குக் கிளம்பமுடியும்?

அடுத்த கால்மணி நேரத்தில், அவளும் வேலைக்குக் கிளம்பியாக வேண்டும். அதோடு இருவரது அலுவலகமும் எதிரெதிர் திசையிலிருப்பதால், அவளுக்குப் பேருந்து பயணம் தான்.

ஒன்பதரை மணிக்கு அலுவலகத்திற்குள் நுழைந்தால், ஃப்ரெண்ட் ஆஃபிஸ் மேனேஜர் வருவதற்குள், உதவியாளரான இவள்தான் மற்ற வேலைகளைக் கவனித்தாக வேண்டும். மாலை ஆறு மணிக்கு வேலை நேரம் முடிந்தாலும், எப்படியும் கிளம்ப ஏழாகிவிடும்.

மீண்டும் பேருந்துப் பயணம், வீடு, இரவு உணவு தயாரித்தல், இடையில் மனைவிக்கான கடமைகள் என்று அவளுக்கு இருபத்தி நான்கு மணி நேரமும், நிற்க நேரமில்லாமல் கடிகாரத்திற்குப் போட்டியாக ஓடிக்

கொண்டு இருக்கிறாள். கடந்த நான்கு மாதமாக இதே வேலையைத் தான் செய்து கொண்டிருக்கிறாள். அவனது அரவணைப்பும், அனுசரணையும் இருந்த போது பெரிதாக தோன்றாதவையெல்லாம், இந்த ஒருவாரத்தில் மலையளவு சுமையாகத் தோன்ற ஆரம்பித்தது.

கடந்த பத்துப் பதினைந்து நாட்களாக, மாமியார் அவ்வப்போது தனது கைப்பக்குவத்தைக் காட்ட ஆரம்பித்திருக்கிறார். நன்றாகவே சமைக்கிறார். தானே சமைத்துச் சாப்பிடுவதை விட, அடுத்தவர் சமைத்துக் கொடுத்துச் சாப்பிடும் சந்தோஷம், அவளுக்குமே பிடித்திருந்தது.

ஹாஸ்டலில் அப்படிச் சாப்பிட்டு வளர்ந்தவள் தான். ஆனால், ரம்யாவின் அன்னை பாசத்துடன் சமைத்துப் பரிமாறும் சுவையை, மீண்டும் இப்போது உணர்ந்தாள். சாப்பிட்டுவிட்டு, "ரொம்ப நல்லா இருந்தது அத்தை!'' என்று சொல்லவும் அவள் தயங்கியதில்லை.

அவளது வார்த்தைகள் வடிவிற்கும் மகிழ்சியைக் கொடுத்தாலும், ஏனோ அவர் அதை வெளிக்காட்டிக் கொள்ள விரும்பவில்லை. திடீரென இது என்றைக்கு நிற்குமென்றும் தெரியாது... என்று நினைக்கவும் செய்தாள்.

மணி ஆறு ஆகியிருந்தது. இன்று விடுமுறை நாள் தான். ஆனாலும், இன்னும் சற்று நேரத்தில் ஊருக்குச் சென்றிருந்த மாமனார் திரும்பி வந்து விடுவார். அவரெதிரில் இப்படித் தூங்கி வழிந்தபடியா செல்ல முடியும்?' -மனம் நினைத்தாலும், உடல் அசைய மறுத்தது.



ஒருவழியாக எழுந்து குளித்துவிட்டு, சமையலறைக்குள் நுழைந்தாள். பில்டரில் கொதிநீரை ஊற்றி மூடி வைக்கவும், அழைப்பு மணி ஓசை கேட்கவும் சரியாக இருந்தது.

மாமனாரை எதிர்பார்த்துக் கதவைத் திறந்தவள், வாசலில் நின்றிருந்த நாத்தனாரைக் கண்டதும் சற்றுத் திகைத்துப் போனாள். அதை அவளது முகமும் கண்ணாடியாகப் பிரதிபலித்துவிட, தொட்டாற் சிணுங்கியான இனியாவிற்கு இது போதாதா?

"வா... இனியா!'' என்றபடி பின்னால் நகர்ந்தாள்.

"ம்கும்! உன் அழைப்புக்குத் தான், இங்க காத்துட்டு இருக்காங்களாக்கும்...'' என்று அண்ணன் மனைவியில் காதில் விழும்படியாக முணுமுணுத்தபடி உள்ளே நுழைந்தாள்.

சப்தம் கேட்டு எழுந்து வந்த வடிவு, மகளைக் கண்டதும், "என்னடி! இத்தனைக் காலைல வந்து நிக்கிற?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டபடி, மகளின் தோளில் உறங்கிக் கொண்டிருந்த பேத்தியை வாங்கிக் கொண்டார்.

"உன் மாப்பிள்ள, ஒருவாரம் ஆஃபிஸ் டூர் போயிருக்கார். அதான் ஏர்போர்ட் போற வழியில் இப்படியே வந்து இறங்கிகிட்டேன். நைட்டெல்லாம் ஒரே சண்டை... எதுக்கு அம்மா வீட்டுக்குப் போறேன்னு? இவர் நிம்மதியா கிளம்பி டூருக்குப் போயிடுவாரு... நான் சமையல்காரி மாதிரி அவரோட அப்பா, அம்மாவுக்கு சமைச்சிப் போட்டுட்டு இருக்கணுமாம்.

எனக்கென்ன தலையெழுத்தா... நான் இவர் அண்ணன் பொண்டாட்டிக்குப் போன் பண்ணிச்

சொல்லிட்டு, கிளம்பி வந்துட்டேன். இவர் மட்டும் தான் பிள்ளையா என்ன? அவங்களும் கொஞ்ச நாள் கூட்டிட்டுப் போய் வச்சிக்கட்டுமே...'' என்று சிடுசிடுப்புடன் சொல்லி முடித்தாள்.

வடிவு அமைதியாக அமர்ந்திருந்தாரே தவிர, ஒருவார்த்தை கூட மகளைக் கண்டிக்கவில்லை. மாறாக, "உங்க அப்பா வரும் நேரம் ஏதாவது பேசிட்டு இருக்காத...!'' என்று கிசுகிசுப்பான குரலில் எச்சரித்தார்.

வந்தவளுக்குக் காஃபியைக் கொடுத்துவிட்டுச் சென்ற மயூரியின் காதில் அத்தனையும் விழுந்தும், விழாதவளாக இருந்து கொண்டாள். ஆனால், மனம் மட்டும் நமநமத்துக் கொண்டே இருந்தது.

"இவள் இத்தனைத் தூரம் தனது மாமனார் - மாமியாரைப் பற்றிப் பேசும் அளவிற்கு, அவர்கள் அத்தனைக் கடுமையான மனிதர்கள் இல்லையே... இவளுக்கு ஏன் இத்தஙனைப் பொல்லாப்பு? அதோடு, அவளது ஓர்ப்படியும் கிட்டத்தட்ட பன்னிரெண்டு வருடங்கள், தனது கணவன் குடும்பத்தினரை அனுசரித்து, ஒரே வீட்டில் தானே இருந்தார்?

இதை இவள் மாமியாரே என்னிடம் சொல்லியிருக்கிறார்களே. திருமணமாகி ஒரே வருடத்தில் அவர்கள் தனிக்குடித்தனம் செல்லவும், இவள் தானே காரணம்!' என்று மட்டுமே அவளால் நினைத்துக் கொள்ள முடிந்தது.

மனம் எங்கெங்கோ சுற்றினாலும், கைகள் தன் வேலையைச் செய்து கொண்டிருந்தன. மனத்தில் அலுப்பும், சலிப்பும் இருந்தாலும்... வேலையை விட்டு



வந்ததும், வீட்டு வேலை முடித்து விட்டு அறைக்குள் அடைந்து கொள்பவளுக்கு, ரித்துவின் வருகை பெரும் ஆறுதலைத் தந்தது.

இரண்டு நாட்கள் சுமூகமாகவே சென்று கொண்டிருக்க, மூன்றாவது நாள் காலையில் சாப்பிட வந்தமர்ந்த இனியா கத்திய சப்தத்தில், அதுவரை இல்லாத அளவிற்கு மயூரியின் முகம் கோபத்தில் சிவந்தது.

"எப்பப் பாரு இந்தப் புதினா சட்னியையும், தேங்காய் சட்னியையும் விட்டா... வேற எதுவுமே தெரியாதா உனக்கு? அம்மா வீட்டுக்கு வந்தாலாவது நிம்மதியா, வெரைட்டியா சாப்பிட முடியுதா? கருமம்...!'' என்று இட்டிலியை தட்டில் அடுக்கிக் கொண்டிருந்தவளை, கோபத்துடன் பார்த்தாள் மயூரி.

வெளியில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த கேசவன் என்னவென்று உள்ளே வந்தார். "என்ன இனியா வாய் ரொம்ப நீளுது?'' என்ற சைலேஷின் குரலைக் கேட்டதும், அமைதியாக அங்கே நடப்பதைப் பார்த்தார்.

"என்ன வாய் நீண்டு போச்சு எனக்கு?'' என்று பதிலுக்கு ஆரம்பித்தாள் இனியா.

"வாய் மட்டுமா நீளுது? நாக்கும் தான் நீண்டு இருக்கு. உனக்கு வேணும்னா, காலை எழுந்து அவளுக்குக் கொஞ்சம் கூடமாட உதவி செய்யக் கூடாதா? அம்மா வீட்டுக்கு வந்தா, தூங்கணும், எழுந்து சாப்பிடணும். இதைத் தவிர வேற வேலையே இல்லையா? நீ இங்க வந்ததிலிருந்து ரித்துவையும் அவதானே கவனிச்சிக்கிறா? அவ என்ன நீ வச்ச வேலைக்காரியா? ஆஃபிஸுக்கும்

போயிட்டு வந்து, வீட்டு வேலையும் செய்துட்டு... அவள் மனுஷி இல்லயா?'' என்று அதட்டலாகப் பேசினான்.

இதைச் சற்றும் எதிர்பார்க்காத இனியா கோபமும், ஆத்திரமுமாகத் தன்னை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த அனைவரையும் முறைத்தாள்.

கையிலிருந்த தட்டை வேகமாக டேபிள் மீது வைத்தவள், "புரிஞ்சிடுச்சி...! எனக்கு நல்...லா புரிஞ்சிடுச்சி. அம்மா வீடுங்கறதெல்லாம்... அண்ணின்னு ஒருத்தி, அந்த வீட்டுக்கு வரும் வரைக்கும் தான்!'' என்று அண்ணனைப் பார்த்துச் சொன்னவள், "அம்மாடி! நீ புண்ணியவதி. இப்படி ஒரு புருஷன் உனக்கு. எனக்கும் ஒருத்தர் வந்து வாய்ச்சாரே...!'' - மயூரியைப் பார்த்துச் சீறினாள்.

வராத கண்ணீரைத் துடைத்தபடி பெற்றோரின் அறைக்குள் நுழைய, வடிவு மகனையே ஆழப் பார்த்தபடி நின்றார்.

மயூரியின் மனம் புளங்காகிதம் அடைந்தது. கணவனது அனுசரணையான பேச்சு தெம்பளித்தாலும், 'இனியாவின் இந்த ஆவேசம் நல்லதற்கு இல்லையே...!' என்று மனம் எச்சரித்தது.

எரிச்சலுடன் டையைக் கட்டியபடி, தங்களது அறைக்குச் சென்றவனைப் பின்தொடர்ந்தாள்.

அவள் வாயைத் திறக்கும் முன், "மயூரி! அவ கேட்கறதைத் தான் செய்து தாயேன். பாவம், நம்ம வீட்ல தானே அவள் கேட்க முடியும். ரொம்பச் செல்லமா வளர்ந்தவப்பா... அவளும் சின்னப் பொண்ணு தான். நீ ஏதாவது பேசி விஷயம் பெரிசாகிடப் போகுதுன்னு தான், நான் நடுவில் வந்தேன்'' என்றபடி டையின் முடிச்சை சரி செய்து கொண்டு, "டிஃபனை வை...! கிளம்பணும்'' என்றவனை வெறுமையாகப் பார்த்தாள்.

"நான் பேசியிருந்தால் கூட, அது சின்ன விஷயமாகப் போயிருக்கும். டையைக் கட்டிக் கொண்டிருந்தவன் அந்த வேலையைப் பார்க்க வேண்டியது தானே...? யார்... நடுவில் வந்து மத்தியஸ்தம் செய்யச் சொன்னது...?' என்று கடுகடுத்துக் கொண்டே அறையிலிருந்து வெளியேறினாள்.

வடிவோ, "அம்மா! உன் கையால பூண்டு குழம்பு சாப்பிடணும் போல இருக்கு. செய்து கொடு என்று அன்றைக்குச் சொன்னதும், நான் கூட நம் சமையலை ருசிக்க மகன் ஏங்கிக் கிடக்கிறான் என்று நினைத்துச் சந்தோஷப்பட்டோம். அவன் கேட்டது மட்டுமல்லாமல், அவ்வப்போது ஏதாவது செய்து கொடுத்துக் கொண்டிருந்தேன்.

ஆனால், இப்போது தானே விஷயம் புரிகிறது? "என் மனைவி மட்டும் வேலை செய்கிறாள். நீ சும்மா இருக்கிறாய்? என்று நினைத்துச் சொன்னதை, நான்தான் தவறாகப் புரிந்து கொண்டேன்' என்று மனத்திற்குள் குமைந்து போனார்.

# 25

**பு**குந்த வீட்டிற்கு வந்த புதிதில் கணவனையும், அவனது குடும்ப உறவுகளையும் புரிந்து கொள்ள முடியாமல் தடுமாறும் மருமகளுக்கு, உதிரிப் பூக்களாய்

இருக்கும் அத்தனை உறவுகளையும் சிநேகத்துடனும், பிரியத்துடனும் புரிய வைத்து, அனைவரையும் இணைத்துப் பூச்சரமாகத் தொடுப்பவள் தான் நாத்தனார்.'

என்றோ புத்தகத்தில் படித்த இந்த வாசகம், இப்போது அவளுக்கு நினைவு வந்தது. கூடவே ஏக்கப் பெருமூச்சும் வந்தது.

அன்று இந்த வார்த்தைகளைப் படித்த போது, நாத்தனார் என்ற உறவின் மீது, பெரும் எதிர்பார்ப்பு இருந்தது மயூரிக்கு. சைலேஷிற்கு ஒரு தங்கை இருக்கிறாள் என்று அறிந்த போது, தனக்குப் புதிதாக ஒரு சிநேகிதி கிடைக்கப் போகிறாள் என்ற ஆசையும், எதிர்பார்ப்புமாகத் தான் காத்திருந்தாள்.

முதன்முதலில் தங்கையின் குடும்பத்தினர் அவளைச் சந்திக்க விருப்பப்படுவதாகச் சொல்லி சைலேஷ் அழைத்துச் சென்ற போது, தனக்குக் கிடைக்கப் போகும் குடும்பத்தினரைச் சந்திக்க ஆவலுடன் சென்றாள்.

ஆனால், இனியாவின் கணவன் சரவணன் தான் இன்முகத்துடன் பேசினானே தவிர, இவள் மறந்தும் வாயைத் திறக்கவில்லை. ஒரு ஆராய்ச்சிப் பார்வையுடனேயே அவள் தன்னைப் பார்த்ததை, இன்றும் நினைவில் வைத்திருக்கிறாள் மயூரி.

அப்போதெல்லாம் இதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாதவள் இப்போது, "மாமியாரைக் கூட கொஞ்சம் வழிக்குக் கொண்டு வந்துவிடலாம் போல; இவள் தன்னுடன் சற்றும் ஒத்துப் போகமாட்டாள்!' என்ற முடிவிற்கே வந்து விட்டாள்.

'நினைத்த போதெல்லாம் அம்மா வீட்டிற்கு



வந்துவிட வேண்டும் என்பதைக் கூட அவள் குற்றம் சொல்லவில்லை. இது உன் பிறந்த வீடு... தாராளமாக வா. என்ன வேண்டுமோ, அதைக் கேட்டு வாங்கிக் கொள். அதை அன்பாகக் கேட்டிருந்தால், அவள் கேட்டதற்கும் மேலேயே செய்திருப்பாள்.

ஆனால், அதை விட்டுவிட்டு எப்போதும் ஏதாவது குறை சொல்லிக் கொண்டும், அதிகாரத்துடனும் நடந்து கொள்பவளைப் பார்க்கும் போதே, எரிச்சல் தானே மிஞ்சுகிறது?

எப்போதும் அன்னையின் அருகில் அமர்ந்து பேசுவதும், செல்லம் கொஞ்சுவதுமாக மகள் இருந்தாள். அதற்குமேல் நேரா நேரத்திற்கு அவளுக்கு என்னென்ன வேண்டுமோ, அதைக் கேட்காமலேயே செய்யும் தனது மாமியாரைப் பார்க்கும் போது, மனத்தில் ஏக்கம் எட்டிப் பார்க்கும். இதயம் கனத்துப் போகும். கண்கள் தளும்பும்.

அப்போதெல்லாம் சப்தமில்லாமல் அறைக்குள் வந்து முடங்கிக் கொள்வாள். இல்லையென்றால், மொட்டை மாடிக்குச் சென்று வானத்தை வெறித்துக் கொண்டு நிற்பாள்.

ஆனால், இன்றுவரை ஒருநாள் கூட, நான் இத்தனைச் செய்தேனே... எனக்கு அதனால் என்ன கிடைத்தது என்று மனத்தில்கூட நினைக்காத மயூரி, கடந்த சிலநாட்களாக அடிக்கடி அப்படி நினைத்துக் கொள்கிறாள்.

அதைக் கூட மனத்தில் போட்டுக் குமுறுவாளே தவிர, வாயைத் திறந்து கணவனிடம் கூடச் சொன்னதில்லை. ஆனால், இப்படி எல்லா விஷயத்தையும் மூடி மூடி வைத்தால், அது என்றாவது ஒரு

நாள் வெடித்துச் சிதறும் என்று அவளுமே எண்ணவில்லை.

ஆரம்பத்தில் அவளது முகத்தைப் பார்த்தே எதையும் புரிந்து கொண்டவனால், ஏனோ சில நாட்களாக இதைக் கண்டு உணரும் மனநிலையில் இல்லை.

அலுவலகத்தில் நிகழும் பதவி உயர்விற்கான கடும் போட்டியில், ஒவ்வொரு நாளும் தனது திறமையை வேலையில் முழுதாகக் காட்ட வேண்டிய சூழ்நிலை அவனுக்கு.

போதாகுறைக்கு நண்பன் என்ற பெயரில், அவனுக்கு ஒருவன் வேதம் ஓத, அதை வேறு வீம்பாக பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கிறான்.

அவனைப் பொறுத்தவரையில், அவனுக்குத் தேவையான பதிலைப் அவளிடம் பெற்றுவிட்டான். இந்தக் கேள்வியால் அவளது உள்ளம் எந்த அளவிற்குப் பாதிக்கப்படும் என்று, அவன் சிறிது கூட உணரவில்லை.

அவனைப் பொறுத்தவரை, "அவள் தன்னைப் புரிந்து கொண்டிருக்கிறாள். நானும் அவளைப் புரிந்து கொண்டிருக்கிறேன்!' என்று நினைத்துக் கொண்டிருக்கிறான்.

"என்னால் எந்தப் பிரச்சனையும் வராது' என்று சொன்ன வார்த்தைக்காக, எல்லாவற்றிலும் விட்டுக் கொடுத்துச் செல்வதாக நினைத்துக் கொண்டு, பேசிப் புரிந்து கொள்ள வேண்டியவற்றைப் பேசாமல் இருந்தாள் மயூரி.

உணர்வு ரீதியான அலைக்கழிப்பிற்கு அவள் ஆளாகும் போது, நான் உனக்குத் துணையாக



இருக்கிறேன் என்ற ஆதரவையும், மன அமைதியைக் கொடுக்கத் தவறியவனாக அவனும், ஒன்றுமில்லாத சிறு விஷயத்தைப் பெரிதாக வளர விட்டுக் கொண்டிருந்தனர்.

✶ ✶ ✶

"ஈவ்னிங் ட்ரைன்ல குணா ஹைதராபாத் கிளம்பறான். வழியனுப்ப நாமளும் போறோம். நீ வேலையை முடிச்சிட்டு ஸ்டேஷனுக்குப் போயிடு. நான் க்ளையண்ட் மீட்டிங்கை முடிச்சிட்டு, அந்த நேரத்துக்குள்ள வரப் பார்க்கறேன்'' என்றான் சைலேஷ்.

இரண்டு நாட்களுக்கு முன்பாகத் தான் கிளம்புவதைச் சொல்லிக் கொண்டு அவர்கள் விடைபெற்ற போதே, இந்தப் பேச்சு வரும் என்று எதிர்பார்த்திருந்தாள்.

ஒரு சகோதரனைப் போல பழகுபனை வழியனுப்பச் செல்ல வேண்டுமென்ற ஆசை அவளுக்குமே இருக்கிறது. ஆனால், அவனது பாட்டியும் அல்லவா அங்கே இருப்பார்?

அவன் கிளம்பும் நேரத்தில், தன்னைப் பார்த்ததும் அவர் ஏதேனும் சொல்லிவிட்டால், எல்லோருக்கும் சங்கடமாகிவிடுமே! அதோடு, ரம்யாவும் சும்மா இருக்க மாட்டாள். நான் போகாமல் இருந்துவிட்டால் எல்லோருக்குமே நிம்மதி. ரம்யா ஏதாவது கேட்டால் சமாளித்துக் கொள்ளலாம்!' என்று நினைத்தாள்.

ஆனால், முழுதாகக் காரணத்தைச் சொல்லாமல், "தனக்கும் முக்கியமான வேலை இருக்கிறது. அதனால் தன்னால் வரமுடியாது!' என்று அவள் சொன்னது தான் தாமதம், சைலேஷின் முகம் கடுகடுவென மாறியது.

"வரவர, நான் எது சொன்னாலும்... செய்யக் கூடாதுன்னு இருக்கியா? காதலிச்சிக் கல்யாணம் செய்துகிட்டா, நீ என்ன சொன்னாலும் கேட்டுட்டு ஆடுவேன்னு நினைப்பா...? உனக்கா வேணும்னா பேசற... இல்லைனா... முகத்தைத் தூக்கி வச்சிகிட்டு, ஒருபக்கமா உட்கார்ந்துக்கற.

மனுஷன் ஆஃபிஸ்ல இருந்து வந்தா காஃபி கொடுத்து, சாப்பாடு போட்டா போதுமா? அனுசரணையா பேசணும், அன்பா நடந்துக்கணும்னு இல்லை. ஏதோ கடமைக்குச் செய்யறது போல செய்யறது. அதுக்கு மேல கேட்டா... உடம்பு வலிக்குது, தலைவலின்னு ஆயிரத்தெட்டுக் காரணம் சொல்றது. உனக்கு மட்டும் தான் உடம்பு, தலை எல்லாம் இருக்கா? எங்களுக்கு இல்லையா?'' என்று மூச்சுவிடாமல் பேசினான்.

மயூரிக்கு ஆயாசமாக இருந்தது. "முன்தினம் இரவு அவன் நெருங்கி வந்த போது, தான் விலகிச் சென்றதால் ஏற்பட்ட மனக் கொந்தளிப்பின் வெளிப்பாடுதான் இது!' என்று அவளுக்குப் புரியாமல் இல்லை.

"இவன் மட்டும் தான் வேலைக்குச் செல்கிறானா? நான் போகவில்லையா? அவனாவது சொகுசாக பைக்கிலும், காரிலும் சென்று வருகிறான். நான் முண்டியடித்துப் பேருந்தில் ஏறி, உட்கார இடம் கிடைக்காமல் கால்கடுக்கப் பயணித்து, வீட்டிற்கு வரும் போது அலுத்துச் சலித்து தளர்ந்து போய் வருகிறேனே!

அதைப் பற்றி ஒரு நாளாவது நான் அலுத்துக் கொண்டிருப்பேனா? இல்லை... சொகுசாக ஆட்டோவில் பயணித்திருப்பேனா?' வாய் வரை வார்த்தைகள் வரும். ஆனால் கோபத்தில் வார்த்தைகளைக் கொட்ட அவள் தயாராக இல்லை.



அவனிடம் பேசப் பயந்து கொண்டு அல்ல. இதற்கும் குதர்க்கமாக அவன் ஏதாவது சொல்வான். மேலும் எதற்கு?' என்ற எண்ணம் தான். "ஏற்கெனவே தான் பேசியதற்குக் கொஞ்சமும் சம்மந்தமில்லாமல் அல்லவா இவன் பேசிக் கொண்டிருக்கிறான்' என்று நினைத்தவளுக்கு அலுப்பாக இருந்தது.

"நான் பாட்டுக்குப் பேசிட்டு இருக்கேன். செவிடன் காதுல சங்கு ஊதினது போல உட்கார்ந்து, என் முகத்தைப் பார்த்துட்டு இருக்க!'' என்று மீண்டும் அவன் ஆரம்பிக்க, "சரிங்க! நான் முதல்ல ஸ்டேஷனுக்குப் போறேன். நீங்க வேலையை முடிச்சிட்டு வாங்க'' என்றவள், அவனுக்கு எதிர்புறமாகத் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

எந்தவிதச் சலனமும் இல்லாமல் சாதாரணமாகக் கூறிவிட்டு, திரும்பிப் படுத்தவளைப் பார்க்கவே பாவமாக இருந்தது அவனுக்கு. ஒருவகையில் ஏமாற்றமாகக் கூட இருந்தது.

மெல்ல, "மயூ!'' என்றபடி அவளைத் தன் பக்கமாகத் திருப்பினான்.

"ப்ளீஸ்!'' என்று அவள் கண்களைத் திறக்காமலேயே சொல்ல, "நீ தூங்கு'' என்றவன், அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

அந்த நேரத்திற்கு அவளுக்குமே அந்தத் தொடுகையும், அரவணைப்பும் தேவையாயிருக்க, அமைதியாக அவனது கைகளில் பொருந்திக் கொண்டாள்.

# 26

மொட்டை மாடியில் நின்று வானத்தை வெறித்துக் கொண்டிருந்த மயூரி, "ஹாய் அண்ணி!'' என்ற அழைப்பைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

எதிர்வீட்டு வைதேகியின் மகளான திவ்யா நின்று கொண்டிருந்தாள்.

"ஹாய் திவி!'' என்று புன்னகைத்தவள், அவளிடம் தெரிந்த மாற்றத்தை உணர்ந்து திகைப்புடன் பார்த்தாள்.

"என்ன அண்ணி அப்படிப் பார்க்கறீங்க?'' என்றவள், சிரிப்பை அடக்கிக் கொண்டு பார்த்தாள்.

"இல்ல...'' என்றவள், தோள் வரை வெட்டப்பட்டிருந்த கூந்தலைப் பிடித்துப் பார்த்தாள். "என்னப்பா இது? உனக்கு எவ்வளாவு அழகு முடி. அதை இப்படிப் பாதியா வெட்டிட்டியே?'' என்றாள் அதிர்ச்சியுடன்.

"இது பேஷனுக்காக இல்லண்ணி!'' என்று சிரித்தவள், "இன்னைக்கு பிப்ரவரி நாலாம் தேதி, உலகக் கேன்சர் தினம். அதனால எங்க காலேஜ்ல நாங்க எல்லோரும், எங்களோட தலைமுடியைத் தானமா கொடுத்துட்டோம். ஒரு மெடிக்கல் காலேஜ் ஸ்டூடண்டாக இருக்கோம்... அடுத்தவங்களைக் கேட்கறதுக்கு முன்னால, நாங்க முன்னுதாரணமா இருக்கணுமில்லையா?'' என்றவளை வாஞ்சையுடன் பார்த்தாள் மயூரி.

"உங்க பாட்டி ஒண்ணும் சொல்லலையா?'' என்று கேட்டாள்.



"சொல்லலையா...? அதான் சாயங்காலம் இந்தப் ப்ளாட்டே இடிஞ்சி விழற அளவுக்குப் பேசினாங்களே... ஆச்சா... போச்சா? அப்படியா... இப்படியான்னு? இப்படித் தலைமுடிய வெட்டிட்டு வந்திருக்கியேன்னு... அவங்க பாஷையில் பேசினாங்க. கொஞ்ச நேரம் பார்த்தேன்... நிறுத்தறா மாதிரித் தெரியல... காதுல ஹெட் போனைப் போட்டுட்டு உட்கார்ந்துட்டேன்!'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள்.

"நானாவது இப்படி ஸ்டைலா விட்டுட்டேன். ஆனா, சில பெண்கள் மொட்டையே போட்டுகிட்டாங்கன்னா பாருங்களேன்! ஒரு விஷயத்தைப் பத்திப் பேசறது பெரிசில்ல. அதை நடைமுறைப்படுத்துவது தான் முக்கியம். என்னைவிட, அந்தப் பெண்களை நான் ரொம்பவே பாராட்டுவேன். பெண்ணுக்கு அழகே தலைமுடிதான். அதையே கொடுக்கறாங்கன்னா... அவங்களோட மனசு எவ்வளவு அழகு இல்ல?'' என்ற திவ்யா, மயூரியின் கண்களுக்குப் பேரழகியாகத் தெரிந்தாள்.

திவ்யா எப்போதுமே இப்படித் தான். வெளிப் படையான பேச்சு, சிரித்த முகம் என்று கலகலப்பாக இருப்பாள். அப்படியே வைதேகியின் குணத்திற்கு நேரெதிர். இப்படித்தான் முதன்முதலில் அவளைப் பார்த்தபோது நினைத்திருந்தாள் மயூரி.

கூடவே, "வைதேகிக்கு இவ்வளவு பெரிய மகளா?' என்ற ஆச்சரியமும் எழாமலில்லை.

ஆனால், திவ்யா மூத்த தாரத்தின் மகள். இவள் பிறந்த சில மாதங்களிலேயே அவளது அன்னை

உடல்நலமில்லாமல் இறந்துவிட, பதினேழே வயதான வைதேகியை, இரண்டாவதாகத் திருமணம் செய்து கொண்டார் திவ்யாவின் தந்தை.

தான் ஒருவருக்கு இரண்டாவது மனைவியாக, மூன்று வயது குழந்தைக்குத் தாயாக வந்ததை, வைதேகியால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. தாயில்லாத தன்னை, இப்படி ஒரு நரகத்தில் கொண்டு வந்து தள்ளிய தனது ஏழ்மையின் மீதும், தந்தையின் இயலாமையின் மீதும், கோபமும், வேதனையும் பொங்கியது அவளுக்கு.

ஆனால், அதை எதிர்த்துக் கேட்கும் துணிவில்லாததாலும், எப்போதுமே பெற்றவரது வார்த்தைக்குக் கட்டுப்பட்டே பழக்கப்பட்டவள் என்பதாலும், மனத்திலிருக்கும் எண்ணத்தை, வழக்கம் போல மௌனமாகத் தனக்குள்ளேயே அடக்கிக் கொண்டாள்.

திவ்யாவின் தந்தையையும், பாட்டியையும் பொறுத்தவரையில் வைதேகி என்பவள், அந்த வீட்டிலிருக்கும் உயிருள்ள ஒரு பொருள். அவ்வளவே!

அவ்வப்போது வெளியூர் சென்று வரும் கணவனது நடவடிக்கைகளைக் கண்டும் காணாமல் இருந்து கொண்ட வைதேகியால், தனது தேவைக்கு மட்டுமே தன்னை நாடும் கணவனது வாரிசைச் சுமக்கத் தயாராக இல்லை.

சமூகத்தின் பார்வையில் தான் ஒரு காய்க்காத மரமாக இருப்பதைக்கூட, சந்தோஷத்துடனேயே ஏற்றுக் கொண்டாள். இதன் மூலம் வாழ்க்கையின் மீதும், சுற்றத்தின் மீதும் தனக்கிருந்த கோபத்தையும், தன்னைப்



பற்றி நினைக்காத கணவனையும், பழிவாங்கிவிட்ட திருப்தி அவளுக்கு.

அவளுக்கு எல்லாமே திவ்யா மட்டுமே. அந்த மழலைக்காகவே வாழ்ந்தாள். அந்தக் குழந்தைக்காகவே சிரித்தாள். தனது உயிரே அவள் தான். நிறைவேறாத தனது கனவுகளை, மகள் மூலமாக நிறைவேற்றிக் கொள்ளத் துடித்தாள்.

வைதேகியின் எதிர்பார்ப்பைச் சற்றும் பொய்யாக்காமல் வளர்ந்தாள் திவ்யா. வைதேகியின் வளர்ப்பாக இருந்தாலும், தான் சுந்தரியின் பேத்தி என்பதையும் அவ்வப்போது வெளிப்படுத்தினாள் அவள்.

ஊரையே ஆட்டிவைக்கும் சுந்தரி மாமியே அடங்கிப் போகும் ஒரே ஆள்... திவ்யா மட்டுமே. வார்த்தைகளினாலேயே மருமகளை நிற்கவிடாமல் துரத்துபவர், பேத்தியின் எதிரில் வாயைத் திறக்க மாட்டார். வாழ்க்கை ஒரு வட்டம் என்பது அவர்களைப் பொறுத்தவரை உண்மையானது.

"வைதேகியின் ஏக்கங்களுக்கு வடிகாலாக வந்த திவ்யாவைப் போல, தனக்கொரு விடிவு காலம் எப்போது வரும்?' என்பதை நினைத்ததில், ஏக்கப் பெருமூச்சு எழுந்தது மயூரிக்கு.

"அண்ணி...!'' என்றபடி, அவளை உலுக்கினாள் திவ்யா.

"ஆஹ்! சொல்லுடா...!''

"என்ன அண்ணி? அண்ணாகூட டூயட் பாடப் போய்ட்டீங்களா?'' என்று அவளது தோளைக் கட்டிக் கொண்டு சிரித்தவளைப் பார்த்து, மென்னகைப் பூத்தாள்.

"இந்தச் சிரிப்பை வைச்சே... அண்ணனை க்ளீன் போல்ட் பண்ணியிருப்பீங்கன்னு நினைக்கிறேன்... கரெக்டா?'' என்று இமைகளை விரித்துக் கேட்டவளைப் பொய்யாக முறைத்தாள்.

"வாலு!'' என்று செல்லமாகத் திட்டியவள், "விளையாட்டை விடு... இந்த வருஷத்தோடு படிப்பு முடியுது. மேற்கொண்டு என்ன செய்யப் போற?'' என்று கேட்டாள்.

"முதல்ல தனி வீடு பார்த்து, எங்க அம்மாவை இங்கேயிருந்து கடத்திட்டுப் போகப் போறேன்...!'' என்று தோள்களைக் குலுக்கியவளை அதிர்ச்சியுடன் பார்த்தாள்.

"ஷாக் ஆகாதீங்க அண்ணி! இது இன்னைக்கு இல்ல, என்னைக்கோ முடிவு செய்தது!'' என்றாள் திவ்யா.

"இதுக்கு உன் அம்மா சம்மதிக்கணுமே திவி...?''

"அம்மா சம்மதிக்கலைனாலும், நிச்சயம் இந்த முடிவைக் கேட்டுச் சந்தோஷப்படுவாங்க. என் அம்மாவோட முகத்துல எப்பவும் சிரிப்பைப் பார்க்கணும். அவங்க இருக்கறதே எனக்காகத் தானே? அவங்களை என்னால மட்டும்தான் சந்தோஷமா வச்சிக்க முடியும் அண்ணி!

இத்தனை நாள் அவங்க இழந்த சந்தோஷத்தை, என்னால மட்டுமே கொடுக்க முடியும்னு இருக்கறப்போ, அதை ஏன் தவிர்க்கணும்? இத்தனை வயசுக்குப் பிறகும் மாமியாரையும், வீட்டுக்காரரையும் திருப்பி ஒரு வார்த்தை கூடப் பேசாமல் இருக்காங்கன்னா எதுக்காக? எனக்காகத் தானே?

அவங்க இன்னும் பழைய வைதேகி இல்லை. எப்போ நான் மெடிக்கல் காலேஜில் காலடி எடுத்து வச்சேனோ, அன்னைக்கே அவங்க முகத்துல ஒரு உற்சாகத்தையும், தெளிவையும் பார்த்தேன்.



என் அம்மாவுக்கு யாரையும் காயப்படுத்தத் தெரியாது. பழிவாங்கத் தெரியாது. எல்லோர் முன்னாலேயும் தலைநிமிர்ந்து, நேர்மையா வாழணும்ங்கற வைராக்கியம் மட்டும் தான் இருக்கு. அதுக்கு என்னால் மட்டும் தான் உதவி செய்ய முடியும். இல்லைன்னா... எங்க அப்பாவைப் போல ஒருத்தனைச் சகிச்சிட்டு... அவங்களால வாழ முடியுமா?

அடுத்த ஜென்மம்னு ஒண்ணு இருந்தா, எங்க அம்மா எனக்கு மகளாப் பிறக்கணும். என்னோட அம்மாவே இருந்திருந்தாலும், இப்படி எனக்காக எல்லாத்தையும் செய்திருப்பாங்களான்னு தெரியாது. அவங்களோட தியாகத்துக்கான கடனைத் தீர்க்க... இந்த ஒரு ஜென்மம் போதாது'' என்று கண்களில் நீர் தளும்பப் பேசியவளை, பாசத்துடன் பார்த்தாள் மயூரி.

அவளது மனமே நிறைந்து விட்டதைப் போல் தோன்ற, நெக்குறுகிப் போனாள்.

"எத்தனை ஆண்டு காலங்கள் ஆனாலும், பெண்களில் மனத்திலிருந்து இந்த தாய்மை என்ற உணர்வை மட்டும் யாராலும் பிரித்துவிட முடியாது. ஒரு பெண்ணிற்கு ஆண்டவன் அளித்த அபரிமிதமான ஆசிர்வாதம் இதுதான் போலும்!' என்று நினைத்துக் கொண்டாள்.

''உன்னை நினைச்சா எனக்கே ரொம்பப் பெருமையா இருக்கு திவி! நிச்சயமா உன்னைப் பெத்த அம்மாவும்,

வளர்த்த வைதேகி அக்காவும்... ரொம்ப ரொம்பக் கொடுத்து வச்சவங்க. எனக்கே உன் மேல கொஞ்சம் பொறாமையாக் கூட இருக்குடா...!'' என்ற மயூரியின் தோளில் ஆசையுடன் சாய்ந்து கொண்டாள் திவ்யா.

"என் அம்மாவுக்கு அப்புறம், என்னோட ரோல் மாடலே நீங்கதான் தெரியுமா? குலமகள் கண்ணகியை விட, கணிகையர் குல மாதவி தான் உயர்ந்தவள்னு படிச்சிருக்கேன். அதை உங்க மூலமா பார்க்கவும் செய்துட்டேன்!'' என்றவள், மயூரியின் முகவாட்டத்தைக் கவனித்து இடைநிறுத்தினாள்.

"அண்ணி...! நான் தப்பா எதுவும்... சாரி அண்ணி...!'' என்று இறங்கிய குரலில் சொல்ல, "சேச்சே! அதெல்லாம் ஒண்ணும் இல்லடா...'' என்றாள் மயூரி சமாதானமாக.

''உங்களைச் சங்கடப்பட வைக்கணும்னு சொல்லலை. ரொம்பப் பெருமையா நினைச்சித்தான் சொல்றேன்... உங்களை என் அப்பாவும், பாட்டியும் எவ்வளவோ பேசியிருக்காங்க. நீங்க ஒரு வார்த்தைத் திருப்பிக் கேட்டிருந்தா, எங்க அப்பாவால தலைநிமிர்ந்து நடக்க முடியுமா? ஆனாலும், நீங்க அதையெல்லாம் பெரிசா எடுத்துக்காம, ரொம்பச் சாதாரணமாத் தானே என்கிட்ட பழகறீங்க?'' என்றாள்.

"திவி! அனுபவம் தரும் பாடத்தை, வேற யாராலயும் கொடுக்க முடியாது. நான் ரொம்ப அனுபவப்பட்டிருக்கேன். யார் என்ன சொன்னாலும், நானா எடுத்துக்கிட்டாதான் அது எனக்கு; இல்லைனா அது... அதைச் சொன்னவங்களுக்கே தான்! கண்டதையும் நினைச்சி என்னையே அழிச்சிக்க... நான் தயாரா இல்லை.



அவங்க முன்னால நாம தலைநிமிர்ந்து வாழ்ந்தாலே போதும்... அவங்களோட தலை தாழ ஆரம்பிச்சிடும்!

*உளி தாங்கும் கற்கள் தானே,*
*மண்மீது சிலையாகும்?*
*வலி தாங்கும் உள்ளம் தானே,*
*நிலையான சுகம் காணும்?''*

என்று புன்னகைத்தாள் மயூரி.

*"ஒரு கனவு கண்டால்...*
*அதை தினம் முயன்றால்...*
*ஒரு நாளில் நிஜமாகும்...''*

என்று பின்னாலேயே திவ்யா பாட, பெண்கள் இருவரும் சப்தமாகச் சிரித்துக் கொண்டனர்.

படியருகில் மறைவாய் நின்று அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த வைதேகி, முறுவலுடன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கீழே சென்றாள்.

# 27

"எத்தனைத் தடவை கட் பண்றேன்... திரும்பத் திரும்ப விடாமல் போன் பண்ணா என்ன அர்த்தம்? வேலையா இருப்பேங்கறதைக் கூடவா புரிஞ்சிக்க முடியல?''

ஆத்திரத்தையும், எரிச்சலையும் உள்ளடக்கிக் கொண்டு பேசிய கணவனது பதிலில், அவளது உற்சாகமெல்லாம் வடிந்தது போலானது.

"போனைத் தான் அட்டெண்ட் பண்ணிட்டேனே. சொல்ல வந்ததைச் சொல்லித் தொலையேன்! வாயை மூடிட்டு இருந்தா என்ன அர்த்தம்?'' பொறுமையின்றி வந்த அவனது வார்த்தைகளால், அவளுக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது.

"சாரிங்க...! ஒரு விஷயம் சொல்லலாம்னு தான் கூப்பிட்டேன். பரவாயில்ல... நீங்க வீட்டுக்கு வந்ததும் சொல்றேன்'' என்றாள் இறங்கிய குரலில்.

தளர்ந்து போயிருந்த அவளது குரலைக் கேட்டவனுக்கு ஒருமாதிரி ஆகிவிட, "கொஞ்சம் வேலை டென்ஷன்...'' என்றவன், "சரி நைட் வீட்டுக்கு வந்து பேசறேன்... அவசரம் ஒண்ணும் இல்லயில்ல...?'' என்றான் குழைவாக.

"இல்லை...'' என்று மென்குரலில் சொல்லிவிட்டு, போனை அணைத்தாள் மயூரி.

* * *

**வேலை** முடிந்ததும் கிளம்பத் தயாராகிக் கொண்டிருந்தவளுக்குப் போன் செய்த சைலேஷ், தான் வெளியில் காத்திருப்பதாகச் சொல்லிவிட்டு போனை அணைத்தான்.

பரபரப்புடன் வெளியே வந்தவள், "என்ன திடீர்னு வந்திருக்கீங்க?'' என்று கேட்டாள்.

"ஹோட்டல் வாசல்ல, உனக்காகத் தவமிருக்கேன்னு வேண்டுதல்!'' என்றான் கிண்டலாக.

முகம் சுருங்க, "உங்களை எதிர்பார்க்கலைன்னு தானே சொன்னேன்...?'' என்றாள்.

"தெரியுது தெரியுது. அதுகூடவா புரியாது?



வண்டியில் ஏறு! நேரமாகுது'' என்றபடி ஹெல்மெட்டை மாட்டினான்.

"ம், காலைல நீங்க... கார்லதானே ஆஃபிஸ் போனீங்க...? இப்ப எப்படி பைக்ல?'' என்றவள் யோசனையுடன் அவனைப் பார்த்தாள். ட்ரிம்மாக உடையணிந்து நின்றிருந்தவனை அப்போது தான் நன்றாகப் பார்த்தவள், "வீட்டுக்குப் போய்ட்டு வரீங்களா?'' என்று கேட்டாள்.

முகத்தை மறைத்துக் கொண்டிருந்த ஹெல் மெட்டைச் சற்று உயர்த்திப் பிடித்தவன், "இதுக்கெல்லாம் காரணம் சொன்னாதான் பைக்ல ஏறுவியா?'' என்று கடுகடுத்தான்.

"தான் என்ன கேட்டுவிட்டோம் என்று இத்தனை ஆர்ப்பாட்டம்?' என்று எண்ணி உதட்டைச் சுழித்தபடி பைக்கில் அமர்ந்தாள். எதிர்பாராமல் தன்னை அழைத்துச் செல்ல வந்திருப்பதே அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

"சரியான துர்வாசர்!'' என்று அவள் முணுமுணுக்க, ஹெல்மெட்டைச் சரியாக அணிந்தவன், மெல்லப் புன்னகைத்துக் கொண்டான்.

வண்டி வீட்டை நோக்கிச் செல்லாமல், வேறு பாதையில் செல்வதைக் கண்டவள், "என்ன இந்தப் பக்கம்...'' என்று ஆரம்பித்த அதே வேகத்தில், கேட்க வந்ததைக் கேட்காமல் பாதியில் நிறுத்திக் கொண்டாள்.

'ஏற்கெனவே தேவையில்லாமல் கடிக்கிறான். இதில் தான் யதார்த்தமாக எதையாவது கேட்டு வைத்து, அது அவனை எரிச்சல்படுத்தினால் என்னென்ன பேசுவானோ?' என்று நினைத்தாள்.

வெகுநாட்களுக்குப் பிறகு வெளியில் இருவரும் சேர்ந்து வந்திருக்கும் இந்த நாளை, சங்கடமாக்கிக் கொள்ள அவள் விரும்பவில்லை.

அதேநேரம் சிக்னலில் நின்றவன், "என்ன?'' என்றான்.

"ஒண்ணுமில்ல'' என்றாள் அழுத்தமாக.

"இப்போ என்ன? எங்கே போறோம்னு சொல்லாம கூட்டிட்டுப் போனா... வரமாட்டியா?'' என்றான்.

அவளுக்குச் சலித்துப் போனது.

"நான் எதுவும் கேட்கல போதுமா'' என்று வேகமாகப் பதிலளித்தவள், தன்னைச் சற்று நிதானப்படுத்திக் கொண்டு, "ரொம்ப நாளைக்கப்புறம் நாம சேர்ந்து வெளியே வந்திருக்கோம். நீங்க சிரிச்சிப் பேசலைனாலும் பரவாயில்ல... இப்படி எரிஞ்சி விழாதீங்க!'' என்றாள்.

அதற்கு அவன் பதில் சொல்வதற்குள் சிக்னல் மாறிவிட, எதுவும் சொல்லாமல் பைக்கைக் கிளப்பினான்.

சாய்பாபா கோவிலருகில் வண்டியை நிறுத்தியவனை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

ஹெல்மெட்டை அதற்குரிய லாக்கில் வைத்துப் பூட்டியவன், "உனக்குப் பிடிச்ச பாபா கோவிலுக்குக் கூட்டிட்டு வந்திருக்கேனே... அதுக்காகவாவது கொஞ்சம் சிரிக்கலாமில்ல?'' என்று அவன் சொல்ல, அவளையும் அறியாமல் இதழ்கள் மலர்ந்தன.

பூஜைப் பொருட்களை வாங்கியவன் வரிசையில் வந்து நின்றதும், "கொடு!'' என்று அவளிடம் கையை நீட்டினான்.



அவள் புரியாமல், "என்னது?'' என்றாள்.

"ம், உன் பிரமோஷன் ஆர்டர்!'' என்று சிரித்தான்.

இமைகள் விரிய அவனைப் பார்த்தாள்.

"போதும் போதும். இந்தப் பார்வையை எல்லாம், அப்புறமா பார்த்துக்கலாம். வா!'' என்று வரிசையில் நடந்தான்.

மயூரிக்கு ஆனந்தத்தில் என்ன பேசுவதென்றே தெரியவில்லை.

"அப்படியானால், விஷயம் தெரிந்து எனக்காகவே வந்திருக்கிறான். வேண்டுமென்றே தன்னைச் சீண்டியிருக்கிறான்!' என்று புரிய அவளது உள்ளம் நிலைகொள்ளாமல் பரபரத்தது.

அவனுக்குத் தன் மீது அக்கறை, காதல் எல்லாம் இருக்கிறது. நான்தான் தேவையில்லாமல் என்னைக் குழப்பிக் கொண்டிருக்கிறேன்!' என்று தனது முட்டாள்தனத்தை எண்ணிச் சிரித்துக் கொண்டாள்.

கண்களும், மனமும் குளிர பாபாவைத் தரிசித்துவிட்டு வந்த போது, வெகு நாட்களுக்குப் பிறகு தன்னைப் பழைய மயூரியாக உணர்ந்தாள் அவள்.

* * *

"இருந்தாலும் என்னை இப்படி அலைக்கழிச்சிருக்க வேணாம்!'' என்று கணவனிடம் பொய்யாகக் கோபித்துக் கொண்டாள்.

மெனுகார்டைப் பார்த்துக் கொண்டிருந்தவன் அதை மூடி வைத்துவிட்டு, "நீ கூடத் தான் ரம்யாவுக்கு விஷயத்தைச் சொல்லியிருக்க... எனக்குச் சொல்லல.

ஹைதராபாத்ல இருந்து குணா எனக்குப் போன் செய்து வாழ்த்து சொல்றான். அவன் சொல்லி... நான் தெரிஞ்சிக்க வேண்டிய நிலைல இருந்திருக்கேன்!'' என்று சொல்லிவிட்டு, ஒரு பெருமூச்சை வெளியிட்டான்.

அவள் பரிதாபமாக அவனைப் பார்த்தாள்.

"உங்ககிட்டதான் முதல்ல சொல்லணும்னு, ஆசையா உங்களுக்குப் போன் செய்தேன். நீங்கதான் சுள்ளுன்னு விழுந்தீங்களே; அதான் சொல்லலை! அதோட, நானா போன் செய்து ரம்யாவுக்குச் சொல்லல; எதேச்சையா அவ எனக்கு கால் செஞ்சிருக்கா.

அந்த நேரம் நான் எம்.டி ரூமில் இருந்ததால, போனை அட்டெண்ட் செய்த என் ஆஃபிஸ் கொலீக் தான், விஷயத்தைச் சொல்லிட்டா. ரம்யா எனக்கு ஃப்ரெண்ட் தான். ஆனா, உங்களுக்கு அப்புறம் தான் அவள்!'' என்று சொல்லவும், சைலேஷ் தன்னைப் பெருமையாக உணர்ந்தான்.

"சாரிமா! தப்புதான். அதான் விஷயம் தெரிஞ்சதும் நேரா வீட்டுக்குப் போய் அப்பா, அம்மாகிட்ட விஷயத்தைச் சொல்லிட்டு, கொஞ்சம் ரிஃப்ரெஷ் ஆகி கிளம்பி வந்துட்டேன். நைட் டின்னருக்கு அவங்களையும் கூப்பிட்டேன்... அம்மாதான் பரவாயில்லன்னு சொல்லி, நம்மளைப் போய் வரச் சொல்லிட்டாங்க.

சரி. காலைலயே விஷயத்தைச் சொல்ல, ஆசையா நம்ம பொண்டாட்டி போன் செய்தப்போ, அவளோட மூடை அவுட் பண்ணியாச்சு. இப்போவாவது போய் கொஞ்சம் கூல் பண்ணிடலாம்னு கிளம்பி... நேரா போய், அவளுக்கு ஒரு சின்ன கிஃப்ட் ஒண்ணையும் வாங்கிட்டு ஓடி வந்தேன்!''



அவளிடம் நடந்தவற்றைச் சொல்லிக் கொண்டே, தனது பாக்கெட்டில் வைத்திருந்த பிரேஸ்லெட்டை எடுத்து அவளது கையில் அணிவித்தான்.

மயூரி சந்தோஷத்தில் திக்குமுக்காட, "வாழ்த்துகள் மயூ!'' என்று உள்ளார்ந்த அன்போடு சொன்னான்.

அவனை நெகிழ்ச்சியுடன் பார்த்தவள், "நீங்க என்னை நேரா வீட்டுக்குக் கூட்டிட்டுப் போயிருக்கலாம்!'' என்றவளது குரல் குழைவுடன் வந்தது.

"ஓ மை காட்!'' என்று புருவம் உயர்த்தியவன், "நல்ல சான்சை மிஸ் பண்ணிட்டேன் போலயிருக்கே... வேணும்னா, ஆர்டர் பண்ணினதை கேன்சல் பண்ணிடலாமா?'' என்று கேட்டுவிட்டுக் குறும்பாகச் சிரித்தான்.

"சைலேஷ்!'' என்று மெலிதாகச் சிணுங்கியவள், வெட்கத்துடன் அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

"இங்கே தான், ஓ மை காட்னு சொல்லி இருக்கணும்...'' என்றவன் அவளது கண்களில் தெரிந்த காதலைக் கண்டு, "மயூ! திஸ் இஸ் த லிமிட்!'' என்று சன்னக் குரலில் மிரட்டினான்.

அவனது செய்கையையும், பேச்சையும் கேட்டு அவள் அடக்கமாட்டாமல் சிரிக்க, அவளது சிரிப்பை ஆழ்ந்த பார்வையால் மனத்தில் நிறைத்துக் கொண்டான்.

* * * * * *

# 28

எப்போதும் போல் பகல் நேர உறக்கம் கலைந்து எழுந்து வந்த வடிவு ஹாலுக்கு வரவும், கதவைத் திறந்து கொண்டு சைலேஷ் உள்ளே வரவும் சரியாக இருந்தது.

தான் தான் தாமதமாக எழுந்து விட்டோமோ என்ற சந்தேகத்துடன் கடிகாரத்தைப் பார்த்தார். ஆனால், வழக்கத்தை விட மகன் தான் விரைவாக வந்துவிட்டான் என்று புரிய, கேள்வியாக அவனைப் பார்த்தார்.

கையிலிருந்த ஸ்வீட் பாக்ஸை அன்னையிடம் கொடுத்தவன், மயூரிக்கு பணியிடத்தில் எதிர்பாராத பதவி உயர்வு கிடைத்திருப்பதாகச் சொன்னான். "ஓஹ!' என்று வெறுமனே கேட்டுக் கொண்டவர், அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

சிலநொடிகள் பார்த்தவன், "ஸ்வீட் எடுத்துக்கோங்க அம்மா!'' என்றான்.

ஒரு எதிர்பார்ப்புடன் சொன்ன மகனது முகம் சோர்ந்து விடக்கூடாதே என்ற எண்ணத்திற்காக, "ம்'' என்றபடி சிறு துண்டு ஒன்றை எடுத்து அவர் வாயில் போட்டுக் கொள்ள, சைலேஷின் முகத்தில் லேசான புன்னகை அரும்பியது.

வீட்டைச் சுற்றும் முற்றும் பார்த்தவன், "அப்பா எங்கேம்மா?'' என்று கேட்டான்.

"எப்பவும் போல லைப்ரரிக்குப் போயிட்டு, ஏழு மணிக்கு வருவார்'' என்றவர், "உனக்குக் காஃபி போடவா?'' என்று கேட்டார்.



"சரிம்மா. அதுக்குள்ள நான் ஒரு குளியல் போட்டுட்டு வந்திடுறேன்'' என்றபடி குளியலறைக்குள் நுழைந்தான்.

வெளியே கிளம்பத் தயாராகி வந்தவன், "அம்மா! அப்பாவுக்குப் போன் பண்ணி வரச் சொல்றேன். அதுக்குள்ள நீங்களும் ரெடியாகிடுங்க. எல்லோரும் வெளியே டின்னர் முடிச்சிகிட்டு வரலாம்'' என்றான்.

"அதெல்லாம் ஒண்ணும் வேணாம். நீங்க வரைக்கும் போயிட்டு வாங்க...'' என்று காஃபியைக் கொடுத்துவிட்டுச் சென்ற அன்னையை, அதிருப்தியுடன் பார்த்தான் மகன்.

தந்தைக்குப் போனில் விஷயத்தைச் சொல்லிவிட்டு, மயூரியின் வேலையிடத்தை நோக்கிச் சென்றான்.

* * *

"அடடே! வாங்கம்மா!'' என்ற கணவரது குரல் கேட்டுச் சமையலறையிலிருது எட்டிப் பார்த்தார் வடிவு.

"வணக்கம்மா! நல்லாயிருக்கீங்களா?'' என்று கேட்ட செல்லம்மாவை, பார்த்ததும் அடையாளம் கண்டு கொண்டார் வடிவு.

"இவள் எதற்காக இங்கே வந்திருக்கிறாள்?' என்று நினைத்த போதும், "ம். உட்காருங்க'' என்றார் மரியாதையாக.

தனது மகளை அவர்களுக்கு அறிமுகப்படுத்தியவர், "ரொம்ப நாளா மயூரியைப் பார்க்க வரணும்னு நினைச்சிட்டே இருந்தோம். இங்க பக்கத்துல ஒரு விசேஷத்துக்கு வந்தோம். அப்படியே நம்ம பாப்பாவையும் பார்த்துட்டுப் போகலாம்னு...'' என்ற செல்லம்மாவின்

விழிகள் மயூரியைத் தேடியது. மயூரிக்கு பதவி உயர்வு கிடைத்திருப்பதாகவும், இருவரும் வெளியே சென்றிருப் பதாகவும் சொன்னார் கேசவன்.

மகிழ்ச்சியடைந்த செல்லம்மா, "மயூரி மட்டும் இல்லைனா, என் பொண்ணோட கல்யாணம் நடந்திருக்குமான்னே தெரியாதுங்க. அதோட குணத்துக்கு நல்ல வாழ்க்கை அமையனும்னு... நான் வேண்டாத தெய்வமில்ல. என் வேண்டுதல் வீணாப் போகலைன்னு... இப்போ ரொம்பச் சந்தோஷப்படறேங்கம்மா!'' என்ற செல்லம்மாவிற்கு கண்கள் கலங்கின.

செல்லம்மாவை திருமணத்தில் பார்த்ததோடு சரி. ஆனால் அவர் யார்? என்ன? என்ற விவரம் எதுவும் வடிவிற்குத் தெரியாது. ஆரம்பத்தில் எதுவும் பேசிக் கொள்ளாவிட்டாலும், அவர்களது உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

இன்று செல்லம்மாவே மயூரியின் குணத்தைப் பற்றியும், தனது மகளின் திருமணத்திற்காக அவள் செய்த உதவி என்று ஒவ்வொன்றாகச் சொல்லச் சொல்லவும், வடிவு ஊன்றி கவனிக்க ஆரம்பித்தார்.

* * *

பார்க்கிங்கிலிருந்த வண்டியை எடுத்துக் கொண்டு வெளியே வந்த சைலேஷின் மொபைல் ஒலித்தது.

"சொல்லுங்கப்பா.''

"............''

"அப்படியா! நாங்க கிளம்பிட்டோம். இன்னும் இருபது நிமிஷத்தில் வீட்டுக்கு வந்திடுவோம். ம், ஏதாவது வாங்கிட்டு வந்திடவா...?'' என்று தந்தையிடம்



பேசிவிட்டு, போனை அணைத்தான்.

வாங்கிய முல்லைச் சரத்தில் பாதியைக் கூந்தலில் சூட்டியபடி வந்தளிடம், "மயூ! அப்பா போன் செய்தாங்க... செல்லம்மா அக்கா வந்திருக்காங்கலாம்...'' விஷயத்தைச் சொல்லிவிட்டே வண்டியைக் கிளப்பினான்.

வீட்டினுள் நுழைந்தவள், தன்னை எதிர்கொண்ட செல்லம்மாவை பாசத்துடன் கட்டிக் கொண்டாள். அவரது மகளை பிரியத்துடன் உபசரித்தவள், முகம் நிறையச் சிரிப்புடன் செல்லம்மாவின் கரத்தைப் பிடித்துக் கொண்டே பேசினாள்.

அனைத்தையும் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார் வடிவு.

சம்பிரதாய வார்த்தைகள் முடிய, செல்லம்மா தான் வந்த விஷயத்தை மெல்ல ஆரம்பித்தார்.

"ம், மயூரிம்மா! நம்ம மீனா வீட்டுக்காரர் கடைல, இப்போ நல்ல வியாபாரம்மா. எல்லாம் நம்ம மீனா வந்த நேரம்னு... அவங்க மாமியார் கூடச் சொல்லி சந்தோஷப்பட்டுகிட்டாங்க!'' என்று மகிழ்ச்சியுடன் சொன்னார்.

நிறைவுடன் புன்னகைத்துக் கொண்ட மயூரி?, "அப்படியா மீனா! மாமியார்கிட்ட நல்ல பேர் வாங்கறது எவ்வளவு பெரிய விஷயம்!'' என்று சிரிப்போடு சொன்னாள். சொன்னபின்பே அதன் வேறு அர்த்தத்தை உணர்ந்ததும், நாக்கைக் கடித்தபடி, அவஸ்தையுடன் தனது மாமியாரைப் பார்த்தாள்.

வடிவு நெற்றியைச் சுருக்கியபடி அவளைப் பார்த்தார்.

தவிப்புடன் அவள் சைலேஷைப் பார்க்க, அவன் மறுபுறமாகத் திரும்பிப் புன்னகைத்தான். கேசவனோ, அவளது வார்த்தைகளைக் காதில் வாங்காதது போல, இல்லாத எதையோ தேடிக் கொண்டிருந்தார்.

"ம். இருங்க... நீங்க சாப்பிட ஏதாவது...'' என்று மயூரி அங்கிருந்து நழுவப் பார்த்தாள்.

"ஸ்வீட், காஃபியெல்லாம் அம்மாவே கொடுத்துட்டாங்கப்பா. நாங்களும் ஒரு விசேஷத்துக்குப் போயிட்டுத் தானே வந்தோம்?'' என்றார் செல்லம்மா.

ஏதும் சொல்லாமல், ஓர் அசட்டுச் சிரிப்பொன்றை சிந்தினாள் மயூரி.

மீனா ஏதோ ஜாடையாக தனது அன்னைக்குக் கண்ணைக் காட்ட, "மயூரி கண்ணு! சொல்ல வந்ததைப் பாதியிலேயே விட்டுட்டேன் பாரு. வந்து... நம்ம மீனா கல்யாணத்துக்கு நீ கொடுத்த பணத்தைத் திருப்பித் தரலாம்னு...'' என்று பேசிக் கொண்டே, கொண்டு வந்திருந்த ஒரு பையை எடுத்தவர், மயூரியின் திகைத்த முகத்தைப் பார்த்து... சொல்ல வந்ததைப் பாதியிலேயே நிறுத்தினார்.

சைலேஷும் சற்று அதிருப்தியுடன் அவரைப் பார்த்தான்.

"தப்பா நினைச்சிக்காதேம்மா. என்னைக்கு இருந்தாலும் இது வட்டியில்லாத கடன் தானே?'' என்றார் தயக்கத்துடன்.

"அப்போ... உங்ககிட்ட பட்டக் கடனை, எப்படிக்கா நான் திருப்பிக் கொடுப்பேன்? என்னோட வாழ்க்கை



யையே காப்பாத்திக் கொடுத்தவங்க நீங்க... அதுக்கு நான் கணக்குப் பார்க்க ஆரம்பிச்சா, இது எங்கே போய் நிக்கும்? அப்படி நான் செய்தா... அது உங்க பாசத்துக்கு விலை பேசறது போல ஆகாதா?

மீனா என்கூடப் பிறக்கலைனாலும், எனக்குத் தங்கை தானே? அவளுக்கு நான் இதைக் கூடச் செய்யக் கூடாதா? என் நன்றிக் கடனைச் செலுத்த கடவுள் எனக்குக் கொடுத்த ஒரு வழியா... நான் நினைச்சிட்டு இருக்கேன். உங்க குடும்பத்தில் ஒருத்தியா நினைச்சிட்டு இருக்கேன். ஆனா, உங்க பேச்சு என்னை ஒரு வெளியாளா தள்ளி நிறுத்தறா மாதிரி இருக்குக்கா!''

எந்த அதிர்வும், ஆர்ப்பாட்டமும் இல்லாமல், குரலிலேயே தனது மறுப்பை வெளிப்படுத்தியவளை, வியப்புடன் பார்த்தார் வடிவு.

"இவள் இத்தனைத் தூரம் பேசுவாளா? நான்கே வாக்கியத்தில் தனது மனத்திலிருந்ததை எத்தனை அழகாகச் சொல்லி, செல்லம்மாவின் வாயை அடைத்து விட்டாள்?' என்று மருமகளின் சாமர்த்தியத்தைக் கண்டு அவரால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

இத்தனை நாள் அவளைப் பார்த்த அவரது கண்ணோட்டத்தில், லேசான மாற்றம் ஏற்பட ஆரம்பித்திருந்தது.

"இருந்தாலும்...'' என்று ஆரம்பித்தவரை, "மயூரி சொல்றதுதான் ரொம்பச் சரி. நீங்க இந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்தா... எங்களை வெளியாளா நினைக்கறீங்கன்னு தான் அர்த்தம்!'' என்று மனைவிக்கு ஆதரவாகப் பேசினான் சைலேஷ்.

செல்லம்மா சங்கடத்துடன் அனைவரையும் பார்க்க, "இங்கே பாருங்கம்மா! எங்க பையனும், மருமகளும் இதை ஏத்துக்க மாட்டாங்கன்னு எனக்குத் தெரியும். அதனாலதான், நீங்க என்னிடம் பணத்தைக் கொடுத்தப் போ, அவங்களையே வர வைக்கிறேன், உங்க கையாலயே கொடுத்திடுங்கன்னு சொன்னேன். மத்தபடி எங்களுக்கும் இதுல உடன்பாடு இல்ல. அதோட வட்டியில்லாத கடன்னு நினைச்சி நீங்க சங்கடப்படாதீங்க. உங்க மனசார என் மருமகளை ஆசீர்வாதம் பண்ணுங்க. அது போதும்!'' என்றார் கேசவன்.

"சின்ன வயசுலயிருந்து இந்தக் கையிலேயே வளர்ந்த குழந்தைங்க அது. எங்க ஆசீர்வாதம் என்னைக்குமே உண்டுங்க. உங்களை மாதிரி நல்லவங்க கிட்ட அவளைச் சேர்த்து விட்ட கடவுள்... கடைசி வரைக்கும் அவளுக்குத் துணையா இருப்பாரு!' என்று சொல்லிவிட்டு, தன் கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டார் செல்லம்மா.

அன்புடன் அவரது தோளை அணைத்துக் கொண்டாள் மயூரி.

# 29

ரம்யாவின் வளைகாப்பு அழைப்பிதழை வருடிக் கொடுத்த மயூரிக்குச் சந்தோஷமாக இருந்தது.

"ரொம்ப வேண்டியவங்களை மட்டும்தான் அழைச்சிருக்கோம். அதனால, வீட்லயே விசேஷத்தை



வச்சிட்டோம். அவசியம் எல்லோரும் குடும்பத்தோடு வந்திடணும்!'' குணாவின் பெற்றோர் வந்து அழைத்த போது, சிரித்த முகமாகத் தலையாட்டிக் கொண்டாள் மயூரி.

"மயூரியை முதல் நாளே கொஞ்சம் அனுப்பி வச்சிடுங்க சம்மந்தியம்மா. அவள் இருந்தாத் தான், எனக்குக் கொஞ்சம் ஹெல்பாக இருக்கும்!'' என்று ரம்யாவின் அன்னை, வடிவிடம் கேட்டார்.

மௌனமாக அங்கே நின்றிருந்த போதும், உள்ளுக்குள் இருந்த தயக்கம் மயூரியின் முகத்தில் நன்றாகவே பிரதிபலித்தது.

அவளை நிமிர்ந்து பார்த்த வடிவு 'என்ன நினைத்தாரோ?' சிரித்தபடியே, "அதுக்கென்ன! உங்க வீட்டுப் பொண்ணைக் கூட்டிட்டுப் போக, என்னைக் கேட்கணுமா?'' என்று சொல்ல, மயூரியால் தனது காதுகளையே நம்ப முடியவில்லை.

விழிகளை உயர்த்தி அவள் சைலேஷைப் பார்க்க, அவன் கண்களைச் சிமிட்டிப் புன்னகைத்தான்.

அவர்கள் கிளம்பிச் சென்றதும் அறைக்குள் வந்தவளை இழுத்து அணைத்துக் கொண்டவன், "என்ன மேடம்? மாமியாரோட மனசுல இடம் பிடிக்க ஆரம்பிச்சிடீங்க போல?'' என்றான்.

அவன் சொன்னது தான் தாமதம். சந்தோஷத்தில் அவளுக்குக் கண்ணீரே வந்துவிட்டது.

"நீங்க சொல்றா மாதிரி நடந்தா, என்னைவிட அதிர்ஷ்டசாலி யாருமில்லை. ரொம்ப தேங்க்ஸ் சைலேஷ்! தேங்க்ஸ்!'' என்று தழுதழுத்தபடி அவனது நெஞ்சில்

அடைக்கலமாகி விடச் சாய்ந்து கொள்ள, காதலுடன் அவளது நெற்றியில் முத்தமிட்டான்.

* * *

"முடியல என்னால. இங்கே பாரும்மா! இந்த வளைகாப்பு... அது இதுன்னு என்னைக் கூப்பிடாதே. அதுவும், டீசண்டா ஏதாவது ஹோட்டல்ல வச்சாலும் பரவாயில்ல... வீட்லயே வேற. யாரு அந்தக் கும்பல்ல வந்து... நிக்க இடமில்லாம, உட்கார இடமில்லாம தவிக்கிறது? நான் வரலை!'' என்று நிர்தாட்சண்யமாக மறுத்த மகளை, சங்கடத்துடன் பார்த்தார் வடிவு.

"சத்தமா பேசாதேடி! உங்க அப்பா காதுல விழப்போகுது'' என்று மகளை எச்சரித்தவர், "இங்க பாரு இனியா, எப்பவும் எல்லார்கிட்டயும் தள்ளியே இருக்க முடியுமா? மத்தவங்கள விடு... குணாவும், நம்ம சைலேஷ் மாதிரிதான்னு, உனக்கு நான் சொல்லத் தேவையில்ல. அவ்வளவு தூரம் நம்மளை மதிச்சி வந்து சொல்லிட்டுப் போயிருக்காங்க. போகாட்டி நல்லாயிருக்காது!'' என்று மகளுக்கு எடுத்துச் சொன்னார்.

"ஏம்மா என்னைப் படுத்தற? எனக்கு வர்றதப் பத்தி ஒண்ணுமில்ல. ஆனா, உன் மருமகளும் இல்ல வருவா? அதோட போச்சா...? இதுங்க என்னவோ ஒட்டிப் பொறந்த ரெட்டைங்க மாதிரி... குணா அண்ணா, மயூரிம்மான்னு பேசிக்கறதைப் பார்க்கப் பார்க்க எரிச்சலா இருக்கும். அதுக்கு மேல அந்த ரம்யா...! அங்க வந்து இதுங்க மூஞ்சிகளைப் பார்க்கணும்னு... எனக்கென்ன தலையெழுத்தா?'' என்று முகத்தைச் சுளித்தபடி கடுகடுத்தாள்.



"ஏன் இனியா அவளை எப்பவும் கரிச்சிக் கொட்ற? அவள் உண்டு, அவளோட வேலை உண்டுன்னு தானே இருக்கா? வளைகாப்புக்கு வர விருப்பம் இல்லைனா விட்டுடு. அதுக்காக, மயூரியைப் பிடிச்சி எகிறாத!'' என்று சலிப்புடன் சொன்னார்.

அன்னையைக் கிண்டலாகப் பார்த்தவள், "அட! நீ எப்போம்மா இத்தனை நல்ல மாமியாரா மாறிட்ட? என்ன... மருமக கொஞ்சம் சம்பாதிக்க ஆரம்பிச்சதுக்குப் பிறகு, அவளைத் தாங்க ஆரம்பிச்சிட்ட போல...! இன்னும் கொஞ்ச நாள்ள... அவளோட பேச்சுக்கேல்லாம் ஆடுவியா என்ன?'' என்று ஆத்திரமும், ஆதங்கமுமாகக் கேட்டாள் இனியா.

"வாயை மூடுடி! என்னை என்ன அன்னக்காவடின்னு நினைச்சியா... பணத்தைக் கண்டதும் பல்லை இளிச்சிகிட்டுப் போக? நீ உன் குணத்தை மாத்திக்க! அவ்வளவு தான்... சொல்லிட்டேன்! ஆரம்பத்திலேயே... மயூரியைப் பத்தி உன்னைப் பேச விட்டிருக்கக் கூடாது.

ம்ஹூம், தப்பை நான் செய்துட்டு, உன்னைப் பேசியும் பிரயோஜனம் இல்லை. எனக்கு ஒண்ணும் அவளைப் பிடிக்காமல் இல்ல. முதல்தடவை அவளைப் பார்த்தப்போ, நம்ம சைலேஷுக்குப் அவதான் ரொம்பப் பொறுத்தமானவள்ன்னு நிறையவே சந்தோஷப்பட்டேன்.

அவளோட பிறப்பு பத்தித் தெரிஞ்சதும், நான் கொஞ்சம் நிதானமா யோசிச்சிருக்கலாம். ஆனா, அவசரப்பட்டு... கல்யாணத்துக்குச் சம்மதிக்க மாட்டேன்னு சொன்னேன். நானா பார்த்து வச்சிருந்தா கூட... இப்படி ஒருத்தியைக் கொண்டு வந்திருப்பேனான்னு தெரியாது.

குலத்துக்கும், குணத்துக்கும் சம்மந்தமில்லைன்னு நான் புரிஞ்சிகிட்டேன்.

ஆனாலும், ஏதோ ஒரு தயக்கம் மனசுக்குள்ள இருந்துகிட்டே தான் இருக்கு. இத்தனை நாளா இவளை ஒதுக்கி வச்சிட்டோமேன்ற குற்ற உணர்ச்சியா? இல்ல..., இன்னும் அந்தப் பக்குவத்துக்கு நான் வரலையான்னும் புரியலை. அவளை மனசார ஏத்துக்கவும் முடியல..., வேணாம்னு ஒதுக்கித் தள்ளவும் முடியல!''

வருத்தமும், வேதனையுமாக பேசிய அன்னையைக் கேலியாகப் பார்த்தாள் இனியா.

"மனசுல அன்னை தெரசான்னு நினைப்பா உனக்கு? வெளியே சொல்லிடாதே! கேக்கறவங்க சிரிக்கப் போறாங்க! நாயைக் குளிப்பாட்டி நடு வீட்ல வச்சாலும்... அதோட புத்தி போகாது!'' என்று இரக்கமே இல்லாமல் சொன்ன மகளை வெறுப்புடன் பார்த்தார் அவர்.

"இதற்கு மேல் எதுவும் பேசிப் பலனில்லை!' என்று உணர்ந்தவராக அமைதி காத்தார்.

இனியா சிறுவயதிலிருந்தே இப்படித்தான். எதிலும், யாரிடமும் பெரிதாக ஈடுபாடு காட்ட மாட்டாள். பேச்சும், வெட்டு ஒன்று... துண்டு இரண்டு என்றுதான் இருக்கும். "போகப் போக இதெல்லாம் மாறிவிடும்' என்று வடிவு தன்னைத் தானே சமாதானம் செய்து கொள்வாரே தவிர, அவளைப் பெரிதாக எதுவும் சொல்லிக் கொண்டதில்லை.

ஆனால், ஆரம்பத்திலிருந்தே கேசவன் மகளை அதட்டியும், அவளது செய்கைகளைக் கண்டும் காணாமல் இருக்கும் மனைவியைக் கண்டித்தும் பேசுவார். அப்போதெல்லாம், "நாளடைவில் இதெல்லாம்



சரியாகிடும்' என்று கணவருக்குச் சமாதானம் சொல்பவர், தப்பித் தவறி மகளுக்கு எந்த அறிவுரையும் செய்ததில்லை.

அவரைப் பொறுத்தவரை, மகள் இன்னமும் சிறுபெண்தான். ஆனால், அவளுக்கே ஒரு குழந்தை வந்த பிறகும், அவளது குணத்தில் எந்த மாற்றமும் ஏற்படவே இல்லை.

இனியாவிற்கும் சைலேஷிற்கும் இடையில் ஆறு வயது வித்தியாசம் இருந்ததால், நிறைய விஷயங்களில் அவன் அவளுக்கு விட்டுக் கொடுத்தே வளர்ந்தான். ஒரு தாய் வயிற்றுக் குழந்தையாக இருந்த போதும், இருவருமே இருவேறு துருவங்களாகவே வளர்ந்தனர்.

தான் இனியாவிற்கு அளவிற்கு அதிகமாக இடம் கொடுத்துவிட்டதை காலம் கடந்து உணர்ந்து கொண்ட வடிவிற்கு, அதிருப்தியாக இருந்தது. அதே நேரத்தில், அவரது மனத்தில் மயூரியின் நினைவும் வராமலில்லை.

"இனியாவிற்கு இருந்த இத்தனைச் சலுகைகளும், குடும்பச் சூழலும் இல்லாமல் வளர்ந்த போதும், அவளால் மட்டும் எப்படி அடுத்தவரை அனுசரித்துச் செல்ல முடிகிறது? மற்றவரது குணத்தை அறிந்து, அதற்கேற்ப நடந்து கொள்ள முடிகிறது?' என்று நினைத்தவரால், பெருமூச்சை மட்டுமே விட முடிந்தது.

"இவளுடன் மகளை தனது ஒப்பிடுவதா?' என்று அன்று வீம்பாக நின்றவரே, இன்று தானே அந்த ஒப்பீட்டைச் செய்யும் நிலையை நினைத்ததில், தனது வளர்ப்பின் தவறை எண்ணி மாய்ந்து போனார்.

"சரி இனியா! அப்போ நாங்க கிளம்பறோம். ஃபங்ஷனுக்கு வர முயற்சி பண்ணு'' என்றார்.

"பார்க்கலாம்...'' என்று பட்டென்று சொன்னவளைக் கவலையுடன் பார்த்தார்.

* * *

**ஆ**ரத்தி சுற்றி முடித்ததும் மணையிலிருந்த ரம்யாவை கைத்தாங்கலாக எழுப்பினாள் மயூரி. அதுவரை விழா மும்முரத்தில் இயந்திர கதியில் இருந்தவர்களும், தங்களைச் சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டனர்.

பேத்தியை மடியில் வைத்தபடி அமர்ந்திருந்த வடிவு, வந்திருந்த ரம்யாவின் உறவினர்களிடம் புன்னகையுடன் பேசியபடி, துறுதுறுவெனச் சுற்றிக் கொண்டிருந்த மருமகளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

அவரையும் அறியாமல் அவரது முகம் மலர்ந்து, விகசித்துக் கொண்டிருந்தது.

"என்ன வடிவு எப்படியிருக்க?'' என்று திடீரென அருகில் குரல் கேட்க, திரும்பிப் பார்த்தார் வடிவு.

குணாவின் பாட்டியைக் கண்டதும் "வாங்கம்மா! நான் நல்லாயிருக்கேன். நீங்க எப்படியிருக்கீங்க? உடம்பு எப்படியிருக்கு?'' என்று கேட்டபடி எழுந்தார்.

"எனக்கென்ன குறைச்சல்? எல்லா வேலையும் முடிஞ்சிடுச்சி. கண்ணார என் கொள்ளுப் பேரனையும் பார்த்துட்டா, நிம்மதியா கண்ணை மூடிடுவேன்.''

"என்னம்மா இப்படிச் சொல்றீங்க? இன்னும் கொள்ளுப் பேரன் கல்யாணமெல்லாம் பார்க்க வேணாமா?'' என்றார் வடிவு.

குணாவின் பாட்டி வாய்விட்டுப் புன்னகைக்க, "ஏம்மா? ஏன்? இன்னும் எங்க அம்மா எத்தனை



வருஷத்துக்குத் தான்... இந்த மாமியார் தொல்லையில் அவஸ்தைப்படணும்?'' என்று பின்னாலிருந்து குணா குரல் கொடுக்க, சுற்றியிருந்த அத்தனைப் பேரும் சிரித்து விட்டனர்.

"போடா...! அப்படி என்ன பண்ணிட்டேன் உன் அம்மாவை? பெரிசா பேச வந்துட்டான்...!'' என்றவர், பேரனின் முதுகில் செல்லமாக ஒரு தட்டு தட்டினார்.

"சரி சரி விடுங்க பாட்டி! டென்ஷன் ஆகாதீங்க...'' என்று சிரித்தபடி அங்கிருந்து நகர்ந்தான் அவன்.

"எப்பவும் இவனுக்கு இதே வேலை. என்னை வம்பிழுக்கலைனா இவனுக்குப் பொழுதே போகாது'' என்று சிரித்த பாட்டி, "வடிவு உன் பொண்ணு எங்கே?'' என்று கேட்டார்.

"அவளுக்குக் கொஞ்சம் உடம்பு முடியலைம்மா. அதான் மாப்பிள்ளையும், பேத்தியும் வந்திருக்காங்க'' என்றார் அவர் சங்கடத்துடன்.

அதேநேரத்தில் அங்கு வந்த மயூரி, "அத்தை! ரித்துவைக் கொடுக்கறீங்களா? நான் சாப்பிட வச்சிடுறேன்'' என்று மெல்லக் கேட்டாள். மனத்திற்குள் சற்றுத் தயக்கமிருந்தாலும், மாமியாரின் மாற்றத்தை உணர்ந்திருந்ததால், தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டாள்.

"ரித்துமா! சாப்பிடுறியாடா?'' என்று வடிவு பேத்தியிடம் கேட்க, "ம், அத்தைகிட்ட...'' என்றபடி மயூரியிடம் தாவியது.

தன்னிடம் வந்த குழந்தையை, வாரி அணைத்துக் கொண்டாள் மயூரி.

மயூரியைப் பார்த்த குணாவின் பாட்டி, "ஏன் வடிவு...'' என்றபடி அவர் பக்கமாகத் திரும்பியவர், தன்னருகில் வந்து அமர்ந்த ரம்யாவைக் கண்டதும், கேட்க வந்ததைக் கேட்காமல் பாதியிலேயே நிறுத்திவிட்டார்.

"என்ன பாட்டி! ரொம்ப முக்கியமான விஷயம் பேசும் போது வந்துட்டேனோ?'' என்று அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு கேட்டாள் அவள்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லடியம்மா. உன் மாமியார் என்ன பண்றா? வந்தவங்களுக்கெல்லாம் சாப்பிட இலையைப் போடச் சொல்லணும்... எல்லாத்தையும் கூடவே இருந்து இன்னும் நான் தான் அவளுக்குச் சொல்லிட்டு இருக்கணும். நான் போய்ப் பார்த்துட்டு வந்திடுறேன் வடிவு'' என்றபடி எழுந்து சென்றார் பாட்டி.

"விட்டா... இந்தப் பாட்டி சைக்கிள் கேப்ல ட்ரெயினே விடுவாங்க. வயசாச்சே தவிர, இன்னும் ஏன் தான் புத்தி இப்படி இருக்கோ?' என்று எரிச்சலுடன் நினைத்துக் கொண்டாள் ரம்யா.

* * *

"அப்புறம் லைஃப் எப்படிடா போகுது?'' என்று கட்டிலில் சாய்ந்து அமர்ந்திருந்த குணாவைக் கேட்டான் சைலேஷ்.

"பேச்சுலர் லைஃப் தானே...? சுகமாவே இருக்கு!'' என்றான் சிரிப்புடன்.

"இதைக் கண்டிப்பா... ரம்யா காதில் போட்டே ஆகணும்'' என்றான் சைலேஷ்.

"புண்ணியவானே! நீ செய்வடா. இன்னும் ரெண்டு நாளைக்குத் தாண்டா. திரும்பப் பெட்டியைக் கட்டணும். அதுக்குள்ள எனக்கு வேட்டு வச்சிட்டுப் போயிடாதே!'' என்றவன், "என்னை விடு. உன் லைஃப் எப்படி இருக்கு? ஆஃபிஸ்ல எல்லாம் எப்படிப் போகுது?''



"ஏற்கெனவே பிரமோஷன் கிடைக்குமோ... கிடைக்காதோன்னு இழுபறியில் இருக்கு. வேலையில டென்ஷன் மேல டென்ஷன்.''

"அது என்னைக்குத் தான் இல்ல... நீ வேற ஜாப்க்கு ட்ரை பண்ணலையா?''

"எதுக்குடா? இங்கயே நல்லா தானே இருக்கேன். ஆறு வருஷமா சோறு போடுற கம்பெனிடா...'' என்றான்.

"அது சரி... நீ பிரமோஷனுக்கு அலையோ அலைன்னு அலைஞ்சி வேலை பாக்குற? எதிர்பாராம மயூரிக்கு பிரமோஷன் கிடைச்சிருச்சி!'' என்று சொன்னான் குணா.

"அவளுக்கே தெரியாதுடா. சர்ப்ரைஸ் தான். அவளோட ஃப்ரண்ட் ஆஃபிஸ் மேனேஜர் திடீர்னு வேலையை விட்டு நின்னுட்டாங்க. இவள் தான் வொர்க்கஹாலிக் ஆச்சே. சட்டுனு இவளுக்குப் பிரமோஷனைக் கொடுத்துட்டாங்க.''

"மயூரிக்கு,பிரமோஷன் கிடைச்சதை விட, நீ கிஃப்டெல்லாம் கொடுத்து அசத்தினதுல ரொம்பவே சந்தோஷம் போலயிருக்கு...''

"ம்'' என்றபடி கையை உயர்த்தித் தலைக்குப் பின்னால் கோர்த்துக் கொண்டவன், டீபாயின் மீது கால்களை நீட்டி, தளர்வாக அமர்ந்தான். முகம் மலர்ந்திருந்தது.

"என்னடா மாப்பிள்ள? ஏதோ இரகசியச் சிரிப்பு சிரிக்கிற?'' என்று கேட்டான் குணா.

"எல்லாத்துக்கும் காரணம் நீதான். நீ தானே அன்னைக்கு என்னை வற்புறுத்தி அனுப்பி வச்ச... போனதுக்கு செலவு வேற...'' தான் ஏதோ கடமைக்குப் பேசுவது போல இருந்தது அவன் குரல். ஆனால், முகம் மட்டும் அன்றைய நாளின் நினைவின் பூரிப்பில் திளைத்துக் கொண்டிருந்தது.

கட்டில் மீதிருந்த தலையணையைத் தூக்கி அவன் மீது வீசிய குணா, "அன்னைக்கு நீ தானேடா புலம்பின... அந்த லூசுப் பய பேச்சைக் கேட்டு, அவளைக் கொஞ்சம் வாட்டி எடுத்துட்டேன்னு. அதான்... கிடைச்சிருக்கும் சான்ஸை மிஸ் பண்ணிடாதேன்னு சொன்னேன். வொர்க் அவுட் ஆச்சில்ல...?'' என்று புன்னகைக்க, சைலேஷும் தலையை ஆட்டிக் கொண்டான்.

இருவரையும் சாப்பிட அழைக்க வந்த மயூரியின் காதில் அவர்கள் பேசிய கடைசி வாக்கியங்கள் தெளிவாக விழ, உள்ளுக்குள் நொறுங்கிப் போனாள்.

"அப்படியானால், அன்று சைலேஷ் தானாக வரவில்லை. குணா சொல்லித் தான் வந்திருக்கிறான்' என்று நினைக்க நினைக்க, இத்தனை நாட்களாக மனத்தில் இருந்த மகிழ்ச்சியெல்லாம் கணநேரத்தில் வறண்டு போனது.

இருவரையும் அழைக்காமலேயே திரும்பிச் சென்றாள்.

இது எதையும் அறியாத சைலேஷ், "ஆனா, அன்னைக்கு என்னோட பழைய மயூரியைத் திரும்பப் பார்த்தேன்டா. எனக்கே கொஞ்சம் சங்கடமா தான் இருந்தது. இத்தனை நாளா நான் அவளைச் சரியா கவனிக்கலைன்னு ரொம்பக் கஷ்டமா இருந்ததுடா'' என்றான்.



குரலும், முகமும் அவனது உள்ளத்தை அப்படியே பிரதிபலித்தன.

"விடுடா. எல்லாம் சரியாகிடும். வாழ்க்கை நம்ம கைல தான் இருக்கு. அம்மாகிட்டயும் கொஞ்சம் மாற்றம் தெரியுதுன்னு சொன்னியே. எல்லாம் நல்லபடியா நடக்கும். நடந்ததை விட்டுட்டு, நடக்கப் போறதை பாரு'' என்றான் தெளிவாக.

# 30

ரம்யாவின் வளைகாப்பு முடிந்ததும் சாப்பிட அமர்ந்த சைலேஷின் விழிகள், மயூரியைத் தேடின. அவளோ, அதை அறிந்தும் கூட அவனெதிரில் வரவேயில்லை.

ரம்யாவின் அன்னைகூட அவனோடு சேர்ந்து சாப்பிடச் சொல்லியும், மறுத்துவிட்டு தேவையில்லாத வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தவளை அதிருப்தியுடன் பார்த்தார்.

ஏனோ அவளுக்கு, அவனிடம் பேசவே பிடிக்கவில்லை. முடிந்தவரை அவனது கண்களில் படாமலிருந்தாள். இது தற்காலிகம் தான் என்று உணர்ந்திருந்த போதும், அப்போதைக்கு அது

அவசியமாகத் தோன்றியது. நெஞ்சை அழுத்திய வேதனையின் கனம் தாளாமல், தான் ஏதேனும் சொல்லிவிடுவோமோ என்ற பயம் வேறு அவளை ஆட்டிப் படைத்தது.

சற்று நிதானித்துக் கவனித்திருந்தால், சைலேஷின் முகமும், கண்களும் வெளிப்படுத்திய காதலை, அவளால் உணர்ந்திருக்க முடியும். ஆனால், பிடிவாதமாகத் தனக்குக் கடிவாளமிட்டுக் கொண்டு வளைய வந்தவளால், அது முடியாமலே போயிற்று.

வெகுநாட்களுக்குப் பிறகு தன்னைக் கட்டி வைத்திருந்த தளைகளெல்லாம் தகர்ந்து போனதைப் போல, தன்னை இலகுவாக உணர்ந்தான். நெஞ்சின் அடியாழத்திலிருந்த காதல் வாழ்க்கையின் மீது, மீண்டும் பற்று வர ஆரம்பித்திருந்த நேரத்தில், அலுவலகத்திலிருந்து அவனுக்குத் திடீர் அழைப்பு வந்தது.

பேசி முடித்து ஃபோனை அணைத்தவனது முகம், கடுகடுவென இருந்தது. பத்து நாள் அவசர வேலையாக, அவனை டெல்லிக்குப் போகச் சொல்லி ஜி.எம். சொன்னதை வீட்டில் சொன்னான்.

இது வழக்கம் தான் என்பதால் வடிவும், கேசவனும் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், சைலேஷ்தான் மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்தான்.

இதை மயூரியிடம் சொன்ன போது, அவள் "சரி' என்ற ஒற்றை வார்த்தையுடன் நிறுத்திக் கொண்டு, தோளில் உறங்கிக் கொண்டிருந்த ரித்துவைத் தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.



தனது எரிச்சலை அடக்கிக் கொண்டு, கடுகடு வென்ற முகத்தோடே தனது உடைகளைப் பெட்டியில் அடுக்கிவிட்டு நிமிர்ந்த சைலேஷின் மொபைல் ஒலித்தது.

"கிளம்பிட்டியா சைலேஷ்? நான் இன்னும் ஒன் ஹவர்ல வந்திடுறேன்'' என்றான் குணா.

"ம்ம்...'' என்றான் விட்டேற்றியாக.

குணா சிரிப்பை அடக்கிக் கொண்டு, "டேய்! உனக்குப் போகப் பிடிக்கலைனா, வேற யாரையாவது அனுப்பச் சொல்லி ஜி.எம்.கிட்டக் கேட்கறது தானே?'' என்றான்.

"ரொம்ப முக்கியமில்லைன்னா, சாரே என்னை அனுப்ப மாட்டார். அவரே கேட்டு... எப்படி மாட்டேன்னு சொல்றது? ஆனா, இன்னைக்குப் பார்த்துக் கிளம்பச் சொன்னது தான், கொஞ்சம் கஷ்டமா இருக்கு. பத்து நாள்டா...'' என்றான் ஏமாற்றத்துடன்.

குணா எதுவும் சொல்லாமல். அமைதியாக இருந்தான்.

"ம்ச்சு... மூணு நாள் லீவ் போட்டுட்டு, மயூவை எங்கேயாவது வெளியூர் கூட்டிட்டுப் போகலாம்னு இருந்தேன். பிளானெல்லாம் சொதப்பிடுச்சி!'' என்றான் வருத்தத்துடன்.

"நீதான் லீவ் போட்டுட்டு மயூரியைக் கூட்டிட்டுப் போகணுமா? மயூரியை ஒரு பத்து நாள் லீவ் போடச் சொல்லுடா...!'' என்று நண்பனுக்கு ஒரு சுலபமான தீர்வைச் சொன்னான் குணா.

"இது நல்ல ஐடியாடா! எனக்குத் தோணவே இல்லை

பாரேன். இப்போவே கேட்கறேன். ஆனா, ஃப்ளைட் டிக்கெட்...?'' என்று இழுத்தான்.

"நீங்க தயாராகுங்க... எங்க டிராவல்ஸ் ஆஃபிஸ்ல சொல்லி, டிக்கெட்டுக்கு நான் ஏற்பாடு செய்றேன். இன்னும் ரெண்டு மணிநேரத்துல ஏர்போர்ட்ல இருக்கணும். சீக்கிரம்...'' என்றவன், தொடர்பைத் துண்டித்தான்.

"அம்மா! மயூரி எங்கே?'' என்றபடி ஹாலுக்கு வந்தான் சைலேஷ்.

"குழந்தையைக் கூட்டிகிட்டு மாடிக்குப் போயிருக்கா...'' என்றார் வடிவு.

பதிலேதும் சொல்லாமல், பரபரப்புடன் செல்லும் மகனை ஆச்சரியத்துடன் பார்த்தார் வடிவு.

✶ ✶ ✶

"ரித்து குட்டி! எங்கே இருக்கீங்க? அத்தை கண்ணைத் திறக்கறதுக்குள்ள சீக்கிரம் ஓடிவந்து இந்தத் தோசையைச் சாப்பிட்டுட்டுப் போயிடுவீங்களாம்...'' என்று கண்களை மூடிக் கொண்டு, கையில் தோசை விள்ளலுடன் நின்றிருந்தாள் மயூரி.

பூனை போல அடிமேல் அடிவைத்து வந்து கொண்டிருந்த ரித்திகாவை, அங்கே வந்த சைலேஷ் தூக்கிக் கொண்டான்.

"ரித்து கண்ணா! எங்கே இருக்கீங்க?'' என்று மயூரி குரல் கொடுக்க, "ஷ்!' என்று உதட்டின் மேல் விரல் வைத்து, "சப்தமிடாதே' என்பது போல செய்கை செய்தவன், குழந்தையுடன் மயூரியின் பக்கவாட்டில் வந்து நின்றான்.



அவள் மறுமுறை குரல் கொடுக்கும் முன், அவளது கன்னத்தில் யாரோ முத்தமிட்டதும், சட்டெனக் கண்ணைத் திறந்தவள், பயத்தில் ஒரு நொடி தடுமாறி விட்டாள்.

"ஹய்யா! அத்தை கண்ணைத் திறந்துட்டாங்க... அவுட்!'' என்று முத்தமிட்டு விட்டுச் சிரித்த குழந்தையைப் பார்த்ததும் அவளுக்குச் சற்று நிம்மதியாக இருந்த போதும், உடல் மெல்ல அதிர்ந்து கொண்டிருந்தது.

குழந்தையைப் பார்த்துக் கொண்டிருந்த சைலேஷ், மெதுவாகத் தான் மயூரியின் நிலையை உணர்ந்தான். பாட்டிலில் இருந்த தண்ணீரை மளமளவெனக் குடித்து, தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள முயன்றாள். ஆனால், எதிர்பாராத இந்தச் செயலால் அதிகமாகவே பயந்திருந்தாள். இதயம் தாறுமாறாகத் துடிப்பதை கட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை அவளால்.

குழந்தையை கீழே விட்டவன், "மயூ!'' என்றபடி, அவளது தோளைப் பற்றினான்.

சட்டென அவனது கையைத் தட்டிவிட்டவள், "என்ன காரியம் செய்தீங்க? மொட்டை மாடியில, அதுவும் பக்கத்துல குழந்தை வேற... ச்சே!'' என்றாள் கோபத்துடன்.

"ஹே! நிறுத்து நிறுத்து! முதல்ல ஒண்ணைக் கிளியர் பண்ணிக்கோ. குழந்தையை தூக்கி வச்சிருந்தது தான் நான்! உனக்கு முத்தம் கொடுத்தது ரித்துதான். மொட்டை மாடியில வச்சி... அடுத்தவங்களுக்குக் காட்சிப் பொருள் ஆகற இன்டீசண்டான ஆள்... நான் இல்லை!''

மெதுவாக ஆரம்பித்து, அழுத்தமாகச் சொல்லி முடித்தான் சைலேஷ்.

"ஆமாம்... அடுத்தவங்க சொல்லிக் கொடுத்து, அடுத்தவங்க பேசறதை வச்சி நடந்துக்கற உங்களை, அப்படி நினைச்சது என் தப்பு தான்!' என்று மனத்திற்குள் நினைத்துக் கொண்டாள்.

தன்னையே பார்த்துக் கொண்டிருந்தவனைச் சலனமே இல்லாமல் பார்த்தவள் தட்டையும், பாட்டிலையும் எடுத்துக் கொண்டு படியை நோக்கி நடந்தாள்.

வந்த காரியத்தை மறந்துவிட்டு தான் ஏதேதோ பேசுவதை உணர்ந்தவனாக, குழந்தையுடன் அவள் பின்னாலேயே நடந்தான்.

''மயூ! ஒரு பத்து நாளைக்கு ஆஃபிஸுக்கு லீவ் போட்டுட்டுக் கிளம்பு!''

படிக்கட்டின் அருகில் வந்தவள் நின்று, "எங்கே?'' என்று கேட்டாள்.

"என்கூட டெல்லிக்கு'' என்றான்.

அசிரத்தையுடன் பார்த்தவள், "எனக்கு வேலை சென்னைலதான். டெல்லில இல்ல!'' என்றாள்.

"நான் லீவ் போட்டுட்டுத் தானே வரச் சொல்றேன்?''

"சாரி! என்னால இப்போ வரமுடியாது. அதோட, உங்களுக்கும் செலவு வேற'' என்றாள் குத்தலாக.

"என்ன சொல்ற? உனக்குச் செய்யாம, யாருக்குச் செய்யப் போறேன். அதோட... அக்காமடேஷனை ஆஃபிஸ்லதான் கொடுக்கப் போறாங்க... உனக்கான போற வர்ற செலவும், சாப்பாட்டுச் செலவும் மட்டும்தானே எக்ஸ்ட்ரா?'' என்றான்.



இழுத்துப் பிடித்த பொறுமையுடன், "சொன்னா புரிஞ்சிக்குங்க. ப்ரமோஷன் வந்து ஒரு மாசம் கூட ஆகலை. திடீர்னு சொல்லாம கொள்ளாம பத்து நாளெல்லாம் லீவ் போட முடியாது'' என்றவள், அவனது பதிலை எதிர்பார்க்காமல் விறுவிறுவென படியிறங்கினாள்.

"ச்சே! புரிஞ்சிக்காம படுத்தறா...' என்று மனத்திற்குள் புலம்பியவன், அமைதியாக வீட்டிற்குள் வந்தான்.

அவளது நடவடிக்கைகள் எல்லாம் அவனுக்குப் புதிதாகத் தோன்றியது. இதற்கு முன்பும் இருமுறை வெளியூர் சென்றிருக்கிறான். அப்போதெல்லாம் அவள் எப்படியிருப்பாள் என்று அறிந்திருந்தவனுக்கு, ஏதோ சரியில்லை என்பது மட்டும் புரிந்தது.

ஆழப்பார்வை ஒன்றைச் செலுத்தியவன், கிளம்பும் நேரம் ஏதும் பேசி பிரச்சனையை வளர்க்க விரும்பாதவனாக, அமைதியாக இருந்தான்.

காரில் உர்ரென்ற முகத்துடனேயே வந்தவனை, குணாவும் எதுவும் கேட்கவில்லை.

காரை பார்க்கிங்கில் நிறுத்தியவன், "விடுடா. அவளோட வேலையும் முக்கியம் தானே... அதை நாம நினைக்கவேயில்ல!'' என்றான் ஆறுதலாக.

"இல்லடா. இத்தனை நாள் இருந்த மயூரியே இல்லடா அவள். அவளைக் கூட்டிட்டுப் போனா, எனக்குச் செலவாம். இப்படி உளறினா, என்ன செய்றது?'' என்றான் கோபத்துடன்.

தலையைக் கோதிக்கொண்டு, "சரி தேங்க்ஸ்டா. நீ கிளம்பு... ரம்யா வெயிட் பண்ணுவாங்க!'' என்று

சொல்லிவிட்டு விடைபெற்றுக் கிளம்ப, குணா அவன் சொல்லிவிட்டுச் சென்ற உளறலை நினைத்துக் கவலை கொண்டான்.

# 31

கடிகாரத்திலிருந்த நியான் முட்கள் மணி ஒன்று என்று காட்டியதை, வெறித்துக் கொண்டு படுத்திருந்தாள் மயூரி. உறக்கமோ, 'வருவேனா' என்றது.

அருகில் படுத்திருந்த ரித்து தூக்கத்தில் சிணுங்க, அவளைத் தட்டிக் கொடுத்து ஆசுவாசப்படுத்தியவள், தன்னை நிதானப்படுத்திக் கொள்ள முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்தாள்.

தன்னை டெல்லிக்கு வரச் சொல்லி சைலேஷ் அழைத்த போது அவனுடன் செல்ல வேண்டும் என்ற ஆசை, அளவிற்கு அதிகமாகவே இருந்தது. ஆனால், அவனது வார்த்தைகள் அதை வெளிக்காட்ட விடாமல் தடுத்து விட்டன.

தன் கற்பனைகள் கை சேரும் என்று நினைத்து இருமாந்திருந்த நேரத்தில், சட்டென்று அவையெல்லாம் கானலாகிப் போனதை நினைத்து வேதனையாக இருந்த்து. எழுந்து இருக்கையில் அமர்ந்தாள்.

வாழ்க்கையில் தனக்கு ஒரு குடும்பம் வேண்டும்; தன் மீது அன்பைப் பொழியும் உறவுகள் வேண்டும் என்று ஆசைப்பட்டாளே தவிர, இதெல்லாம் நடக்கும் என்று ஒரு நாளும் நினைத்ததில்லை.



அவளைப் பொறுத்த வரையில், வாழ்க்கையைப் பற்றிய கனவுகளை வளர்த்துக் கொள்ளாமல் தான் இருந்தாள்... அவனைச் சந்திக்கும் வரை.

அவளே எதிர்பார்க்காத நேரத்தில், அவளுக்காகவே ஒருவன் வந்தான். உரிமையோடு அவளைக் கைப்பிடித்தான். காதல் வாழ்க்கையின் சந்தோஷத்தைக் கற்பித்தான். ஆனால், அவையெல்லாமே ஆரம்பித்த வேகத்திலேயே மறைந்து போனது தான், அவளுக்கு வெகு ஏமாற்றமாக இருந்தது.

திருமணமான புதிதில், "உங்களுக்கு என்ன வெல்லாம் பிடிக்கும்?'' என்று அவனைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆவலில் அவனிடம் வினவிய போது, குறுகுறுவென்ற பார்வையுடன், "உன்னை ரொம்பப் பிடிக்கும்!'' என்று புன்னகையுடன் சொன்னவன் தானே அவன்?

அந்த வார்த்தைகளில் இருந்த காதலும், கனிவும் இப்போது அவனிடம் துளியாவது இருக்கிறதா? என்று எண்ணிப் பார்த்தாள். சமீப காலமாக இருவரும் அப்படி மனம் விட்டுப் பேசிக் கொண்டதாக நினைவே இல்லை.

"வீட்டுக் கடனை அடைக்க வேண்டும், வாகனக் கடனை அடைக்க வேண்டும் என்று வாழ்க்கைச் சக்கரத்தின் சுழற்சியில் சிக்கி, வேலை... வேலை என்று... எப்போதும் அதிலேயே உழன்று, வாழ்க்கையின் முக்கியமான தருணங்களை இழந்து கொண்டிருக்கிறோம்!' என்று மனத்தில் சலிப்பொன்று தோன்றியது.

அவளது மனமோ, அந்த நேரத்திலும் ரம்யாவையும் – குணாவையும் நினைத்துப் பார்க்கத் தவறவில்லை.

"எப்போதும் கணவனிடம் ஓயாமல் வாயடித்துக் கொண்டிருக்கும் ரம்யாவும், அவள் எது சொன்னாலும் அதற்கு இடக்காகப் பேசி... வாங்கிக் கட்டிக் கொண்டாலும், அவளையே சுற்றிச் சுற்றி வரும் குணாவும் நினைவலையில் வந்தனர். அவர்களால் மட்டும் எப்படி இத்தனை அன்னியோன்யமாக இருக்க முடிகிறது?'

"தூரத்துப் பச்சை கண்ணுக்குக் குளிர்ச்சி' என்பதை அவள் அறிந்திருந்த போதும், ஏனோ அதைப் புரிந்து கொள்ளாமல் இருந்தாள்.

அந்த ரம்யாவைக் கேட்டால் அல்லவா சொல்வாள், "சைலேஷ் போன்ற ஒருவன் கிடைக்க மயூரி கொடுத்து வைத்திருக்க வேண்டும்'' என்று.

அவளுக்கு நன்றாகவே தெரியும், மயூரியைப் பற்றி அறிந்தவர்கள் யாராக இருந்தாலும், ஒரு நிமிடம் யோசிப்பார்கள். கல்லூரி நாட்களில் அவள் பார்க்காத ஆண்களா? மயூரியிடம் தங்களது மனத்தை வெளிப் படுத்தியவர்கள், அவளைப் பற்றி அறிந்ததும், திரும்பியே பார்க்காமல் போன கதைகள் உண்டு.

ஆனால், அவளைப் பற்றி குணாவே எடுத்துச் சொல்லியும், ஒரு நொடி கூட யோசிக்காமல், "நான் காதலிப்பது மயூரியைத் தான். அவளது குலமோ, பிறப்போ எங்கள் காதலுக்கு என்றுமே தடையாக இருக்க முடியாது!'' என்று சொல்லிவிட்டு, திடமாக நின்று அவளைக் கைப்பிடித்தவன் தானே சைலேஷ்?

குணாவைப் போல, சைலேஷ் வசதி வாய்ப்புடன் வளர்ந்தவன் அல்ல. சாதாரணப் பள்ளியிலேயே



படித்தான். பெரிதாகப் பணபலமும், பின் புலமும் இல்லாதவன். தன்னைத் தானே வளர்த்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருந்தவன்.

குடும்பத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகள் இருந்தன. படித்து முடித்ததுமே, தனது தந்தையின் கையை எதிர் பார்க்கவில்லை. தனக்கென ஒரு வேலையைத் தேடிக் கொண்டான். சுய சம்பாத்தியத்தில் இருசக்கர வாகனம் வாங்கினான்.

தங்கையின் திருமணத்திற்கும், தன்னால் முடிந்ததைச் செய்தான். வேலையில் சேர்ந்த மூன்றாவது வருடம், லோன் மூலமாக இந்த அடுக்குமாடிக் குடியிருப்பை வாங்கியிருந்தான்.

வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும், தன்னை உயர்த்திக் கொள்ள போராட வேண்டியிருந்தது. சளைக்காமல் போராடி, அதில் வெற்றியும் கண்டான். அந்தப் போராட்டக் குணம் தான், மயூரியை அவன் மணந்து கொள்ள ஏதுவாக இருந்தது.

அவனைப் பற்றிய அத்தனை விஷயங்களையும் அறிந்திருந்த மயூரியே, இப்போது அவனைப் புரிந்து கொள்ளாமல், தனது மன தைரியத்தை இழந்து கொண்டிருந்தாள்.

கண்களை மூடி அமைதியாக அமர்ந்திருந்த போதும், அவளது மனம் அலைகடலாகக் கொந்தளித்துக் கொண்டிருந்தது. மொபைலில் வந்த குறுஞ்செய்தியின் ஒலியால், நினைவுலகிற்கு வந்தாள் அவள்.

தான் டெல்லிக்கு வந்து சேர்ந்து விட்டதாகத் தகவல் அனுப்பியிருந்தான் சைலேஷ்.

மணி நான்கு ஆகியிருந்தது. ஒரு பெருமூச்சுடன் போனை வைத்துவிட்டு சோர்வுடன் கண்களை மூடினாள்.

* * *

யார் எந்த மனநிலையில் இருந்தாலும் நேரமும், காலமும் யாருக்காகவும் நிற்பதில்லை. பத்து நாட்கள் ஓட்டமாக ஓடி மறைந்தது.

தனது அத்தனை வேலைகளுக்கு இடையிலும், தினமும் அவளிடம் இரு முறையாவது பேசினான். அவ்வப்போது, "நீயும் வந்திருக்கலாம் மயூ!'' என்று தன் உள்ளக்கிடக்கையை மறைக்காமல் வெளிப் படுத்தினான்.

ஆனாலும், மயூரியால் இவற்றையெல்லாம் இயல்பாக எடுத்துக் கொள்ள முடியவில்லை. அவன் ஊரிலிருந்து வந்ததும், என்னென்ன நடக்குமோ என்ற அச்சம் அதிகமாகவே இருந்தது.

'தன்னால் ஏன் இதைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியவில்லை?' என்று தன்னையே கேட்டுக் கொண்டாள்.

இன்னும் இயல்பாகப் பேச ஆரம்பிக்காத வடிவாம்பாளே, அவளது முகவாட்டத்தைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தார். ஆரம்பத்தில், இது கணவனின் பிரிவால் இருக்கும் என்றுதான் நினைத்தார்.

ஆனால், நாட்கள் செல்லச் செல்ல அவள் தனக்குள் ஒடுங்குவதைப் போலத் தோன்ற, மனத்தில் கவலை உண்டானது. ஒருநாள் தயங்கித் தயங்கி, "உடம்பு ஏதும் சரியில்லையா?'' என்று வாய் விட்டுக் கேட்டே விட்டார்.

மயூரியால் தன் காதுகளையும், கண்களையுமே நம்பமுடியவில்லை. திருதிருவென விழித்தவளைப் பார்த்த வடிவிற்கோ, பயமாகிவிட்டது.



"மயூரி!'' என்றபடி, அவளது தோளைத் தொட்டார்.

அதிர்ச்சியிலேயே, "வேலை அதிகம் அத்தை!'' என்ற மயூரி, வேகமாக அறைக்குள் வந்து நின்றாள்.

அவளது மனநிலையை உணர்ந்து கொண்ட வடிவு, அவளைப் பாவமாகப் பார்த்தார். ஆனாலும், அதற்கு மேல் அவளிடம் ஏதும் பேச முற்படவில்லை.

சைலேஷ் போன் செய்தால், "இல்லை', "ஆமாம்' "வேலையிருக்கிறது'... என்று ஏதேனும் சாக்கு போக்குச் சொல்லி போனை வைத்துவிடுவாள். அன்றோ அவனிடம் விஷயத்தைச் சந்தோஷத்துடன் பகிர்ந்து கொண்டாள்.

சைலேஷிற்கு, இத்தனை நாள் மனத்திலிருந்த ஒரு உறுத்தல் மறைந்தது. அவள் சகஜமாகிவிட்டாள் என்று எண்ணினான். ஆயினும், அவளது பேச்சிற்கான அர்த்தம் மட்டும் அவனுக்குப் புரியாமலேயே இருந்தது.

இருந்தும் அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல், "தான் ஊருக்கு வர, மேலும் நான்கைந்து நாட்கள் ஆகும்' என்ற தகவலைத் தெரிவித்தான்.

போனை வைக்கும் முன்பாக, "உன்னை ரொம்ப மிஸ் பண்றேன் மயூ!'' என்று உருகினான்.

அத்தனை நேரம் சரளமாகப் பேசிக் கொண்டிருந் தவள், வாயடைத்தது போன்று மௌனமாக இருந்தாள்.

"மயூ!'' என்று அவன் மீண்டும் அழைக்க, "எம்.டி. கால் பண்றாங்க... அப்புறம் பேசறேன்' என்று பட்டெனப் போனை வைத்தாள்.

"தான் என்ன நினைக்கிறோம்...? என்ன எதிர்பார்க்கிறோம்...?' என்று அவளுக்கே புரியவில்லை.

# 32

கீழே நின்றிருந்த காரைப் பார்த்தவள், யாருடையதாக இருக்கும் என்ற யோசனையுடன், லிஃப்டிலிருந்து வெளியே வந்தாள். அங்கே நான்கைந்து இளைஞர்களும், சற்றுக் கலவரமான முகத்துடன் இரண்டு யுவதிகளும் நின்றிருந்தனர்.

ஓங்கி ஒலித்த சுந்தரி மாமியின் குரலிலிருந்தே, "அங்கிருந்தவர்கள் யார்? எதற்காக வந்திருக்கிறார்கள்?' என்று தெளிவாகப் புரிந்து போயிற்று மயூரிக்கு.

எதற்கு இந்தம்மாவிற்கு இத்தனை ஆங்காரம்? சொந்தப் பேத்தியும், மருமகளும் தானே...? எதற்காக இப்படி வாயில் வந்ததையெல்லாம் பேசவேண்டும் என்று நினைத்தவளுக்கு, அந்த வார்த்தைகளைக் காது கொண்டு கேட்க முடியவில்லை.

அழைப்பு மணியை அழுத்த அவள் கையை உயர்த்தும் போதே கதவைத் திறந்த கேசவன், "உள்ளே வாம்மா!'' என்றார் அன்புடன்.

அவள் உள்ளே வந்ததும் கதவை மூடிவிட்டு, டீவியின் ஒலியை மேலும் கூட்டி வைத்தார்.

"இருந்தாலும், இந்தத் திவ்யா பொண்ணுக்கு... இத்தனைத் தைரியம் ஆகாது!'' என்று கணவரிடம் சொன்னார் வடிவு.

"அது சரி...! உனக்கென்னமோ... எதுவுமே தெரியாத மாதிரி பேசற? அந்தம்மாவோட குணத்துக்கு... அந்த வைதேகியா இருக்கவிட்டு, இத்தனைக் காலம் அமைதியா



எல்லாத்தையும் பொறுத்துட்டு இருந்தது. வேற ஒருத்தியா இருந்திருந்தா, தெரிஞ்சிருக்கும் சேதி.

திவ்யா சின்னப் பொண்ணா இருந்தாலும், விவரம் தெரிஞ்ச பொண்ணு. தன்னை மதிக்காதவங்ககிட்ட அவமானப்பட்டு வாழறதைவிட, தன் அம்மா... தன்னோடு வந்து சந்தோஷமா இருக்கட்டும்னு நினைக்குது பாரு. அந்தத் தைரியத்தை நீங்கள்ளாம் பாராட்டாம இருந்தாலும் பரவாயில்ல... குறை மட்டும் சொல்லாதீங்க.

இந்தக் காலத்துல, பெத்த பிள்ளைங்க கூட இதையெல்லாம் செய்வாங்களான்னு தெரியாது. ஆனா, வளர்த்த பாசத்தைப் புரிஞ்சிகிட்டு நடந்துக்கறாளேன்னு சந்தோஷப்படு. அதென்னமோ தெரியல... எல்லா மாமியார்களும்... தானும் ஒரு காலத்துல மருமகளா வந்தவங்கங்கறதை... ஏன் தான் மறந்திடுறாங்களோ தெரியலை?'' என்று தனது ஆற்றாமையை வெளிப்படுத்திக் கொண்டார்.

"நான் வெளியுலகம் தெரியாத பொண்ணுன்னு சொன்னேன். இவள் எப்படி வைதேகியையும் கூட்டிகிட்டுப் போய், தனியா வச்சிப் பார்த்துக்க முடியும்னு சொன்னேன். எனக்கு மட்டும் அந்த அம்மாவோட குணம் தெரியாதா?'' என்றார் வடிவு.

அனைத்தையும் கேட்டுக் கொண்டே உடை மாற்றிக்கொண்டு வந்தாள் மயூரி.

அந்நேரத்தில் அழைப்பு மணி ஓசை கேட்க, கதவைத் திறந்தார் கேசவன்.

"வாம்மா!'' என்றவர், "வடிவு!'' என்று மனைவியை அழைத்தார்.

உள்ளே வந்த வைதேகியையும், திவ்யாவையும் சற்றும் எதிர்பார்க்கவில்லை பெண்கள் இருவரும்.

"வாங்க...'' என்று பொத்தாம் பொதுவாய் வடிவு அழைக்க, "வாங்கக்கா!'' என்ற மயூரி, "திவி!'' என்றபடியே, அவளது கரத்தைப் பிடித்துக் கொண்டாள்.

"சொன்ன மாதிரியே, உங்க அம்மாவைத் தனியா கூட்டிட்டுக் கிளம்பிட்ட. சந்தோஷமா இருக்குடா...!'' என்றாள் நெகிழ்சியுடன்.

"சாரி அண்ணி! இன்னைக்குக் கிளம்பறேன்னு உங்கிட்ட முன்னமே சொல்லலை. முதல்லயே வீட்ல தெரிஞ்சிட்டா பிரச்சனை ஆகிடும்... அதான்'' என்றாள் திவ்யா.

"அதெல்லாம் நான் தப்பா நினைச்சிக்கலப்பா. இங்கேயிருந்து போனதுக்குப் பின்னால, எங்களையெல்லாம் மறந்திடாதே. போன் பண்ணு!'' என்று சொல்லிவிட்டுப் புன்னஒகைத்தாள் மயூரி.

"உங்களை ரொம்பவே மிஸ் பண்ணுவேன் அண்ணி!'' என்றபடி, அவளை இறுக அணைத்துக் கொண்டாள் திவ்யா.

வடிவு அனைத்தையும் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார். தன்னைப் பார்த்தாலே, "ஹாய் ஆன்ட்டி!'' என்று ஒரு சிரிப்புடன் சென்று விடுபவள் திவ்யா. ஆனால், மயூரியை அண்ணி என்று அழைத்துப் பழகும் அளவிற்கு இருவருக்குள்ளும் அன்பு இருக்கும் என்று, அவருக்குத் தெரியவே தெரியாது.

அமைதியுடன் நின்றிருந்த வைதேகியைப் பார்த்து, ஸ்நேகத்துடன் புன்னகைத்தாள் மயூரி.



"பத்திரமா போய்ட்டு வாங்க அக்கா!'' என்றாள்.

"சந்தோஷமா போறேன் மயூரி. என் மகளோட இருக்கப் போறேன்... எங்க வாழ்க்கையை எங்களுக்காகவே நாங்க வாழப் போறோம்!'' என்ற வைதேகியின் கண்கள், கண்ணீரைப் பொழிந்தன.

பெண்கள் அனைவருக்குமே அவளது கண்ணீரைக் கண்டதும் இதயம் கனக்க, விழிகள் நனைந்தன.

நேரமாவதை உணர்ந்த கேசவன் வடிவிற்குக் குரல் கொடுக்க, "ஒரு நிமிஷம் மாமா!'' என்ற மயூரி, "அத்தை! கொஞ்சம் வாங்களேன்'' என்று வடிவைக் கெஞ்சலாக மென்குரலில் அழைத்தாள்.

மறுபேச்சில்லாமல் அவளுடன் சென்ற வடிவை, தங்களது அறைக்கு அழைத்துச் சென்று, ஒரு பெரிய கவரை அவரிடம் கொடுத்தாள்.

"அத்தை! திவ்யா இங்கேயிருந்து கிளம்பும் போது நம்ம வீட்டுக்கு வருவான்னு தெரியும். அதான் அவளுக்காக இதை வாங்கி வச்சேன். நீங்களும், மாமாவும் கொடுங்க... ப்ளீஸ்'' என்றாள்.

இரண்டு சேலைகளுடன் வெள்ளி குங்குமச் சிமிழும் இருக்க, வடிவு மருமகளை நிமிர்ந்து பார்த்தார்.

"உங்க மகனுக்கும் தெரியும் அத்தை! அவர்கிட்டச் சொல்லிட்டுத் தான் வாங்கினேன்.''

ஒரு ஆழ்ந்த பார்வையை அவளிடம் செலுத்தியவர், "நீ ஆசையா வாங்கினதை, நீயே கொடு. பெரியவங்க கொடுக்கறதை விட, மனசாரச் சந்தோஷமா கொடுக்கறது தான் முக்கியம்! நீயே கொடும்மா'' - வடிவு.

மயூரி நெக்குருகி நின்றாள்.

"மேடம்! உங்களுக்கு ஃபேக்ஸ் வந்திருக்கு'' என்று ஆஃபிஸிலிருந்து கொண்டு வந்து கொடுத்து விட்டுச் சென்ற கடிதத்தைப் படித்தாள் மயூரி.

பெங்களூருவில் உள்ள ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டல் விழாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் கருத்தரங்கில் கலந்து கொள்ள வேண்டும் என்பதற்கான உத்தரவுக் கடிதம் அது.

தன்னோடு சேர்த்து மேலும் நான்கு பேரின் பெயர்கள் இருந்தன. அதோடு, கருத்தரங்கம் மூன்று நாட்கள் நடைபெறுகிறது என்றும், நாளை மாலையே கிளம்பவேண்டும், அதற்கான ஒப்புதல் கடிதத்தை உடனே மெயிலில் அனுப்பி வைக்க வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

கடிதத்தை மடித்து வைத்துவிட்டு, பதில் அனுப்புவதற்காக மெயிலைத் திறந்தாள்.

✶ ✶ ✶

''ஓகே மிஸ்டர்.சைலேஷ்! உங்க ஜாபை சக்சஸ்புல்லா முடிச்சிட்டு வந்ததுக்கு வாழ்த்துக்கள். அதோட, நீங்க கேட்ட மூணு நாள் லீவையும் சாங்ஷன் பண்றேன். என்ஜாய்...!'' -புன்னகைத்தார் ஜி.எம்.

"தேங்க்யூ சார்! தேங்க்யூ!'' என்று அவரிடம் விடை பெற்றுக் கொண்டு வீட்டிற்குக் கிளம்பினான் சைலேஷ்.

மனம் முழுவதும் பரபரப்பாக இருந்தது.

முன்தினமே டிராவல்ஸ் மூலமாக, மூணார் செல்ல இரயிலில் முன்பதிவு செய்திருந்தான். வழியில் அந்த டிக்கெட்டை வாங்கிக் கொண்டவன், "தான் வருவதை முன்கூட்டியே சொல்லாமல் திடீரெனப் போய் நிற்கும் போது, மயூரியின் முகம் எப்படி இருக்கும்?' என்று எண்ணி தனக்குள் சிரித்துக் கொண்டான்.



ஆனால், வீட்டினுள் நுழைந்தவன் ஹாலிலிருந்த ஏர்பேகையும், வெளியே செல்லத் தயாராகிவிட்டு கைப்பையில் எதையோ தேடிக் கொண்டிருந்த மயூரியையும் பார்த்துத் திகைத்துப் போனான்.

# 33

"**வா**ப்பா குணா! எப்படியிருக்க? வீட்ல எல்லோரும் சௌக்கியமா?''

"எல்லோரும் சௌக்கியம்மா. நீங்கள்ளாம் நல்லா இருக்கீங்களா?'' என்று விசாரித்தான் குணா.

பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தவன், ரம்யாவின் டெலிவரி நாள் நெருங்கிவிட்டதால், ஒருவாரம் விடுமுறையில் வந்திருப்பதாக வடிவிடம் சொல்லிக் கொண்டிருந்தவன், அங்கே வந்த சைலேஷைக் கண்டதும் திகைப்புடன் பார்த்தான்.

கலைந்த தலையும், நலுங்கிய உடையுமாக வந்து நின்றவனைப் பார்த்ததுமே நிலைமையை உணர்ந்து கொண்ட குணா, மேற்கொண்டு எதுவுமே பேசவில்லை.

வடிவு கொண்டுவந்து கொடுத்த காஃபியைக் குடித்தபடி, சைலேஷின் அறைக்குள் வந்து அமர்ந்தனர்.

எத்தனைக் குஷியாக, அன்று தன்னிடம் மூணார் செல்லப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தான்!

இப்படி ஒட்டு மொத்தமாக ஏமாற்றத்துடன் உட்கார்ந்திருக்கிறானே என்று கவலையுடன் சைலேஷைப் பார்த்தான்.

சலிப்புடன் நடந்ததையெல்லாம் சைலேஷ் சொல்ல, சிரிக்கக் கூடாது என்ற நினைத்த போதும், குணாவால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

"என் நிலைமையைப் பார்த்தா உனக்குச் சிரிப்பா இருக்காடா...?'' - எரிச்சலுடன் கேட்டான் சைலேஷ்.

"கோச்சிக்காதடா! ஏற்கெனவே அப்பப்போ ஏதாவது செய்து, மயூரிகிட்ட மாட்டிக்கிற? பெரிசா சர்ப்ரைஸ் கொடுக்கறேன்னு, சொல்லாம கொள்ளாம வீட்டுக்கு வந்த... என்னாச்சு? மயூரி கிளம்பி ஊருக்குப் போய்ட்டா. தேவையா உனக்கு?'' - சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டு கேட்டான் குணா.

"எல்லாம் என் நேரம்! நீயெல்லாம் கிண்டல் பண்ற அளவுக்கு, என் நிலைமை ஆகிப் போச்சு!'' என்று சலித்துக் கொண்டான் அவன்.

"சரிடா புலம்பாதே. நீ வர்றதைத் தான் சொல்லலை. ஆனா, ஊருக்குப் போறதை மயூரி உன்கிட்ட சொல்லலையாடா?'' என்று கேட்டான்.

"நைட் பேசும் போது அவள் சொல்லத் தாண்டா வந்தா. சிக்னல் சரியில்லாமல் ரெண்டு மூணு தடவை கட்டானதால, சரி... நாளைக்கு நேரில் போய் விஷயத்தைக் கேட்டுக்கலாம்னு நினைச்சி, போனைக் கட் பண்ணிட்டேன்!'' என்றான் பரிதாபமாக.

வாய்விட்டுச் சிரித்த குணா, "நீ சந்தோஷமா இருக்கறது, அந்த மொபைல் கம்பெனிகாரனுக்குக் கூடப்



பிடிக்கலைடா...'' என்று சொல்லிவிட்டு, மீண்டும் சிரித்தான்.

"தலையெழுத்து...!'' என்று நொந்து கொண்டவன், "டேய்! எனக்கும் ஒரு நேரம் வராமல் போகாது. அன்னைக்கு மாட்டினடா நீ...'' என்ற சொன்ன சைலேஷ், அதன்பின்னரே சற்றுச் சகஜமானான்.

"இப்பவாவது சிரிச்சித் தொலைச்சியே... அப்புறம்?'' என்றான் குணா.

"என்ன அப்புறம்?''

"இல்ல... அடுத்து என்ன செய்யப் போற?'' என்றான்.

"நிறைய செய்யணும்னு நினைச்சிட்டு இருக்கேன். ஆனா, அதையெல்லாம் உன்கிட்ட சொல்ற ஐடியால இல்ல...'' என்றான் அழுத்தமாக.

"இது கூடப் புரியாதா எனக்கு? ஆனா, அதுக்கு முன்னாடி... எத்தனை நாள் மயூரி பெங்களூரில் இருப்பான்னு மட்டும் கன்ஃபார்ம் பண்ணிக்க. இல்லனா...'' என்று சிரித்த குணா, வேகமாக சைலேஷ் எழுவதைக் கண்டதும் அதைவிட மின்னல் வேகத்தில் ஹாலுக்கு ஓடினான்.

* * *

**தோ**ழிகளுடன் பேசிக்கொண்டே லிஃப்டிலிருந்து வெளியே வந்த மயூரிக்கு, ரிசப்ஷனில் ஏதோ கேட்டுக் கொண்டிருந்த சைலேஷைக் கண்டதும் பகீரென்றது.

பேசிக்கொண்டே வந்தவள் திடீரென மௌனமாகியதும், ஆணியடித்தாற் போல் அவள் பார்வையைச் செலுத்திய திசையைப் பார்த்தனர் தோழிகள்.

அந்த நேரமும், சைலேஷும் அவர்களிருந்த பக்கமாக திருப்பவும் சரியாக இருந்தது.

உடன் வந்தவர்களில் ஒருத்தி, "மயூரி! உன் ஹப்பி தானே?'' என்று கேட்க, தவிப்புடன் தலையசைத்தாள்.

அவன் அவர்களை நோக்கி வரவும், தோழிகள் மயூரியைப் பார்த்துக் குறும்பாகச் சிரித்தனர்.

அருகில் வந்தவன் அவர்களைப் பார்த்து, "ஹாய்!'' என்று கையசைத்துப் புன்னகைத்தான்.

"என்ன சார்? ரெண்டு நாள் கூட, மயூரியை விட்டுட்டு இருக்க மாட்டீங்களா?'' என்று ஒருத்தி கேலியாகக் கேட்டதும், மற்றவர்கள் சிரித்துவிட, மயூரிக்கு அவஸ்தையாக இருந்தது.

சங்கடத்துடன் நெற்றியைத் தடவிக் கொண்டே அவன் பதில் சொல்வதற்குள், "சாரி! கொஞ்சம் லேட்டாகிடுச்சி!'' என்றபடி அங்கு வந்த நடுத்தர வயது பெண்மணி, சைலேஷைக் கேள்வியுடன் பார்த்தார்.

அதற்குள் தன்னைச் சுதாரித்துக் கொண்ட மயூரி, "மேடம்! இவர் என் ஹஸ்பண்ட், மிஸ்டர்.சைலேஷ்'' என்றவள், "இவ்ங்க எங்க எம்.டி.'' என்று அவனுக்கு அறிமுகப்படுத்தினாள்.

"ஹலோ! மிஸ்டர்.சைலேஷ்...'' என்றபடி அவனது கரத்தைப் பற்றிக் குலுக்கியவர், தனது கணவருக்கும் அவனை அறிமுகப்படுத்தி வைத்தார்.

"பிஸினஸ் விஷயமா வெளிநாட்டுக்குப் போயிருந்ததால, உங்க கல்யாணத்துக்கு என்னால வரமுடியலை. ஆனா, நம்ம மயூரியோட ஹீரோவை என்னால பார்க்க முடியலையேன்னு நினைச்சிக்குவேன்.



இப்போதான் அதுக்குச் சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு'' என்றவர் சிரித்தார்.

"நீங்க...'' என்று ஆரம்பித்தவர் பாதியில் நிறுத்திவிட்டு, "ரூம் கிடைச்சுதா?'' என்று கேட்டார்.

"இல்ல... கான்ஃபரன்ஸ்க்காக எல்லா ரூமும் ஃபுல்லா இருக்கு. வேற ஹோட்டல்ல தான் பார்க்கணும்'' என்றான்.

''ஓஹ்! என்றவர், "ஒண்ணும் பிரச்சனை இல்லை...'' என்றவர், சற்றுத் தள்ளி நின்று பேசிக் கொண்டிருந்த மயூரியின் அறையில் தங்கியிருந்தவளை அழைத்தார்.

ஏதோ பேசிவிட்டு மயூரியை அழைத்து என்னவோ சொன்னார்.

சரியெனத் தலையாட்டிக் கொண்டு அவனை நோக்கி வந்தவளது முகம், விளக்கெண்ணெயைக் குடித்தது போல இருந்தது.

"என்கூட வாங்க...'' என்று அவனைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு, தான் தங்கியிருந்த அறைக்கு அழைத்துச் சென்றான்.

"தோழிகள் பெரிதாக எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாவிட்டாலும், தன்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்?' என்பதே அவளது பெரும் கவலையாக இருந்தது.

அறைக்கதவைத் திறந்து உள்ளே சென்றவள், "நீங்க குளிச்சிட்டு ரெஸ்ட் எடுங்க. நான் ஈவ்னிங் ஏழு மணிக்குத் தான் வருவேன். போன் பண்ணா லஞ்ச் கொண்டு வருவாங்க. இல்லைனா, கீழேயே ரெஸ்டாரண்ட் இருக்கு...'' என்று சொன்னாள்.

ஷோல்டர் பேகை டீபாயின் மீது வைத்துவிட்டு, அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் சைலேஷ்.

"எ..என்க்கு நே...ரமாகுது. நான் கிளம்பறேன்!'' என்றாள் தடுமாற்றத்துடன்.

"மயூ!'' என்று வெளியே செல்லத் திரும்பியவளது மணிக்கட்டைப் பற்றியவன், "வெரி சாரிடா!'' என்றான்.

அவள் மௌனமாக நிற்க, "நான் என்னைப் பத்தி மட்டும் தான் நினைச்சேன். உனக்கு ரொம்ப தர்மசங்கடமா இருக்கும் இல்ல...?'' என்றான்.

அவனது குரலே இறங்கிப் போயிருந்தது.

"இப்போதாவது புரிந்ததே.... சந்தோஷம்!' என்று மனத்திற்குள் நினைத்துக் கொண்டவள், "பரவாயில்ல...'' என்றாள்.

ஆழ்ந்து அவளது முகத்தை ஊடுருவியவன், "அதைக் கொஞ்சம் சிரிச்சா மாதிரி சொல்லலாமில்ல...?'' என்றவன், அவளது இடையை வளைத்து தன்னருகில் இழுத்தான்.

ஏனோ அவளால் நிமிர்ந்து அவனை நேருக்கு நேராகப் பார்க்க முடியவில்லை. பார்வை அவனது கண்களைச் சந்திக்காமல், அங்குமிங்கும் அலை பாய்ந்தது.

அவளது தவிப்பைக் கண்டதும், "போய் வா! உனக்காகக் காத்துட்டு இருப்பாங்க!'' என்று புன்னகையுடன் விலகினான்.

தவிப்பும், துடிப்பும் போட்டி போட, "அங்கிருந்து சென்றால் போதும்' என்பதைப் போல வேகமாக வெளியேறினாள் மயூரி.



# 34

**கை**யிலிருந்த உணவை அளைந்து கொண்டிருந்த மயூரி, தன்னருகில் யாரோ வந்து அமர்வதை உணர்ந்து திரும்பிப் பார்த்தாள்.தனது எம்.டியைக் கண்டதும், "மேடம்!'' என்றபடியே எழுந்தாள்.

"ஹே! உட்கார். சாப்பிடும் போது எழுந்துக்கக் கூடாது. உனக்கு என் மேல ரொம்பவே மரியாதை இருக்குன்னு தெரியும்'' என்று புன்னகைக்க, மயூரியும் லேசாக முறுவலித்தாள்.

ஸ்பூனால் உணவை அள்ளியபடி, "என்ன குழப்பம் உனக்கு?'' என்று கேட்டார்.

"மேடம்!'' என்றபடி விழித்தாள் அவள்.

"சொல்லாம்னா சொல்லு. இல்லைனா பரவாயில்லை!'' என்றார் எம்.டி.

"அது... வந்து... சாரி மேடம்! அவர்...'' என்றவள், சொல்ல முடியாமல் பாதியிலேயே நிறுத்தினாள்.

புன்னகையுடன் ஜாமூனைச் சுவைத்தவர், "ம். ஸ்வீட் ரொம்ப நல்லா இருக்கு. நீயும் சாப்பிடு!'' என்றார்.

அவளும் சொன்னதைச் செய்யவும், "நீ ரொம்ப லக்கி!'' என்று புன்னகைத்தார்.

மயூரி இமைக்காமல் அவரைப் பார்த்தாள்.

"எனக்கும் ரெண்டு பசங்க இருக்காங்க தெரியுமில்ல...?'' என்றவருக்கு, "ஆம்' என்பது போலத் தலையசைத்தாள்.

"எப்பவும் வேலை வேலைன்னு அலைவாங்க. வீக் எண்ட் ஆனா போதும், வைஃபைக் கூட்டிட்டு, ஜாலியா எங்கேயாவது கிளம்பிடுவாங்க. இவ்ளோ ஏன்... என் வீட்டுக்காரரையே எடுத்துக்க, எங்களுக்குக் கல்யாணமாகி இருபத்தெட்டு வருஷம் ஆகப் போகுது. இன்னும் என்னையே சுத்தி வரார்.

சொல்லப் போனா, இதுல எனக்கு ரொம்பச் சந்தோஷம்... ஏன்... பெருமையும் கூட. எத்தனைப் பொண்ணுங்களுக்கு இந்த மாதிரி வீட்டுக்கார் கிடைப்பார்? உன் மேல இருக்கும் பிரியத்தால் தானே, உன்னைத் தேடி வந்திருக்கார்? இதையெல்லாம் நினைத்து ஃபீல் பண்ணாதே. நம்மையே சுத்தி வர ஒரு அடிமை சிக்கியிருக்காரேன்னு சந்தோஷப்படு!'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தார்.

மயூரியும் மெல்லப் புன்னகைத்தாள்.

"தட்ஸ் குட்! இப்பிடியே இருக்கணும். இன்னைக்கு நைட் உங்க ரெண்டு பேருக்கும் டின்னர், எங்க கூடத் தான்'' என்றார் எம்.டி.

"பரவாயில்லை மேடம்! அவர் ஏதாவது பிளானில்...'' என்றவள், சட்டென வாயை மூடிக் கொண்டாள்.

"ம், கள்ளி! அப்படிச் சொல்லு'' என்று சிரித்தவர், "எதுவா இருந்தாலும், நாளைக்கு அந்தப் ப்ரோக்ராமை வச்சிக்கங்க. ஓகே?'' என்றார்.

அவளும் சம்மதமென்று தலையை ஆட்டிச் சிரித்தாள்.

* * *



வெளியே செல்லத் தயாராக நின்றிருந்த கணவனை, கேள்வியுடன் பார்த்தாள் மயூரி.

"எங்கேயாவது வெளியே போறீங்களா?''

"ம். வேற ஹோட்டல்ல ரூம் போட்டிருக்கேன். டின்னர் முடிச்சிட்டு வந்தால், கிளம்பச் சரியாக இருக்கும்.''

"ஓஹ்! ரூம் ஓகே. ஆனா, எங்க எம்.டி., நம்ம ரெண்டு பேரையும் அவங்களோட டின்னர் சாப்பிடக் கூப்பிட்டிருக்காங்க. நானும்...'' என்றவளைக் கூர்ந்து பார்த்தான்.

"இல்ல... முதல்ல வேண்டாம்... அவர் ஏதாவது பிளான் வச்சிருப்பாருன்னு சொன்னேன். ஆனாலும் அவங்க வற்புறுத்தினாங்க... அதுக்கு மேல என்னால மறுக்க முடியல!''

"அவ்வளவு தானே? போய்ட்டா போச்சு. அதோட நீ இவ்வளவு பதட்டப்பட வேண்டிய அவசியமே இல்ல. ஏற்கெனவே உங்க எம்.டியும் அவரோட ஹஸ்பண்டும், என்கிட்டச் சொல்லிட்டாங்க'' என்று சொல்லிவிட்டு, அவளைப் பார்த்து புருவம் உயர்த்திச் சிரித்தான்.

"இதுல ஒண்ணும் குறைச்சல் இல்ல...!'' என்று முணுமுணுத்தவள், கழுத்திலிருந்த முத்துமாலையை கழற்ற முயன்றபடி, ட்ரெஸ்சிங் டேபிள் முன்னால் சென்று நின்றாள்.

"வேற எதுல குறைச்சல்?'' என்றபடி, அவளுக்குப் பின்னால் வந்து நின்றான் சைலேஷ்.

அவனைக் கவனிக்காமல், முத்துமாலையின் கொக்கியை அவிழ்க்க முயன்றாள். ஆனால், அது வராமல் நன்றாக மாட்டிக் கொண்டது.

வேறு வழியில்லாமல், "இதைக் கொஞ்சம் கழட்டி விடுங்களேன்'' என்று கையை உயர்த்திப் பிடித்தபடியே வேகமாகத் திரும்பியவளது முழங்கை, சைலேஷின் முகத்தில் அதைவிட வேகமாக இடித்தது.

அதைச் சற்றும் எதிர்பாராதவன், வலியில் துடித்தபடி, மூக்கைப் பிடித்துக் கொண்டே கட்டிலில் சென்று விழுந்தான்.

பயந்து போன மயூரி, செய்வதறியாமல் கைகளைப் பிசைந்தாள்.

"என்னங்க... ரொம்ப வலிக்குதா...? சாரி!'' என்று கட்டிலில் இப்படியும் அப்படியுமாகப் பிரண்டவன் பின்னாலேயே, அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தாள்.

இதற்கு மேல் முடியாது என்ற எண்ணத்துடன் கட்டிலில் ஏறி, அவனது தலையைப் பிடித்து தனது மடியில் வைத்து அழுத்திப் பிடித்துக் கொண்டாள்.

ஆனாலும், அவன் முகத்திலிருந்து கையை எடுத்தால் தானே...?

"எத்தனை நாளா உனக்கு இப்படி ஒரு குத்துவிடணும்னு ஆசை? அய்யோ அப்பா! தாங்க முடியலையே...!'' என்று புலம்பினான் அவன்.

"எனக்கு என்ன வேண்டுதலா...? அப்படியே விடணும்னு நினைச்சிருந்தாலும், இன்னும் நல்லா வேகமா இல்ல குத்தியிருப்பேன்?'' என்றாள் எரிச்சலுடன்.

அவளுடைய எரிச்சல் அவளுக்கு. 'பார்த்தால் தானே, என்ன ஆயிற்று என்று தெரியும்? அதற்கு வழியில்லாமல், இப்படி முகத்தைக் காட்டாமல் அழிச்சாட்டியம் செய்கிறானே!' என்ற எரிச்சலில் தன் மனத்தில் நினைத்ததை அப்படியே வெளியே கொட்டிவிட்டாள்.



அதுவரை கண்களை மூடிக் கொண்டு புலம்பிக் கொண்டிருந்தவன், படக்கெனக் கண்களைத் திறந்தான்.

"எவ்ளோ நல்ல மனசு உனக்கு? தாலி கட்டின புருஷனை, ஆள் வச்சி அடிப்ப போல இருக்கு. சரியான ரௌடி பொண்டாட்டியா இருக்க...''! என்று முழம் நீளத்துக்கு அவன் வசனம் பேசிக்கொண்டிருக்க, மயூரி அவனை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஃப்ராடு! நீங்க பண்ண அலம்பலுக்கு என்ன ஆச்சோன்னு பயத்துல இருந்தா, ஒண்ணுமே ஆகாததுக்கே இவ்வளவு ஆர்ப்பாட்டமா?'' என்று தனது நெற்றிக் கண்ணாலேயே அவனைப் பொசுக்கினாள் மயூரி.

அப்போதுதான், உச்சபட்ச ஆர்வக் கோளாறில் முகத்தை மூடியிருந்த கரத்தை எடுத்துவிட்டதை உணர்ந்தவன், அசட்டுச் சிரிப்புடன் எழுந்து அமர்ந்தான்.

"முறைச்சாலும்... நீ அழகு தான் மயூ குட்டி!'' என்றவனை, கோபத்துடன் உதட்டைக் கடித்துக் கொண்டு பார்த்தாள்.

*"கோபத்தில் சிவக்கும் உன் கன்னங்களை*
*ரோஜாக்களுக்குக் காட்டி விடாதே!*
*தான்கூட இத்தனை அழகில்லையே என்று,*
*அவை வெட்கத்தில் தலைகுனிந்து விடும்!''*

என்றவன், "வாவ்! மயூ கவிதை கவிதை! பாரு, உன் கோபத்தைப் பார்த்ததுக்கே இப்படிக் கவிதை வருதுன்னா, உன் சிரிப்பைப் பார்த்தா எப்படி வரும்?'' என்றான்.

"கவிதையா இது? கொடுமை. இதைக் கவிதைன்னு சொன்னதுக்காகவே, உங்களை அடிச்சாலும் தப்பில்லை'' என்றாள்.

"அப்படியா? எங்கே பாப்போம்...'' என்றவன், அவளது முகத்தை நெருங்கினான்.

அவனது எதிர்பாராத செய்கையால் கூச்சத்துடன் விலகி, பின்னால் செல்ல முயன்றாள். அவனோ, முன்புறமாக விட்டிருந்த அவளது கூந்தலைப் பிடித்து மெல்ல அவளைத் தன் பக்கமாக இழுத்தான். அவளும், அவனது இழுப்பிற்கு வளைந்து கொடுத்து அவனை நோக்கி முன்னேறினாள்.

சிலநாட்களாக அவனைவிட்டு மனதளவில் விலகி ஓடியவளுக்கு, காலமும் துணையிருந்தது. இன்று அவளது எம்.டி. சொன்ன விஷயங்களால் சற்றுத் தெளிந்தவளுக்கு, அதே காலம் மீண்டும் துணை வந்தது.

தனது கரங்களால் அவளது கழுத்தை வளைத்துத் தன்னருகில் இழுத்தவன், வெட்கத்தில் பூரித்திருந்த கன்னங்களில் தன் முத்திரைப் பதித்தான்.

மெல்ல அவனது நெஞ்சில் சாய்ந்து கொண்டவள், "முகத்துல உண்மையாவே அடிபடலையா?'' என்று கேட்டாள்.

"பட்டுதே... ஆனா, ரொம்ப இல்லை. தாங்கிக்கிற அளவுக்குத் தான் இருந்துச்சி. சும்மா உன்னைச் சீண்டிப் பார்க்கலாம்னு நினைச்சேன்!''

"நான் எவ்வளவு பயந்துட்டேன் தெரியுமா?'' என்றாள் சிணுங்கலாக.



"தெரியுமே. அதான் கொஞ்சம் சீன் போட்டேன். அது ஓவர் டோஸா மாறிடிச்சி!'' என்றவன், "ஏன் மயூ! நான் ஒண்ணு கேட்பேன்... மறைக்காமச் சொல்வியா?'' என்றான்.

"அது நீங்க கேட்கற கேள்வியைப் பொறுத்தது'' என்றாள் வீம்பாக.

சற்றுத் தயங்கிய சைலேஷ், "அன்னைக்கு ஏன் மயூ அப்படிப் பேசின?'' என்றான்.

அதுவரை மோன நிலையில் அவனது நெஞ்சில் சாய்ந்திருந்தவள் ,திகைப்புடன் கண்களைத் திறந்தாள்.

மெல்ல தனது பிடியிலிருந்து விலகியவளை, அவளது போக்கிலேயே விட்டான்.

திரும்பி அவனுக்கு எதிர்ப்புறமாக நின்றவள், "அது நிஜம் தானே? ஆஃபிஸுக்கு என்னால் எப்படி சொல்லாமல் கொள்ளாமல் லீவ் போட முடியும்?'' என்று கேட்டாள்.

"நான் அதைக் கேட்கலை. உனக்கும் அது தெரியும்'' என்றான்.

அவனது குரல்... கெஞ்சலிலிருந்து, அழுத்தமாக மாறியிருந்தது.

"ப்ளீஸ் சைலேஷ்! இப்போ என்னை எதுவும் கேட்காதீங்க'' என்றாள்.

"பேசவேண்டிய நேரத்தில்....'' என்று அவன் ஆரம்பிக்க, மயூரியின் மொபைல் ஒலித்தது.

"எம்.டி.'' என்றவள், அவருடன் பேசிவிட்டு, "மேடம்... ரெஸ்டாரெண்டுக்கு வந்துட்டாங்களாம்.

நாங்களும் கிளம்பிட்டோம்னு சொல்லிட்டேன்!'' என்று அவனது முகத்தை நேராகப் பார்க்காமலேயே சொல்லிவிட்டு, குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.

மனத்திற்குள் ஏனோ இனம் புரியாத பயம் மீண்டும் வந்து ஆட்கொண்டது. "அவன் இதைச் சாதாரணமாக விடமாட்டான்' என்றும் புரிந்தது.

"கடவுளே! எனக்குப் பொறுமையைக் கொடு!' என்று வேண்டிக் கொண்டாள்.

# 35

முன்தினம் நடந்தவைகளை நினைத்துப் பார்த்த மயூரிக்கு, ஒரு பக்கம் ஏமாற்றமாகவும், மறுபக்கம் நிம்மதியாகவும் இருந்தது.

இரவு எம்.டி. கொடுத்த விருந்தில் இவர்களுடன் மயூரியுடன் பணிபுரியும் ஊழியர்களும் கலந்து கொண்டனர். எல்லாமே நன்றாகவே போய்க் கொண்டிருந்தது.

சைலேஷும், அவள் மீதிருக்கும் அதிருப்தியை வெளிக்காட்டிக் கொள்ளாமல் சகஜமாகவே நடந்து கொண்டான்.

ஆனால், மயூரியால் அப்படி இருக்க முடியவில்லை. அவனிடம் மனம்விட்டுப் பேசவும் முடியவில்லை. அதை மனத்திற்குள்ளேயே மறைக்கவும் முடியவில்லை.

காலையில் அவனை ரிசப்ஷனில் பார்த்ததுமே, "யார் சொல்லி வந்திருப்பான்?' என்றுதான் முதலில் அவளுக்குத் தோன்றியது. ஆனால், அடுத்த நொடியே 'தேவையில்லாமல் மனத்தைப் போட்டுக் குழப்பிக் கொள்கிறேனே!' என்று தன்னையே கடிந்து கொண்டாள்.



அவன் திடீரென்று சொல்லாமல் வந்து நின்றது சற்று அதிருப்தியை அளித்தாலும், மதிய உணவு இடைவேளையின் போது எம்.டி. அவளிடம் பேசிய பின்பு தான் அவளால் கொஞ்சம் இயல்பாக இருக்க முடிந்தது.

இரவு டின்னருக்குப் பிறகு நன்றி சொல்லிவிட்டுக் கிளம்பும் நேரம், தன்னால் ஏற்பட்ட சிரமத்திற்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டான்.

தான் வேறு ஹோட்டலில் அறையெடுத்து விட்டதாகவும், நாளை கருத்தரங்கம் முடிந்ததும் மயூரியை அழைத்துச் சொல்வதாகவும், எம்.டி.யிடம் சொன்னான்.

மயூரிக்கே, அவனது முடிவு சற்று ஏமாற்றத்தைக் கொடுத்தது.

அறையிலிருந்த தனது உடைமைகளை எடுத்துக் கொண்டு அவன் கிளம்பும் நேரம், "ஏன்?'' என்று ஒற்றை வார்த்தையில் தனது கேள்வியை முன் வைத்தாள்.

"ஆக்சுவலி நான் நாளைக்குக் காலையில் தான் வந்திருக்கணும். லீவைப் போட்டுட்டு வீட்ல உட்கார்ந்திருக்க கடுப்பா இருந்தது. ஆனா, உன்னைப் பத்தி நான் நினைக்கவேயில்ல. காலைல உன்னோட முகத்தைப் பார்த்ததும் தான் என்னோட தப்பு புரிஞ்சது. அதான்...'' என்றான்.

அவள் மௌனமாக நின்றிருந்தாள்.

ஷோல்டர் பேகைக் குறுக்காக மாட்டிக் கொண்டவன், பட்டும்படாமலும் அவளது நெற்றியில் முத்தமிட்டுவிட்டு, "வரேன்'' என்றபடி அறையிலிருந்து வெளியேறினான்.

அவன் சென்ற சிறிது நேரத்தில் அறைக்கு வந்த அவளது தோழி, "மயூரி! உன் ஹப்பி ரொம்ப ஜெண்டில்பா!'' என்று நற்சான்றிதழ் வழங்க, புன்னகைத்துக் கொண்டாள்.

நடந்ததை நினைத்துப் புன்னகைத்தபடி அமர்ந்திருந்தவளின் முதுகில் தட்டினாள் ஒருத்தி.

சுதாரித்துக் கொண்டு திரும்பிப் பார்த்தவளிடம், "ரொம்பச் சீரியஸா என்னென்ன இம்ப்ரூவ்மெண்ட்ஸ் பண்ணலாம்னு ஆளாளுக்குச் சொல்லிட்டு இருக்காங்க. நீ என்னடான்னா ஈன்னு உட்கார்ந்திருக்க! ஏற்கெனவே, அந்த ஆளு ரெண்டு தடவை உன்னை முறைச்சிப் பார்த்தார். அடுத்த தடவை எழுப்பி உன்னை ஏதாவது கேட்கப் போறார்... நீ முழிக்கப் போற!'' என்று எச்சரித்தாள் ஒருத்தி.

அப்போதும் மயூரி தன்னை நினைத்துச் சிரித்துக் கொள்ள, அவளது தோழிகள் "சுத்தம்' என்று தலையிலடித்துக் கொண்டனர்.

* * *

அன்று மாலை விழா நிகழ்ச்சிகளெல்லாம் முடிந்து மயூரி ஹோட்டலுக்கு வர, சொன்னபடி அங்கே ரிசப்ஷனில் காத்திருந்தான் சைலேஷ்.

அன்று இரவே ட்ரெயினைப் பிடிப்பதற்காக அனைவரும் அவசரமாகக் கிளம்பிவிட, மயூரியை



தன்னுடன் அழைத்துக் கொண்டு தான் தங்கியிருந்த ஹோட்டலுக்கு வந்தான்.

அறைக்கு வந்தவள், "எதுக்கு இவ்வளவு காஸ்ட்லியா?'' என்று கேட்டாள்.

**"சின்னச் சின்ன சந்தோஷம் தான், வாழ்க்கையை முழுமையாக்குது. அதனால... நாம கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கிறதை, நமக்காக அப்பப்போ அனுபவிச்சிக்கிறது தப்பில்லை!''** என்றான் சிரிப்புடன்.

"என்னமோ போங்க. சிலநேரம் எண்ணி எண்ணி செலவு பண்ணுவீங்க. சில நேரம் காசு போற இடமே தெரியறதில்லை!''

"சம்பாதிக்கறதை கணக்குப் போட்டுச் செலவு பண்றது தப்பில்ல. ஆனா, அளவுக்கு மீறி செலவு பண்றது தப்பு. அதேநேரம் கஞ்சத்தனமா இருக்கறதும் தப்பு!''

"உங்களை என்னால புரிஞ்சிக்கவே முடியமாட்டேன்னுது''

''நல்லதுன்னு நினைச்சிக்க. அடுத்தவங்களை நல்லா புரிஞ்சிகிட்டா, வாழ்க்கையில சுவாரசியமே இருக்காது. ஏன், எப்படின்னு கொஞ்சம் மண்டையப் பிச்சிக்கத் தான் வேணும். இப்போ நான் இல்ல... சமயத்துல நீ என்ன பேசற? எதுக்குப் பேசறன்னு கொஞ்சமும் புரியாம இல்லயா?'' என்றான்.

அவ்வளவு தான். அதற்கு மேல் அவள் ஏன் வாயைத் திறக்கப் போகிறாள்?

மலங்க மலங்க விழித்தவள், தனது பேகை ஆராய்வது போலக் குனிந்து கொண்டாள்.

கட்டிலில் சாய்ந்து அமர்ந்தவன், "நீ ரிப்ரெஷ் பண்ணிட்டுக் கிளம்பு. எங்கேயாவது வெளியே போய்ட்டு, அப்படியே டின்னரையும் முடிச்சிகிட்டு வந்திடலாம்''

"ம்'' என்றவள் குளியலறைக்குள் நுழைய, டீவியை ஆன் செய்தவன் சி.என்.பி.சி-யில் மூழ்கிப் போனான்.

✶ ✶ ✶

"ஆசை ஆசையா வீட்டுக்கு வந்தா, நீ கிளம்பித் தயாரா நிக்கிற. அந்த நேரம் எனக்கு எப்படி இருந்தது தெரியுமா?'' என்று அவன் சொல்ல, அவளால் சிரிப்பைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

"போதாக்குறைக்கு மறுநாள் நான் ரூமில் படுத்துட்டு இருக்கேன். இந்தக் குணா வந்து நிக்கிறான். எங்கேடா அம்மாகிட்ட நாம மூணார் கிளம்பிட்டோமான்னு கேட்டுடப் போறானேன்னு, எழுந்து வெளியே போனேன்.

என்னைப் பார்த்ததும் திருதிருன்னு அவன் விழிக்கிறான். எதுவுமே பேசாம இருந்தாலும், உள்ளுக்குள்ள சிரிப்பை அடக்கறான்னு தெரியுது. என்ன செய்யறது... இவன்லாம் ஓட்டற அளவுக்கு ஆளாகிட்டோமேன்னு கடுப்பா ஆகிடுச்சி!'' என்றான் வருத்தமாக.

அதுவரை சிரித்துக் கொண்டே கேட்டுக் கொண்டிருந்தவள், குணாவைப் பற்றிச் சொன்னதும் கணவனைக் கூர்ந்து கவனிக்கலானாள்.

"என் முகத்தை அப்புறம் பார்க்கலாம்... முதல்ல சாப்பிடு!''

"ம்'' என்றவள் உணவை விழுங்கிக் கொண்டிருந்தாலும், மனம் அவன் சொன்னவற்றை அசை போட்டுக் கொண்டிருந்தது.



எப்போதும் வாழ்க்கையின் மீது அவளுக்கு இருந்த பயம், அவனை முழுதாக நம்பவிடவில்லை. அவளாகச் சில அனுமானங்களை நிஜம் என்று நம்பிக் கொண்டது தான், அவனது காதலின் மீதான நம்பிக்கையைத் தகர்த்தது.

திருமண விஷயத்தில் அவன் சில விஷயங்களை, அவளிடமிருந்து மறைத்தான். அதுவும், அவள் மீதிருந்த காதலால் தான். ஆனால் அதுவே, இப்போது அவனுக்கு எதிராக திரும்பிக் கொண்டிருக்கிறதே!.

அவளைப் பொறுத்தவரை, அவனது நினைவில் எப்போதுமே அவள்தான் இருக்க வேண்டும். அவன், அவளுக்காக எது செய்தாலும், "அதில் ஏதாவது குறை தென்படுகிறதா?' என்று அவள் எப்போதும் நோட்டம் விட்டுக் கொண்டே இருந்தாள்.

இப்போது சைலேஷ் தனது காதலை, அவளுக்கு உணர்த்தி ஆகவேண்டிய கட்டாயத்தில் இருந்தான். ஆனால், அதை இதுவரை அவளும் வாயைத் திறந்து எதுவும் கேட்கவில்லை. அவனும் அவளது மனத்தில் இருப்பதைப் புரிந்து கொள்ளவில்லை.

இந்தக் கண்ணாமூச்சி ஆட்டத்திற்கான முடிவு எப்போதென்று அவளுக்குமே தெரியாது. "நம்பிக்கை தான் வாழ்க்கை!' என்று மற்றவர்களிடம் சொன்னவளுக்கே, இப்போது நம்பிக்கையற்றுப் போயிற்று.

# 36

ரெஸ்டாரெண்டிலிருந்து வெளியே வர, கார் பார்க்கிங்கின் அருகில் ஏதோ சப்தம் கேட்டது. இருவரும் நிதானித்துப் பார்க்க, அங்கே ஒருவன் குடித்துவிட்டுக் கத்திக் கொண்டிருக்க, நான்கைந்து பேர் சேர்ந்து அவனை அங்கிருந்து அப்புறப்படுத்த முயன்று கொண்டிருந்தனர்.

"என்னங்க அதைப் போய் வேடிக்கைப் பார்த்துட்டு இருக்கீங்க? வாங்க போலாம்!''

முகம் தெரிகிறதா என்று கவனித்துப் பார்த்த சைலேஷிற்கு, அவனது பின்புறம்தான் தெரிந்தது.

"இரு மயூ!. ஆயிரம் இருந்தாலும், ஒருத்தனைப் போட்டு இத்தனைப் பேர் சேர்ந்து அடிக்கிறது சரியில்லை. அதுவும்... அந்த ஆள் நிதானத்தில் இல்லை... நீ இங்கேயே இரு. நான் போய்ப் பார்த்துட்டு வரேன்'' என்று சொல்லிக் கொண்டே, பிரச்சனை நடக்கும் இடத்தை நோக்கி நடந்தான்.

மயூரிக்கு எரிச்சலாக வந்தது. "தேவையில்லாமல் ஒரு பிரச்சனையை இழுத்துக் கொண்டு வரப்போகிறான்' என்று நினைத்தவளால் அங்கே நின்று வேடிக்கைப் பார்க்க முடியவில்லை. நடப்பது நடக்கட்டும் என்று அவன் பின்னாலேயே சென்றாள்.

அவர்களைச் சமாளித்து அவனது முகத்தைப் பார்த்தவன், "மகேஷ்! நீயா?'' என்று அதிர்ந்து போனான்.

"மகேஷ்' என்ற பெயரைக் கேட்டதுமே, மயூரி ஆணியடித்தாற் போல அவ்விடத்திலேயே நின்றாள்.



சிலநிமிடங்களில் அவனுடன் அங்கிருந்து வந்த சைலேஷ், கனல் கக்கும் பார்வையுடன் நின்றிருந்த மனைவியைக் கெஞ்சலாகப் பார்த்தான்.

"சைலேஷ்! இந்தப் பொண்ணுங்களை நம்பவே கூடாதுடா. ராட்சஷிங்க... நம்ப வச்சி நம்ம கழுத்தை அறுத்திடுவாங்க. நான் ஒருத்தன் போதும்டா... நீயாவது இதுலயிருந்து தப்பிச்சிக்க!'' என்று குழறலுடன் உளறிக் கொட்டினான்.

"கொஞ்சம் சும்மா இருடா...'' என்றான் சலிப்பும், கெஞ்சலுமாக.

புடவைத் தலைப்பால் வாயைப் பொத்திக் கொண்டவள், முகத்தைச் சுளித்தபடி கணவனைப் பார்த்தாள்.

மகேஷின் பாக்கெட்டைத் துழாவி, பாண்ட் பாக்கெட்டிலிருந்த சாவியை எடுத்தான். ஏதோ ஒரு மேன்ஷனின் விலாசமும் அதிலேயே இருக்க, அதைத் தன்னிடம் பத்திரப்படுத்திக் கொண்டான்.

போதையில் சரிந்தவனை நிமிர்த்திப் பிடித்தபடி, "மயூ! நான் உன்னை நாம தங்கியிருக்கு ஹோட்டலில் இறக்கி விட்டுட்டு, இவனைக் கொண்டு போய் விட்டுட்டு வந்திடுறேன். வா!'' என்று அழைத்தான்.

"எனக்கு இப்பவே குடலைப் பிரட்டுது. இதில, ஒரே ஆட்டோவில் வர எனக்கென்ன பைத்தியமா? ஹோட்டல் பக்கத்தில் தானே... நானே போய்க்கிறேன். நீங்க இந்த ஆளை விட்டுட்டு வாங்க!'' என்று எரிச்சலுடன் சொன்னாள்.

கோபத்தில் அவளுக்கு மூச்சு இறைத்தது.

சாப்பிட்டதெல்லாம் எங்கே வெளியே வந்துவிடுமோ என்பது போல உமட்டியது.

அவளது அவஸ்தையைப் புரிந்து கொண்டவனாக, "அப்போ... தனியா போயிடுவியா? ஹோட்டலுக்குப் போய்ச் சேர்ந்ததும், எனக்கு ஒரு போன் பண்ணு. நான் சீக்கிரமே வந்திடுறேன். பத்திரம்'' என்றான்.

அவன் சொன்ன எதையுமே காதில் வாங்காதவளாக, விறுவிறுவென நடந்தாள்.

கோபமும், ஆத்திரமும் போட்டி போட நடந்தே ஹோட்டலுக்கு வந்து சேர்ந்தாள். அறைக்குள் வந்தது தான் தாமதம், உமட்டிக்கொண்டு வர வாஷ்பேசினை நோக்கி ஓடினாள்.

முகத்தைக் கழுவிக் கொண்டு திரும்பி வந்தவளுக்கு, மயக்கமாக இருந்தது. அந்த மகேஷை மனதாரத் திட்டித் தீர்த்தாள். "இவன் எதற்காக இப்போது என் கண்ணில் பட வேண்டும்? என்னவெல்லாம் சொல்லி அவன் உளறப் போகிறானோ? அதைக் கேட்டுக் கொண்டு வந்து, இவன் என்ன ஆட்டம் ஆடப் போகிறானோ?' என்று எண்ணியவளுக்கு அழுகையாக வந்தது.

அலுத்துச் சலித்து அவன் அறைக்கு வந்து சேர்ந்தபோது, நடு இரவாகியிருந்தது. மயூரி அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள். நேராகக் குளியலறைக்குள் சென்றவன், தலையில் தண்ணீரை ஊற்றிக் கொண்டு வெளியே வந்தான்.

ஹாலில் விளக்கு எரிந்து கொண்டிருக்க, மயூரி சோஃபாவில் அமர்ந்திருந்தாள்.



"என்னப்பா! தூக்கம் வரலையா?'' என்று கேட்டான்.

"உங்க ஃப்ரெண்டை விட்டுட்டு வந்தாச்சா?'' என்றாள்.

"ம்'' என்றவன், தலையைத் துடைத்துக் கொண்டே, அவளருகில் வந்து அமர்ந்தான்.

"பாவம் மயூ அவன். காலேஜ் டேஸ்ல எப்படியிருந்தவன் தெரியுமா? எதிரிக்குக் கூட இப்படியெல்லாம் நடக்கக்கூடாது. சென்னைல இருக்க முடியலைன்னு தான் இங்கே வந்திருக்கான். ஏதோ ஒரு பிரைவேட் கம்பெனில வேலையாம்; இங்கே ஒரு மேன்ஷன்ல தங்கியிருக்கான்.

எதிர்பாராம அவனோட உறவுக்காரங்க யாரையோ சந்திச்சிருக்கான் போல. அவங்க, இவன் வைஃபுக்கு வேற இடத்தில் கல்யாணம் ஆகிடுச்சின்னு சொல்லியிருக்காங்க. அதை அவனால தாங்க முடியல.

"இந்த வாழ்க்கையே வேணாம்னு சாகப் போனேன். ஆனா, அதுக்குக் கூட எனக்குக் கொடுத்துவைக்கல. இன்னும் என்னென்னலாம் நடக்கணும்னு இருக்கோ தெரியல! என்னையும் மீறி அவளை ஏதாவது செய்திடப் போறேன்ங்கற பயத்துல தான், அந்த ஊரை விட்டே வந்தேன். ஆனா, நான் எங்கே போனாலும் என் விதி என்னைத் துரத்துது சைலேஷ்னு அழறான். என்னால அவனுக்கு ஆறுதலே சொல்லமுடியலை மயூ!'' என்றவன், இரு கைகளாலும் தலையைக் கோதிக் கொண்டான்.

அவளோ, இமைக்காமல் அவனையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

"ஒரு மனுஷனுக்கு வாழ்க்கைத் துணை சரியா அமையலைனா, எவ்வளவு மோசமான மிருகமா மாறிடுறான்?''

"இவ்வளவு நடந்ததுக்கு அப்புறமும், இன்னும் அந்த ஆளோட சகவாசம் வச்சிருக்கீங்களே... உங்களை என்ன பண்றது?'' என்று பற்களைக் கடித்துக் கொண்டு கேட்டாள்.

சைலேஷ் நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

"காதலே இல்லாத ஒருத்தியைக் கல்யாணம் செய்துகிட்டு, அவள் இவனை விட்டுட்டுப் போனா, எல்லோரும் அப்படியே இருப்பாங்களா? அந்த ஆளு பேசும் போது ஒரு அறை விட்டிருப்பேன்! ஆனா, உங்க ஃப்ரெண்டா போய்ட்டானேன்னு விட்டுட்டேன்.

சும்மா நாம செய்ற தப்புக்கும் அடுத்தவங்களைக் குற்றம் சொல்லிட்டு இருக்கறதை விட்டுட்டு, உருப்படுற வழியைப் பார்த்திருந்தா அவன் மனுஷன். அவள் தூக்கியெறிஞ்சிட்டுப் போனா என்ன..., வாழ்க்கைல போராடி முன்னுக்கு வந்திருக்கணும்!

அதை விட்டுட்டு... இப்படிக் கத்திக் கூப்பாடு போட்டு, ஊரெல்லாம் பேரை அசிங்கப்படுத்திக்கிட்டு வாழறதுக்குப் பதிலா, யாருக்கும் பாரமில்லாம போய்ச் சேர்ந்திடலாம்.

கல்யாணம் செய்துகிட்ட எல்லோருமே, கடைசி வரைக்கும் காதலோடயா இருக்காங்க? அத்தனைப் பேர்கிட்டயும் ஏதாவது குறை இருக்கத் தான் செய்யும். நாமதான் அனுசரிச்சிப் போகணும்!'' என்றாள்.

இத்தனை நாள் கொந்தளித்துக் கொண்டிருந்த அவளது மனம், இப்போது வெடித்துச் சிதறத் தயாராகிக் கொண்டிருந்தது. தன்னையும் அறியாமல் அவளது மனம் சிறிது சிறிதாக வெளிப்பட ஆரம்பிக்க, சைலேஷ் அவளை ஊன்றிக் கவனிக்க ஆரம்பித்தான்.



"அப்போ, என்கிட்ட என்ன குறையிருக்கு?'' என்றான் அழுத்தமாக.

அப்போதுதான், தான் உளறிவிட்டதை உணர்ந்தவளாக, என்ன சொல்வதெனத் தெரியாமல், அவனைப் பார்த்தாள்.

"சொல்லு மயூ! என்கிட்ட என்ன குறை இருக்கு?'' என்று மீண்டும் நிதானமாகவே கேட்டான்.

"இ...ல்.ல அ..து.. ஏதோ ஒரு உதாரணத்துக்குச் சொன்னது...'' என்றாள் சமாளிப்பாக.

"இது உதாரணமெல்லாம் இல்லைனு எனக்குப் புரியாமல் இல்ல. இத்தனை நாளா சொல்லமுடியாம நீ தவிச்சது, இன்னைக்கு வெளியே வந்திருக்கு. சொல்லு...'' என்றான்.

"இல்ல சைலேஷ்! நாம நாளைக்குப் பேசுவோம்...'' என்று எழுந்தவளை, கையைப் பிடித்து இழுத்து அமர வைத்தான்.

"பேசணும்னு வந்தாச்சு... பேசு! இன்னைக்காவது வாயைத் திறந்து உன் மனசுல இருக்கறதை கொட்டித் தொலை. எத்தனை நாளைக்குத் தான், நீ "என்ன பேசற? ஏன் பேசறன்னு?' உன்னோட வார்த்தைகளுக்கு அர்த்தம் தெரியாம... என்னையே ஏதாவது சொல்லி சமாதானப்படுத்திக்கறது?

இப்போ நீ பேசினதுக்குப் பிறகுதான், அன்னைக்கு நீ சொன்ன வார்த்தைக்குப் பின்னால ஏதோ இருக்குன்னு

புரியுது. தயவு செய்து, உன் மனசுல என்ன இருக்குன்னு சொல்லிடு. எதுவா இருந்தாலும் பேசித் தீர்த்துக்கலாம்'' என்றான் திடமாக.

இதற்குமேல் எந்தச் சாக்குப் போக்கும் சொல்வதில் பயனில்லை என்று உணர்ந்தவளாக, அவனது கண்களை நேருக்கு நேராகப் பார்த்தாள்.

"நீங்க என்னை முழு மனசோட காதலிக்கிறீங்களா சைலேஷ்?'' என்று கேட்டாள் மயூரி.

தலையை உலுக்கிக் கொண்டு, "இதுக்கு... இல்லைனு சொல்வேன்னு நினைக்கிறியா மயூ? முட்டாளா நீ?'' என்றான் கோபத்துடன்.

"சேச்சே! அத்தனைச் சீக்கிரம் நீங்க உங்களோட தோல்வியை ஒத்துக்குவீங்களா?'' என்றாள் கேலியாக.

"ஹே! எதை வச்சி... நீ இப்படிப் பேசிட்டு இருக்க?''

"நீங்க சொன்ன வார்த்தைகளை வச்சித் தான். உங்களுக்கு மனசு முழுக்க வக்கிரம். உங்களுக்கு நான் வேணும்னு முடிவு பண்ணிட்டீங்க. அதுக்காக, உங்க அம்மா நம்ம கல்யாணத்துக்குச் சம்மதிக்காத விஷயத்தை, எனக்குச் சொல்லாமல் மறைச்சி கல்யாணமும் பண்ணிகிட்டீங்க.

உங்க குடிகார ஃப்ரெண்ட் சொன்ன காரணத்துக்காக, என்னோட காதலைச் சந்தேகப்பட்டீங்க. உங்க இன்னொரு ஃப்ரெண்ட் சொன்ன காரணத்துக்காக என்னைப் பார்க்க வந்தீங்க. இன்னும் உங்களுக்கு என்மேல அன்பு, அக்கறை, பாசம் எல்லாம் இருக்குன்னு, நான்கூட கொஞ்சம் சந்தோஷப்பட்டுகிட்டேன்.

ஆனா, அத்தனையும் ரம்யாவோட வளைகாப்பு அன்னைக்கு நீங்களும், குணா அண்ணாவும் பேசிட்டு இருந்ததைக் கேட்டதும், சுக்குநூறா உடைஞ்சி போச்சு. எனக்காக நீங்க செய்ததை வீண் செலவுன்னு சொன்னீங்க பாருங்க... அன்னைக்கே உங்களைப் புரிஞ்சிகிட்டேன்!'' என்றவளுக்கு, கண்களை இருட்டிக் கொண்டு வந்தது.



சைலேஷ் சிலையென ஸ்தம்பித்துப் போய் அமர்ந்திருந்தான்.

"அவளது கேள்விகளுக்கான பதில்கள் என்னிடம் இருக்கிறது. ஆனால், அதைச் சொன்னால் அவள் நம்புவாளா? என்னைப் பற்றிய அத்தனையையும்... தவறாக அல்லவா புரிந்து கொண்டிருக்கிறாள்!

ஆனால், இப்போதே இதெல்லாம் பொய் என்று புரியவைத்துத் தான் ஆகவேண்டும். இல்லையென்றால், தங்களது வாழ்க்கையே நரகமாகிவிடும்!' என்று நினைத்தவனாக, அவளைப் பார்த்தான்.

"மயூ!'' என்று மென்மையாக அழைத்தபடியே, அவளது கரத்தை அழுத்திப் பிடித்தான்.

"வேண்டாம் சைலேஷ்! இப்பக்கூட மனசு முழுக்க் காதலோட தான் தொட்டேன்னு சொல்லி, என்னைக் கொன்னுடாதீங்க!'' என்றவளது கண்களில் கண்ணீர் வழிய ஆரம்பிக்க, இமைகளை இறுக மூடிக் கொண்டாள்.

அவனது பிடி தளர்ந்தது. சைலேஷ் முற்றிலுமாக உடைந்து போனான். சட்டென அந்த இடத்திலிருந்து எழுந்தான்.

"இனி... தான் என்ன விளக்கம் சொன்னாலும், இவளது மர மண்டையில் ஏறப் போவதில்லை!' என்று புரிந்த போதும், தன் பக்கத்து நிலையை எடுத்துச்

சொல்லித் தான் ஆகவேண்டும் என்ற சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தான் அவன்.

"ஏன் மயூரி! இந்த எட்டு மாத்த் தாம்பத்தியத்தில், என்னை நீ புரிஞ்சிகிட்டது இவ்வளவு தானா? நான் உன்னை மனசாரக் காதலிச்சது நிஜம். இன்னைக்கு வரைக்கும் அப்படித் தான் நான் இருக்கேன். ஆனா, என் மேல தான் உனக்கு நம்பிக்கையே வரல இல்ல...?'' என்று பரிதாபமாக்க் கேட்டான்.

மயூரி திகைப்புடன் அவனைப் பார்த்தாள்.

"மரத்தைச் சுத்திச் சுத்தி வந்து பாட்டு பாடி, தினமும் வகை வகையா ரோஜா கொடுத்து என் காதலை நிரூபிக்க, நான் ஒண்ணும் சினிமா கதாநாயகன் இல்ல மயூ! ஒரு சாதாரண மனுஷன்! ஒருத்தனோட அன்பும், காதலும் கொடுக்காத நம்பிக்கையை... கேவலம் ஒரு ரோஜாப் பூவும், பரிசும் தான் கொடுக்கும்னா... அப்படிப்பட்ட காதலை நான் வெறுக்கறேன்.

அன்னைக்கு என் சைலேஷோட காதல் பொய்-னா என்னோடதும் பொய் தான்னு சொன்னியே... அன்னைக்கு இருந்த நம்பிக்கை... இன்னைக்கு ஏன் இல்லாமப் போச்சு? என்னோட அரவணைப்பும், காதலும், அனுசரணையும் கொடுக்காத நம்பிக்கையை, இந்த உயிரில்லாத் பொருட்கள்தான் கொடுக்கும்னா..., நான் ஒரு ஏமாத்துக்காரனாகவே இருந்துட்டுப் போறேன்.

கல்யாணம் ஆன நாளிலிருந்து இன்னைக்கு வரைக்கும் உன்னோட மனசுக்கு நான் மதிப்பு கொடுத்து நடந்துக்கலைன்னு சொல்லு பார்ப்போம். உனக்கு விருப்பமில்லாத நாட்களில், உன்னைத் தொந்தரவு



செய்யாமல் விலகித்தான் இருந்திருக்கேன். மனசு முழுக்க் காதலோடதான் தொட்டியான்னு கேட்டியே..., அந்தக் காதலாலதான்டி விலகிப் போனேன்!'' என்றவனை இமைக்க மறந்து பார்த்தாள்.

"அப்படிப்பட்ட என்னோட காதல் போலின்னா... அது போலியாவே இருக்கட்டும். எனக்கு மனசுல இருக்கறதைப் போட்டு படார்னு உடைக்கத் தெரியுமே தவிர, அடுத்தவங்களோட மனசை உடைக்கத் தெரியாது. ஆனா, இன்னைக்கு என் மனசை நீ உடைச்சிட்ட! இதோட வலி உனக்குப் புரியாமல் இருக்கலாம்... ஆனா, தயவு செய்து திரும்பவும் இப்படியொரு வார்த்தையைச் சொல்லி, என்னை உயிரோட நீ கொன்னுடாதே!'' என்றான் வேதனையுடன்.

# 37

'தான் அவசரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டியிருக்கக் கூடாது!' எனக் காலம் கடந்த ஞானோதயத்துடன், மீண்டும் மீண்டும் தனக்கே சொல்லிக் கொண்டாள்.

முன்தினம் இரவு தனது மனத்திலிருந்த வேதனைகளைக் கொட்டித் தீர்த்தவன், ஓய்ந்து போய் முன்னறையிலிருந்த சோஃபாவில் அப்படியே படுத்துக் கொண்டான்.

அப்போது இருந்த மனநிலையில், அவனை நெருங்கவே அவளுக்குப் பயமாக இருந்தது. அதோடு

தனது அவசரக்குடுக்கைத்தனம் தான் இத்தனைக்கும் காரணம் என அறிந்திருந்த போதும், ஏதோ ஒருவிதத் தயக்கம் இருந்ததால் அவனிடம் பேசவும் விடவில்லை.

ஆனால், அது எவ்வளவு பெரிய முட்டாள்தனம் என்று மறுநாள் காலையில் தான் உணர்ந்தாள். இருந்த குழப்பத்தில் அவளுக்கு உறக்கமே வரவில்லை. எப்போது உறங்கினாள் என்று, அவளுக்கே நினைவில்லை.

காலையில் எழுந்த போது சைலேஷ் அறையில் இல்லை. எப்போது வெளியில் சென்றாலும் குறிப்பு எழுதி வைத்து விட்டுச் செல்பவன், அதையும் செய்யவில்லை.

அப்போது தான் தனது செயலின் வீரியம் அவளுக்குப் புரிய ஆரம்பித்தது. தனக்குள் எதுவோ தொலைவதை உணர்ந்தாள். தான் தனித்து விடப்பட்டதைப் போன்ற உணர்வில் கால்கள் தடுமாறின.

நிற்கக் கூட திராணியில்லாமல் பொத்தென கட்டிலில் அமர்ந்தவள், மதியம் அழைப்புமணி ஓசை கேட்டதும் மெல்ல எழுந்தாள். அத்தனை நேரம் உறங்கி விட்டோமா? என்ற திகைப்புடனே சென்று கதவைத் திறந்தாள்.

"மேடம்! சார் உங்களுக்கு லஞ்ச் ஆர்டர் கொடுத்திருந்தாங்க!'' என்ற ஹோட்டல் பணியாளனிடம், "எப்போ?'' என்று கேட்டாள் மயூரி.

இத்தனைக் கோபத்திலும் உனக்காகச் செய்கிறானே! இது காதல் அல்லாமல் வேறு என்ன?' என்று கேள்வி கேட்ட மனசாட்சிக்கு, அவளால் பதிலுரைக்க முடியவில்லை.

சுயபச்சாதாபத்தில் கண்கள் கரைந்தன. இருந்தும் கண்களைச் சிமிட்டி கண்ணீரைக் காட்டாமலிருக்க, பெரும் முயற்சி செய்தாள்.



"ஒன் ஹவர் முன்னாடிதான்'' என்றவன், கொண்டு வந்த உணவை அறைக்குள் வைத்து விட்டு வெளியேறினான்.

மொபைலை எடுத்து அவனுக்கு முயற்சித்தாள். ஆனால், சிக்னல் கிடைக்காமல் அவளை ஏமாற்றிக் கொண்டிருந்தது.

பசியும் வயிற்றைக் கிள்ளியது. இரவு உண்டதெல்லாம் வெளியில் வந்துவிட, காலையி லிருந்தும் எதுவும் சாப்பிடாததால், முகத்தைக் கழுவிக் கொண்டு உணவை அள்ளி ஒருவாய் உண்டாள்.

மனத்திலிருந்த சோர்வோ என்னவோ... அதற்குமேல் ஒரு பருக்கை கூட தொண்டைக்குள் இறங்கவில்லை. உணவை அப்படியே மூடிவைத்தாள்.

மாலை ஏழு மணிக்கு அறைக்குத் திரும்பி வந்தவன், மூடி வைத்திருந்த தட்டைத் திறந்து பார்த்தான். உணவு அப்படியே இருப்பதைக் கண்டவனது முகம் இறுகியது.

அவனைக் கண்டதும் எழுந்து நின்றவளிடம், "என் மேல இருக்கற கோபத்தை... ஏன் சாப்பாட்டு மேல காட்ற? சாப்பிட வேண்டியது தானே! அப்போ தானே, என்னை இன்னும் நல்லா கேள்வி கேட்க முடியும்?'' என்று சீறினான்.

அடுத்த நொடியே அவளது கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் உருண்டு விழ, எதுவும் சொல்லாமல் அங்கிருந்து நகர்ந்தான்.

"பத்தரை மணிக்கு ட்ரெயின். கிளம்பு!'' என்று முணுமுணுத்தவன், தனது உடைமைகளை எடுத்து அடுக்கத் துவங்கினான்.

மயூரியால் எதுவுமே பேச முடியவில்லை. மௌனமாகத் தனது உடைகளை அடுக்கி வைத்தாள்.

தயக்கத்துடன் பால்கனியில் அமர்ந்திருந்தவனின் அருகில் சென்று நின்றாள்.

அவள் பேச வாய்திறக்கும் முன்பே, "ப்ளீஸ்! நீ எதிர்பார்க்கற அளவுக்கு என்னை நான் மாத்திக்க முடியுதான்னு முயற்சி பண்ணிப் பார்க்கறேன். அதுவரைக்கும்...'' என்றவன் சொல்லாமல் பாதியில் நிறுத்த, அழுந்தத் தன் உதடுகளைக் கடித்தபடி அறைக்குள் வந்தாள் அவள்.

எதுவும் பேசிக் கொள்ளாமலேயே ஸ்டேஷனுக்கு வந்தனர்.

மூன்றாம் வகுப்பு ஏசி கோச்சில் அவளை அமர வைத்துவிட்டு, "ஒரு டிக்கெட் தான் கன்ஃபார்மா இருந்தது. எனக்கு ரெண்டு கோச் தள்ளி ஆர்டினரி'' என்றவன், "பத்திரம்'' என்று சொல்லி விட்டுச் செல்ல, மயூரிக்கோ அடிவயிறு கலங்கியது.

* * *

நாளைதான் வருவார்கள் என்று எண்ணியிருந்த மகனும், மருமகளும் திடீரென வந்து நிற்பதைக் கண்ட வடிவு, குழப்பத்துடன் பார்த்தார்.

அதிலும், மருமகளின் முகவாட்டமும், பட்டும் படாமல் பேசிய மகனின் தோரணையையும்



கண்டவருக்கு, "ஏதோ சரியில்லை' என்று மட்டும் புரிந்தது.

''என்னப்பா! நாளைக்குத் தான் வருவேன்னு சொல்லிட்டுப் போன?'' என மகனிடம் மெல்லத் தூண்டிலை வீசினார்.

"ம். ஆஃபிஸ்ல ஏதோ பிராப்ளமாம். அதான் வந்துட்டேன். டிஃபன் ரெடின்னா சொல்லுங்க. சாப்டுட்டுக் கிளம்பணும்!'' என்றவன், படித்துக் கொண்டிருந்த செய்தித் தாளோடு அவர்களது அறைக்குள் புகுந்து கொண்டான்.

மாமியார் திரும்பித் தன்னைப் பார்த்தப் பார்வையில், ஏதேனும் கேட்டுவிடப் போகிறார் என்ற பயத்துடன், மறுபக்கமாகத் திரும்பிக் கொண்டாள் மயூரி.

இதற்கு மேல் எந்த விளக்கமும் தேவைப்படவில்லை வடிவிற்கு. மனத்திற்குச் சங்கடமாக இருந்தாலும், எல்லாக் குடும்பத்திலும் இருப்பதுதான் என்று தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டார்.

சைலேஷ் அலுவலகத்தில் பிரச்சனை என்று எந்த நேரத்தில் சொன்னானோ...! அவனைத் தேடி வரிசையாகப் பிரச்சனைகள் வர ஆரம்பித்தன.

அலுவலக டென்ஷனில் இருந்தவனது மொபைல் ஒலித்தது.

"சொல்லுடா குணா! எப்படியிருக்க?'' என்று கேட்டான்.

"அப்பாவாகிட்டேண்டா. பொண்ணு பிறந்திருக்கா!'' என்றான் குதூகலத்துடன்.

அவன் சொன்ன விஷயத்தில் சைலேஷும் உற்சாகமானான். தனது வாழ்த்தைத் தெரிவித்தவன், ரம்யாவைப் பற்றி விசாரித்துவிட்டு சந்தோஷத்துடன் பேசிக் கொண்டிருந்தான்.

* * *

ரம்யாவிற்குக் குழந்தை பிறந்திருக்கும் சந்தோஷமான விஷயத்தைக் கேட்டதுமே, மயூரிக்குத் தோழியைப் பார்க்க வேண்டும் போலிருந்தது.

சிறுமலரைப் போல மென்மையான குழந்தையைத் தொட்டுப் பார்க்க அவளது உள்ளம் ஏங்கியது.

ரம்யாவின் அன்னை போனை வைத்ததுமே, சைலேஷை அழைத்தாள். அவனிடம் பேசி ஒருவாரம் ஓடிவிட்டது. இதைச் சாக்காக வைத்து, விஷயத்தைச் சொல்வது போல அவனிடம் பேச விழைந்தாள்.

ஆனால், அவளது நேரம் அவன் யாருடனோ பேசிக் கொண்டிருந்தான் போலும். பத்துமுறைக்கு மேல் முயன்ற போதும் "பிஸி' என்றே வர, ஏமாற்றத்துடன் போனை வைத்தாள்.

"தனது முட்டாள்தனத்திற்குக் கிடைத்த பரிசு இது' என்று அவளால் அமைதியாக இருக்கமுடியவில்லை. எங்கே அவனை முழுவதுமாக இழந்துவிடுவோமோ என்று பயமாக இருந்தது.

முன்பு, வாழ்க்கையை இழந்து விடுவோமோ என்று ஒவ்வொரு நாளும் பயத்துடன் கழித்தவள், இப்போது தானே அதற்கு வழிவகுத்துவிட்டதை எண்ணி உள்ளுக்குள் குமைந்து போனாள்.

அதற்காக, அவள் தனது தோல்வியை ஒப்புக்



கொள்ளவும் தயாராக இல்லை. தனது சந்தோஷத்தை மீட்டெடுக்க முடிவெடுத்தாள். என்ன நடந்தாலும் சரி... சைலேஷிடம் பேசிவிடவேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

வேலையிலிருந்து ஒருமணிநேரம் முன்னதாகவே கிளம்பிய மயூரி, ரம்யாவைக் காண மருத்துவமனைக்குச் சென்றாள். அங்கே குணாவுடன் பேசிக் கொண்டிருந்த சைலேஷை வியப்புடன் பார்த்தாள்.

"வா மயூரி! உனக்கு என்னவோ மீட்டிங் இருக்குன்னு சொன்னான். நீ இப்படி தடாலடியா வந்து நிக்கிற!'' என்று குணா இயல்பாகக் கேட்க, மயூரி சைலேஷைத் திரும்பிப் பார்த்தாள்.

அவனோ, வேகமாக பார்வையை அவள் மீதிருந்து விலக்கிக் கொண்டான். அவள் இப்படி திடுதிப்பென வந்து நிற்பாள் என அவன் நினைக்கவேயில்லை.

மதியமே அவளிடமிருந்து வந்திருந்த மிஸ்டு கால்களைப் பார்த்த போதும், அவளிடம் பேச விருப்பமில்லாமல் விட்டுவிட்டான். முதலிலேயே பேசியிருக்கலாம் என்று இப்போது தானே தோன்றுகிறது?

"ஆமாம்ண்ணா! அப்படித் தான் சொன்னாங்க. கடைசியில கேன்சல் ஆகிடுச்சி!'' என்றாள் மயூரி.

உள்ளே சென்றவள் ரோஜா நிறத்தில், வெள்ளை உடை தேவதையாகத் தொட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த குழந்தையை, ஆசையுடன் பார்த்தாள்.

மூடியிருந்த துணியையும் மீறி வெளியில் தெரிந்த பாதத்தை மெல்ல ஸ்பரிசித்தாள். கூச்சத்தில் குழந்தை கால்களைச் சட்டென்று அசைக்க, மயூரிக்குச் சிலிர்ப்பாக

இருந்தது. முதன்முறையாக அவளுக்குள்ளிருந்த தாய்மை உணர்வு, மெல்லத் தலைகாட்டியது.

அதற்குள் உறக்கம் கலைந்த குழந்தை மெல்லச் சிணுங்க, "பட்டுக்குட்டி! உன்னைப் பார்க்க யார் வந்திருக்காங்க பாருங்க...'' என்ற ரம்யாவின் அன்னை, குழந்தையைத் தூக்கி மயூரியிடம் கொடுத்தார்.

ஆசையுடன் வாங்கிக் கொண்டாலும் பயத்தில், "அம்மா ப்ளீஸ்! நீங்களே வாங்கிக்கோங்க...'' என்று சிரிப்பும், கூச்சமுமாகச் சொன்னாள்.

"இப்பவே பிராக்டீஸ் பண்ணிக்க மயூ!'' என்று ரம்யா கேலி செய்ய, "ரமி!'' என்று வெட்கத்துடன் சிணுங்கினாள்.

ஆயினும் அடுத்த நொடியே மனத்தில் ஒரு வெறுமை உண்டாக, ஏக்கமும் வேதனையுமாக சைலேஷைப் பார்த்தாள்.

சற்று விலகி நின்றிருந்த போதும், அவளையே பார்த்துக் கொண்டிருந்த சைலேஷிற்கு மனம் வலித்தது. அவளது பார்வையில் இருந்த உணர்வுகளைத் துல்லியமாகப் படித்தவன், அங்கே நிற்க முடியாமல் வேகமாக வெளியேறினான்.

அனைத்தும் சில நொடிகளில் நடந்து முடிந்த போதும், அதைக் கவனித்துவிட்ட ரம்யாவும் - குணாவும், ஒருவரையொருவர் அர்த்தத்துடன் பார்த்துக் கொண்டனர்.

குழந்தையைக் கொஞ்சுவது போலத் தனது கண்ணீரை மறைக்க மறுபுறம் திரும்பிக் கொண்டவளை, ரம்யா பரிதாபத்துடன் பார்த்தாள்.



# 38

"**நா**ன் அன்னைக்கே சொன்னேன்... அவ்வளவு சீக்கிரம் எதுக்கும் கலங்கறவ இல்ல மயூரி. ரெண்டு பேருக்குள்ளேயும் ஏதோ பெரிய பிரச்சனை போல. நீங்க அண்ணாகிட்ட பேசுங்கன்னு சொன்னேன் இல்ல? இப்போ பாருங்க... கிட்டதட்ட பதினைந்து நாளா, அப்படியேதான் இருக்காங்க போல.

நமக்குத் தெரிந்தே இத்தனை நாள்னா, அதுக்கு முன்னாடி எவ்ளோ நாளோ? நான் கேட்டா எதையும் சொல்ல மாட்டாள்னு தானே, உங்களைப் பேசச் சொன்னேன்? இரு... கொஞ்ச நாள் ஆகட்டும்னு சொன்னீங்க. இப்போ என்ன ஆச்சு?''

குணாவைப் பிலுபிலுவென பிடித்துக் கொண்டாள் ரம்யா.

"எனக்கும் புரியாம இல்ல. அவங்களா சமாதானம் ஆகிக்குவாங்கன்னு நினைச்சேன். ஆனா, இன்னைக்குக் குழந்தையோட பெயர் வைக்கும் ஃபங்ஷனுக்கும் வரலை. அவன் எங்கேன்னு கேட்டா, மயூரிக்கே தெரியலை. போனையும் எடுக்க மாட்டேன்றான். அப்படியென்ன கோபம் அவனுக்கு?'' -எதுவும் புரியாமல் மண்டையை உடைத்துக் கொண்டான்.

"நீங்க என்ன செய்வீங்களோ... ஏது செய்வீங்களோ எனக்குத் தெரியாது. மயூரிக்கு மட்டும் ஏடாகூடமா ஏதாவது நடந்தா, நான் சும்மா இருக்க மாட்டேன். அத்தனைப் பேரையும் எங்கே நிக்க வைக்கணுமோ...

அங்கே நிக்க வைப்பேன். சொல்லிட்டேன்!'' என்று ஆத்திரத்துடன் கத்தினாள் ரம்யா.

"தேவையில்லாம பேசாத ரமி! சைலேஷ், அப்படிப்பட்டவன் இல்ல. நான் நாளைக்கே அவன்கிட்டப் பேசறேன். நீ வீணா மனசைக் குழப்பிக்காம, போய்... குழந்தையைப் பாரு...'' என்று வற்புறுத்தி அவளைக் கீழே அனுப்பி வைத்தான்.

அவனுக்கும் ஆயிரம் சந்தேகங்களும், கேள்விகளும் மண்டையைக் குடைந்தன. மொட்டை மாடியையே சுற்றி வந்து கொண்டிருந்தான்.

* * *

**மா**லையிலிருந்து அறைக்குள்ளேயே அடைந்து கிடந்த மயூரிக்கு, மனம் ஒருநிலையில் இல்லை. தன் மீதிருக்கும் கோபத்தைத் தன்னைச் சேர்ந்தவர்களிடமும் வெளிப்படுத்துகிறானா? நிச்சயமாக இருக்காது. அப்படியிருந்திருந்தால், இடைப்பட்ட நாட்களில் தன்னையே இந்த வீட்டில் வைத்திருக்க வேண்டிய அவசியம் அவனுக்கு இல்லையே! பின் என்ன தான் ஆயிற்று?

இரண்டு மூன்று நாட்களாகவே, எதையோ பறிகொடுத்தது போலத் தான் இருந்தான். அன்று மருத்துவமனையிலிருந்து இருவரும் சேர்ந்தே வந்தனர். அப்போதும், அவளிடம் எதுவும் பேச அவன் முற்படவில்லை.

விளக்கை அணைத்துவிட்டு படுத்த பின்பு தனது தயக்கத்தை விலக்கித் தள்ளிவிட்டு, "சைலேஷ்!'' என்று அழைத்தாள்.



கட்டிலின் மறுமுனையில் படுத்திருந்தவன், நெற்றியில் வைத்திருந்த கையை அகற்றிவிட்டு, அவளைப் பார்த்தான்.

"நா..ன் பேசினதெல்லாம் முட்டாள்தனம் தான். அதுக்காக, நீங்க இப்படி விலகிப் போறதை என்னால ஜீரணிக்கவே முடியல. உங்ககிட்ட ஆயிரம் முறை மன்னிப்பு கேட்டுக்கறேன். ப்ளீஸ் சைலேஷ்! என்னை இப்படித் தண்டிக்காதீங்க. என்னால தாங்க முடியல...!'' இத்தனை நாட்களாக, பேசவேண்டும் என்று நினைத்து மனப்பாடம் செய்து வைத்திருந்ததை, மளமளவென்று கொட்டி முடித்தாள்.

அனைத்தையும் கேட்டுக் கொண்டு நிதானமாக எழுந்து அமர்ந்தவன், "நானும் ட்ரை பண்ணிப் பாக்கறேன் மயூரி! ஆனா, இப்போ வரைக்கும் நீ எதிர்பார்க்கற மாதிரி, என்னால மாறவே முடியல. இப்பக் கூட நீ பேசறதைக் கேட்க, எனக்குக் கோபமா வருது. இருந்தும், என்னைக் கண்ட்ரோல் பண்ணிக்கிறேன்.

ஆனாலும், என்னால மொத்தமா என்னோட ஈகோவைத் தூக்கிப் போட்டுட்டு, ஒண்ணுமே நடக்காத மாதிரி உன்கிட்ட நடந்துக்க முடியலையே! உன்னைப் பார்க்கும் போதெல்லாம், நீ பேசின பேச்சு தானே ஞாபகத்துக்கு வருது?

அப்போல்லாம்... என் மேல நெருப்பை அள்ளிக் கொட்டினா மாதிரி, என் உடம்பெல்லாம் எரியுதே! நானும் இந்த வெட்கம், மானம், ரோஷம், எல்லாத்தையும் தூக்கிப் போட்டுட்டு... உனக்குக் கூஜா தூக்கணும்னு தான் நினைக்கிறேன். ஆனா, இந்தப் பாழாய் போன

தன்மானம்னு ஒண்ணு இருக்கே... முடியமாட்டேன்னுதே!'' என்று நிறுத்தாமல் பேசியவனை, பரிதாபமாகப் பார்த்தாள் மயூரி.

"அப்போ... நான் செய்த தப்புக்குப் பிராயச்சித்தமே இல்லையா?'' எனக் கேட்டவளது குரல் கம்மியது.

"காலம்தான் எல்லாக் காயத்துக்கும் மருந்து மயூரி. அந்த நம்பிக்கையோட தான், நான் வாழ்க்கையை ஓட்டிட்டு இருக்கேன். சாரி, இதை என்னை வச்சி மட்டும் தான் சொல்றேன். உனக்குத் தான் நம்பிக்கைன்னா... என்னனு தெரியவே தெரியாதே...!'' என்று அழுத்தமாகச் சொல்லிவிட்டு, மீண்டும் படுத்துக் கொண்டான்.

அவளால் அழவும் முடியவில்லை; அமைதியாக இருக்கவும் முடியவில்லை. இதற்குமேல் என்ன பேசுவதென்றும் தெரியவில்லை. அதேநேரம், அவனைத் தனது பேச்சு எந்த அளவிற்கு காயப்படுத்தியிருக்கிறது என்றும் புரிந்து கொண்டாள்.

நடந்ததை நினைத்துப் பலனில்லை என்ற போதும், அதை நினைக்காமலும் இருக்க முடியவில்லை அவளால். கீழே அமர்ந்து கட்டிலில் தலை சாய்த்திருந்தவள், கதவு தட்டும் ஓசை கேட்டு தனது நினைவுகளைக் களைந்து நிமிர்ந்து பார்த்தாள்.

கதவைத் திறந்து எட்டிப் பார்த்த வடிவைக் கண்டதும், "அத்தை!'' என்று எழுந்தாள்.

''ஏம்மா! குழந்தைக்கு பெயர் வைக்கும் ஃபங்ஷனுக்கும் அவன் வரலை. போனையும் எடுக்கல. மணி எட்டாகுது. இன்னும் ஆஃபிஸ்ல இருந்தும் வரலையே... உன்கிட்ட ஏதாவது சொன்னானா?''



"மத்தியானம் வந்திடுறேன்னு தான் சொன்னார். ஆஃபிஸ்ல ஏதாவது வேலையான்னு தெரியல! ரெண்டு மூணு நாளாவே, கொஞ்சம் டென்ஷனா தான் இருந்தார்'' என்றாள்.

"நீ என்னன்னு கேட்கலையா?'' என்றதும், பதில் சொல்ல முடியாமல் மௌனியானாள்.

அவளை ஊன்றிப் பார்த்தவர், "நான் சொல்றேன்னு தப்பா எடுத்துக்காத... இந்த இருபது, இருபத்தஞ்சு நாளா, நானும் கவனிச்சிட்டுத் தான் இருக்கேன். நானா எதுவும் கேட்க வேணாம்னு தான் இருந்தேன். ஆனா மனசு கேக்கல. எந்தப் பிரச்சனையா இருந்தாலும், பேசித் தீர்த்துக்கோங்க!

இத்தனை நாளா இல்லாத அக்கறை திடீர்னு வந்துடுச்சான்னு நீ நினைச்சாலும் பரவாயில்லம்மா. பெத்த வயிறு கேட்கல. என் பிள்ளை இப்படிக் கலங்கிப் போய்... நான் பார்த்ததே இல்லம்மா. இப்போ கூட மனசு கேட்கல...! அதான் உன்னைக் கேட்டுட்டேன்!'' என்றவர் வெளியே செல்ல, மயூரிக்கு ஆயாசமாக இருந்தது.

"சைலேஷ்! அப்படி எங்கே தான் இருக்கீங்க? போனைக் கூட ஸ்விட்ச் ஆஃப் செய்துவிட்டு இருக்கும் அளவிற்கு என்ன நடந்தது? ப்ளீஸ் சைலேஷ்! எனக்குப் பயமா இருக்கு. இதுக்கெல்லாம் காரணம் நான் தான்னா... என் மனசார உங்ககிட்ட மன்னிப்புக் கேட்கத் தயாரா இருக்கேன். ப்ளீஸ்!' என்று மனத்திற்குள் புலம்பிக் கொண்டவளுக்கு, ஏனோ அலுவலகத்திற்குப் போன் செய்ய தோன்றவேயில்லை.

ஆளரவமில்லாதா கடற்கரையில் வானத்தை

வெறித்துக் கொண்டு படுத்திருந்த சைலேஷின் உள்ளம், அந்தக் கடலலைகளுக்கு இணையாக ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது.

# 39

கலைந்த தலையும், நலுங்கிய உடையுமாக வீட்டிற்குள் நுழைந்தவனை மூவரும் அதிர்ச்சியுடன் பார்த்தனர்.

சைலேஷ் என்றாலே, படிய வாரிய தலையும், நேர்த்தியான உடையுமாக எப்போதும் சிரித்த முகமுமாகக் காட்சியளிப்பவன் என்ற பெயர், அனைவரிடத்திலும் அவனுக்கு உண்டு.

அப்படிப்பட்டவன், இன்று இப்படி வந்து நிற்பதை வீட்டிலிருப்பவர்கள் நம்ப முடியாமல் பார்த்தனர்.

அறைக்குச் செல்ல முயன்ற மயூரியை அழைத்த கேசவன், "அம்மாடி! அவன்கிட்ட இப்போ எதுவும் கேட்காத. சாதாரணமாப் பேசு! அவனே என்னன்னு சொல்லட்டும்!'' என்றார்.

சரியென்பது போல தலையை அசைத்தாள்.

"என்னங்க ஒரு மாதிரி இருக்கீங்க?'' என்றவளுக்கு பதிலேதும் சொல்லாமல், டவலுடன் குளியலறைக்குள் நுழைந்தான் அவன்.

சில நாட்களாக அவளிடம் பாராமுகமாக இருந்த போதும், அவள் ஏதேனும் கேட்டால் நின்று பதில்



சொல்லிவிட்டே செல்வான். அவனது திடீர் மாற்றத்திற்குக் காரணம் புரியாமல் குழம்பினாள்.

குளித்துவிட்டுத் தலையைத் துடைத்துக் கொண்டே கட்டிலில் அமர்ந்தான்.

ஷெல்ஃபில் எதையோ தேடுவதைப் போல நின்றிருந்தவள், "நீங்க ஃபங்?ஷனுக்கு வருவீங்கன்னு எல்லோரும் ரொம்ப எதிர்பார்த்தாங்க. போன் செஞ்சாக் கூட நீங்க எடுக்கலைன்னு, குணா அண்ணா கொஞ்சம் வருத்தப்பட்டாங்க...'' என்றாள்.

அதற்கும் அவனிடமிருந்து எந்தப் பதிலும் வராமல் போக, திரும்பிப் பார்த்தாள்.

கட்டிலில் சாய்ந்து அமர்ந்து கண்களை மூடியபடி, நெற்றியில் கைவைத்தபடி படுத்திருந்தான் அவன்.

பயத்தில் மயூரிக்கு முதுகுத் தண்டு சில்லிட்டது.

அவனருகில் வந்தமர்ந்தவள், "என்னங்க! ஒரு மாதிரியா இருக்கீங்க? தலை வலிக்குதா?'' என்று கேட்டபடி அவனது கரத்தை விலக்கி நெற்றியை வருடி விட்டாள்.

"ம்ப்ச்சு!'' என எரிச்சலுடன் வேகமாக அவளது கரத்தைத் தள்ளிவிட்டவன், எழுந்து சம்மணமிட்டு அமர்ந்தான்.

அவனது செய்கையால் திகைத்தவள், அவனுடைய மனவோட்டத்தைக் கணிக்க முடியாமல் தடுமாறினாள். அவனாக ஏதேனும் சொல்வான் என்று காத்திருக்க, அவனோ, கடுகடுவென்ற முகத்துடன் அமர்ந்திருந்தான்.

தான் அங்கே இருப்பதே அதிகப்படி என்று தோன்ற,

"நான் போய் டிஃபன் எடுத்து வைக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து நழுவினாள்.

அவள் சொன்னதைக் காதில் வாங்காமல் அமைதியாக அமர்ந்திருந்தாலும், உள்ளுக்குள் கொதித்துக் கொண்டிருந்தான் அவன். "தான் இப்படியொரு இழிசெயலுக்குத் துணை போயிருப்பேன் என்று, ஜி.எம்-மும், எம்.டி-யும் எப்படி நினைக்கலாம்?'

கடந்த ஆறு வருடங்களாக இந்தக் கம்பெனிக்காக இரவு பகல் பாராமல் உழைத்த தனது உண்மையான உழைப்பை, எப்படி இவர்களால் சந்தேகிக்க முடிந்தது? கேவலம்... பணத்துக்காக இப்படியொரு துரோகத்தைச் செய்வேன் என்று எப்படி அவர்கள் நினைக்கலாம்?' என்று எண்ணியவனது முகம் கல்லாக இறுகியது.

"மிஸ்டர். சைலேஷ்! உங்களுக்காக நான் கொஞ்சம் சப்போர்ட் பண்ணிப் பேசினதாலதான், இப்போதைக்கு மேலிடத்தில் எந்த ஆக்ஷனும் எடுக்கல. முடிஞ்ச அளவுக்கு... பணத்தைச் சீக்கிரம் கட்டப் பாருங்க!'' என்று சொன்ன ஜி.எம்மைக் கேள்வியாகப் பார்த்தான்.

"சார்! இதுக்கு நான் காரணமில்லையெனும் போது... நான் எதுக்காக யாரோ செய்த தப்பை ஏத்துக்கணும்? அதோட... நான் எப்படி முப்பது இலட்சத்தைப் புரட்ட முடியும்?'' என்றான் ஆத்திரத்துடன்.

"சாரி சைலேஷ்! என்னால முடிஞ்சவரைக்கும் செய்துட்டேன். இதுக்கு மேல முடியாது'' என்று அவர் கைவிரித்துவிட, செய்வதறியாமல் தடுமாறினான்.

"இனி, நான் யார்? எனக்கான அடையாளம் என்ன? என் மேல் சுமத்தப்பட்ட இந்தக் குற்றச்சாட்டிலிருந்து



வெளிவர நான் என்ன செய்யணும்? தன் மேல் விழுந்துவிட்ட இந்தக் கறுப்புப் புள்ளியை எப்படி அழிப்பது?' என்று சரியாகத் தெரியாமல் அவமானத்தில் கூனிக் குறுகினான்.

தன்னை நிரூபிக்கக் கூட வகையில்லாமல், எத்தனைச் சுலபமாக வேலையை விட்டுத் தூக்கிவிட்டனர். ஐ.டி. கார்டை வாங்கிக் கொண்டதோடு, தன் கண்ணெதிரிலேயே அதைக் குப்பைக் கூடையில் விட்டெறிந்ததைப் பார்த்தவுடன், தன்னையே நடுத்தெருவில் வீசியெறிந்ததைப் போல் உணர்ந்தான். அவனது உடல், ஒரு நொடி குலுங்கியது.

"இதை எப்படி வீட்டில் சொல்லுவேன்? வேலையில்லாத தன் மீது விழும் பரிதாபப் பார்வையை, எப்படிச் சகித்துக் கொள்வது? அதோடு, இனி தன்னை யார் மதிப்பார்கள்?' என்று நினைத்தவனுக்கு, எங்கேயாவது ஓடிவிடலாமா என்று தோன்றியது.

✶ ✶ ✶

தங்களுக்கு இரவு உணவைப் பரிமாறிக் கொண்டிருந்தவளிடம், "சைலேஷ் சாப்பிட வரலையாம்மா?'' என்று கேட்டார் கேசவன்.

"தலைவலின்னு படுத்துட்டு இருக்கார் மாமா. நீங்க சாப்பிட்டுட்டே இருங்க; நான் கூட்டிட்டு வரேன்'' என்றவள், வேகமாக அறைக்குள் நுழைந்தாள்.

"என்னங்க! மாமாவும், அத்தையும் உங்களுக்காகச் சாப்பிடாம காத்திட்டு இருக்காங்க. எழுந்து வாங்களேன்... ப்ளீஸ்!'' என்று மூன்றாவது முறையாக அவனைச் சாப்பிட அழைத்தாள்.

அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே வேகமாக எழுந்தவன், அவள் பக்கமே திரும்பவில்லை. வந்த வேகத்திலேயே செருப்பை மாட்டிக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறினான்.

சாப்பிடத் தான் செல்கிறான் என்று நினைத்துக் கொண்டே சற்று நிம்மதியோடு வந்தவள், அவன் வெளியே செல்வதைப் பார்த்து, செய்வதறியாது திகைத்து நின்றாள்.

பெரியவர்கள் இருவரும் தன்னைக் கேள்வியோடு பார்ப்பதைக் கண்டு கலங்கினாள்.

* * *

அப்போது தான் உறங்க ஆரம்பித்திருந்த குணா, மொபைல் சப்தம் கேட்டு திடுக்கிட்டு விழித்தான்.

மயூரியின் எண்ணைப் பார்த்ததும், "என்னம்மா! மணி பன்னெண்டு ஆகப் போகுது... இந்த நேரத்துல...?'' என்று பதட்டத்துடன் கேட்டான்.

அவனது கேள்வியே, "சைலேஷ் அங்கே இல்லை!' என்பதை உணர்ந்து கொள்ளப் போதுமானதாக இருந்தது.

அவன் அங்கே சென்றிருக்க மாட்டான் என்று தெரிந்த போதும், "ஒருவேளை சென்றிருந்தால்...' என்ற நப்பாசையில்தான், அவனை அழைத்திருந்தாள்.

"மயூரி!'' -என்றது குணாவின் குரல்.

"அ... ண்ணா! அவர் அங்கே வந்தாரா?'' என்று கலக்கமான குரலில் வினவினாள்.

"இல்லையேம்மா... நீ ஏன் ஒரு மாதிரி பேசற?''

நடந்ததைச் சுருக்கமாக அவனிடம் சொல்வதற்குள், அவளுக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது.



பொறுமையாக அவற்றைக் கேட்டுக் கொண்டவன், "ஓ! அவனோட மொபைலுக்கு ட்ரை பண்ணியா?'' -தனது பதட்டத்தை மறைத்துக் கொண்டு கேட்டான்.

"மொபைல் வீட்லதாண்ணா இருக்கு!'' என்றவளது குரல் கரகரத்தது.

அவள் பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அழைப்பு மணியின் ஓசை கேட்க, "அவர் வந்துட்டார் போலண்ணா...'' என்று பேசிக் கொண்டே, ஓடிச் சென்று கதவைத் திறந்தாள்.

அங்கே நின்றிருந்த சைலேஷைக் கண்டதும், நிம்மதிப் பெருமூச்சு விட்டவள், கதவை மூடினாள்.

அவனோ, அவள் எதிரில் இருப்பதைக் கண்டுகொள்ளாமல் உள்ளே சென்றான்.

அப்போதைக்கு அவன் வந்ததே போதுமென இருக்க, மறுமுனையில் குணா காத்திருப்பது நினைவுக்கு வந்தது.

"அண்ணா! அவர் வந்துட்டார். நான் அப்புறம் பேசறேன். இந்த நேரத்துல உங்களை டிஸ்டர்ப் பண்ணதுக்கு சாரி!'' என்றாள் வருத்தத்துடன்.

"அட! நீ வேறம்மா. போய்... அவனை என்னன்னு கவனி!'' என்றவன், யோசனையுடன் போனை வைத்தான்.

அறைக்குள் நுழைந்தவள், "போனைக் கூட எடுத்துக்காம எங்கே போயிட்டீங்க?'' என்று சகஜமாகவே பேசினாள்.

அதுவரை இழுத்துப் பிடித்த பொறுமையுடன்

இருந்தவனுக்கு, அவளது இந்தத் திடீர் அக்கறையே ஆத்திரத்தைக் கிளப்பியது.

"தனது நிலை தெரிந்தால் இந்தக் கரிசனமெல்லாம் என்னவாகும்?' என்று நினைத்தவனுக்கு, திடீரென சுயபச்சாதாபம் எழுந்தது.

அந்த எண்ணமே எதிரிலிருப்பவள் மீதான கோபத்தைப் பன்மடங்காகப் பெருக்கியது. அதே விறைப்புடனே சட்டையைக் கழற்றி ஹேங்கரில் மாட்டியவன், எதுவும் பேசாமல் படுத்துக் கொண்டான்.

அவனது ஒவ்வொரு செயலும் அவளுக்குள் மிரட்சியைத் தோற்றுவிக்க, எச்சிலைக் கூட்டி விழுங்கியவள் மென்குரலில், "சாப்பிட வரீங்களா...? இப்படி வெறும் வயித்துல,..'' என்றாள்.

"ஏன் என் உயிரை வாங்கற? சாப்பாடாம் சாப்பாடு...! ஒரு நாளைக்குச் சாப்பிடலனா, செத்தா போகப் போறேன்...'' என்று கத்தியவனைப் பார்த்து அரண்டு போனாள்.

"எதற்காக இந்த ஆவேசம்? சொன்னால் தானே புரியும்!' என்று விழித்துக் கொண்டு நின்றாள்.

அவளைப் பார்க்க பார்க்க, அவனது கோபம் கட்டுக்கடங்காமல் போனது.

"இன்னும் எதுக்கு, இப்படி மலங்க மலங்க முழிச்சிகிட்டு நிக்கிற? என் கண் முன்னால நிக்காம, போய்த் தொலை!'' என்று மீண்டும் சப்தமிட்டு அவளை மிரள வைத்தான்.

அவனை வீட்டிற்குள் வரும் போதே கவனித்து



விட்ட வடிவு, ஹாலில் நின்றபடி அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்தார். "போய்த் தொலை!' என்று அவன் கத்திய நேரம், "சைலேஷ்!'' என்று அன்புடன் அழைத்தபடி அறைக்குள் வந்த வடிவு, "என்னப்பா! ஏதாவது பிரச்சனையா?'' என்று அன்புடன் கேட்டார்.

ஏனோ அந்த நேரத்தில், அன்னையின் அரவணைப்பும், பாசமும் அவனுக்குத் தேவையான ஒன்றாக இருந்தது.

"ஒண்ணுமில்லம்மா...!'' என்று தலையைக் குனிந்து கொண்டான்.

"பசியோட இருந்தா இப்படித் தான் இருக்கும். வா! முதல்ல வந்து சாப்பிடு. மத்ததை அப்புறம் பேசிக்கலாம்'' என்று கையோடு மகனை டைனிங் ஹாலுக்கு அழைத்துச் சென்றார்.

பரிமாறிக் கொண்டிருந்த அன்னையிடம், "நீங்க சாப்டீங்களாம்மா?'' என்று பரிவுடன் கேட்டான்.

கண்களைத் துடைத்துக் கொண்டு, "முதல்ல, நீ சாப்பிடுப்பா!'' என்றார் தாய்மையுடன்.

"உட்காருங்கம்மா'' என்றவன், ஒரு தட்டை எடுத்து அன்னைக்கு வைத்து அவனே பரிமாறினான்.

விழிகளில் ஈரம் படர அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த மயூரி, மெல்ல அறைக்கு நழுவினாள்.

டேபிள் மீதிருந்த தண்ணீர் பாட்டிலை எடுத்தவளது தோள்மீது ஒரு கை விழவும், சட்டெனத் திரும்பிப் பார்த்தாள்.

கையில் பாலுடன் நின்றிருந்தார் வடிவு.

"உன்னைப் புரிஞ்சிக்க முடியுது மயூரி! சீக்கிரமே... எல்லாம் சரியாகிடும். இந்தப் பாலைக் குடிம்மா. வெறும் வயித்துல படுக்காதே...!'' என்று சொல்ல, அந்தக் கரிசனத்தில், அத்தனை நாளும் மாமியார்- மருமகளுக்கு இடையிலிருந்த நூலிழைத் திரையும் அறுந்து விழுந்தது.

"அத்தை!'' என்று கதறியபடி இருக்கையில் அமர்ந்தவளை, தன் மடியோடு சேர்த்து அணைத்துக் கொண்டார் வடிவு.

# 40

**வி**ஷயத்தை அறிந்ததும், தலையில் இடி விழுந்ததைப் போல நிலை குலைந்து போனாள் மயூரி. இருகைகளாலும் தலையைப் பிடித்தபடி அமர்ந்துவிட்டாள் அவள்.

"மயூரி! தைரியம் சொல்ல வேண்டிய நீயே இப்படி உட்கார்ந்துட்டினா, அவன் என்ன பண்ணுவான்?'' என்ற மாமியாரைத் திரும்பிப் பார்த்தாள்.

"தனது பயமே வேறு... என்று எப்படிச் சொல்வாள்? ஏற்கெனவே என்னை விட்டுப் போய்விடுவாயா? என்று கேட்டவன், இப்போதிருக்கும் நிலையில் என்ன சொல்வான்?' -நினைக்கவே நடுங்கியது அவளுக்கு.

"அத்தை! பணத்தை எப்படியாவது பிரட்டிடலாம். ஆனா, அவரோட வேலை... எங்கே போனாலும் இதுக்கு முன்னாடி எங்கே வேலை செய்தீங்க? ஏன் வேலையை விட்டீங்கன்னு கேட்பாங்களே! இவர் என்ன அத்தை



செய்வார்?'' என்றாள் கவலையுடன்.

"பணத்தை மட்டும் எப்படிம்மா புரட்ட முடியும்?'' என்று வடிவு சொல்லிக் கொண்டிருக்கும் போதே, குணாவுடன் வீட்டிற்குள் நுழைந்தான் சைலேஷ்.

"வாங்கண்ணா!'' என்றதோடு அங்கிருந்து மயூரி நகர்ந்துவிட, "வாப்பா'' என்றார் வடிவு.

சிறிதுநேரம் அமைதியிலேயே கழிய, குணா பேச ஆரம்பித்தான்.

"பணத்தை எப்படிக் கட்டப் போற?' என்று கேட்டதும் தான் தாமதம்...

"யாரோ செய்த தவறுக்கு...நான் எப்படிப் பொறுப்பாக முடியும்?'' என்றவன், அந்தப் பணத்தை தான் கட்டப் போவதில்லை என்பதில் உறுதியாக இருந்தான்.

தனது முடிவைச் சொல்லிவிட்டு அறைக்குச் சென்றவனைப் பின் தொடர்ந்தான் குணா.

"என்னடா இப்படிச் சொல்ற?'' என அதிர்ச்சியுடன் கேட்டான் குணா.

"எனக்குச் சிலர் மேல சந்தேகமிருக்கு. அதை எங்கே யாரிடம் சொல்லணுமோ சொல்லிட்டேன். சீக்கிரமே எல்லாம் கிளியராகிடும்'' என்றான் சைலேஷ்.

குணா புரியாமல் பார்த்தான்.

"புரியலையா? நேத்து இருந்த டென்ஷன்ல, எனக்கும் ஒண்ணும் புரியலை தான். ஆனா, யோசிச்சதுக்கு அப்புறம் தான், என்னை ஏன் போலீஸ்ல ஹேண்ட் ஓவர் பண்ணாம... வேலையை விட்டு மட்டும் தூக்கினாங்க? முப்பது லட்சம் இவங்களுக்குச் சாதாரணமா போச்சா?

இல்லை..., நம்ம ஜி.எம்.மோட பேச்சுக்கு இவ்வளவுதான் மதிப்பா...?'' என்று கொக்கி போட்டு நிறுத்தினான்.

குணாவின் முகத்திலிருந்த குழப்பம் விலக, "சைலேஷ்...! உண்மைதான்டா'' என்றான் வியப்புடன்.

"இப்போதான் உன் மாமனாரைப் பார்த்து விஷயத்தைச் சொல்லிட்டு வரேன். அவர் தேவையான உதவியைச் செய்யறேன்னு சொல்லியிருக்கார்!''

சந்தோஷத்துடன் தன்னை அணைத்துக் கொண்ட நண்பனை, புன்னகையுடன் தட்டிக் கொடுத்தான்.

* * *

"பாட்டீ...!'' என்று ஓடிவந்த பேத்தியைத் தூக்கி முத்த மழை பொழிந்தார் வடிவு.

சப்தம் கேட்டு உள்ளேயிருந்து வந்த மயூரி, "ஹாய் பப்ளி!'' என்று குழந்தையைக் கொஞ்சியவள், பின்னாலேயே வந்த சரவணனையும், இனியாவையும் வரவேற்றாள்.

ஆண்கள் மூவரும் பேசிக் கொண்டிருக்க, அன்னையுடன் டைனிங்கில் அமர்ந்துவிட்டாள் இனியா. அவள் ஏதோ துருவித் துருவிக் கேட்பதும், மாமியார் சமாளிப்பாக பதில் சொல்வதையும், கண்டும் காணாமல் இருந்து கொண்டாள் மயூரி.

இடுப்பில் குழந்தையும், மற்றொரு கையில் காஃபி ட்ரேயுமாக வந்தவளிடமிருந்து, குழந்தையை வாங்கிக் கொண்டான் சைலேஷ்.

"உங்க அத்தைக்கு... சூப்பர் உமன்னு நினைப்புடா...!'' என்று கமெண்ட் வேறு அடிக்க, மயூரி இமை விரிய அவனைப் பார்த்தாள். சற்று நேரத்தில்



சரவணன் மட்டும் கிளம்பிவிட, இனியாவின் இராஜ்ஜியம் ஆரம்பமானது.

"என்னண்ணா! வேலை போனதும் வீட்லயே இருக்கக் கஷ்டமா இல்ல?'' என்று கேட்க, அனைவரது முகமும் ஒரு நொடி மாறியது.

மயூரிக்கு வாய் துறுதுறுவென்றது. வெகுவாகச் சிரமப்பட்டு, கட்டுப்படுத்திக் கொண்டாள்.

இது திருந்தாத ஜென்மம் என்பது போல பார்த்த கேசவன், தலையிலடித்துக் கொண்டு சென்றுவிட்டார்.

"என்னடியிது?'' என்று வடிவு ஆரம்பிக்க... அதற்குள், "அதான் நீ வந்துட்ட இல்ல. இனி... பொழுது ரொம்ப ஈஸியா போயிடும்!'' என்றான் சைலேஷ்.

"அப்போ... என்னை வெட்டின்னு சொல்றியா?'' -கோபத்துடன் கேட்டாள் இனியா.

"நான் சொல்லலைமா. நீதான் சொல்லிக்கிற!'' என்றவன் குழந்தையுடன் அறை வாசல் வரை சென்றுவிட்டு, "மயூ!'' என்று சப்தமாக அழைத்தான்.

'எத்தனை நாட்களுக்குப் பிறகு, தனது பெயரைச் சொல்லி அழைக்கிறான்' என்று நினைத்தவளுக்கு, மகிழ்ச்சி பிரவாகமெடுத்தது.

"இ..தோ வரேங்க!'' என்று சொல்வதற்குள் மலையைப் புரட்டும் அளவிற்கு மூச்சு வாங்கியது அவளுக்கு. அவசர அவசரமாக ஹாலுக்கு அறைக்கு ஓடினாள்.

குழந்தையைத் தன் கால்மீது நிற்க வைத்து, இருகைகளையும் பிடித்துக் கொண்டு தூக்கி விளையாடிக்

கொண்டிருந்தவன், அவள் வந்து நின்றதை கவனித்ததாகவே தெரியவில்லை.

"கூப்டீங்களே...!'' என்றவளின். குரலில், எதிர்பார்ப்பும், உற்சாகமும் பொங்கி வழிந்தது.

"ம்'' என்றவன் குழந்தையை இறக்கி கீழே விட்டுவிட்டு, "பட்டூஸ்! டேபிள் மேல சாக்லேட் இருக்கு பாருங்க. போய் எடுத்துக்கோங்க!'' என்று அனுப்பிவிட்டு, "நம்ம விஷயம் இனியாவுக்குத் தெரியாம நடந்துக்க! அதுதான் நல்லது'' என்று அவளைப் பார்க்காமலேயே சொல்லிவிட்டு, அருகிலிருந்த புத்தகத்தை எடுத்துப் புரட்டினான்.

மயூரிக்குள், அத்தனை உற்சாகமும் வடிந்தது போலானது. அவன் சொன்னதற்காக, "சரி'' என்றாள்.

"உடனே வெளியே போகாதே. கொஞ்ச நேரம் இங்கேயே உட்கார்ந்துட்டுப் போ!'' என்றான்.

தலைவிதியே என்று அதையும் செய்தாள்.

இங்கே இவன் யாருக்குத் தெரியவேண்டாம் என்று நினைத்து அவளைப் பாடாய்படுத்தினானோ... அவள், அப்போது இவர்களைப் பற்றித் தான் நினைத்துக் கொண்டிருந்தாள்.

"அண்ணன் மயூன்னு கூப்பிட்டதும், இவ எதுக்கு புதுப் பொண்ணு மாதிரி துள்ளிக் குதிச்சி ஓடணும்? ஏதோ சரியில்லையே!' என்று யோசித்துக் கொண்டிருந்தாள்.

* * *

இரண்டு நாட்கள் குழந்தையுடனேயே பொழுதைக் கழித்தான். அதன்பிறகு தினமும் காலையில் பத்துமணிக்கு வெளியே கிளம்பிச் சென்றால், இரவில்தான் வீடு திரும்ப ஆரம்பித்தான்.



மூன்று நாட்களாக ஏதேனும் தகவல் சிக்குமா என்று தவித்துக் கொண்டிருந்த இனியாவிற்கு எதுவுமே பிடிபடவில்லை. போதாதற்கு மாமியாரும், மருமகளும் இயல்பாக பேசிக் கொள்வது வேறு, அவளுக்கு உவப்பாக இல்லை.

அவர்கள் இருவரையும் பார்க்கப் பார்க்க எரிச்சலாக வந்தது. முன்பு தான் வந்தபோதெல்லாம், பெரும்பாலான நேரத்தை தன்னிடமே பேசிக் கழிக்கும் அன்னை, இப்போது அண்ணன் மனைவியிடமும் அதிக நேரம் செலவழிப்பது, கோபத்தை வரவழைத்தது.

மயூரி அலுவலகம் கிளம்பும் நேரத்திற்கு ஏதாவது சாப்பிடச் செய்யச் சொல்லிக் கேட்பாள். "நாளைக்கு டிஃபனுக்குச் செய்கிறேன்' என்று மயூரி சொன்னாலோ, முகத்தை முழம் நீளத்திற்குத் தூக்கி வைத்துக் கொள்வாள்.

மயூரியைக் கிளம்பச் சொல்லிவிட்டு, வடிவு செய்து தருகிறேன் என்றால், இது உனக்குச் சரியா வராதும்மா. மயூரிதான் நல்லா செய்வா!'' என்பாள்.

தான் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு அமர்ந்துவிட்டால், தன்னிடம் கெஞ்சியும், கொஞ்சியும் அன்னை பேசுவதை மனத்திற்குள் இரசிப்பாள். மூன்று நாட்களுக்கு மேல் அதுவும் நீடிக்கவில்லை.

இது போல உப்புசப்பில்லாத விஷயத்திற்கெல்லாம் ஏதாவது புலம்பிக் கொண்டிருப்பவளைப் பார்க்க, வடிவிற்கே அலுத்துவிட்டது போலும். "நீ பேசினால் பேசு!

இல்லாவிட்டால் இரு!' என்று தனது வேலையைப் பார்க்கத் துவங்கிவிட்டார்.

ஒரு வாரமாக அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த மயூரி, மனத்திற்குள் சிரித்துக் கொள்வாள்.

* * *

மயூரிக்கு காலையில் எழுந்ததிலிருந்தே உடலெல்லாம் அசதியாக இருப்பதைப் போல இருந்தது. வேலைக்கு வந்த இடத்திலும் சோர்வாக இருக்க, ஹோட்டலிலேயே இருக்கும் டாக்டரைப் போய்ப் பார்த்தாள்.

அவளிடம் எல்லாவற்றையும் கேட்டுத் தெரிந்து கொண்டவர், எனக்குக் கொஞ்சம் டௌட் இருக்கு, டெஸ்ட்டுக்குக் கொடுத்துட்டுப் போ மயூரி. டூ ஹவர்ஸ்ல ரிசல்டை வந்து வாங்கிக்கோ. வரும் போது ஸ்வீட்டோட வா!'' என்று புன்னகைத்தார்.

அவளுக்கோ, சந்தோஷத்தில் தலைகால் புரியவில்லை. "தான் சின்னஞ்சிறு சிசுவைச் சுமந்து கொண்டிருக்கிறோம்!' என்ற சந்தோஷத்தில் கண்கள் கலங்கின.

"மேடம்! நிச்சயமா குழந்தை தானே?'' என்று சந்தேகமும், குழந்தையாக இருக்கவேண்டும் என்ற வேண்டுதலுடன் கேட்டாள்.

"டெஸ்ட் எடுக்கறது... ஜஸ்ட் கன்ஃபார்ம் பண்ணிக்கத் தான் மயூரி. தைரியமா கிளம்பு. வரும்போது மறக்காம ஸ்வீட் வாங்கிட்டு வா!'' என்ற டாக்டரிடம், "நிச்சயமா!'' என்று மகிழ்ச்சியுடன் சொன்னாள்.



# 41

இந்தச் சந்தோஷமான விஷயத்தை குடும்பத்தினரிடம் பகிர்ந்து கொள்ள, விரைவாகவே வீட்டிற்கு வந்தாள் மயூரி. மதியம் எப்போதும் வடிவு சற்று நேரம் உறங்குவார் என்பதால், அழைப்பு மணியை அழுத்தாமல், தன்னிடமிருந்த சாவியால் கதவைத் திறந்தாள்.

வீட்டில் யாரும் இருப்பதற்கான அறிகுறியே தெரியவில்லை. "எங்கே போய்விட்டார்கள் அனைவரும்?' என்று நினைத்தபடி கதவை மூடியவள், அதைச் சரியாக அழுந்த மூடவில்லை.

தங்களது அறையில் யாரோ இருப்பது போலத் தோன்ற, "ஒருவேளை சைலேஷாக இருக்குமோ?' என்ற ஆசையுடன் மெல்ல அறைக்கதவைத் திறந்தவள், அதிர்ந்தே போனாள்.

எப்போது வீட்டிற்கு வந்தாலும், மயூரியின் பீரோவை நோட்டம் விட்டு, தனக்குத் தேவையான புடவையை, கேட்காமலேயே எடுத்து உடுத்திக் கொள்ளவும் செய்வாள் இனியா. மயூரியும் அதையெல்லாம் பெரிதாக எடுத்துக் கொண்டதில்லை.

ஆனால், வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் பீரோ லாக்கரைத் திறந்து சைலேஷ் அவளுக்காக வாங்கிக் கொடுத்திருந்த பிரேஸ்லெட்டை அணிந்து கொண்டு, முன்னும் பின்னுமாக கைகளைச் சுழற்றிப் பார்த்துக் கொண்டிருந்த இனியாவைக் கண்டதும் அவளுக்குள் ஆத்திரம் பொங்கியது.

முதன்முதலில் ஹனிமூன் சென்ற போது, தனக்காக அவன் வாங்கிக் கொடுத்த புடவையைக் கூட, தனக்கு வேண்டுமென்று அவள் எடுத்துக் கொண்ட போது, பார்த்துக் கொண்டு அமைதியாக இருந்தாள்.

சைலேஷ் தான், "உனக்காகன்னு ஆசையா வாங்கினேன். நான் சொன்ன போதே கட்டியிருந்தா, அவள் ஒருமுறை கட்டிட்டு... திருப்பிக் கொடுத்திருப்பா!'' என்று சொல்லி மாய்ந்து போனான்.

அப்போதோ, மயூரி சிறு புன்னகையுடன் அதை விட்டுவிட்டாள்.

இத்தனை நாட்கள் அவன் வாங்கிக் கொடுத்த புடவைகளை அவள் உடுத்திக் கொண்ட போது ஏதும் சொல்லாதவளுக்கு, இன்று அப்படி இருக்க முடியவில்லை.

கைக்குச் சற்றுப் பிடிப்பாக இருந்ததால், சுலபமாக அதைப் போட்டுக் கொண்டவளுக்கு, கொக்கியைக் கழற்ற முடியவில்லை. சிரமப்பட்டு அவள் முயன்று கொண்டிருக்க, "இனியா!'' என்ற மயூரியின் குரலில் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

அவ்வளவுதான்! அதே வேகத்தில் கையும் இழுக்க, பிரேஸ்லெட் இரண்டு துண்டாக அறுந்து தரையில் விழுந்தது.

மயூரிக்கு உள்ளம் பதைத்தது. அறுந்து விழுந்த பிரேஸ்லெட்டைக் குனிந்து கையில் எடுத்தாள்.

கதவைத் தாளிடாமல், வெறுமனே பூட்டிவிட்டு வந்த தனது மடத்தனத்தை எண்ணி எரிச்சல்பட்டுக் கொண்ட இனியா, "எதுக்கு இப்படிக் கத்தின? உன்னாலதான் இப்படி அறுந்து போச்சு!'' என்றாள்.



"கொஞ்சமாவது அறிவிருக்கா உனக்கு? யாரைக் கேட்டு இதை எடுத்த...?'' என்றாள் ஆத்திரத்துடன்.

இத்தனை நாட்களாக அவள் மீதிருந்த கோபம் மொத்தமும் வார்த்தைகளாக வந்து விழுந்தன.

தனது தவறை ஒப்புக் கொண்டால், அவள் இனியா அல்லவே!

"சும்மா எதுக்குக் கத்தற? எங்க அண்ணன் வாங்கிக் கொடுத்தது தானே எல்லாமே? என்னமோ... நீ சீராக் கொண்டு வந்து குவிச்சதை... நான் எடுத்தா மாதிரி பேசற?'' என்று அவளுக்கு மேல் சப்தமாகக் கத்தினாள்.

"உன் அண்ணனா இருந்தாலும், அவர் எனக்காக வாங்கிக் கொடுத்தார். யாரும் இல்லாத நேரத்துல இப்படி எங்க பெட்ரூமுக்குள்ள வந்து, அடுத்தவங்க பொருளைத் திருட்டுத்தனமா எடுத்துப் பார்க்கறியே... வெட்கமா இல்ல உனக்கு? அப்போ... இத்தனை நாளும் இப்படித் தான் செய்தியா?'' என்று கேட்டாள்.

"என்னைப் பார்த்தா அறிவில்லைன்னு கேக்கற?'' ஆத்திரத்தில் மூச்சிரைத்தது இனியாவிற்கு.

"இங்கே நீதான இருக்க...'' என்று இடக்காகப் பேசினாள் மயூரி.

"இவ்வளவு நாளும் வாயைத் திறக்காமல் ஊமைக்கோட்டான் போல இருந்தவள், இன்னைக்கு என்ன பேச்சு பேசுகிறாள்? இவளைச் சும்மா விடுவேனா?' என்று மனத்திற்குள் நினைத்துக் கொண்டவளது பார்வை மயூரியைத் தாண்டி ஹாலில் நின்றிருந்த சைலேஷின் மீது பட்டது.

"இவன் எப்போது வந்தான்? எதிலிருந்து கேட்டான்? முழுதும் கேட்டுவிட்டானா?' என்று புரியாத போதும், சட்டெனக் கண்ணைக் கசக்கியவள், "அண்ணா! பார்த்தியா உன் பொண்டாட்டி என்னலாம் பேசறா என்னை?'' என்றபடி அவனை நோக்கிச் சென்றாள்.

மயூரி விதிர்த்துப் போனாள். "இவன் எப்போது வந்தான்?' -புரியாமல் அவனைப் பார்த்தாள்.

"நான் என்ன ஒண்ணுத்துக்கும் இல்லாமலா, அப்பப்போ வரேன். ஏதோ உங்க மேல் இருக்க பாசத்தால தானே வரேன்? அதுகூட உன் பொண்டாட்டிக்குப் பிடிக்கல. எப்பவும் போலத் தான் உன் ரூமுக்குப் போனேன். புடவையைப் பார்த்தேன்.

அண்ணன் பொண்டாட்டிங்கற உரிமைல தானே இதெல்லாம் செய்தேன்? லாக்கர்ல சாவி இருந்துது... யதார்த்தமாதான் திறந்தேன். பார்க்க அழகா இருந்ததால போட்டுப் பார்த்தேன். இது தப்பா...?'' என்றவளை மயூரி இமைக்காமல் பார்த்தாள்.

எப்போதும் போல காலையில் லாக்கரைப் பூட்டிவிட்டுச் சென்றது அவளுக்கு நன்றாகவே நினைவிருந்தது.

"அதுக்கு என்னவெல்லாம் பேசிட்டா என்னை... அறிவிருக்கா, வெக்கமா இல்லையான்னு. நீ மட்டும் வரலைனா, என்னைக் கைநீட்டி அடிச்சிருப்பா...!'' என்றதும் மயூரி அசந்து போய் நின்றாள்.

திரும்பி மனைவியின் முகத்தைப் பார்த்த சைலேஷ், "சரி விடு. ஒண்ணுமில்லாத விஷயத்தைப் பெரிசாக்காத!'' என்றான் தங்கையிடம்.



காலையிலிருந்து மதிய உணவு கூட உண்ணாமல் அலைந்து திரிந்ததில் தலைவலியுடன் வீட்டிற்கு வந்தான். ஆனால், தங்கை பேசிய பேச்சில் தலைவலி மேலும் அதிகமானது. இருந்தும், பொறுமையாகப் பேசினான்.

ஆனால், இனியா விடுவாளா? "அப்போ... உன் பொண்டாட்டி என்னைப் பேசினது ஒண்ணுமில்லாத விஷயம். அப்படித் தானே...?'' என்றாள்.

சைலேஷ் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டான்.

"இனியா! நம்ம பிரச்சனையை நாமளே தீர்த்திருக்கலாம். அவர்கிட்ட சொல்லி எதுக்கு வீணா சீன் கிரியேட் பண்ற?'' என்றாள் மயூரி.

சைலேஷ் தலையை உயர்த்தாமலேயே, "மயூ! உள்ளே போ!'' என்றான்.

"என்னைப் பார்த்தா உனக்கு எப்படி இருக்கு? நான் என்ன வேஷம் போடுறவளா? இல்ல... நீ அவ்வளவு நல்லவளா?'' என்று பதிலுக்கு எகிறினாள் இனியா.

கோபம் வந்த போதும், இப்படி வம்பாகச் சண்டைப் போட்டு பழக்கமில்லாதவளுக்கு, என்ன பேசுவதென்றே புரியவில்லை. சைலேஷின் வார்த்தைகள், அவளது காதில் விழுந்ததாகவும் தெரியவில்லை.

"பார் இனியா! நீ செய்ததுக்குத் தான் நான் கேட்டேன். உன்னோட எல்லை எதுன்னு தெரிந்து... அதோட நின்னுக்கோ!'' என்றாள்.

வேகமாக எழுந்தவன் அவளது புஜத்தைப் பற்றித் திருப்பி, "உன்னை உள்ளே போன்னு சொன்னேன்!'' என்றான் அழுத்தமாக.

"நான் எதுக்குப் போகணும்? அவளும் பேசிட்டே போறா. என்னை வேடிக்கைப் பார்க்கச் சொல்றீங்களா?'' என்றாள் கோபத்துடன்.

"பார்த்தியா... உன்னையே திருப்பிப் பேசறா!'' என்று இடைபுகுந்தாள் இனியா.

"நான் என் வீட்டுக்காரர்கிட்ட பேசிட்டு இருக்கேன். நீ நடுவில் வராதே!'' என்று அவள் பதிலளிக்க, சைலேஷ் ஆத்திரத்துடன் அவளைப் பிடித்து பின்னால் தள்ளினான்.

"நான் சொல்லிகிட்டே இருக்கேன் நீ பேசிட்டே இருக்க! என்ன நினைச்சிட்டு இருக்க உன் மனசுல? அடுத்தவங்களை விடு; நான் சொல்றேன் இல்ல... ஆசை மட்டும் மனசில இருக்கு.

ஆனா, அதுக்கு எப்படி நடந்துக்கணும்னு தெரியாது. அவதான் ஏதோ பேசறான்னா... உனக்கு என்ன ஆச்சு? யார்கிட்ட எப்படி நடந்துக்கணும்னு சொல்லி வளர்க்கலைனாலும், பார்த்து நடந்திருக்கணும். என்ன தான் நடந்தாலும்.. பரம்பரைப் புத்தி உன்னைவிட்டு...'' என்றவன், சொல்ல வந்ததை பாதியில் நிறுத்திவிட்டு, மனைவியின் முகத்தைப் பார்த்தான்.

அத்தனை நேரம் அவளது முகத்திலிருந்த கோபமும், ஆத்திரமும் மறைந்துபோயின. திகைத்த பார்வையுடன், பிரமை பிடித்தவள் போல நின்றிருந்தாள் மயூரி.

"நீயா இப்படிப் பேசினாய்?' என்று தன்னைக் கேள்வி கேட்ட அவளது விழிகளைச் சந்திக்க முடியாமல், சங்கடத்துடன் வீட்டிலிருந்து வெளியேறினான் சைலேஷ்.



# 42

பெரியவர்கள் இருவரும் வீட்டிற்குள் நுழைந்த போது, அங்கு நிலவிய அமைதி அவர்களுக்கு வித்தியாசமாகத் தோன்றியது.

அறையில் படுத்திருந்த இனியாவிடம், "விளக்கு வைக்கிற நேரத்துல... இன்னும் என்ன படுத்திட்டு இருக்க? எழுந்து உட்கார்!'' என்று கேட்டது தான் தாமதம்... சைலேஷ் மயூரியைத் திட்டிய கடைசி வாக்கியத்தை மட்டும் கத்தரித்து விட்டு, நடந்ததை அப்படியே சொன்னாள் அவள்.

வடிவு சங்கடத்துடன் கேசவனைப் பார்த்தார்.

திடமான ஒரு பார்வையை மனைவியின் மீது வீசியவர், "இனியா! நீ வந்து கிட்டத்தட்ட பத்து நாளைக்கு மேல ஆகிடுச்சி. இன்னும் மூணு நாள்ள உன் வீட்டுக்காரர் ஊரிலிருந்து வந்திடுவார். நீ இங்கே இருந்தது போதும். உன் துணிமணியை அடுக்கி வச்சிக்க. நாளைக்குக் காலைல, உனக்கு டிஃபன் உன் வீட்லதான். புரிஞ்சிதா?'' என்று சொன்னார்.

"இன்னும் மூணு நாள்... நான் தனியா அந்த வீட்டில் இருக்கணுமா? என் குழந்தையை யார் பார்த்துக்குவா?'' என்று எரிச்சலுடன் கேட்டாள்.

"போய் உன் மாமியாரைக் கூட்டிட்டு வந்து உன்னோட வச்சிக்க. முதல்ல உன் குடும்பத்தைப் பாரு. அவங்களை அனுசரிச்சிப் போகப் பாரு'' என்றார் வடிவு.

"உங்க எல்லோரையும்... அவ நல்லா கைக்குள்ள

போட்டு வச்சிருக்கா...!'' கண்ணைக் கசக்கினாள் இனியா.

"ஒருத்தர் ஆட்டி வச்சி ஆட, நாங்க என்ன பொம்மையா? நீ சொல்றா மாதிரியே இருந்தாலும், மயூரி அவனோட அன்பாலதான் கட்டிப் போட்டு வச்சிருக்கா. புரிஞ்சிக்க...! உன்னால என்னைக்கு இந்த வீட்டில் எந்தப் பிரச்சனையும் வராதுன்னு நினைக்கிறியோ, அன்னைக்கு வந்தால் போதும். அப்படி... உனக்கு எங்களைப் பார்க்கணும்னு தோணினா, போன் பண்ணு. நானும், உன் அம்மாவும் வந்து பார்த்துட்டு வரோம்'' என்று சொல்லிவிட்டு, "வடிவு! எனக்குக் கொஞ்சம் காஃபி கொண்டு வா'' என்றபடி ஹாலுக்கு நகர்ந்தார்.

"பார்த்தியாம்மா! அப்பா என்ன சொல்லிட்டுப் போறாங்கன்னு?'' என்று அன்னையிடம் ஆரம்பிக்க, வடிவு சலிப்புடன் பார்த்தார்.

"ஆரம்பத்திலேயே, உங்க அப்பா சொன்னதை நான் கேட்டிருக்கணும்...'' என்று சொல்லிவிட்டுச் சென்ற அன்னையை, அழுகையும், ஆத்திரமுமாகப் பார்த்தாள்.

யோசனையுடன் அமர்ந்திருந்த மருமகளின் தோளைத் தொட்டு, "நடந்ததையே நினைச்சிட்டு இருக்காதம்மா. உன்னைத் தான் அவனால பேச முடியுங்கற உரிமைல... ஏதாவது பேசியிருப்பான். இனியாவால, இனி உனக்கு எந்தப் பிரச்சனையும் வராதுமா!'' என்ற மாமியாரின் கரத்தை அழுந்தப் பற்றிக் கொண்டாள்.

இரவு அவன் வர வெகுநேரமாகியது. படுத்திருந்த போதும் விழித்தேயிருந்தாள். அவனது பார்வை முதுகைத் துளைப்பதை உணர்ந்தவளுக்கு, எதையோ எதிர்பார்த்து இதயம் வேகமாகத் துடித்தது.



இது எதையுமே அறியாதவன், சோர்ந்த முகத்துடன் அவளருகில் சென்று படுத்தான்.

* * *

அடுத்து வந்த இரண்டு நாட்களிலும், ஒரே அறையில் இருந்த போதும், இருவரும் நிமிர்ந்து அடுத்தவரைப் முகத்தைப் பார்ப்பதைத் தவிர்த்தனர்.

தங்கையின் மீது தவறு இருக்கிறது என்பதை அறிந்திருந்த போதும், அவனால், அவளைக் கட்டுப்படுத்த முடியாதே. ஒன்றைப் பத்தாக்கும் அவளிடம் பேசுவதற்குப் பதிலாக, எளிதாகத் தன் மனைவியை சமாளிக்கலாம் என்று எண்ணித் தான் பேசினான் அவன்.

ஆனால், கோபத்தில் வார்த்தைகள் தடிக்க, தன்னையும் அறியாமல் சொல் அம்பைத் தொடுத்தவன், இடையில் சுதாரித்துப் பாதியில் நிறுத்தினான். ஆயினும்... பேசிய பேச்சை இல்லையென்றாக்க முடியுமா என்ன?

திகைத்த பார்வையுடன் பிரமை பிடித்தது போல நின்றிருந்தவளைப் பார்க்க, அன்று அவனுக்குத் திராணி இல்லை. அதனால்தான், உடனே வீட்டை விட்டு வெளியேறினான்.

வீட்டிற்குத் திரும்பி வந்த பிறகும் கூட, அவளைச் சமாதானப்படுத்த வேண்டும் என்று மனம் துடித்தாலும், அதைச் செயலாக்க முற்படவில்லை.

மயூரி வேலைக்குக் கிளம்பிய நேரத்தில், ரம்யாவின் தந்தையிடமிருந்து போன் வர, அவசர அவசரமாகக் கிளம்பி ஓடினான். மாலை அவள் அலுவலகத்திலிருந்து திரும்பி வந்ததும், அவன் தனது எம்.டி-யைக் காண

மும்பை சென்றிருப்பதாக வடிவு தெரிவித்தார்.

அவள் மௌனமாகக் கேட்டுக் கொண்டாள்.

* * *

"வாங்க மேடம்! உங்களுக்கு இப்போ தான் இந்தப் பக்கம் வர வழி தெரிஞ்சிதா?'' என்று பொய்க் கோபத்துடன் கேட்டாள் ரம்யா.

"உனக்குத் தான் எல்லாம் தெரியுமேப்பா...!'' என்றாள் பதிலுக்கு.

"சரி, எல்லாம் சரியாகிடும். உள்ளே வா!'' என்றபடியே, தன் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

உறங்கிக் கொண்டிருந்த குழந்தையின் கையைப் பிடித்து வருடி மெல்ல முத்தமிட்டதும், தூக்கத்திலேயே சிரித்த குழந்தையை இமைக்காமல் பார்த்தாள் மயூரி.

அதற்குள் காஃபியுடன் ரம்யா வர, தோழிகளுக்குப் பேசிக் கொள்ள நிறைய விஷயங்கள் இருந்தன. ஆனால், கவனமாக சில விஷயங்களைப் பேசாமல் தவிர்த்தனர் இருவரும்.

"அப்போ... இன்னும் பத்து பதினைந்து நாள்ள, ஹைதராபாத்வாசியாகிடுவியா?''

"ம். அம்மாவும் அப்பாவும் ஜோசியரைப் பார்த்துட்டு வந்தாத் தான், தேதியைச் சரியா சொல்ல முடியும்.''

தோழியின் கையைப் பற்றிக் கொண்ட மயூரி, சிறிது நேரம் எதுவுமே பேசாமல் அமைதியாக இருந்தாள். அவளது உணர்வுகளை ரம்யாவாலும் புரிந்து கொள்ள முடிந்தது.

இருவருக்குமே கண்கள் கலங்கின.



"கல்யாணத்துக்குப் பிறகு ரெண்டு பேருக்குமே... பர்சனல் அப்படின்னு சில விஷயங்கள் ஆகிடுச்சி இல்ல!'' என்று சொல்லிவிட்டு முறுவலித்தாள் ரம்யா.

"எல்லோருக்குமே அப்படி ஆகிடுதே. யாரும் திறந்த புத்தகம் இல்லையே! ஆனா, உன்னை நினைச்சா எனக்கு ரொம்பப் பெருமையா இருக்குடி. யாருன்னே தெரியாத எனக்காக... என்னவெல்லாம் செய்த! நானா இருந்தாக் கூட, இதெல்லாம் செய்திருக்க மாட்டேன். உன்னோட ஃப்ரெண்ட்ஷிப் கிடைக்க... நான் ஏதோ புண்ணியம் செய்திருக்கேன் ரமி!'' என்று நெகிழ்ச்சியுடன் பேசினாள்.

"ஹேய்! நான் ரொம்ப எமோஷனல் ஆகறேன். தயவு செய்து என்னை அழவச்சிடாதேடி...!'' என்று சொல்லிக் கொண்டிருக்க, "நான் எழுந்துவிட்டேன்' என்று சொல்வது போல குழந்தை மெல்லக் குரல் கொடுத்தாள்.

"ஹாய் புஜ்ஜிம்மா!'' என்றபடி குழந்தையின் நெற்றியில் முட்டியவள், "இங்கே பாருங்க... அத்தை வந்திருக்காங்க!'' என்றபடி மயூரியிடம் குழந்தையைக் கொடுத்தாள்.

குழந்தையின் பிஞ்சு விரல்கள் கன்னத்தில் உரச, அதன் பட்டு மேனியை ஸ்பரிசித்தவளுக்கு உள்ளுக்குள் ஏதோ உடைவது போல இருந்தது. உதடுகளை இறுக மூடி, தனது உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டுவரப் போராடினாள்.

குழந்தையின் பொற்பாதங்களில் குட்டிக் குட்டி திராட்சைகளைப் போன்றிருந்த விரல்களில் சளைக்காமல் முத்தமிட்டாள். கூச்சத்தில் சிரித்த குழந்தையின் சிரிப்பை, மனம் கனக்கப் பார்த்தாள்.

"இன்னும் எத்தனை நாளைக்குத் தான், இப்படி அடுத்தவங்க குழந்தையைக் கொஞ்சப் போறீங்க மேடம்? சீக்கிரமா நல்ல விஷயம் சொல்லுங்க...!'' என்று சிரித்த ரம்யாவைப் பார்த்தவளால் தாங்க முடிவில்லை.

அத்தனை நேரமும் அடக்கி வைத்திருந்த உணர்ச்சிக் கொந்தளிப்பெல்லாம் அழுகையாக வெளிப்பட, திகைத்து விட்டாள் ரம்யா.

குழந்தையை வாங்கிப் படுக்க வைத்துவிட்டு, "மயூ! என்ன நடந்தது? ஏன்டி இப்படி அழற? எனக்குப் பயமா இருக்கு. சொல்லு... ப்ளீஸ்!'' என்று எப்படியெல்லாமோ முயற்சித்தும், அவளிடமிருந்து ஒரு வார்த்தையைக் கூட அவளால் வாங்க முடியவில்லை.

கதறி அழுதவளை ஆறுதலுடன் அணைத்துக் கொண்டாள்.

"என்னமோ பிரச்சனை இருக்குன்னு புரிஞ்சி கிட்டேனே தவிர, உன்னிடம் கேட்கலை? இதுக்கு மேலயும் எதையும் மறைக்காதே மயூரி! ப்ளீஸ் சொல்லுப்பா...'' என்று கெஞ்சினாள்.

அந்நேரத்தில் அவளது மொபைல் ஒலிக்க, போனை எடுத்த ரம்யா, மயூ! ஒரு நிமிஷம். இங்கே சிக்னல் சரியா இருக்காது... அம்மா தான்... பேசிட்டு வந்திடுறேன்!'' என்று சொல்லிவிட்டு வெளியே சென்றாள் அவள்.

முகத்தையும், கண்களையும் அழுந்தத் துடைத்துக் கொண்ட மயூரி, தன் கைப்பையை எடுத்துக் கொண்டு, ரம்யாவிடம் சொல்லிக் கொள்ளாமலேயே வாசலை நோக்கி வேகமாக நடந்தாள்.

* * *



வாசற்கதவில் இருந்த பேப்பரையும், கூடைப் பையிலிருந்த பால் பாக்கெட்டுகளையும் எடுத்துக் கொண்டு, அழைப்பு மணியை அழுத்தினான்.

எதிர்வீட்டு சுந்தரி மாமி அவனைப் பெயர் சொல்லி அழைக்க, திரும்பிப் பார்த்தான்.

"உன் அம்மாவும், அப்பாவும் வீட்ல இல்ல. உன் தங்கச்சி கீழே விழுந்து காலை உடைச்சிகிட்டா போல! காலைல போன் வந்ததுன்னு, என்கிட்டச் சொல்லிட்டுப் போனாங்க'' என்றார்.

"ஓ! அப்படியா... தேங்க்ஸ் மாமி! நான் அம்மாகிட்ட பேசிக்கிறேன்'' என்று அங்கிருந்து செல்ல முயன்றவனை, "ஆனா, உன் பொண்டாட்டி வீட்ல இல்ல'' என்றார் முறைப்பாக.

அவன் கேள்வியுடன் பார்த்தான். "மணி எட்டு தானே ஆகிறது... அதற்குள் கிளம்பிவிட்டாளா?' என்று நினைத்தவனுக்கு, கையிலிருந்த பேப்பரும், பாக் பாக்கெட்டும் வேறு கதைகள் சொல்லியது.

"காலையிலேயே கிளம்பிட்டாளா?'' என்று அவரிடமே கேட்டான்.

"கடவுளே! நீ இவ்வளவு அப்பாவியா இருந்திருக்க வேணாம்பா!'' என்று போலியாக வருத்தப்பட்டவர், "நேத்து ராத்திரி... ஒரு எட்டு மணி இருக்கும்... அவள் வீட்டுக்கு வந்தா. வரும் போதே, யார்கிட்டயோ போன்ல பேசிட்டே வந்தா. பேசி முடிச்சதும் போனை பேக்ல வச்சிட்டு, வந்த வழியே துரும்பிப் போயிட்டா. இப்போ இந்த பால், பேப்பரையெல்லாம் பார்த்ததும் தான், அவள் வரவேயில்லன்னு தெரியுது!'' என்றார் மாமி.

அவரது ஒவ்வொரு வார்த்தைக்கும் சைலேஷ் மென்மேலும் கலங்கிக் கொண்டிருந்தான். வேகமாகத் தனது மொபைலை எடுத்து, அவளுக்குப் ஃபோன் செய்தான்.

"இதுக்குத் தான்... தகுதி தராதரம் பார்த்துக் கட்டணும். என்ன இருந்தாலும்...'' என்று பேசிக் கொண்டு போனவரை, "கொஞ்சம் வாயை மூடுறீங்களா!'' என்று கடுமையாக அதட்டினான்.

திகைப்புடன் பார்த்தார் சுந்தரி மாமி.

"உங்க வயசுக்குத் தகுந்த மாதிரி, கொஞ்சம் கூட யோசிக்க மாட்டீங்களா? என் மனைவியைப் பத்தி, யாரோ சொல்லித் தெரிஞ்சிக்க வேண்டிய அவசியம் எனக்கில்ல. முதல்ல உங்க வீட்ல நடக்கறதை, கண்ணைத் திறந்து பாருங்க!'' என்று கோபத்துடன் சொல்லிவிட்டுச் சென்றான்.

மீண்டும் மீண்டும் போன் "ஸ்விட்ச் ஆஃப்' என்றே வர, செய்வதறியாமல் அப்படியே அமர்ந்து விட்டான்.

இடைப்பட்ட நாட்களில் அவளிடம் முகம் கொடுத்துப் பேசாத போதும், அவனால் அவளை வெறுக்க முடியவில்லை. அவள் நிலையிலிருந்து பார்க்கும் போது, அவள் தன்னிடம் எதிர்பார்த்த எந்த விஷயத்திலும் தவறே இல்லை என்று புரிந்தது.

வாழ்க்கையின் மீது அவளுக்கு இருந்த பயம் தான், இத்தனைப் பிரச்சனைக்கும் காரணம் என்று மொத்தப் பழியையும் அவள் மீது சுமத்த அவனுமே தயாரில்லை. அதற்குத் தானும் காரணம் என்று அவனுமே அறிந்திருந்தான்.



மகேஷ் சொன்னதைக் கேட்டு, முதலில் அவளிடம் இப்படி ஒரு எண்ணம் வர வழிவகுத்துக் கொடுத்ததே தான்தான் என்று புரிந்த போதும், "அவள் எப்படி என் காதலைச் சந்தேகிக்கலாம்?' என்ற கோபம்தான் அவளிடமிருந்து தள்ளியிருக்கச் செய்தது.

அப்படி ஒரு சந்தேகம் தனக்குத் தான் முதலில் வந்தது என்றும், அதனால், அவளது மனத்தில் எழுந்த வலியையும் அறியாதவன், சமீப காலமாகத் தான் அதை உணர ஆரம்பித்திருந்தான்.

அவளில்லாத அந்த வீடு சூன்யமாகத் தெரிந்தது. "இதே அறையில் தன்னை மன்னித்துவிடும்படி அவள் மன்றாடிய போது, எத்தனைக் கேவலமாக அவளை அவமானப்படுத்தினேன்!' என்று இப்போது வெட்கப் பட்டான்.

"மயூரி! நீ எங்கே இருக்க? ப்ளீஸ் வந்திடு மயூ! உன்னைவிட்டு இனி என்னால் இருக்கவே முடியாது... என்னை மன்னிச்சிடு மயூ! உன்னோட அருமை எனக்குத் தெரியவே இல்லை. அதான், இப்படியெல்லாம் உன்னை ரொம்பவே அலைக்கழிச்சிட்டேன்! மடையன் நான்!' என்று தன்னை மறந்து புலம்பிக் கொண்டிருந்தவனது மொபைல் அந்நேரத்தில் ஒலித்தது,

அவசரமாக அதை எடுத்தவன், "திவ்யா! சொல்லும்மா'' என்றான்.

அவள் சொன்னதைக் கேட்டு அதிர்ந்து போனான். உடனே, அவசரத் தேவைக்காக வீட்டிலிருந்த பணத்தையும், கார்ச் சாவியையும் எடுத்துக் கொண்டு ஓடினான்.

# 43

வராண்டாவில் கால் கடுக்க நடந்து, தன் இறுக்கத்தையும், வேதனையையும் குறைக்க முயற்சித்துக் கொண்டிருந்தான் சைலேஷ். அவனது உடலிலிருந்த ஒவ்வொரு செல்லும், மயூரி! மயூரி! என்று புலம்பிக் கொண்டிருந்தது.

அந்தத் தீவிர சிகிச்சைப் பிரிவு அறையின் கதவைத் திறந்து கொண்டு வந்த டாக்டரைக் கண்டதும், வேகமாக அவரருகில் சென்றான்.

"டாக்டர்! என் மயூரி எப்படி இருக்கா?" என்று கேட்டவனது வார்த்தைகளை அவர் உள்வாங்கிக் கொண்டு திரும்பப் பதில் சொல்வதற்குள், தவித்துப் போனான்.

அவனை ஊன்றிப் பார்த்தவர், "நீங்க...?'' என்றார்.

"நான்... மயூரியின் கணவன்... சைலேஷ்!'' என்றான்.

"ஓஹ்!'' என்றவர் அதற்கு மேல் எதுவும் சொல்லாமல் தனது அறையை நோக்கி நடந்தார்.

திகைத்த சைலேஷ், "மே..டம்..!'' என் மனைவி எப்படியிருக்கான்னு கேட்டேனே? அவளுக்கு என்ன ஆச்சு?'' என்று கேட்டான்.

நிதானமான பார்வையை அவன் மீது செலுத்திய டாக்டர், "இப்போதாவது அவங்களுக்கு என்ன ஆச்சுன்னு தெரிஞ்சிக்கணும்னு உங்களுக்குத் தோணியிருக்கே... ரொம்ப சந்தோஷம்'' என்றார்.

"நான் இன்னைக்குக் காலைலதான் ஊரிலிருந்து



வந்தேன்'' - வார்த்தைகள் தவிப்புடன் வந்தன.

அவனது உணர்வுகளை புரிந்து கொண்டவராக சற்று அமைதி காத்த டாக்டர், "உங்களோட அன்பும், பாசமும்... உண்மையாக இருக்கும் பட்சத்தில் அதுதான்அவங்களை மீட்டு, உங்ககிட்ட கொண்டு வந்து சேர்த்திருக்கு..." என்றார்.

"தேங்க்யூ டாக்டர்! நான் அவளைப் பார்க்கலாமா?" என்று கேட்டான் சைலேஷ்.

"இன்னும் கொஞ்ச நேரத்துல, ரூமுக்குமாத்திடுவாங்க. அப்புறம், நீங்க கூடவே இருக்கலாம். இன்னொரு சந்தோஷமான விஷயம். இத்தனை மோசமான நிகழ்விலும், அவங்களோட வயிற்றில் வளரும் குழந்தைக்கு, எந்தப் பாதிப்பும் இல்லை!" என்றார் மருத்துவர்.

அவரது வார்த்தைகளில், சந்தோஷம், ஆச்சரியம், அதிர்ச்சி, என அத்தனை உணர்வுகளிலும் மூழ்கி எழுந்தான் சைலேஷ்.

"தூங்கறதுக்கு மருந்து கொடுத்திருக்கிறோம். நல்லா ரெஸ்ட் எடுக்கட்டும், நான் ஈவ்னிங் வந்து பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

டாக்டர் அங்கிருந்து அகன்றதும், "டேய் மாப்பிள்ளை! வாழ்த்துகள்டா!" என்று குணா சந்தோஷத்துடன் சைலேஷின் கரத்தைப் பிடித்துக் குலுக்கினான்.

அவனிடமிருந்து கையை விடுவித்துக்கொண்டு இறுகிய முகத்துடன், இங்கிருந்த இருக்கையில் சென்று அமர்ந்தான் சைலேஷ்.

"சியர் அப் மேன்! மயூரிக்குத் தான் ஒண்ணுமில்லைன்னு சொல்லியாச்சே. இன்னும் என்னடா...? உங்க ரெண்டு பேரோட நல்ல மனசுக்கும், கெடுதலா எதுவும் நடக்காது. இனியாவது, நீங்க ரெண்டு பேரும் சந்தோஷமா இருக்கணும்" என்று ஆறுதல் வார்த்தைகளைக் கூறினான் குணா.

ஆனால், அவனது வார்த்தைகள் சைலேஷின் கவலைகளை குறைப்பதற்குப் பதிலாக, அவனுடைய மனத்தை மேலும் ரணமாக்கியது.

'நடந்த தவறுகளையெல்லாம் எப்படிச் சரி செய்வது?' என்ற கேள்வி அவனை மருட்ட, நண்பனைக் கையாலாகத்தனத்துடன் பார்த்தான்.

நண்பனின் முகமே அவனது மனப்போராட்டத்தை விளக்கிவிட, குணா அவனை வேதனையுடன் பார்த்தான். சற்று தொலைவில் அமர்ந்திருந்த ஷைலேஷின் தந்தை கேசவனைப் பார்த்தான்.

மகனைத் தேற்ற வருவாரென்று எதிர்பார்த்த குணாவிற்கு, அழுத்தமாக சற்றும் அசைந்து கொடுக்காமல் அமர்ந்திருந்தவரைக் கண்டு ஏமாற்றமாக இருந்தது. அதேநேரம் அவனது மொபைல் ஒலிக்க, எடுத்துப் பேசிவிட்டு சைலேஷின் அருகில் வந்தான்.

"சைலேஷ்! நீ வீட்டுக்குப் போய் ஒரு ரெண்டு மணி நேரமாவது ரெஸ்ட் எடுத்துட்டு வாடா. ரொம்ப டயர்டா தெரியற" என்றான்.

"ரெஸ்டா! என்னோட முட்டாள்தனத்தால, நான்... என் மயூரியைத் தொலைச்சிருப்பேன்டா!'' என்று சற்று உரத்தக் குரலில் சொன்னவன், "இனியும் அந்தத் தப்பைச் செய்யறதா இல்ல. ரம்யா உன்னை எதிர்பார்த்துட்டு இருப்பாங்க. நீ கிளம்பு!" என்றான் சாதாரணமாக.



நீண்ட பெருமூச்சை வெளியிட்ட குணா, அவனருகில் அமர்ந்தான்.

"டேய்! கிளம்பலையா? உன்னைத் தானே சொல்றேன்?'' என்று எரிச்சலுடன் உரைத்தான் சைலேஷ்.

"முதல்ல மயூரி ரூமுக்கு வரட்டும். அதுக்கு அப்புறமா நான் கிளம்பறேன்..." என்று திடமான குரலில் சொன்னான்.

நெகிழ்சியுடன் நண்பனது கரத்தைப் இறுகப் பற்றி, கண்களாலேயே தன்து நன்றியைத் தெரிவித்தான்.

"டேய்! என்னடா இது?'' என்று குணா ஆறுதலுடன் அவனது கரத்தை தட்டிக் கொடுத்தான்.

நேரம் கடந்து கொண்டிருந்தது.

யூரியைத்தனியறைக்கு மாற்றிய பின் கேன்டீனிலிருந்து உணவு வாங்கி வந்து, சைலேஷை வற்புறுத்திச் சாப்பிட வைத்தான். கேசவனிடம் சென்று பேசிவிட்டுகிளம்பினான்.

* * *

மயூரியின் அருகில் ஒரு ஸ்டூலை இழுத்துப் போட்டு அமர்ந்த சைலேஷ், அவளது முகத்தையே பார்த்தான். கை கால்களில் சிராய்ப்பும், சில இடங்களில் காயங்களும் இருந்தன. நெற்றியில் ஒரு கட்டும், இடது உள்ளங்கையில் ஒரு கட்டும் போடப்பட்டிருந்தது.

வலது கையில் சலைன் ஏறிக்கொண்டிருக்க, இடது கையை எடுத்துத் தன் கன்னத்தில் பதித்துக்கொண்டான்.

மருந்துகளின் வீரியத்தில் சலனமேயில்லாமல் உறங்கிக் கொண்டிருந்தவளது கையில் மெல்ல முத்தமிட்டான்.

"மயூரி..! மயூ...! உன் பேரைப் போலவே நீ எத்தனை மென்மையானவள். அதிர்ந்து கூடப் பேசத் தெரியாத உனக்கு, என்னால்தானே இத்தனைக் கஷ்டமும்? எத்தனை நாள், உன்னை வார்த்தையாலேயே கஷ்டப்படுத்தி இருக்கேன். எனக்காகவே வந்த தேவதை நீ! ஆனால், சுலபமாகக் கிடைத்ததால், உன் அருமை எனக்குப் புரியாமலேயே போய்டுச்சி.

இந்த இரண்டு நாள்ள, உன்னோட அருமையை உணர்ந்துட்டேன் மயூ. எனக்கு நீ வேணும், நம்ம குழந்தை வேணும். வாழ்க்கை முழுதும் உங்களை நான் பத்திரமாக பார்த்துக்குவேன். நீ மட்டும் என்னை மன்னித்துவிடு கண்ணம்மா!" என்றவன், அவள் அருகிலேயே கட்டிலில் தலை சாய்த்தான்.

# 44

**அ**னைவரையும் ஒரு பயத்திலேயே வைத்திருந்து விட்டு, மூன்று நாட்கள் கழித்தே கண்விழித்தாள் மயூரி.

தன்னைக் கண்டதும் கண்கள் பனிக்க, புன்னகையுடன், "மயூ!'' என்று கையைப் பிடித்துக் கொண்டவனை, வெறுமையான பார்வை பார்த்தாள்.

சுற்றி நின்றிருந்த அத்தனைப் பேரையும் பார்த்துவிட்டு, மெல்லப் புன்னகைத்தாள்.



பெரும் போராட்டத்திற்குப் பின் விடுதலை கிடைத்த உணர்வை அனைவரின் முகத்திலும் பார்க்க முடிந்தது.

கட்டிலைச் சற்று உயர்த்தி அவள் அமர்வதற்கு ஏதுவாகச் செய்துவிட்டு, கடந்த மூன்று நாட்களாக தாங்கள் பட்ட பாட்டை, சிரிப்பும் கிண்டலுமாகப் பகிர்ந்து கொள்ள, அவள் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ரம்யாவும் வந்திருந்தாள். ஆனால், அவளிடம் ஒருவார்த்தை பேசவில்லை. அமைதியாகத் தோழியின் கரத்தைப் பற்றிக் கொண்டு அமர்ந்திருந்தாள். இதுவரையிலும், தன் வீட்டிற்கு வந்த மயூரி அழுது கொண்டே திரும்பிச் சென்றதை, சைலேஷ் வீட்டினரிடம் அவளும் சொல்லவில்லை! குணாவும் சொல்லவில்லை.

தோழியின் மௌனத்திற்குப் பின்னால், அவள் ஏதோ பெரிதாக முடிவெடுத்து விட்டாள் என்பதில் தெளிவாக இருந்தாள் ரம்யா.

"அன்னைக்கு வீட்டுக்கு வந்துட்டுக் கிளம்பினியே, நான் போன் செய்தும் எடுக்கல. நாளைக்குப் பேசறேன்னு மெசேஜ் பண்ண... அவசரப்பட்டு எந்த விபரீத முடிவுக்கும் போக மாட்டேன்னு, நானும் நம்பிக்கையோட இருந்தேன். ஆனா, அப்புறம் என்ன நடந்தது?'' என்று கேட்டாள் தோழியிடம்.

"ஏற்கெனவே, போலீஸ்... டாக்டர்ஸ்னு... குறைந்தது பத்து பேர்கிட்டயாவது சொல்லியிருப்பேன்!'' என்றாள் மயூரி.

"தெரியும். அதை உன் வாயால கேட்கணும். சொல்லு!'' என்று பிடிவாதமாக அவளை வாய்திறக்க

வைப்பதில் உறுதியாக இருந்தாள் ரம்யா.

"வீட்டுக்கு வந்து சேர்ந்தப்போ மாமா போன் பண்ணாங்க. இனியா மாடிப்படில வழுக்கி விழுந்துட்டா... நாங்க ஹாஸ்பிட்டல்ல இருக்கோம். நாளைக்கு ஈவ்னிங் நான் வரேம்மான்னு சொன்னாங்க. நானும் சரின்னு போனை வச்சிட்டேன். ஆனா, வீட்டுச் சாவியை அன்னைக்குப் பார்த்து ஹோட்டல்லயே மிஸ் பண்ணிட்டு வந்திருக்கேன். உடனே... அதை எடுத்துட்டு வரலாம்னு திரும்பிப் போனேன்.

சாவியை எடுத்துகிட்டுத் திரும்பி வரும் போது மணி ஒன்பதரைக்கு மேல ஆகிடுச்சி. ஏதோ யோசனைல வந்ததால, திடீர்னு ஒரு திருப்பத்தில இருந்து வந்த வேனைக் கவனிக்கல. அதுக்கப்புறம் என்ன நடந்ததுன்னே தெரியாது. என் ஹேண்ட்பேக் காணாமல் போய்டுச்சி... இல்லனா, என்னை அப்பவே யார்னு கண்டு பிடிச்சிருப்பாங்க.

இந்த ஹாஸ்பிட்ல்ல தான் திவ்யா வேலை செய்றா. எதேச்சையா டீனைப் பார்க்க அவள் எமர்ஜென்சிக்கு வந்தப்போ தான், என்னைப் பார்த்துட்டுத் தகவல் கொடுத்திருக்கா'' என்று சொல்லி முடித்தாள்.

"ஓ!'' என்று அவள் மேற்கொண்டு ஆரம்பிக்கும் முன் சைலேஷும், குணாவும் உள்ளே வந்தனர்.

"என்ன... ரெண்டு பேரும் பேசி முடிச்சாச்சா?'' என்று கேட்டான் குணா.

"எங்கே...? அதான் ரெண்டு பேரும் பாதியில் வந்து நிக்கிறீங்களே!'' என்றாள் ரம்யா.

"நாளெல்லாம் பேசினாலும் உனக்குப் போதாதே!''



என்ற குணா, "உடம்பைப் பார்த்துக்கோ மயூரி! என்னைக்கு டிஸ்சார்ஜ்னு சொன்னாங்களா?''

"இன்னும் ஒரு வாரமாவது ஆகும்னு நினைக்கிறேன். கைக்கு பிஸியோதெரஃபி கொடுக்கணுமாம். அதனால, மூணு சிட்டிங்காவது வரவேண்டி இருக்குமாம். அப்புறம், வீட்ல இருந்தே நாமளே செய்துக்கலாமாம்'' என்றாள்.

திடீரென நினைவு வந்தவளாக, "நீங்க மும்பைக்குப் போனீங்களே... எம்.டி.-யைப் பார்த்தீங்களா? என்று சைலேஷைக் கேட்டாள்.

அவனது முகம் அப்படியே பிரகாசமாக மாறியது. கடந்த ஐந்து நாட்களாக அவளாக அவனிடம் பேசவேயில்லை. இப்போது திடீரென்று அவள் பேசியதும், அவனுக்குத் தலைகால் புரியவில்லை.

"ம். ரம்யாவோட அப்பாவுக்குத் தான் தேங்க்ஸ் சொல்லணும். ரொம்ப ஹெல்ப் பண்ணினார். பெரிய விஷயமே இல்லை... எப்பவும், எனக்குப் போட்டியா ஒருத்தன் இருந்தான்... அவன் செய்த வேலைதான் அது.

பிரமோஷன் எனக்கு ஆதரவா வரப்போகுதுன்னு தெரிஞ்சிகிட்டு, என்னை தூக்கிட்டா... அந்த இடத்துக்கு அவன் வந்திடலாம்னு, ப்ளான் செய்திருக்கான். என்னோட சைன் இல்லாமல் கன்சைன்மெண்ட் வெளியே போகாது. அதனால, என் கையெழுத்தை அவனே போட்டிருக்கான்.

பாதி நல்ல சரக்கையும், மீதியை மட்டமான சரக்கையும் மாத்தி வச்சி அனுப்பிட்டான். இது தெரிஞ்சதும், மேலிடத்துல என்னைத் தூக்கிட்டாங்க. அதுக்கும் இவன் தான் காரணம். போலீஸுக்குப் போனா விஷயம் வெளியே வந்திடும்னு, அவனோட ஆளுங்களை

வச்சே என்னை வேலையை விட்டு எடுத்திட்டாங்க. ஆனா, எல்லாத்தையும் நான் ப்ரூஃபோட சொன்னதும்... எங்களுக்குத் தெரியும்; இருந்தாலும்... உண்மையான ஆளைக் கண்டுபிடிக்கத் தான்... உங்களை வேலையை விட்டு எடுத்தது போல டிராமா செய்தோம்னு சொல்லி, திரும்ப வேலைல சேரச் சொன்னாங்க. பட், நான் அந்த வேலையை ரிசைன் பண்ணிட்டு வந்துட்டேன்!'' என்றான்.

"ஓ! இவ்வளவு நடந்திருக்கா?'' என்றாள் வியப்புடன்.

"புதுசா ஸ்டாக் மார்க்கெட் கன்சல்டண்ட் ஆஃபிஸ் ஒண்ணைத் திறக்கப் போறேன். அதுக்கு எல்லா ஏற்பாடும் செய்தாச்சு. இன்னும் கோர்ஸ் ஒண்ணு இருக்கு; அதை முடிச்சிட்டா போதும்... என்ன... ஒரு ஆறு மாசத்துக்கு... கைக்கும் வாய்க்கும் சரியா இருக்கும். அதுக்கப்புறம் ஜெயிச்சிக் காட்டிடுவோம்!'' என்று புன்னகைக்க, மற்ற மூவரும் அதில் இணைந்து கொண்டனர்.

"சரிம்மா. உடம்பைப் பார்த்துக்கோ. இன்னும் நாலு நாள்ள நாங்க ஊருக்குக் கிளம்பறோம். அதுக்குள்ள... முடியும் போது ரம்யாவை திரும்பக் கூட்டிட்டு வரேன்'' என்று சொல்ல, தோழியை தட்டிக் கொடுத்து அனுப்பி வைத்தாள்.

வெளியில் வந்த ரம்யா எதிரில் வந்த வடிவிடம், இனியாவைப் பற்றி விசாரித்தாள்.

"அவளுக்கு வெறும் கால் சுளுக்குதாம்மா. பயப்பட ஒண்ணும் இல்ல. அவளோட கோபத்தை நாம தாங்கிக்குவோம். படிக்கட்டும், காலும் தாங்கிக்குமா? இப்பக் கூட அவளோட இல்லாம மயூரியோட



இருக்கேன்னு, அவளுக்குக் கோபம். இவரும் ரொம்ப ஸ்ட்ரிக்டா "உன் வீட்டுக்காரர், மாமியார்னு எல்லாரும் இருக்காங்க... அவங்க பார்த்துக்குவாங்க. சின்ன சுளுக்குக்கு இத்தனை ஆர்ப்பாட்டம் பண்ணாதேன்னு' சொல்லிட்டார். எனக்கும், மயூரி இப்படி இருக்கும் போது அங்கே போனாலும் மனசு கேட்க மாட்டேன்னுது. இவளும் எனக்கு மக மாதிரி தானேம்மா?'' என்றார்.

"நீங்க இப்படி நினைச்சிட்டு இருக்கீங்க. அவள் என்ன குண்டு வச்சிருக்காளோ?' என்று நினைத்துக் கொண்டு, "வரேம்மா, நேரமாகுது!'' என்று கிளம்பினாள்.

ரம்யா கிளம்பியதும், கட்டிலில் இருந்து இறங்க முற்பட்டவளைக் கைத்தாங்கலாகப் பிடித்தான் சைலேஷ்.

"இல்ல... பரவாயில்ல. தேங்க்ஸ்! நானே பார்த்துக்குவேன்'' என்று கையை அவன் பிடியிலிருந்து உருவிக் கொண்டு செல்ல, சைலேஷ் குழப்பத்துடன் பார்த்தான்.

# 45

பெரியவர்கள் இருவரும் மகளைப் பார்த்துவிட்டு நாளைக் காலையில் வருவதாகக் கூறி, இருவருக்கும் தனிமையைக் கொடுத்துவிட்டுச் சென்றிருந்தனர்.

வீட்டிற்கு வந்திருந்த திவ்யாவிற்கும், வைதேகிக்கும் பலமுறை தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்ட சைலேஷ், கிளம்பியவர்களை தானே வீட்டில் விடுவதாகக் கூறி அழைத்துச் சென்றான்.

மீண்டும் அவன் வீட்டிற்கு வந்த போது, பெட்ரூமின் ஜன்னலருகில் நின்று வெளியே பார்த்துக் கொண்டிருந் தாள் மயூரி.

"இருட்ல என்ன தெரியுதுன்னு... அப்படி வெறிச்சிப் பார்த்துட்டு இருக்க?'' என்று கேட்டபடி அவளுக்குப் பின்னாலே வந்து நின்றான்.

"தொலைஞ்சி போன என்னைத் தேடறேன்!''

"மயூ!'' என்று திகைப்புடன் அழைத்தான்.

திரும்பி அவனது கண்களைப் பார்த்து, "நான் உங்ககிட்டப் பேசணும்!'' என்றாள் அவள்.

அந்தப் பார்வையிலிருந்த உறுதியும், தீர்மானமான பேச்சும், அவனுக்கு அச்சத்தைக் கொடுத்தது.

"என்னைக்காவது ஒரு நாள்... நான் இப்படியொரு வார்த்தையை உங்ககிட்டச் சொல்வேன்னு நினைச்சிக் கூடப் பார்த்ததில்லை. ஆனால், இப்போ எனக்கு வேற வழி தெரியலை சைலேஷ்! நான் ரெண்டு பேரும் மியூச்சுவலா பிரிஞ்சிடலாம்!'' என்று மின்னாமல், முழங்காமல், இடியை அவனது தலையில் இறக்கினாள்.

"எ... என்ன சொல்ற மயூ? உனக்கென்ன பைத்தியமா?'' என்று சீறினான்.

அவள் அமைதியாக அமர்ந்திருந்தாள்.

"மயூ! நம்ம ரெண்டு பேருக்குள்ள எத்தனையோ பிரச்சனைகள் வந்திருந்தாலும், எல்லாமே தீர்த்துக்கக் கூடியது தான். அதோட, இப்போ நாம அப்பா - அம்மா ஆகப் போறோம். நமக்குன்னு ஒரு அழகான புது உறவு வரப் போகுது. அதுக்காகவாவது யோசித்துப் பேசு!''



"அப்படி ஒரு புது உறவு வந்தால் தானே பிரச்சனை?'' என்றவளை, இமைகள் விரியப் பார்த்தான்.

"அப்போ என் குழந்தையை...'' என்றவனால் மேற்கொண்டு பேச முடியவில்லை.

''வேணாம் மயூரி! நமக்காகவே கடவுள் கொடுத்திருக்க அழகான உறவை, பாழாக்கிடாதே!'' என்று கெஞ்சலாகக் கூறினான்.

தனது கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொண்டு, "சாரி சைலேஷ்! நிச்சயமா முடியாது. ஒரு மயூரி போதும் இந்த உலகத்துக்கு. நாளைக்கு என் குழந்தையை... என்னை வச்சி யாரும் கேவலமா பேசறதை, நான் அனுமதிக்க மாட்டேன்!'' என்று கத்தினாள்.

"முட்டாள்தனமா உளறாதடி! நம்ம குழந்தையை யார் என்ன சொல்வாங்க? அப்பா நான் இருக்கேன். அம்மா நீ இருக்க... தாத்தா, பாட்டி, அத்தை, மாமான்னு அத்தனைச் சொந்தமும் இருக்கு. யார் என்ன கேள்வி கேட்க முடியும்?''

"நீங்க என்னைக் கேட்டீங்களே! பரம்பரை புத்தி உன்னைவிட்டு எங்கே போகும்னு...? அதே பரம்பரைல வந்த இரத்தம், என் குழந்தையோட உடம்பிலயும் தானே ஓடும்? இப்பச் சொல்லுங்க...!'' என்றபடி அவனது சட்டையைப் பிடித்து உலுக்கினாள்.

சைலேஷ் பதில் பேச முடியாமல், ஊமையானான்.

"ஒண்ணு தெரியுமா உங்களுக்கு...? நமக்குள்ள இந்தப் பிரச்சனை வந்த அன்னைக்குத் தான்... டாக்டர்கிட்ட கன்ஃபர்ம் பண்ணிகிட்டு, அதைச் சொல்ல சந்தோஷமா ஓடோடி வந்தேன். என்னோட சந்தோஷ மெல்லாம் இருந்த இடம் தெரியாம மண்ணோடு

மண்ணாப் போயிடுச்சி. அன்னைக்கு நீங்க என்னை அப்படிப் பேசினதும் வலிச்சிது. ரொம்பவே வலிச்சுது... ஆனா, அதைக் கூட நீங்க கோபத்தில் பேசிட்டீங்க. நிச்சயமா என்னைச் சமாதானப்படுத்துவீங்கன்னு ரொம்பவே எதிர்பார்த்தேன்.

ஆனா, நீங்க என் பக்கம் திரும்பிக் கூட பார்க்கல. ஒரு வார்த்தை மயூரின்னு என்னைக் கூப்பிட்டு, ஆறுதலா என் கையைப் பிடிச்சிருந்தா... அன்னைக்கே எல்லாத்தையும் மறந்துட்டு, உங்க கூடச் சந்தோஷமா வாழ்ந்திருப்பேன்.

ஆனா... அப்படி நடக்கவே இல்லையே. அதனால தானே யோசிச்சி இந்த முடிவை எடுத்தேன். நான் செய்தது தப்பா? சொல்லுங்க...? நான் என்ன தப்பு பண்ணேன் சைலேஷ்? உங்களைக் காதலிச்சது தப்பா? கல்யாணம் செய்துகிட்டது தப்பா? உங்களோட காதல், என்னைக்குமே எனக்கு வேணும்னு ஆசைப்பட்டது தப்பா?

சொல்லுங்க...! சின்ன வயசுலயிருந்து வாழ்க்கை மேல இருந்த பயம்... இதுவாவது எனக்கு நிலைக்குமான்னு, ஒவ்வொரு விஷயத்துக்கும் ஏங்கினது எனக்குத் தான் தெரியும். அப்பத் தான் நீங்க வந்தீங்க. இந்தச் சமுதாயத்தோட கழுகுப் பார்வைல இருந்து என்னைக் காக்க வந்த, தேவதூதனா உங்களைப் பார்த்தேன்.

கடைசியில... நீங்களே என்னை ஒதுக்கி வச்சதும்தான், என்னால தாங்க முடியல!'' என்று கதறி அழுதாள் மயூரி.

"பேசறதையெல்லாம் பேசிட்டு, மன்னிச்சிடுன்னு



ஒரு வார்த்தை சொன்னா... நான் சொன்னதெல்லாம் இல்லைனு ஆகிடுமா? அப்போ நான் அப்படி நடிக்கத் தெரியாமத் தான்... உன் முன்னால குற்றவாளியா நிக்கிறேனா? சொல்லு மயூ!

நான் அப்போ கேட்காத மன்னிப்பை இப்போ கேட்கறேன் என்னை மன்னிச்சிடு. உடைஞ்ச மனசை ஒட்ட வைக்க முடியாது தான். ஆனா, என் அன்பால அந்தக் காயத்தை மறக்க வைக்க முடியும். எனக்கும் ஒரு சந்தர்ப்பத்தைக் கொடு மயூரி!'' என்று தொண்டை அடைக்கக் கேட்டான்.

நிதானமாக எழுந்தவள், "ரெண்டு நாள் கழிச்சி, நீங்க பதில் சொன்னால் போதும். எனக்கு ரொம்ப டயர்டா இருக்கு!'' என்று சொல்லிவிட்டு, கட்டிலில் சாய்ந்தாள்.

* * *

இரண்டு நாட்கள் இரண்டு நொடிகளாக ஓடி மறைந்தன.

சைலேஷ் எங்கேயோ வெளியே செல்லத் தயாராகிக் கொண்டிருக்க, மயூரி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவனோ, அவளிருப்பதை கண்டு கொள்ளாமல் மும்முரமாக ஏதோ வேலை செய்து கொண்டிருந்தான்.

பொறுமை எல்லை மீற, "என்ன முடிவு செய்திருக்கீங்க?'' என்று கேட்டாள்.

"என்னது?'' என்றான் வேண்டுமென்றே.

"நான் அன்னைக்குச் சொன்ன விஷயத்துக்கு, என்ன முடிவு செய்திருக்கீங்க?'' என்றாள் மீண்டும்.

நின்று நிதானமாக அவளைப் பார்த்தவன், "சரி!'' என்றான்.

நெற்றி சுருங்க, "என்ன?'' என்று அதிர்ச்சியுடன் கேட்டாள்.

அவனுக்கோ உள்ளுக்குள் சிரிப்பு வந்தாலும், இறுக்கமாகவே காட்டிக் கொண்டான்.

"நீ சொன்னதுக்கு நான் சம்மதிக்கிறேன். அதாவது நாம மியூச்சுவலா பிரியச் நான் சம்மதிக்கிறேன். அதுக்குப் பிறகு உன்னோட வாழ்க்கையில் எந்த நிமிஷமும், என்னோட தலையீடு இருக்காது. நீ உன் வழியில் போகலாம்!'' என்றான்.

நின்றிருந்தவள், அருகிலிருந்த இருக்கையில் பொத்தென அமர்ந்தாள். கண்கள் தளும்பின. உதட்டைக் கடித்து அழாமலிருக்க முயற்சித்துக் கொண்டிருந்தாள். கைகள் இருக்கையின் கைப்பிடியை இறுகப் பற்றியிருந்தன.

அவளது அத்தனைப் போராட்டத்தையும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தான் அவன். மனத்திற்குள் ஆத்திரம் பொங்கியது. இவ்வளவு காதலையும் வைத்துக் கொண்டு, எதற்காக இந்த வீண் பேச்சு? அப்படி என்னிடம் உனக்கென்னடி வீம்பு?' என்று பொறுமிக் கொண்டு அவளைப் பார்த்தான்.

கண்களை மூடி வேகமாக மூச்சை இழுத்து வெளியிட்டவள், "சரி'' என்றபடி எழுந்து கதவை நோக்கி விரைவாக நடந்தாள்.

"ஒரு நிமிஷம்...!'' என்று அவளைத் தடுக்க, சட்டென்று நின்றாள் மயூரி.



"ஆனா, ஒரு கண்டிஷன்...'' என்றவனை, பரிதவித்த விழிகளால் ஏறிட்டாள்.

"என் குழந்தை முழுசா எனக்கு வேணும். குழந்தையை என்கிட்டக் கொடுத்துட்டு... நீ எங்கே வேணா போ!'' என்றான்.

திகைப்புடன், "சைலேஷ்! இது அநியாயம்'' என்றாள்.

"நீ பேசறது நியாயமா இருக்கும் போது, நான் சொல்வது மட்டும் எப்படி அநியாயமா இருக்கும்?''

"இதுக்கு நான் சம்மதிக்க மாட்டேன்!''

"அப்போ... நீயும் டைவர்ஸை எதிர்பார்க்காதே!'' என்றான் பிடிவாதத்துடன்.

என்ன செய்வதென குழப்பமாக இருந்தது மயூரிக்கு.

"எனக்கு என் குழந்தை வேணும் மயூரி! நம்மோட காதலுக்கு அடையாளமே நம்ம குழந்தைதான். நீ என்னோடு இல்லாத... என்னோட மீதி வாழ்க்கையை, என் குழந்தையோட தான் கழிப்பேன். நீ உன்னோட முடிவில் உறுதியா இருக்க. நான் என்னோட முடிவில் உறுதியா இருக்கேன். நீ வேணா ரெண்டு நாள் டைம் எடுத்துக்கோ. யோசிச்சிச் சொல்லு!'' என்றவனை நிமிர்ந்து பார்த்தாள்.

அவனும் அவளையே பார்க்க, "சரி. நான் இதுக்குச் சம்மதிக்கிறேன்!'' என்றாள் அழுத்தமாக.

"ம்'' என்று தலையசைத்தவன், "ஈவ்னிங் ரெடியா இரு. லாயரைப் போய் பார்க்கலாம்!'' என்று சொல்லிவிட்டு வெளியேற, மயூரி தளர்ந்து போய் அமர்ந்தாள்.

# 46

"அப்போ... மியூச்சுவலா பிரிஞ்சிடலாம்னு முடிவே செய்துட்டீங்க...?'' -கண்ணாடியைத் துடைத்து மாட்டியபடியே பேசினார் பிரபல வழக்கறிஞர் தமிழரசி.

திரும்பி மனைவியைப் பார்த்தவன், "ஆமாம் மேடம்!'' என்றான்.

தமிழரசியின் அனுபவ விழிகள் இருவரையும் ஆராய்ந்தது. மனத்திற்குள் சிரித்துக் கொண்டார்.

"இப்போ இருக்கும் இளைய தலைமுறைகளுக்கு... விவாகரத்துங்கறது கடைல உப்பு, புளி வாங்கறா மாதிரி நினைப்பு. கூட்டுக் குடும்பம் என்ற அமைப்பே குறைஞ்சிட்டு வர்ற காலகட்டத்துல, மணமுறிவு என்பதும் சர்வ சாதாரணமா ஆகிட்டு இருக்கு. இதை நாங்க ஒரு தொழிலா செய்தாலும், சிலர் பிரிய நாம காரணமா இருக்கோமேங்கற சங்கடம்.... எங்களுக்கும் இருக்கு. விவாகரத்துங்கறது... பிரச்சனைக்கான தீர்வு இல்லை. சொல்லப் போனா, ஆரம்பம்னு சொல்லலாம்.

எனக்கென்னவோ, உங்க ரெண்டு பேரையும் பார்த்தா சந்தேகமாவே இருக்கு. நீங்கதான் உங்க வைஃபைக் கம்பெல் பண்ணிக் கூட்டிட்டு வந்திருக்கீங்களோன்னு...'' என்று அவர் முடிக்கும் முன்பே,

"இல்லை மேடம்! ரெண்டு பேரும் சேர்ந்து பேசிட்டுத் தான் வந்தோம். சொல்லப்போனா, நான்தான் அதைப் பத்திப் பேசினேன்.''

"அப்படியா? ஆரம்பத்துல இருந்து சொல்லுங்க. என்ன காரணத்துக்காக விவாகரத்து கேட்கறீங்க?'' என்று இருவரையும் தனித் தனியாக அழைத்துப் பேசினார்.



இருவருமே சொல்லி வைத்தாற் போல, மற்றவர் செய்த தவறுகளைச் சொல்லாமல், தான் செய்த தவறுகளை மட்டுமே சொல்லிய அவர்களைப் பார்த்தவருக்கு, ஒன்று மட்டும் நன்றாகப் புரிந்தது. "இருவருக்குமே, ஒருவர் மீது மற்றொருவருக்கு அளவு கடந்த நேசம் இருக்கிறது.

ஆனால், எதிர்காலத்தில் அடுத்தவரின் தவறை, தப்பித் தவறி சொல்லிக் காட்டிவிடுவோமோ என்ற பயம் மட்டும்தான், இந்த முடிவை எடுக்க வைத்திருக்கிறது' என்பதைப் புரிந்து கொண்டார்.

"சரி. நீங்க ரெண்டு பேரும் இந்த ஃபார்மை ஃபில் பண்ணுங்க'' என்று சில பேப்பர்களைக் கொடுத்தார். இருவரும் எழுதி முடித்து கொண்டு வந்து கொடுத்ததை, நிதானமாகப் படித்துப் பார்த்தார்.

வெளியே அமர்ந்திருந்த இருவரையும் உள்ளே அழைத்தவர், "உங்களுக்கு திரும்பத் திரும்ப சொல்றேனேன்னு தப்பா நினைக்காதீங்க. தவறை தவறுன்னு ஒத்துக்கறது ஒண்ணும் பலவீனம் கிடையாது. அது உங்க நேர்மைக்கான அடையாளம் தான்.

பொதுவா..., காதலிக்கும் போது இருக்கும் அக்கறை... கல்யாணத்துக்குப் பின்னால குறைஞ்சி போகுதுன்னு ஏன் நினைக்கிறீங்க? ஆண்கள் நாளெல்லாம் உழைக்கறது... தன்னோட மனைவியையும், குழந்தைகளையும் எந்தக் குறையும் இல்லாம சந்தோஷமா வச்சிக்கத் தானே தவிர, அவங்க உங்களை

உதாசீனப்படுத்துவதால கிடையாது. அதே போல மனைவிக்கும். ஆஃபிஸ், குழந்தைங்கன்னு நேரத்தை செலவழிக்கிறது குடும்பத்து மேல இருக்கும் அக்கறையால் தானே தவிர, கணவன் மேல இருக்கும் நாட்டம் குறையறதால் கிடையாது. எல்லோரும் இதைப் புரிஞ்சிகிட்டா... எங்களுக்கெல்லாம் வேலையில்லாமல் போயிடும்!'' என்று சொல்லிவிட்டுப் புன்னகைத்தார்.

"சரி. உங்க ரெண்டு பேருக்கும் இதில் சிலது எழுதியிருக்கேன். வீட்டுக்குப் போய் படிச்சிட்டு, புதன்கிழமை வந்து மீண்டும் என்னைப் பாருங்க. அப்பவும் உங்க முடிவு அப்படியே இருந்தா, மேற்கொண்டு ஆக வேண்டியதைப் பார்க்கலாம்!'' என்று சொல்லி, இருவருக்கும் விடை கொடுத்து அனுப்பினார்.

வீட்டிற்கு வந்த இருவருக்குமே தயக்கமாக இருந்தது. அந்தக் கடிதத்தை எடுப்பதும் வைப்பதுமாகவே இருந்தனர்.

"மயூரி! அதை எடுத்துப் படி...'' என்றான் அவன்.

விரல் நடுங்க கடிதத்தைப் பிரித்தவள், சைலேஷின் கையெழுத்தைப் பார்த்ததும் திகைத்து நின்றாள். அப்படியானால்... அவன் எழுதியதைத் தனக்கும், தான் எழுதியதை அவனுக்கும் மாற்றிக் கொடுத்து விட்டார்களா?' என்ற திகைப்புடன், நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்தவனது இமைகள் விரிவதும், கண்கள் கலங்குவதுமாக இருக்க, மயூரியின் உடல் மெல்ல நடுங்கியது. அதே நடுக்கத்துடன் கையிலிருந்ததைப் படிக்க ஆரம்பித்தாள்.



'நான் என் மனைவியை அதிகமாக நேசிக்கிறேன். அதனால் தான், அவளை அதிகம் கெஞ்ச வைக்காமல், அவள் கேட்ட விவாகரத்திற்குச் சம்மதித்தேன். குழந்தையைப் பெற்றுக் கொடுத்தால் விவாகரத்து அளிக்கிறேன் என்ற உறுதியுடன்.

என்னுடன் இருக்கும் இந்த இடைப்பட்ட காலத்தில், அவளது மனத்தை எப்படியும் மாற்றிவிடலாம் என்ற நம்பிக்கையுடன் தான் சம்மதித்தேன். என் காதல் உண்மையாக இருக்கும் பட்சத்தில், என் நம்பிக்கை பொய்க்காது!' என்று அவன் எழுதியிருந்ததைப் படித்தவள், தன்னையும் மீறி வாய்விட்டுக் கதறி அழுதாள்.

அதேபோல், தன் மனத்தில் இருந்த மொத்தக் காதலையும் கொட்டியிருந்தவளது கடிதத்தைப் படித்து நெகிழ்ந்து போயிருந்தான் அவன். அவளது அழுகைச் சத்தம் அவனை நினைவுலகுக்கு இழுத்து வர, "மயூ!" என்றபடி வேகமாக அவளை இழுத்து அணைத்துக் கொள்ள, "சாரி சைலேஷ்!'' என்றாள்.

'ஐ லவ் யூ!' என்று அன்று அவள் கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு ஓடியபோது இருந்த சந்தோஷத்தை விட, அவள் தன்னை மீண்டும் மனதார ஏற்றுக் கொண்ட அந்த நொடியில், 'இழந்துவிட்டோம்' என்று தான் நினைத்திருந்த வாழ்வை மீட்டு, கைக்கொண்ட சந்தோஷத்தை உளமார அனுபவித்தான்.

அவனது அணைப்பு மேலும் இறுக, இருவரது கண்களும் ஆனந்தத்தில் நனைந்தன.

**சுபம்**


தொடு வானம்
தொடும் தூரம்
ஷெண்பா
சுபம் வெளியீடு